

# பயங்கரவாதம்

## ஓர் அறிமுகம்

**எஸ்.எம். ஆலிப்**

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம்

## ஓர் அறிமுகம்

எஸ். எம். ஆலிப்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் : ஓர் அறிமுகம்
எஸ். எம். ஆலிப் எழுதியது

பதிப்புரிமை © 2011

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06

Terrorism: An Introduction
by: S. M. Aliff

© 2011

Published by *Kumaran Book House*
39, 36th Lane, Colombo -06, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by *Kumaran Press (Pvt) Ltd*
39, 36th Lane, Colombo -06

வெளியீட்டு எண்: 486

ISBN 978-955-659-299-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்றைய நவீன கால கட்டத்தில் மக்களின் தேவைகள் பல்கிப் பெருகியுள்ளதன் விளைவாக அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் மனித நடத்தைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலும் அரசியல் சமூகப் பொருளாதார ரீதியாக திடீர் மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது.

உள்நாட்டு அரசியல் நிலவரமும் மற்றும் சர்வதேச அரசியலின் தாற்பரியமும் தந்திர உபாயமும் மக்களை இன, மத, மொழி மற்றும் பிராந்தியம் என்ற வகையில் பிரித்து வைத்துள்ளன. இதன் விளைவாக மோதல்களும் இன முரண்பாடுகளும் வன்முறைகளும் நாளாந்தம் உலக அளவில் இடம் பெற்று வருகின்றன. பசி, பட்டினி, வறுமை, சமூக அநீதி, இன ரீதியான பாரபட்சம் காட்டப்படல், மேலாதிக்க உணர்வு, அணு ஆயுதங்களின் வளர்ச்சி என்பவை உலக அளவில் பயங்கரவாதம் வளர்வதற்கு வழி கோலியுள்ளன. இதன் விளைவாக சமகால சர்வதேச உறவுகளில் பயங்கரவாதம் முக்கியமானதொரு கருப்பொருள் பிரச்சினையாக உருவெடுத்து வந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக மனிதர்களை மிகவும் பாதித்த ஒரு பிரச்சினையாக பயங்கரவாதம் காணப்பட்ட போதும் 1960களின் பின்பே பயங்கரவாதம் சர்வதேச அளவில் ஒரு பிரச்சினையாக உருவெடுத்து வந்துள்ளது. 2001 செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க இரு கோபுரங்களில் விமானங் களில் மோத வைத்து சிதறடித்த போதே சர்வதேச அளவில் பயங்கர வாதத்தின் தாற்பரியமும், விபரீதமும், அதன் கொடுமையும் மக்களால் மிகவும் வெளிப்படையாக உணரப்பட்டது.

பயங்கரவாதம் இன்று நாடுகளுக்கிடையேயும் மற்றும் நாட்டுக் குள்ளும், பிரச்சினையையும், முரண்பாட்டையும் தோற்றுவித்து அந் நாடுகளை நாளாந்தம் நாசம் செய்து அதனது அரசியல் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்திகளை முடக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறு சர்வதேச அளவில் ஒரு பாரிய பிரச்சினையாக உரு வெடுத்துள்ள இப்பயங்கரவாதம் எனும் சொல்லை வரையறுப்பதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆய்வாளர்கள் தமது சமூக பொருளாதார அரசியல் நிலவரத்துக்கேற்ப அதனை வரையறுத்த போதும் உலகப் பொதுமையடிப்படையில் அதற்கு இன்னும் முழுமையான வரைவிலக்கணம் கொடுக்கப்படவில்லை என்பதே எனது கருத்தாகும்.

இவ்வாறு பல முக்கியமான பல விடயங்களையும் பிரச்சினை களையும் கொண்டமைந்த பயங்கரவாதம் என்ற இவ் விடயத்தினை நூல் வடிவில் தொகுக்க வேண்டும் என்ற வகையிலும் இதனை மாணவர்களுக்கு அறிவூட்ட வேண்டும் என்ற நோக்கிலும் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'சமகால பயங்கரவாதமும் வன் முறையும்' என்ற ஒரு பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவமும், ஆர்வமும் இதனை ஒரு நூலாக வெளியிடுவதற்கு என்னைத் தூண்டியது எனலாம்.

இந்த முயற்சியில் எனக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்த அரசியல் துறை உதவி விரிவுரையாளர் ஜனாப். எம்.ஏ.எம். பௌஸர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக இந்நூல் குறுகிய காலத்திற்குள் அச்சிட்டு வெளி வருவதற்கு உதவிய குமரன் புத்தக இல்லத்தினருக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*எஸ். எம். ஆலிப்*
*பீடாதிபதி*
*கலை கலாசார பீடம்*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*
*ஒலுவில்*
*2011*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை v

1. பயங்கரவாதம் என்ற பதத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் வரையறைகள் 1

2. பயங்கரவாதத்தின் அடிப்படை அம்சங்கள் 17

3. பயங்கரவாதம் தோன்றுவதற்கான காரணங்கள் 22

4. பயங்கரவாதத்தினை கோட்பாட்டாக்கல் 27

5. பயங்கரவாதத்தின் வகைகள் 46

6. சமகால உலகில் பயங்கரவாதத்தின் பரவல் 55

7. பயங்கரவாதத்தின் எதிர்கால வடிவங்கள் 60

8. அல்-பயங்கரவாதமும் எதிர்பயங்கரவாதமும் 74

9. பயங்கரவாதத்திற்கு எதிரான பல்தரப்பு பதிலீடுகள் 99

10. பயங்கரவாதத்திற்கான இன மற்றும் தேசிய அடிப்படைகள் 114

11. பயங்கரவாதத்திற்கான சமயரீதியான நியாயப்படுத்தல்கள் 127

12. தென்னாசியாவில் பயங்கரவாதம் 150

உசாத்துணை 155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# பயங்கரவாதம் என்ற பதத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் வரையறைகள்

*அறிமுகம்*

பயங்கரவாதம் என்பது திடீரெனத் தோற்றம் பெற்ற புதியதொரு விடயமல்ல. மனித இனத்தின் வரலாற்று நெடுகிலும் அதற்கான அடிச்சுவடுகளைக் கண்டுகொள்ள முடியும். உலக சமூகத்தின் வரலாற்றினைப் பார்க்கின்ற போது பல்வேறுபட்ட காலப்பகுதியிலும் பல்வேறு வகையான பயங்கரவாத வன்முறை எதிர்ப்புக்கள் இடம் பெற்றிருப்பதற்கான சான்றுகளைக் கண்டுகொள்ள முடியும். எனினும் அண்மைக்காலத்தில் தேசிய, சர்வதேச மட்டத்தில் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ள முக்கிய பிரச்சினையாக பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் உருவெடுத்துள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக பல தேசங்களின் அபிவிருத்திக்கு முக்கிய தடங்கலாக பயங்கரவாதம் அமைந்துள்ளது. விசேடமாக இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுற்றதிலிருந்து தீவிரவாத வன்முறைப் பிரயோகமானது குறிப்பிடத்தக்களவு அதி கரித்துள்ளது.

1960களுக்குப் பிறகு பயங்கரவாதமானது ஒரு தொடர்ச்சிகரமான தோற்றப்பாடாக மாற்றம் கண்டுள்ளது. அவ்வாறே பதிவாகின்ற சம்பவங்கள் அல்லது நிகழ்வுகள் வருடத்திற்கு வருடம் மாற்றம் கண்டுவருகின்றன. அவ்வித மாற்றங்களுடன் இணைந்ததாகவே பயங்கரவாதத்தின் கடுமைத் தன்மை, கொடூரம், காட்டுமிராண்டித் தனம் போன்ற அதன் தன்மைகளும் நோக்கப்படுகின்றது. அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வரும் உலக சூழலில் பயங்கரவாதத்தின் கடுமை, கொடூரம், காட்டுமிராண்டித்தனம் அதிகரித்துள்ளது என்பதாகும். பயங்கர வாதத்தின் மூலம் ஏற்படுகின்ற அழிவுகளும், இழப்புக்களும் இதனை எமக்குப் பறைசாற்றி நிற்கின்றன. இவ்விதமான பயங்கரவாதத்தின் அதிகரிப்பிற்கு நேரிடையான வகையில் பயங்கரவாதிகளின் எண்ணிக்கையில் அல்லது பயங்கரவாதக் குழுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன. இவற்றின் விளைவாக பயங்கரவாத அச் சுறுத்தல்கள் பற்றிய தேசிய மற்றும் சர்வதேச மட்ட விழிப்புணர் வுகளும் அதிகரித்துள்ளதுடன் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிகள் குறித்த வெளியீடுகளும் அதிகரித்துள்ளன. எனினும் கிடைக்கக்கூடிய ஆக்கங்களானது பயங்கரவாதம் என்ற தோற்றப்பாட்டின் கடினத் தன்மையை அல்லது சிக்கல் தன்மையை முழுமையாக வெளிப் படுத்துவதாக இல்லை. இதனால் பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் தொடர்பிலான மாறுபட்ட விவாதங்களும், விடையளிக்கப்படாத வினாக்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

### *பயங்கரவாதம்* (Terrorism) *என்ற பதத்தின் தோற்றம், வளர்ச்சி*

Terrorism (பயங்கரவாதம்) என்ற ஆங்கிலப்பதம் ‘Terrere’ என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்ததாக நம்பப்படுகின்றது. இச்சொல் (Terrere) அச்சத்தை அல்லது பயத்தை ஏற்படுத்துதல் எனப் பொருள்படும். இப்பதத்தின் பயன்பாடு என்பது பிரான்சியப் புரட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஜெகோபின் (Jacobin) கொடுங்கோல் ஆட்சியுடன் இணைத்துப் பேசப்படுகின்றது. அதாவது பிரான்சில் ஜெகோபின் என அழைக்கப்பட்ட ஒரு கிளர்ச்சியாளர்கள் குழு தமது சொந்தச் செயற்பாடுகளை விளக்குவதற்கும், நியாயப்படுத்து வதற்கும் என பிரான்சியப் புரட்சிக் காலத்தில் இப்பதத்தைப் பயன் படுத்தியிருந்தனர்.

இந்தவகையில் பிரான்சியப் புரட்சியானது நவீன பயங்கர வாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறித்து நிற்கின்றது எனக் குறிப்பிட முடிகின்ற அதேவேளை சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கான போராட்டத்தின் ஆரம்பத்தினையும் குறித்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது. இதனாலேயே Mark Twain என்பவர் அக்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தில் பிரான்சில் காணப்பட்ட பயங்கரவாதத்தின் இரட்டை முகம் பற்றிக் கருத்துக் கூறியிருந்தார். இங்கு அவர் சுட்டிக்காட்ட வருவது யாதெனில் இப்புரட்சியானது ஒரு விதத்தில் துரித இறப்பிற்கான அச்சத்தை (horror of swift death) வெளிப்படுத்தியிருந்த அதேவேளை நீடித்த வாழ்க்கையின் பின் இடம் பெறும் இயல்பான இறப்பிற்கான (life long death) அறிகுறியினை யினையும் வெளிப்படுத்தியிருந்தது என்பதாகும்.

நவீன காலத்தில் ஒரு தனிப்பட்ட குழுவினால் அப்பாவி மக்கள் கொல்லப்படுதல் என்பதைக் குறிப்பதற்கே இப்பதம் (Terrorism) பயன்படுத்தப்படுகின்றது. இப்பொருளானது Sergey Nechayev என்பவரின் விளக்கத்துடன் தொடர்புபட்டதாகும். Nechayev என்பவர் தன்னையே ஒரு பயங்கரவாதியாக விளக்கியதுடன் 1869களில் 'People's Retribution' என்ற ரஸ்யப் பயங்கரவாதக் குழுவையும் ஸ்தாபித்திருந்தார். இதன் மூலம் பயங்கரவாதம் என்ற சொல்லாடலின் பரவலை அவதானிக்க முடிந்தது. இந்தவகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்டவர்களினால் பயன்படுத்தப்பட்டு தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த இச்சொல் சர்வதேச அளவில் இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சொல்லாகப் பரிணாமம் பெற்றுள்ளது. இன்று Terrorism என்பது அதன் நவீன பொருள் விளக்கத்தில் பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

இப்பதத்திற்கான அர்த்தம் 1798 இல் பிரன்ச் மொழியில் கொடுக்கப்பட்டிருந்தது. இதன்படி அவ்வாண்டு வெளியிடப்பட்ட Académie Française என்ற அகராதிக்கான பிற்சேர்க்கையில் இச்சொல்லானது 'System, Regime De La Terreur' என விபரிக்கப்பட்டிருந்தது. இப்பதம் குறித்த ஆங்கிலப் பதிப்புக்களில் Terrorism என்ற பதமானது இரத்தம் சிந்துதல் அல்லது காயப்படுத்துதல் தொடர்பான ஆங்கிலேயர்களின் இயல்பான குணாம்சத்தினை விளக்குகின்ற ஒன்றாகவே விளக்கப்பட்டிருந்தது. ஆங்கில மரபுகளைப் பொறுத்த வரையில் ஜெகோபின்கள் தமது சொந்த நடத்தையை விபரிப்பதற்கு பயன்படுத்திய ஒரு சொல்லாகவே புரிந்து கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் தொடர்பான எண்ணக்கரு விளக்கத்தில் சேர் எட்மன்ட் பேர்க் முக்கியம் பெறுகின்றார். இவ்விதம் அவர் முக்கியம் பெறுவதற்கு பிரான்சியப் புரட்சி குறித்த அவர் வெளியிட்ட கருத்துக்களே காரணமாகும். பேர்க்கின் கருத்துக்களை அவரது பிரான்சியப் புரட்சியின் பிரதிபலிப்புக்கள் (Reflections on the Revolution in France) எனும் நூலில் காணமுடிகின்றது. இந்நூலில் பிரான்சியப் புரட்சி குறித்து கருத்துவெளியிட்டிருக்கும் சேர் எட்மன்ட் பேர்க் இப்புரட்சியின் பிரதிபலிப்புக்கள் குறித்து விளக்கியிருக்கின்ற அதே வேளை நாட்டில் குழப்பத்தையும், அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்த பயங்கரவாதிகளையும் எச்சரித்திருத்திருக்கிறார். அவரது வார்த்தையில் அப்பயங்கரவாதிகள் 'Hell Hounds' என அழைக்கப் பட்டனர். இவ்விதம் பேர்க் பயங்கரவாதிகள் எனச் சுட்டிக் காட்ட வருவது பிரான்சியப் புரட்சிக்காரர்களையேயாகும். பேர்க் அவ்விதம் புரட்சியாளர்களைக் கருதியதற்கு பிரான்சியப் புரட்சி குறித்து அவர் கொண்டிருந்த எதிர் நிலைப்பாடே காரணமாகும். உண்மையில் அவரது பிரான்சியப் புரட்சியின் பிரதிபலிப்புக்கள் என்ற நூல் அப்புரட்சியின் பிரதிபலிப்புக்களை விளக்குவதாக மட்டுமன்றி பயங்கரவாதம் என்ற பதத்தின் தோற்றத்தினை விளக்குவதற்கான விமர்சனங்களுக்கும் இடமளிக்கின்றது.

பேர்க் வழக்கமான கலாசார, தேசியவாத உந்துதல்களுக்கு அப்பால் கிளர்ச்சிக்காரர்களை படுகொலை, கொள்ளை, மோசடி, கட்சிப் பிளவுகள், அடக்கு முறை போன்றவற்றை அதிகரிப்பவர்களாக இருக்கும் ஆயுத வழிமுறைகளில் நம்பிக்கையுள்ள மதவெறியர்களின் ஒரு குழுவாக விபரிக்கிறார். உண்மையில் பேர்க்கினுடைய விளக்கத்தை அவர் வாழ்ந்த சமூக வகுப்புச் சூழ்நிலையில் வைத்தே பார்க்கப்பட வேண்டும். இதன்படி பேர்க் உயர்குடியாளராக (Aristocrat) இருந்ததால், முடியாட்சியைத் தூக்கி எறிவதற்காக நிகழ்த்தப் பட்ட ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட ஆனால் வன்முறை சார்ந்த பிரான்சியப் புரட்சியை அச்சுறுத்தலான ஒன்றாகக் கருதியிருக்கலாம். அவ்விதம் அவர் கருதியதற்கு அரசனின் ஆதரவு பெற்ற உயர்குடி வகுப்புக்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருந்த அரசாங் கங்கள் கொண்ட நாடுகள் பல மக்களாட்சிக்கு கட்டியம் கூறிய பிரான்சியப் புரட்சியினால் அச்சுறுத்தப்பட்டிருந்தமையே பிரதான காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்க் தனது பிரதிபலிப்புக்களில் Terrorism அல்லது Terrorist என்ற பதங்களை தாமாக வரையறுக்கவில்லையாயினும் அதனோடு தொடர்பான செயற்பாடுகள் குறித்து அதிகமான விடயங்களை பல வழிகளில் விளக்கியிருக்கிறார். இதன்படி பேர்க்கினுடைய பார்வையில் ஒரு பயங்கரவாதி மத வெறியராக இருந்தார். எனவேதான் ஒரு பயங்கரவாதி எவ்வித தத்துவார்த்த வழிமுறைகளையோ அல்லது தமது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கான காரணங்களையோ பின்பற்றுவதில்லை எனக் கருதப்பட முடியும். அவ்வாறாயின் ஒரு பயங்கரவாதி ஒரு கொலைகாரராக, திருடராக, மோசக்காரராக குறிப்பிடப்பட முடியும். ஆனாலும் ஒரு அடக்குமுறையாளராக குறிப்பிடப்படுவதில்லை. ஏனெனில் அடக்கு முறையாளர்கள் மற்றும் மோசக்காரர்கள் போன்றோர் நீதியை நிலைநாட்டாதவர்களாக அல்லது அறத்தை கடைப்பிடிக்காதவர்களாக கருதப்பட முடியும் என்பதாகும். இங்கு நீதியை அல்லது அறத்தை நிலைநாட்டுவது என்பது ஒரு ஆட்சியாளருடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவதாகவே கருதப்பட வேண்டும். எனினும் இவ்விதமான லேபல்கள் அனுதாபப்படத்தக்க, பாராட்டத்தக்க பண்புகளையுடைய ஒரு தனிநபரைப் பற்றி விளக்குவதாக இல்லை. அதாவது நியாயப்படுத்தக் கூடிய ஒரு வன்முறைச் செயலில் ஈடுபட்டவரையும் தவறாகக் கருத இடமளிக்கிறது என்பதாகும்.

உண்மையில் பயங்கரவாதம் குறித்து பேர்க் தெளிவானதொரு வரைவிலக்கணத்தை முன்வைக்க வில்லையாயினும் அது தொடர்பான தொக்கி நிற்கின்ற ஒப்பீடுகளை வழங்கியதிலிருந்து பயங்கரவாதம், பயங்கரவாதிகள் மற்றும் அவர்களது நடத்தை குறித்து வரையறுப்பதற்கான ஒரு செயன்முறையை ஆரம்பித்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனினும் பேர்க் Terrorism மற்றும் Terrorist ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துவதிலும் பார்க்க லேபல்களாகவே பயன்படுத்தியிருந்தார்.

பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்துவதற்கான சமகால முயற்சிகளை நாம் அவதானிக்கும் போது, யாருக்கு எதிராக வன்முறைகள் பிரயோகிக்கப்படுகின்றது என்பதிலேயே சமகால வரைவிலக்கணங்களின் கவனம் குவிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இதன்படி சமகாலத்தில் பயங்கரவாதம் குறித்து முன் வைக்கப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான வரைவிலக்கணங்கள் 'அப்பாவி மக்கள் அல்லது போரில் சம்பந்தப்படாதவர்கள் இலக்கு வைக்கப்படுவது' என்பதன் அடிப் படையிலேயே கட்டியெழுப்பப்படுகின்றது. இந்நிலையிலிருந்து பார்க்கும் போது, பிரான்சியப் புரட்சியில் பலர் பலியாகியிருந்தனர். அதிலும் குறிப்பாக ஆளும் உயர் குழாம் வகுப்பினைச் சேர்ந்தவர்களே அதிகம் பலியாகியிருந்தனர். அக்கால கட்டத்தில் பிரான்சில் புரட்சி யாளர்கள் நடத்திய ஆட்சி கொடுங்கோல் ஆட்சி என அடிக்கடி உச்சரிக்கப்பட்டதற்கு புரட்சியின் போது அவர்கள் பயன்படுத்திய படுகொலைகளும் வன்முறைகளுமே பிரதான காரணமாகும். எனினும் கொல்லப்பட்டவர்களுள் பெருந் தொகையானோர் இராணுவ அதி காரிகளோ அல்லது சட்டத்தை அமுல்படுத்துபவர்களாகவோ இருக்க வில்லை. மாறாக சிரச்சேதம் செய்யப்பட்ட பலர் தனிப்பட்ட பிரஜைகளாகவே இருந்தனர். இத்தனிப்பட்ட பிரஜைகளையே நாம் இன்று சிவிலியன்கள் என அழைக்கின்றோம். ஆனால் புரட்சி யாளர்களைப் பொறுத்தவரையில் இவ்வேறுபாடு முக்கியமான ஒன்றாகக் கருதப்படவில்லை. அதாவது இத்தனிப்பட்டவர்களை அப்பாவிகளாகவோ அல்லது குற்ற மற்றவர்களாகவோ அவர்கள் கருதியிருக்கவில்லை. இருந்த போதிலும் புரட்சியினால் பாதிக்கப் பட்டோரின் ஆயுத ரீதியான எதிர்ப்பு அங்கு ஒருபோதும் எழுச்சி யடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அக்காலகட்டத்திற்குப் பிறகு பயங்கரவாதம் என்பது சில நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வகையான வன்முறை, உடல் ரீதியான கட்டாயப்படுத்தல் மற்றும் அச்சுறுத்தல் எனக் கொள்ளப்பட்டது. நவீன சொல்லாடல்களில் இவ்வாறன செயற்பாடுகளை கப்பம் (கட்டாயப்படுத்தி பணம் பறிப்பது) கோருவது போன்ற குற்றவியல் செயற்பாடுகளாவே அடிக் கடி நாம் எண்ணுவதுண்டு. உதாரணமாக, ஒரு கடை உடைமையாளர் அவரது வர்த்தகத்தை அழிவிலிருந்து அல்லது தொல்லைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் ஒரு உள்நாட்டுக் கிரிமினல் குழுவினால் 'பாதுகாப்புப் பணம்' (Protection Money) செலுத்துமாறு கட்டாயப் படுத்தப்படலாம். இவ்வாறான ஒவ்வொரு கட்டாயப் பணம் பறித்தல் செயற்பாடுகளிலும் தனிப்பட்டவர்களின் அழிவிலிருந்து பாதுகாப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்காக அவர்களுக்கு பாதுகாப்புப் பணம் செலுத்தப்படுகின்றது.

எவ்வாறாயினும் கட்டாயப் பணம் பறித்தல் என்பது பயங்கரவாதி அல்லது பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு நிகரான பொருளைக் கொண்டிருப்பதில்லை. எனினும் பயங்கரவாதிகள் அல்லது தீவிர வாதிகள் கப்பம் கோருபவர்களாக இருக்கலாம். இதன் பொருள் எல்லாக் கட்டாயப் பணம் பறிப்போரும் பயங்கரவாதிகள் என்பதல்ல. அடிப்படையில் பேர்க்கினால் வழங்கப்பட்ட உதாரணமானது வித்தியாசமான அர்த்தத்தை வழங்குகின்றது. அதாவது ஜெகோபின்கள் அவர்களாகவே பயன்படுத்திய வார்த்தை பேர்க்கின் பிரயோகத்தினால் விமர்சனத்திற்கு இடமளிக்கின்றது என்பதாகும். உண்மையில் அவரால் விளக்கப்பட்ட சகிக்கமுடியாத வேட்டை நாய்ப் பயங்கரவாதிகள் (Hell Hound) ஒரு குரூரமான கருத்தியலைப் பின் பற்றியதுடன் புரட்சியினூடாகவே அரசியல் மாற்றத்தையும் எதிர்பார்த்திருந்தனர். இவ்வாறாக ஒரு போராட்டத்தில் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் பெறும் வகையில் அரசியல் மற்றும் கருத்தியலுடன் இணைக்கப் பட்டதாகவே பயங்கரவாதம் இருந்தது. பிரான்சிய புரட்சியில் இவ்வாறான ஒரு தன்மையே தென்பட்டது.

இதனையடுத்து வந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் தொழிலாளர் பிணக்குகள், வன்முறை எதிர்ப்பு, புரட்சிகள், கிளர்ச்சிகள், சுதந்திரம் பெறுவதற்கான ஆயுதப் போராட்டங்கள், வெளிநாட்டு ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிரான போராட்டங்கள், அராஜரீகம், சின்டிகலிசம், சோசலிசம், மார்க்சிசம், கம்யூனிசம், பாசிசம், முதலாளித்துவம் உள்ளடங்கலான கருத்தியல்களின் மேலாண்மையை நிலை நாட்டு வதற்கான போராட்டங்கள் உள்ளடங்கலான அதிகாரத்தைப் பெறு வதற்கான மற்றும் உலகளாவிய ரீதியான கட்டுப்பாட்டைச் செலுத்து வதற்கான எதிர்ச்செயல்கள் அல்லது தாக்குதல்களில் உள்ள வன் முறைகளை விபரிக்கவே பயங்கரவாதம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டது. இந்தவகையில் உலகளாவிய தொழிலாளர் அமைப்பு, போல் சேவிக்குகள் மற்றும் இது போன்ற பல குழுக்களின் செயற்பாடுகளை விபரிக்கவே பயங்கரவாதம் பயன்படுத்தப்பட்டது.

மேலும் பயங்கரவாதத்திற்கான கருத்தியல்கள் சார்ந்த அம் சங்களும் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதாவது சமயங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான பயங்கரவாதம் இணைத்துப் பார்க்கப்படும் போக்கு உருவாகியமையாகும். இதன்படி இஸ்லாத்திற்கும் யூதத்திற்கும் இடையிலான போராட்டமானது இவ்வடிப்படையிலேயே நோக்கப் பட்டது. அவ்வாறே இஸ்லாம், ஹிந்து மற்றும் கிறிஸ்தவத்திற்கு இடையிலான போராட்டங்களும் கருதப்பட்டது. இவை எல்லா வற்றுக்குமிடையில் காணப்படும் ஒரு பொதுவான அம்சம் யாதெனில் வன்முறை அல்லது வன்முறைசார்ந்த அச்சுறுத்தலை அவை கொண் டிருப்பதாகும். இவ்வன்முறை மற்றும் வன்முறை அச்சுறுத்தல்களை அடிக்கடி கிளர்ச்சிகளின் போதும் ஆயுதப் போராட்டங்களிலும் நாம் வெளிப்படையாக அவதானிக்கலாம். இந்தவகையில் வன்முறைப் பிரயோகம் அல்லது வன்முறை அச்சுறுத்தலை விபரிப்பதாக பயங்கர வாதம் விளக்கப்பட முடியும். அவ்வாறாயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு வன்முறையின் பிரயோகம் அல்லது வன்முறை அச்சுறுத்தல் இடம்பெறுகின்றபோது அது பயங்கரவாதமாக விபரிக்கப்படலாமா என்ற கேள்வி எழுகின்றது. எனவேதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகள் விதிமுறைகளுக்கு அப்பாலான வன்முறைப் பிரயோகம் அல்லது அச்சுறுத்தலாகவே அது நோக்கப்பட வேண்டும். இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விதி முறைகள் நெறிமுறைகள் என்பது தேசிய அரசுகளால் அல்லது சர்வதேச சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளாக இருக்கக் கூடும். இதன்படி சில நெறிமுறைகள் விதிமுறைகளை அடிப் படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்படுகின்ற அதன்படி செயலாற்று கின்ற படைகளைப் பொறுத்தவரையில் இது பொருந்தக் கூடியதாக இருக்கலாம். தேசிய அரசுகள் சில வகையான பயங்கரவாதத்தை இலக்குவைக்கின்ற போது அவற்றின் செயற்பாடுகள் நெறிமுறைகள் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக விபரிக்கப்படக் கூடும்.

இருந்தபோதிலும் தேசிய அரசுகளும் பயங்கரவாதத்தை தாமாக நடைமுறைப்படுத்துவதாக இருக்கக் கூடும். சுமாராக ஒவ்வொரு யுத்தத்திலும் சிவிலியன்களை அடக்கி ஒடுக்குகின்ற அரசாங்கங்களின் செயற்பாட்டினை அவதானிக்க முடியும். அடொல்ப் ஹிட்லரின் செயற்பாடுகள், அமெரிக்க லெப்டினன்ட் வில்லியம் கோல்லி (William Calley) யின் செயற்பாடுகள் (வியட்னாமில் My Lain என்ற கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை) போன்றன தேசிய அரசாங்கங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தப்பட்ட பயங்கரவாதத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். உண்மையில் வரலாறு இவ்வாறான செயற்பாடுகளால் நிரப்பப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். ஆனாலும் அரசாங்கங்கள் மக்கள் மீது நடைமுறைப்படுத்தியுள்ள பயங்கரவாதச் செயல்களுக்கான அதிக உதாரணங்களை உள்ளடக்குவதாக அது காணப்படவில்லை. இவற்றுக்கு மேலாக பயங்கரவாதம் பற்றிக் கற்கின்ற பலரும் ஏன் இப்பதத்தின் உபயோகம் அப்பாவிகளுக்கு எதிராக தனிநபர்களால் மேற்கொள்ளப்படும் கட்டாயப்படுத்தலாக, அரசாங்கங்களை, தேசிய அரசுகளை அடிபணியச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட கட்டாயப் படுத்தலாக குறிப்பிடப்பட வேண்டும் என்ற கேள்வியினையும் எழுப்புகின்றனர்.

### *பயங்கரவாதம் என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துதல்* (Difining the Word of Terrorism)

Terrorism மற்றும் Terrorist ஆகிய பதங்கள் பலமான எதிர்மறையான உட்பொருளிலேயே நோக்கப்படுகின்றது. இப்பதங்களானது வன் முறையினை கண்டிக்கின்ற அரசியல் முத்திரைகளாகவே பயன் படுத்தப்படுகின்றது. அல்லது அநீதியான முறையில் குறிப்பிட்ட செயற்பாட்டாளர்களினால் விடுக்கப்படும் வன்முறை அச்சுறுத்தலை கண்டிப்பதற்கான அரசியல் முத்திரைகளாக இப்பதங்கள் பயன் படுத்தப்படுகின்றன எனலாம். புறூஸ் கோப்மன் (Bruce Hoffman) என்பவர் தனது பயங்கரவாதத்தின் உள்முகம் (Inside Terrorism) என்ற நூலில் பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பில் பின்வரும் கருத்தினை முன்வைக்கின்றார். 'குறைந்த பட்சம் ஒவ் வொருவரும் பயங்கரவாதம் என்பது ஒரு இழிவான சொல் என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது ஒரு எதிர்மறையான உட்பொருள் கொண்ட சொல்லாகும்' எனக் குறிப்பிடுகின்றார். கோப்மன் தனது வரைவிலக்கணத்தினை வழங்கும் போது பிரைன் ஜென்கின்ஸின் விளக்கத்தினையும் மேற்கோள் காட்டுகின்றார். இவரது கருத்துப்படி, 'பயங்கரவாதம் என்பது ஒவ்வொருவரது பார்வையிலும் தங்கியிருக் கின்றது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் பயங்கரவாதம் என்பது சிறப்பாகக் கட்டாயப் படுத்தும் நோக்கில் ஒழுங்கமைந்த முறையில் அச்சமூட்டலைப் பயன்படுத்துவது ஆகும் என எளிமையாகப் பொருள் கொள்ளலாம். உண்மையில் பயங்கரவாதம் என்பது வரையறுப்பதை விட விளக்கு வதற்கு இலகுவான ஒரு தோற்றப்பாடாகும். இதனால் இப்பதம் குறித்து பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொதுவான வரை விலக்கணத்தைக் கண்டுகொள்ள முடியாதுள்ளது. பயங்கரவாதம் என்பது பல்வேறு விதமான வன்முறைச் செயல்களுக்காகப் பிரயோகிக் கப்படும் திட்டமில்லாது பயன்படுத்தப்படுகின்ற ஒரு அர்த்தமற்ற பதமாக இருப்பதனால் அது பற்றிய தெளிவான வரைவிலக்கணங்களை முன்வைப்பது என்பது மிகக் கடினமான ஒன்றாகும். இப்பதம் குறித்த வரைவிலக்கணமானது அது குறித்த ஒவ்வொருவரினதும் பார்வையிலே தங்கியிருக்கின்றது. இதன்படி ஏதோ ஒரு வகையில் அரசியல் மற்றும் கருத்தியல் ரீதியான காரணிகளின் பின்புலத்தில் நின்றே பயங்கர வாதத்தைப் பலரும் வரையறுக்க முற்படுகின்றனர். சிலரைப் பொறுத்த வரையில் அது அடிப்படையில் சமூக எதிர்ப்பின் ஒரு வடிவமாகக் கொள்ளப்படுகிறது. மற்றும் சிலரைப் பொறுத்தவரையில் அது அரசியல் நோக்கங்களுக்காக பயத்தை உருவாக்குவதான அச்சுறுத்தல் அல்லது வன்முறைப் பிரயோகமாகக் கொள்ளப்படுகிறது.

இவ்விதம் முன்வைக்கப்படுகின்ற பயங்கரவாதத்தின் மிகப் பொதுவான வரைவிலக்கணங்கள் கருத்தியல்சார்ந்த இலக்கொன்றை அடைவதற்காக பலத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல், போரில் ஈடுபடாதவர்களை வேண்டுமென்றே இலக்குவைத்தல் அல்லது அவர்களது பாதுகாப்பை பொருட்படுத்தாது விடுதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. சில வரைவிலக்கணங்கள் சட்டத்திற்குப் புறம்பான வன்முறை, போர்கள் என்பவற்றையும் சேர்த்துக் கொள்கின்றன. பல நாடுகளும் இயக்கங்களும் தமது நண் பர்களை இதே நடவடிக்கைகளில் ஈடுபடும் போது வேறு பெயர்கள் சொல்லி அழைத்து நியாயப்படுத்துவதும், அதனை ஊக்குவிப்பதும் தமக்கு வேண்டாதவர்கள் செய்யும் போது அதைப் பயங்கரவாதம் என்பதும் உலக நடைமுறையாக உள்ளது.

இந்தவகையில் பயங்கரவாத எண்ணக்கருவை வரை விலக்கணப் படுத்துவதில் உள்ள இச்சிக்கல்த் தன்மையானது பயங்கரவாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த தீர்மானங்களை எடுப்பதில் முடிவற்ற வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. பயங்கரவாதம் குறித்து வரையறுப்பதின் சிக்கல்த் தன்மையை விளக்கும் வகையிலேயே, 'ஒரு மனிதனுக்குப் பயங்கரவாதியாகத் தெரிபவன் இன்னொரு மனிதனுக்கு சுதந்திரப் போராளியாவான்' என்ற பிரபலமான வாசகம் அமைந்துள்ளது.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்துவதில் உள்ள சிக்கல்த் தன்மையைப் புரிந்து கொள்ளலாம். இச்சிக்கல் தன்மைகளே பயங்கரவாதம் குறித்த ஒரு பொருள் நிறைந்த வரைவிலக்கணத்தை முன்வைப்பதற்குத் தடைக்கல்லாக அமைந்துள்ளது. இதன்படி ஒரு பொருள் நிறைந்த வரைவிலக்கணங்களுக்கு அப்பால் பல்வேறு வகையில் அர்த்தப்படுத்தப்படும் பலவிதமான வரைவிலக்கணங்கள் பயங்கரவாதத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பயங்கரவாதம் என்ற எண்ணக்கருவை தெளிவுபடுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளுள் ஒன்று என்றவகையில் நவீன சமூக விஞ்ஞானங்களில் பயங்கரவாதமானது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. 'ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு அல்லது தரப்பு முறையான வன்முறைப் பிரயோகத்தினூடாக தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேடுகின்ற வழிமுறைகளின் பின்னாலுள்ள கோட்பாடு அல்லது முறையே பயங்கரவாதமாகும்' எனக்குறிப்பிடலாம்.

மேலும் கோப்மன் (Hoffman), குஸ்னர் (Kushner), மற்றும் கிளரிட்ஜ் (Claridge) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து பயங்கரவாதம் தொடர்பாக பின்வரும் விரிவான விளக்கம் அல்லது வரைவிலக்கணம் ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது. இதன்படி பயங்கரவாதம் என்பது 'அரசியல் நோக்கங்களையும் தூண்டுதல்களையும் உள்ளடக்கியதாகும். இது வன்முறை அல்லது வன்முறை அச்சுறுத்தலாகும். இது வன்முறையின் நேரடிப்பாதிப்பிற்கு உட்பட்டோருக்கு அப்பால் நீண்டு சென்று இலக்குவைக்கப்பட்ட பார்வையாளர்கள் மத்தியில் பயத்தினை உருவாக்கத்தக்கவகையில் வடிவமைக்கப்படுகின்றது. இங்கு வன்முறையானது அடையாளப்படுத்தத்தக்க இயக்கங்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வன்முறையானது அரசுசாராத செயற்பாட்டாளரை அல்லது குற்றம் புரிபவர்களையோ, வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இரு தரப்பினர்களையோ செயற்பாட்டாளர்களாக உள்ளடக்கு கின்றது. இறுதியாக வன்முறைச் செயற்பாடானது முதலில் அதிகாரம் குறைவாக இருக்கும் சூழ்நிலைகளில் அதிகாரத்தினை உருவாக்கு வதற்காக வடிவமைக்கப்படுகின்றது. அதாவது செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் தமது அமைப்பின் அதிகாரத் தளத்தினை அதிகரிக்க வன்முறை முயற்சிக்கின்றது.'

இவ்வரைவிலக்கணத்தில் உள்ள முதலாவது பிரதான அம்சம் அடிப்படையில் வன்முறையானது அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பதாகும். உண்மையில் பயங்கர வாதமானது அரசியல் தன்மை பொருந்தியதாகும். இதனால் வேறு வழிமுறைகள் மூலமான அரசியல் தொடர்ச்சியாக பயங்கரவாதம் (The Continuation of Politics by Other Means) கொள்ளப்படுகின்றது. இதர வன்முறை வடிவங்களிலிருந்து பயங்கரவாதச் செயலினை வேறுபடுத்தும் அடிப்படையான அம்சம் அரசியல் இலக்குகளாகும். பயங்கரவாதத்தில் வன்முறை என்பது நிதி ரீதியான காரணங்களுக் காகவோ அல்லது தனிப்பட்ட பிரச்சினைகளுக்காகவோ நிகழ்வ தில்லை.

குற்றவியல் தன்மைமிக்க கடத்தல்களிலிருந்து (பணம் பறிக்கும் நோக்கில்) வேறுபட்டதாகவே செல்வாக்குள்ள அரசியல் தலை வர்களைக் கடத்துதல் மற்றும் நிறைவேற்றுத் துறைகளுடன் ஒத்துழைத்து அரசியல் உடன்படிக்கைகளை மேற்கொள்தல் என்பன உள்ளது. கடத்தப்பட்ட செல்வந்தர்களிடமிருந்து பணத்தினைப் பறிப்பதற்காக பயத்தினை உபயோகித்தல் என்பது குற்றவியல் ரீதியானதே ஒழிய அரசியல் ரீதியானதல்ல. சில வேளைகளில் எதிர்க் குழுக்கள் கடத்தல் அல்லது அவர்களுடைய அமைப்புக்களுக்கான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிக் கொள்ளைகளில் ஈடு படலாம். இவ்வாறான சம்பவங்களில் பொதுவான நோக்கங்களானது அரசியல் ரீதியானதாகவே இருக்கின்றது. ஏனெனில் இங்கு பெறப்படும் நிதியானது தனிப்பட்டவர்களின் செல்வத்தினைப் பெருக்குவது என்பதிலும் பார்க்க எதிர்க்குழுக்களின் தொடரான அரசியல் செயற் பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. பயங்கர வாதத்தினை வரைவிலக்கணப்படுத்துவதற்கான ஒரு அடிப்படையாக அரசியல் நோக்கங்கள் இருக்கின்ற போதும் பயங்கரவாதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்ற இலக்குகள் பலவிதமாகவும் வகைப்படுத்தப்படுவதுண்டு. இதன்படி பயங்கரவாதிகள் தமது கொள்கைகளில் அரசாங்கம் மாற்றத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என விரும்பலாம். இதற்காக தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு குறித்த நிகழ்ச்சித் திட்டத்தினை நிறுத்தலாம் அல்லது சில புதிய கொள்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு பலத்தைப் பிரயோகிக்கலாம். இவ்வித அரசியல் நோக்கங்களானது சட்டரீதியற்ற செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழல்மிக்க அரசியல் தலைவர்களை மாற்றுவதற்கான முயற்சியினை அல்லது அரசியல் உயர் குழாமினரை மாற்றுவதற்கான முயற்சியினை உள்ளடக்கியிருக்கலாம். இலக்குகள் என்பது இதற்கு மேலாகவும் செல்லமுடியும். இதன்படி அரசாங்கத்தின் கட்டமைப்பில் முழுமையான மாற்றத்தினைக் கொண்டுவருவதனை இந்நோக்கங்கள் கொண்டிருக்கலாம். அதாவது ஒரு முடியரசிலிருந்து குடியாட்சிக்கு அல்லது மிகவும் பலமான மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகார நிலையிலிருந்து பலமான அதிகாரப்பரவலாக்கல் நிலைக்கு அல்லது இராணுவ சர்வாதிகாரத்திலிருந்து சமயத்தலைவர்களால் நடாத்தப்படும் ஒரு கோட்பாட்டு அரசுக்கு மாறுவதற்கான இலக்கினைக் கொண்டிருக்கலாம். இறுதியாக பயங்கரவாதிகள் தேசிய எல்லைகளை மாற்றுவதற்குக் கூட விரும்பலாம். இதன்மூலம் ஒரு பிராந்தியத்தினை உடைத்து ஒரு புதிய அரசினை உருவாக்குவதற்கு, வேறொரு அரசுடன் சில ஆள் புலத்தினை இணைப்பதற்கு அல்லது இருக்கின்ற அரசினை ஒரு புதிய நாடாகப் பிரகடணப்படுத்துவதற்கு விரும்பலாம்.

இவ்வரைவிலக்கணத்தில் இரண்டாவது முக்கிய அம்சம் வன்முறை அல்லது வன்முறை அச்சுறுத்தலின் இருத்தலாகும். உண்மையில் மாற்றங்களுக்கான, விளக்கத்திற்கான அல்லது ஒரு மனுவிற்கான கோரிக்கை என்பது பயங்கரவாதம் அல்ல. இவை அரசாங்கத்தினை சீர்குலையச் செய்வதில்லை. ஆனால் பெரியளவிலான உணர்ச்சி வெளிப்படுத்தல்கள் அரசாங்கம் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்கு தூண்டக் கூடியதாக உள்ளபோதிலும் நேரடியான வன்முறை அச்சுறுத்தல் காணப்படுவதில்லை. உண்மையான வன்முறையானது கண்டுபிடிப்பதற்கும் அறிந்துகொள்வதற்கும் ஏற்றவிதமாக மிகத் தெளிவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியல் வரைவிலக்கணங்களுக்கு அப்பால் அரசுகளும் பயங்கர வாதம் குறித்து பல வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளன. இதன்படி அமெரிக்க அரசு பயங்கரவாதத்தை வரையறுக்கையில், 'மக்களிடம் பயத்தை உருவாக்குவதற்காக, அல்லது அரசாங்கங் களையோ சமூகங்களையோ நிர்ப்பந்தப்படுத்தவோ, பயமுறுத்தவோ, வன்முறையைப் பிரயோகிப்பதாகவோ அல்லது பிரயோகிப்பதாகக் கூறுவதாகவோ அமைகிற, முன்பே திட்டமிடப்பட்ட எந்த ஒரு முயற்சியும் பயங்கரவாதம் ஆகும்' எனக் குறிப்பிடுகின்றது. அவ்வாறே பிரிட்டன் பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்தும் போது, அரசியல், மத அல்லது கருத்தியல்சார் செயல்முறை ஒன்றை முன் வைக்கும் நோக்கத்துடன், எந்த ஒரு தனிமனிதன் அல்லது ஒரு குழு சொத்திற்கும் எதிராக தீவிர வன்முறைக்கான பயமுறுத்தலை பயன் படுத்துவது பயங்கரவாதமாகும்' என்கின்றது. எனினும் இவ்விதம் பயங்கரவாதத்தை எளிதாக வரைவிலக்கணப்படுத்தும் அரசுகள் மேற்குறிப்பிட்டவாறு தாம் குற்றம்சாட்டு செயல்களைச் செய்யத் தூண்டும் நடத்தைகளை அவர்களால் துள்ளியமாக இனங்காண முடி வதில்லை. பொதுவாக அரசுகளைப் பொறுத்தவரையில் அவைகள் குறிப்பிட்ட சில நபர்களை அல்லது அமைப்புக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்திவிடுகின்றனர். அமைப்புக்கள் தொடர்பில் அவற்றில் அங்கத்துவம் பெறுவது குற்றம் என அரசுகள் கருதுவதுடன் வெடி பொருட்களை வைத்திருத்தல், பணயக் கைதிகளை பிடித்து வைத்திருத்தல் என்பவற்றை குற்றமாகக் கருதுகின்றனர். எனினும் இவ்விதம் கருதப்படுபவைகளுள் பெரும்பாலானவை சாதாரண சட்டத்தில் குற்றம் எனக் குறிப்பிடப்படுபவைகளாகவே உள்ளன. இதனால்தான் பயங்கரவாத்தை ஒரு நடவடிக்கை என்பதிலும் பார்க்க ஒரு மனநிலையாக சித்தரிக்க அறிஞர்கள் முற்படுகின்றனர்.

அவ்வாறே மிக அண்மித்த முயற்சி என்றவகையில் அமெரிக்க இலக்கியங்களின் செல்வாக்குக்குட்பட்டு பயங்கரவாதமானது பின் வருமாறு வரைவிலக்கணப்படுகின்றது. 'சாதாரண வழிமுறைகளுக்கு அப்பால் உள்ள வழிமுறைகள் மூலம், அதாவது வன்முறை அச் சத்தின் அல்லது வன்முறைப் பிரயோகத்தின் மூலம் அரசியல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு அடையாளச் செயலாகும்.' மேலும் சர்வதேச சட்டத்தில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பிரபல்யமான ஒரு வரைவிலக்கணத்தில் பயங்கரவாதம் என்பது பின்வருமாறு விளக்கப்படுகின்றது. 'அரசியல், சமூக, தத்து வார்த்த, கருத்தியல் மற்றும் சமயக் காரணங்களுக்காக மேற்கொள்ளப் படும் எந்தவொரு ஆயுத வன்முறைச் செயலும் பயங்கரவாதம் என்ப தாகும். இப்பயங்கரவாதமானது கொடூரமான மற்றும் காட்டு மிராண்டித்தனமான வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் அப்பாவிகளை இலக்கு வைத்து தாக்குவதன் மூலமும் மனித உரிமைகளை மீறுகின்றது.'

2004 நவம்பரில் ஐ.நா பாதுகாப்புச் சபை வெளியிட்ட ஒரு அறிக்கையின் பிரகாரம், பயங்கராவதம் என்பது, 'ஏதாவது செயலை செய்வதற்கு அல்லது செய்யாது விடுவதற்கு மக்களை கட்டாயப் படுத்தும் அல்லது அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கச் செய்யும் அல்லது ஒரு சர்வதேச நிறுவனத்தை நிர்ப்பந்திக்கச் செய்யும் நோக்கத்தோடு சிவிலியன்களுக்கு அல்லது போராட்டத்தில் ஈடுபடாதவர்களுக்கு உடல்ரீதியான கெடுதியை அல்லது இறப்பை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்ற எந்தவொரு செயலுமாகும்' என விளக்கப்படுகின்றது. எனினும் இவ்வறிக்கையானது சர்வதேச சட்டத்தில் இடம்பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எது எவ்வாறாயினும் பயங்கரவாதம் என்பது ஒரு மரபுசாராப் போர் முறையும், உளவியற் போர் முறையுமாகும். இச்சொல் அரசியலோடும் உணர்வுகளோடும் தொடர்புபட்டிருப்பதானாலேயே இதனை சரியாக வரையறுப்பது கடினமாகவுள்ளது. 1988 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கப் படைத்துறை நடாத்திய ஒரு ஆய்வின்படி பயங்கர வாதத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட வரைவிலக்கணங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பயங்கரவாதம் என்ற எண்ணக்கரு வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்ட ஒன்றாகும். ஏனெனில் இப் பதமானது அரசுகள் தமது அரசியல் எதிரிகளை அல்லது வெளி நாட்டு எதிரிகளை கண்டனம் செய்வதற்கும், அவற்றுக்கு எதிரான தமது சொந்தப் பயங்கரவாதத்தினை நியாயப்படுத்துவதற்குமே அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறே பல வகையான அரசியல் இயக்கங்களும் தமது நோக்கங்களை அடைவதற்காக பயங்கரவாதத்தை பயன்படுத்துகின்றன. இவற்றுள் இடதுசாரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலதுசாரி இயக்கங்கள், மதக்குழுக்கள், புரட்சியாளர்கள், ஆளும் அரசுகள் போன்ற பலவும் அடங்கும்.

இவ்வாறாக பலவிதமான விளக்கங்களும், வரைவிலக்கணங் களும் அது சார்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் பயங்கர வாத எண்ணக்கருவை தெளிவாக வரைவிலக்கணப்படுத்துவதில் உள்ள சிக்கல்த் தன்மையை அந்நிபுணர்களின் வரைவிலக்கணங் களால் அகற்ற முடியவில்லை. மாறாக அது எப்போதும் போன்று இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. எது எவ்வாறாயினும் பயங்கரவாதம் என்பது, அரசியல் இலக்குகளுக்காக மேற்கொள்ளப் படும் அச்சுறுத்தல் நிறைந்த ஒரு வகையான வன்முறையாகும் என பொருள் கொள்ளப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# பயங்கரவாதத்தின் அடிப்படை அம்சங்கள் (Elements of Terrorism)

பயங்கரவாதமானது பின்வரும் பிரதான அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. இக்கூறுகளினைப் புரிந்து கொள்வதானது பயங்கர வாதம் பற்றிய தெளிவான புரிதல்களுக்கு வசதியாக இருக்கும். அவையாவன:

*I. முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை*

தந்திரோபாய மற்றும் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தினைச் சேர்ந்த வோல்டர் லெகுவெரைப் (Walter Lagueur) பொறுத்த வரையில், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பயங்கரவாதத்தின் பொதுவான பண்பு யாதெனில், பயங்கரவாதமானது வன்முறையை அல்லது வன்முறை அச்சுறுத்தலை உள்ளடக்குகின்றது என்பதாகும். எனினும் வெறுமனே வன்முறைப் பிரமானமானது ஒரு பயனுள்ள வரைவிலக்கணத்தை தருவதாக இல்லை. வன்முறைப் பிரயோகமானது பயங்கரவாதத்தில் மட்டுமன்றி யுத்தம், கலவரம், ஒழுங்குபடுத்தப் பட்ட குற்றம் அல்லது ஒரு சாதாரண தாக்குதலில் கூட இடம் பெறலாம். எனவேதான் முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறையே பயங்கரவாதத்தின் நிபந்தனையாக கொள்ளப்படுகிறது. இதன்படி சகல விதமான பயங்கரவாதத்தினதும் அடிப்படையான அம்சம் யாதெனில், எல்லாப் பயங்கரவாதச் செயல்களிலும் முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை இருத்தலாகும். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் வன்முறை என்பது சாதாரணமாகவன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்புக்குட்பட்ட விதத்தில் பிரயோகிக்கப்படுவதாகும். இந்தவகையில் முறையாக கட்டமைக்கப்பட்ட வன்முறையானது பயங்கரவாதத்தின் அடிப்படை அம்சமாகக் கொள்ளப்படுகின்றது.

## 2. அரசியல் இலக்கு

பொதுவாக எல்லாப் பயங்கரவாதச் செயற்பாடுகளும் ஏதோ ஒரு விதத்தில் அரசியல் நோக்கினைக் கொண்டுள்ளது. உண்மையில் பயங்கரவாதம் என்பது பயங்கரவாதிகளினால் பயன்படுத்தப்படும் ஒரு அரசியல் வழிமுறையாகும். அதாவது தமது விருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு மாற்றுவழிகள் இல்லாத போது பயங்கரவாதிகள் தேர்ந்தெடுக்கும் ஒரு அரசியல் மார்க்கமாகும். இவ்விதம் தமது விருப்புக்கு நேரிடையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழிமுறையானது தவறான விளைவுகளையும் ஏற்படுத்திவிடுகின்றது. குறிப்பாக பல சிவிலியன்கள் இறப்பதற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. இதனால் ஒவ்வொரு பயங்கரவாதச் செயல்களினதும் மைய அம்சமாக இருப்பது, அப்பயங்கரவாதச் செயல்களின் பின்னால் உள்ள அரசியல் இலக்குகளாகும். பொதுவாக பயங்கரவாதம் எழுச்சியடைவதை இயலுமானதாக்குகின்ற அநீதி, சுதந்திரமின்மை போன்ற சிக்கலான காரணிகளின் பின்னால் அரசியல் இலக்குகள் என்பது பயங்கரவாதிகளினால் கட்டமைக்கப்படுகின்றன. சமகால பயங்கரவாதத்தின் முக்கிய அடிப்படைகளுள் ஒன்றாகவும் இதனை நாம் கண்டுகொள்ளலாம்.

## 3. உளவியல் ரீதியான தாக்கம் அல்லது அச்சம்

பயங்கரவாதத் தாக்குதல்களானது உயர்ந்த பட்ச கொடூரத்தை மற்றும் பரந்தளவில் உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக நிகழ்த்தப்படலாம். அதிக எண்ணிக்கையான பார்வையாளர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நிறைவேற்றுகையாகவே ஒவ்வொரு பயங்கரவாதச் செயலும் அமைந்திருக்கும். அந்தவகையில் பயங்கர வாதிகள் தேசிய சின்னங்களைக் கூட தாக்குகின்றனர். அவ்வாறே நாட்டினுடைய அடிப்படையை ஆட்டங்காணச் செய்யும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர். இவ்விதம் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதச் செயல்கள், குறித்த அரசின் பிரஜைகள் மீது உளவியல் ரீதியான பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அவ்வாறே சர்வ தேச ரீதியாக இடம்பெறும் அச்சுறுத்தல்களும் பல்வேறு விதமான உளவியல் தாக்கங்களை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்திவிடுகின்றது. இதன்படி பயங்கரவாத அமைப்புக்களின் அதிகரிப்பு மற்றும் ஒரு பயங்கரவாதச் செயலுக்குப் பின்னாலுள்ள கருத்தியல்கள் என்பன அரசாங்கங்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

### 4. அரசியல் போராட்டத்தின் ஒரு கருவி

அதிகாரத்தைப் பெறுவதற்கான அரசியல் போராட்டத்தின் ஒரு கருவி யாகவும் பயங்கரவாதம் உள்ளது. இங்கு வன்முறைக் கிளர்ச்சிகள், ஆயுதப் போராட்டங்கள் மூலம் அரசாங்கங்களை அடிபணியச் செய்து அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பயங்கரவாதிகள் முயற்சிப்பதுண்டு. இதன் மூலம் அரசாங்கங்கள், தனிப்பட்டவர்கள், குழுக்களின் நடத்தைகள் மற்றும் கொள்கைகளில் பயங்கரவாதிகள் செல்வாக்குச் செலுத்த முற்படுகின்றனர். இதன்படி பயங்கரவாதம் அரசியல் போராட்டத்திற்கான ஒரு கருவியாக பயன்படுத்தப்படுவதும் அதன் அடிப்படை அம்சமாகும்.

### 5. வரையறுக்கப்பட்ட பிரச்சினைகளின் விளைவுகள்

பயங்கரவாதமானது எப்பொழுதும் ஒரு அரசியல் முறையின் தொழிற் பாட்டில் உள்ள வரையறுக்கப்பட்ட பிரச்சினையின் விளை விலானதாக இருக்கும். எல்லாக் கெடுதிகளுக்கும் மூலமாக அரசியல் முறைமையே உள்ளது எனப் பயங்கரவாதிகள் கருதுகின்றனர். மேலும் சமூக அமைப்பில் உள்ள குறைபாடுகள் காரணமாக பயங்கரவாதிகளின் செயற்பாடுகளுக்கு சமூக அங்கீகாரமும் கிடைத்துவிடுகின்றது. இதன் பொருள் பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் பயங்கரவாதச் செயல் களுக்கு சமூகத்தில் மன்னிப்பு வழங்கப்படுகின்றது என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. நிறுவனரீதியானதாக இருத்தல்

சமகாலப் பயங்கரவாதத்தின் மற்றுமொரு பிரதான அடிப்படை அது நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதாகும். இதன்படி பயங்கரவாதிகளின் இலக்கினைப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் கருத்தியல், நோக்கம், நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றைக் கொண்ட ஒரு ஒழுங்கமைக் கப்பட்ட அமைப்பின் செயற்பாடாகவே சமகாலப் பயங்கரவாதம் உள்ளது.

### 7. ஆதரவுக் கட்டமைப்பினைக் கொண்டிருத்தல்

நிறுவனமயப்படுத்தப்பட்ட பயங்கரவாதமானது தமது பலத்தையும், வளத்தையும், பேரம்பேசும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ளத்தக்க உள் மற்றும் வெளிவாரியான ஆதரவுக் கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கும். சில மக்கள் மற்றும் நிறுவனங்கள் கூட பயங்கர வாதிகளுக்கு உதவுவதுடன் அவர்களுக்கு அவசியமான பின்புலத் தையும் வழங்குகின்றனர்.

### 8. போரில் ஈடுபடாதோர் இலக்குவைக்கப்படுதல்

பயங்கரவாதத்தில் காணக்கூடிய மற்றுமொரு பொதுவான அடிப்படை அம்சம் யாதெனில் போரில் நேரடியாவோ மறைமுகமாகவோ பங்கேற்காத அப்பாவிகள் இலக்குவைக்கப்படுவதாகும். ஒவ்வொரு பயங்கரவாதச் செயல்களிலும் இத்தன்மையினை அவதானிக்க முடிகின்றது. பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் அதிகம் பாதிப்புக் குள்ளாகுவது சாதாரண சிவிலியன்களே. இதன் மூலம் பயங்கரவாதிகள் எதிர்பார்ப்பது யாதெனில் இயல்பு நிலையை சீர்குலைத்து பதட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் தமது இலக்குகளை அடைந்து கொள் வதாகும்.

### 9. சட்டத்திற்கு புறம்பானதாக இருத்தல்

பயங்கரவாதத்தின் இன்னுமொரு அடிப்படை அது சட்டத்திற்குப் புறம்பானதாக இருப்பதாகும். பயங்கரவாதம் என்பது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமல்ல. எனினும் எவை பயங்கரவாதச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்கள், யார் பயங்கரவாதிகள் என தெளிவாக வரையறுக்கப்படாத நிலையில் பயங்கரவாதத்தின் சட்டத்தன்மை பற்றி கருத்துக் கூறுவது தவறானதாகவும் நோக்கப்பட இடமுண்டு. குறிப்பாக அரச பயங்கர வாதச் செயல்களில் இவ்விதமான சட்டத்தன்மை பிரச்சினை எழு கின்றது. எது எவ்வாறாயினும் பொதுவாக பயங்கரவாதம் என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்படுவதில்லை. அரசுகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவது, பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பது மற்றும் புகலிடமளிப்பது போன்றனவும் குற்றமாகவே கருதப்படு கின்றது.

மேற்கூறிய விடயங்களே பயங்கரவாதத்தின் அடிப்படை அம் சங்களாக பயங்கரவாதம் தொடர்பான இலக்கியங்களில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# பயங்கரவாதம் தோன்றுவதற்கான காரணங்கள்

பயங்கரவாதம் தோன்றுவதற்கான காரணங்கள் குறித்து பல பார்வைகள் காணப்படுகின்றன. இதன்படி பயங்கரவாதம் என்பது ஒரு தனிப்பட்ட காரணத்தினால் மட்டும் உருவாகும் ஒரு தோற்றப்பாடல்ல. அவ்விதம் தோற்றம் பெறும் பயங்கரவாதத்திலும் சில துணைக் காரணங்கள் இருக்கவே செய்கின்றன. இந்தவகையில் உலகளாவிய ரீதியாக பயங்கரவாதம் தோன்றுவதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக உள்ளன. பொதுவாக பயங்கரவாதத்தினை தெளிவாகப் புரிந்துகொள்ள அல்லது அதனை நியாயப்படுத்த முயற்சிக்கும் போது கவனம் செலுத்தப்படுகின்ற முக்கிய விடயம் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள் பற்றியதாகும். இதன்படி பயங்கரவாதத்தினைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கும், அது பற்றிப் பேசுவதற்கும், அதனைக் குறைப்பதற்கும், அதனை நீக்குவதற்கும் பயங்கரவாதத்திற்கான அடிப்படைக்காரணம் பற்றி அறிதல் அவசியமானதாகும்.

இதற்கான சர்வதேச முயற்சி என்றவகையில் 2006 செப்டம்பர் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 60வது உச்சி மாநாட்டின் போது ஐ.நாவின் உலகலாவிய எதிர்பயங்கரவாத தந்திரோபாயத்தினை உள்ளடக்கிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தந்திரோபாயமானது ஒரு செயற்பாட்டு திட்டத்தினை பின்னிணைப்பாகக் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் முதலாவது உப பகுதியானது பயங்கரவாதம் பரவலடைவதற்கான சூழ்நிலைகள் தொடர்பாக கவனம் செலுத்தும் நடவடிக்கைகள் பற்றிக் கூறுகின்றது. எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத்தினைப் புரிந்துகொள்வதற்கான முயற்சியாக இதனை மட்டும் கருதமுடியாது. ஏற்கனவே 1970 களில் உலகில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதனை புரிந்துகொள்வதற்கான காத்திரமான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. 1990களில் பல புத்தகங்களில், கட்டுரைகளில் பயங்கரவாதம் குறித்த தெளிவான புரிதலுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் உலக வர்த்த கமைய தாக்குதலுக்குப் பின்னரான 6 ஆண்டுகாலத்துடன் ஒப்பிடும் போது அம்முயற்சிகள் குறைந்தளவிலான தெளிவினையே அளிக் கின்றன. எவ்வாறாயினும் பயங்கரவாதம் குறித்த தெளிவான புரிதலுக்கு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு, அதனோடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயங்கரவாதத்திற்கான அடிப்படைக் காரணங்களினை கண்டறிவது இன்றியமையாததாகும். ஐ.நா தீர் மானத்திலும் இவ்விடயம் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் பயங்கரவாதத்திற்கான காரணங்களினை பின்வருமாறு பல உப தலைப்புக்களாகப் பிரித்து நோக்கலாம்.

### *பல மட்டங்களிலான காரணங்கள்*

டோர் விஜோர்கோ (Tore Bjorgo) என்பவர் தான் பதிப்பித்த பயங்கரவாதத்தின் அடிப்படைக் காரணங்கள் (Root Causes of Terrorism) எனும் புத்தகத்தின் ஆரம்பப் பகுதியில் மிகவும் புரிந்து கொள்ளத்தக்கவகையிலான பல்வேறு காரணிகளை அடையாளப் படுத்தியுள்ளார். இவர் அக்காரணிகளை பின்வருமாறு தனித் தனியாக வேறுபடுத்தி விளக்குகின்றார்:

1. கட்டமைப்புக் காரணிகள்
2. அனுசரனைக் காரணிகள் அல்லது துரிதப்படுத்தல் காரணிகள்
3. தூண்டுதல் காரணிகள்
4. செயற்பாட்டுக் காரணிகள்

இவர் பேரினமட்டத்தில் உள்ள காரணிகளை கட்டமைப்புக் காரணிகள் என அடையாளப்படுத்துகின்றார். இக்காரணிகள் மக்கள் தங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்கு ஆபத்து விளைவிக்கத்தக்கது அல்லது விளைவிக்காது என்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்வாறான கட்டமைப்புக் காரணிகளாக விஜோர்கோ துரித நவீனத்துவம், உலக மயமாக்கம், அதிகரித்த தனியால்வாதம், ஒப்பீட்டு இழப்பு முதலிய வற்றைச் சுட்டிக்காட்டுகின்றார். மற்றொருவகையில் கூறுவதாயின் இதனை சமூகக் காரணிகள் என அழைக்கப்படும். உதாரணமாக உலகமயமாக்கல், துரித நவீனத்துவம் என்பவற்றினை மக்கள் நிராகரிக்கவருகின்ற போது அல்லது அதுதொடர்பில் மக்கள் விரக்தி யடைகின்ற போது பயங்கரவாதத்திற்குள் உந்தப்படுகின்றனர். அவ்வாறே கட்டமைப்புக்காரணிகளுள் அடங்கும் தனி மனிதத்து வமானது தனிமனிதர்களின் தனிப்பட்ட சுயநலத்திற்கு வழிவிடுவ துடன் மற்றவர்களைப் பற்றிய கவனயீனத்திற்கும் வழிவிடு கின்றது.

விஜோர்கோவின் பார்வையில் துரிதப்படுத்தல் காரணிகள் என்பது பயங்கரவாதத்தினை சாத்தியமானதாக அல்லது கவர்ச்சி கரமானதாக மாற்றுவதற்கு உதவும் காரணிகளாகும். நவீன செய்தி ஊடகங்களின் பரிணாம வளர்ச்சி, ஆயுதத்தொழில்நுட்பம், பல வீனமான அரச கட்டுப்பாடு என்பவற்றினை இக்காரணிகளாக அடையாளப்படுத்துகின்றார். இக்காரணிகளுள் அரச கட்டுப்பாட்டுக் காரணியைத் தவிர மற்றைய காரணிகள் தொழில்நுட்பக்காரணி களாகும். தொழில்நுட்பப் பரிணாமமானது எளிதானவகையில் பல்வேறு வகையான நடத்தைகளை ஏற்படுத்திவிடுகின்றது. இவரது மற்றைய இரு காரணிகளும் மனிதரின் உளவியல் மற்றும் செயற்பாட்டு நடத்தைகளுடன் தொடர்புடைய காரணிகளாகும்.

இந்தவகையில் பயங்கரவாதம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்களை அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, உளவியல் மற்றும் வரலாற்றுக் காரணிகள் என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்து நோக்கலாம்:

1. அரசியல் காரணிகள்

   i. அரசியல் இழப்புக்கள்

   ii. ஜனநாயகத்தின் குறைபாடும் சர்வாதிகாரச் செயற் பாடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. இனவாதம், தேசியவாதம், பிரிவினைவாதம்

iv. அரசியல் பாராபட்சங்கள் மற்றும் சமத்துவமின்மை

v. அரசியல் அடக்குமுறைகள்

vi. கொடுங்கோல் ஆட்சியின் செல்வாக்குகள்

vii. பொறுப்பற்ற அரசாங்கத்தின் இருப்பு

viii. காலனித்துவ சூழ்நிலைகள்

2. பொருளாதாரக் காரணிகள்

i. பொருளாதார இழப்பீடுகள்

ii. வறுமையும் பொருளாதாரச் சுரண்டலும்

iii. உலகமயமாதலின் மூலம் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள்

iv. வேலைவாய்ப்பின்மை

v. சமப்படுத்த முடியாத பொருளாதார இடைவெளிகள்

3. சமூகக் காரணிகள்

i. ஆதரவற்ற நம்பிக்கையற்ற தன்மை

ii. மனிதத்தன்மைற்ற சமூக நடத்தைகள்

iii. சமூகக் கட்டமைப்பின் குறைபாடுகள்

iv. சமூக ரீதியான பாரபட்சங்கள்

v. அநீதி மற்றும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான பதட்டங்கள்

vi. ஆழமாக வேரோடிய சமூக, இனரீதியான பிளவுகள்

4. சமய ரீதியான காரணிகள்

i. சமய கடும்போக்குவாதம்

ii. தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற சமயப் போதனைகள்

iii. ஆழமாக வேரோடிய சமய ரீதியான பிளவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கலாசாரக் காரணிகள்
   i. கலாசார தனித்துவம் புறக்கணிக்கப்படல்
   ii. வன்முறைக் கலாசாரத்தின் செல்வாக்கு
6. வரலாற்றுக் காரணிகள்
   i. மறக்கமுடியாத வரலாற்று நிகழ்வுகள்
   ii. கடந்த கால வரலாறு பற்றிய தவறான புரிதல்கள்
7. கருத்தியல் ரீதியான காரணிகள்
   i. வன்முறைக் கருத்தியல்களின் இருத்தலும் தாக்கமும்
   ii. ஆழமாக வேரோடிய கருத்தியல் ரீதியான பிளவுகள்

மேற்கூறிய காரணிகள் தவிர பின்வரும் காரணங்களும் பயங்கரவாதம் தோன்றி வளர்வதற்குக் காரணமாக உள்ளது.

1. செயற்றிறனற்ற பாதுகாப்புப் படைகள்
2. ஊடகங்களின் தவறான பரப்புரைகள்
3. வெளிப்படையாகவும், இரகசியமாகவும் கிடைக்கின்ற தூண்டுதல்கள், ஆதரவுகள் மற்றும் பயிற்சிகள்
4. பேரம்பேசுவதற்கான மிகவும் மலிவான கருவியாக பயங்கரவாதம் இருத்தல்
5. தமது அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான வன்முறையற்ற வழிமுறைகள் தோல்வியடைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# பயங்கரவாதத்தினை கோட்பாட்டாக்கல்

அனுபவ அடிப்படைகளுக்கிடையிலான உறவினை வெளிப்படுத்து கின்ற ஒரு சுருக்க வடிவமே கோட்பாடாகும். கோட்பாட்டாக்கல் என்பது ஏதாவது ஒரு உண்மைக்கு கோட்பாட்டு அடிப்படையிலான பொதுமைகளை வழங்குதல் எனப் பொருள்படுகின்றது. சாதாரணமாக வரையறுக்கப்படும் எந்தவொரு பதத்திற்கும் எண்ணக் கருவிற்கும் முறையாக அமைக்கப்பட்ட கோட்பாடு அவசியமானதல்ல. ஏதாவது உண்மையுடன் தொடர்புடைய மாறிகளுக்கிடையிலான உறவினை கட்டமைப்பதற்கு சில பொதுத் தன்மைகளின் அடிப்படையிலான கட்டமைப்பு அவசியமானதாகும். இந்தவகையில் அமைந்ததுவே பயங்கரவாதமும் அது பற்றிய கோட்பாட்டாக்கமும் ஆகும்.

பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது போன்று சமூக யதார்த்தத்தில் வரலாற்று ரீதியாக பயங்கரவாதம் தோற்றுவிக்கப் படுகின்றது. இப்பயங்கரவாதமானது ஒரு தேசத்திற்கு அரசியல் சுமையினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது தேசங்களால் விரும்பத்தகாத ஒன்றாகவும் இருந்து வருகின்றது. கோட்பாட்டு ரீதியாக நோக்குகின்ற போது மனித சமூகத்தில் உள்ள முரண்பாட்டுத் தோற்றப்பாடுகளின் விளைவாகவே பயங்கரவாதம் உள்ளது. இது அதனளவில் அபாய கரமானதும் உலகளாவியதானதுமாகும். இது அதனது செயற்பரப்பினை மனித சமூகத்தின் சகல பரப்பிலும் திசை திருப்பியுள்ளது. வன் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது வன்முறை அச்சுறுத் தலைப் பயன்படுத்துவதன் மூலம் சில பயங்கரவாதிகள் அவர்கள் கருதுகின்ற அவர்களது இலக்குகள் நிலையான ஒன்று எனப் பார்க் கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோஹான் கல்தூங்கினைப் பொறுத்தவரையில் 'பயங்கரவாத மானது நேரடியான வன்முறையாக வரை விலக்கணப்படுத்தப் படுவதுடன் ஆயுத வழிமுறைகளின் ஒரு பிரத்தியேக வடிவமாகவும் நோக்கப்படுகின்றது. இதன்படி பிரபலமான பயங்கரவாதமானது அதனுடன் தொடர்புபட்டுள்ள கொரில்லா ஆயுத வழிமுறைகள் பற்றிய மேலதிக விளக்கத்தினையும் வழங்குகின்றது. மேலும் அரச பயங்கரவாதமானது அரச அடக்குமுறை பற்றிய மேலதிக விளக்கத் தினையும் வழங்குகின்றது. இது அசமத்துவ அடிப்படையிலான தொடர்பினைக் கொண்டுள்ளதாகும். ஒரு முறையான யுத்தத்தினைப் போன்று பயங்கரவாதமானது அரசியல் இலக்குகளைக் கொண்டிருக் கின்றது. இதன்படி இது பலவீனப்படுத்தல், கொல்லுதல், அழித்தல் அல்லது நாசப்படுத்தல்' என்ற வேலைகளையும் மேற்கொள் கின்றது.

மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்ற பயங்கர ஆட்சி பற்றிய உணர்வுகளே பயங்கரவாதத்தின் அடித்தளமாக உள்ளது. இங்கு பயங்கர ஆட்சி அல்லது மிகையான அச்சநிலை என்பது ஒரு விசேட வகையான கொடுங்கோண்மையாக வரையறுக்கப்பட முடியும். அதாவது சிவிலியன்களின் பாதுகாப்புத் தொடர்பில் கரிசணை கொள்ளாத ஒரு முறையாகும். இதற்கு மேலாக பயங்கர ஆட்சியில் தண்டனைகளானது பாரபட்சமாக வழங்கப்படும் போக்கு நிலவும். இந்தவகையில் பயங்கர ஆட்சிச் சூழ்நிலையானது பரந்தளவில் மக்கள் மத்தியில் பயத்தை அல்லது பீதியை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு வெளிப்படுத்தப்படுகின்றது. இது பயங்கர வாதிகளின் அடக்கு முறைகளை எதிர்கொள்ளும் அல்லது கொடூரத் தன்மைகளை அனுபவிக்கும் மக்கள் மத்தியில் பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கர ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புரட்சியினை வலுவிலக்கச் செய்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்களானது சமூகத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கான சட்ட வலுவிற்கான தனியுடமையினை கொண்டுள்ளது. எனினும் அதனது செயற்பாடுகளின் போது கண்டிப்பான சவால்களை அவை எதிர் கொள்வதனை அவதானிக்கலாம். பொதுவாக மக்கள் பயங்கர வாதிகளின் கட்டளைகளுக்கு அடிபணியாவிட்டால் அவர்களது பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாகும் எனக் கருதுவதுடன் அரச முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையின் ஆற்றல் இழக்கச் செய்யப்படும் என்ற உணர்வும் ஏற்பட ஆரம்பிக்கின்றது.

ஏதாவது குறித்த பிரதேசத்தில் உள்ள பயங்கரவாதிகளின் குழுக்கள் அல்லது தனிப்பட்ட ஆளுமைகள் குறித்து ஆராய்வதற்குப் பதிலாக ஒரு குறித்த சூழ்நிலையில் ஒரு சமூக வகுப்பினரை அமைக்கும் செயற்பாட்டாளர்கள் பற்றியே இங்கு நோக்கப்படுகின்றது. கல்தூங்கின் வார்த்தையில் பயங்கரவாதக் கோட்பாட்டின் அவசியத்தினைக் கூறுவோமாக இருந்தால், பயங்கர ஆட்சியானது ஊகிக்க முடியாத ஒன்றாக இருப்பதனை அவதானிக்கலாம். ஒரு மக்கள் குழுவிற்கு எதிரான ஒரு வடிவிலான பயங்கர ஆட்சியின் நுட்பம் என்பது அவர்களில் சிலருக்கு தண்டனை வழங்குவது என்பதாக இருக்க முடியும். இம்முறை மூலமாக பயங்கரவாதிகள் எதிர்பார்ப்பது என்பது ஒட்டுமொத்த குழுவினையும் கட்டுப்படுத்துவது என்பதாகும். இதன்படி பயங்கரவாதிகளின் செயல் நடவடிக்கையானது தனிப் பட்டவர்களுக்கு அல்லது குழுக்களுக்கு எதிராகத் திருப்பப்படக் கூடியதாக இருக்க முடியும்.

அழிவு அல்லது மற்றய வகையான தண்டனை அல்லது தண்டனை அச்சுறுத்தல் என்பது ஒரு பகுதி செயற்பாட்டாளர்கள் மீது வன்முறையை உபயோகிப்பதன் மூலம் பிரயோகிக்கப்படத் தக்கதாகும். இச்செயற்பாட்டாளர்கள் அரசல்லாத அல்லது நிறுவன அடிப்படை கொண்ட அரச முறையுடன் தொடர்புபட்டவர்களாக இருக்கலாம். இவ்வாறான செயற்பாட்டாளர்களின் கொள்ளளவு என்பது அவர்களின் திடமான தன்மையின் மீது தங்கியிருக்கும் பலம் அல்லது பலவீனம் என்ற தன்மைக்கு ஏற்ப வரிசைப்படுத்தப்படலாம். பயங்கரவாதத்தில் உள்ள குறிக்கீட்டு மாதிரியானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமூக வகுப்பு அல்லது பிரிவுகளுக்கிடையிலான முரண்பாட்டின் தன்மைக்கு ஒத்ததாக அமைந்திருக்கும். இத்தகைய முரண்பாடு என்பது பண்டைய வர்க்க முரண்பாடுகளில் இருந்தும் வேறுபட்டதாகும். அதாவது கார்ல் மார்க்ஸ் கூறுவது போன்ற மனித சமூகத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்பதிலிருந்தும் வேறுபட்டதாகும். இங்கு பயங்கரவாதத்தில் முரண்பாடு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் பிரிவினர் மத்தியில் சிற்சில சமயங்களில் நிகழ்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இம்முரண்பாடானது பொதுவாக சொத்துக்களை அல்லது வாழ்வாதார முறைகளை அழிப்பதானதல்ல. மாறாக இம் முரண்பாட்டில் இலக்கு என்பது மக்களாக அல்லது தெரிவு செய்யப்பட்ட சிலராக இருக்கின்றனர். எனினும் இலக்குகளை அடைய முயற்சிக்கும் போது சொத்துக்கள் அல்லது வாழ்வாதார முறைகள் பாதிப்புக்குள்ளாகின்றன.மேலும் பயங்கரவாதக் கொலைகள் பரவலடைவதானது அவர்களது இலக்குகள் அடையப் படுவதற்கும் உதவியளிக்கின்றது. இத்தகைய இலக்குகள் என்பது ஒரு பிரதேசத்தின் அரசியல் அல்லது நிர்வாக அல்லது பொலிஸ் அதிகாரத்தை திடீரென கைப்பற்றுவது என்பதாக உள்ளது. எனினும் இத்தகைய சூழ்நிலை களில் பிராந்தியத்திற்குள் குறித்த அரசு தனது பயங்கரவாதத்தினை பரவலடையச் செய்வதன் மூலம் அரசுசாரா பயங்கரவாத செயற் பாட்டாளர்களை தோற்கடிப்பதற்கான பொறுப்பினை எடுக் கின்றது.

தற்காலத்தில் அரசுசாரா பயங்கரவாதிகளுக்கான தேடல் என்பது அளவில் அதிகரித்துள்ள போக்கினைக் காணலாம். மேலும் இவ் வாறான பயங்கர ஆட்சிகளானது சில சமயம் உட்கட்டமைப்பு இயந் திரங்களில் புதிய மாற்றங்கள் நிகழ்வதற்கும் வழிவிடுகின்றது. பயங்கர ஆட்சியில் பலவீனமான மற்றும் பலமான செயற்பாட்டாளர்களும் வன்முறையின் மூலம் ஏற்படும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இதனைக் கல்தூங் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். இவரது கருத்துப்படி பயங்கரவாதமானது பலமான அரசுக்கு எதிரான பல வீனமான அரசின் வழமையான ஆயுதமாகக் கொள்ளப்படுகின்றது. இது அசமத்துவ அதிகாரத்துடன் தொடர்புபட்டதாகும். ஆனால் இது பலவீனமான அரசுகளின் ஆயுதம் மட்டுமல்லாது பலமான அரசுகளின் ஆயுதமாகவும் உள்ளது என கல்தூங் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக பயங்கரவாதம் என்பது முரண்பாட்டுத் தோற்றப் பாடுகளுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. ஆனால் சகல முரண் பாடுகளும் பயங்கரவாதம் அல்ல. இதன்படி முரண்பாடுகளானது வரையறுக்கப்பட்ட அல்லது தனிப்பட்ட இலக்குகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட தன்மைகளின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கு அப்பால் சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிரான அல்லது சட்ட ரீதியான தாபனங்களுக்கு எதிரான வடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமைப்பினைக் கொண்டிருக்குமாயின் அது ஒரு குறித்த சமூகத்திற்குள்ளான விசேடத்துவத் தன்மை கொண்ட பயங்கரவாதம் என அழைக்கப்பட முடியும். இங்கு ஒரு கருத்தியல் காணப்படுவதுடன் அக்கருத்தியலானது அரசாங்க அல்லது அரசியல் கட்சிகளின் கருத்தியல்களிலிருந்து வேறுபட்டதாகும். இதன்படி பயங்கரவாதிகள் குறித்த தனிப்பட்ட அர்ப்பணிப்பினைக் கொண்ட கருத்தியல்கள் மீது செயற்படுகின்றனர். இதற்கமைய அவர்கள் முழுமையாக ஆயுதத்தினை ஏந்துவதுடன் யுத்தப் பயிற்சிகளையும் பெறுகின்றனர். சில கைவிடப்பட்ட இராணுவத்தினரும் பொலிசாரும் கூட பயங்கரவாதிகளின் படைப்பிரிவுகளில் இணைகின்றனர். இத்தகைய இணைவிற்கு பயங்கரவாதிகள் கொண்டுள்ள கருத்தியல்களே காரணமாகும். அதாவது இத்தகைய கருத்தியல்களின் பெயரிலேயே இவர்கள் பயங்கரவாதப் பிரிவுகளில் இணைகின்றனர். ஏனெனில் அவர்களுடன் இணைவதன் மூலம் சமூகத்தில் அவர்களது கடமைகளை நிறைவேற்ற முடியும் என அவர்கள் கருதுகின்றனர்.

இதன்படி பிரதான நிறுவனரீதியான அடிப்படையின் கீழ் பயங்கரவாதத்தினை பின்வரும் இரு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்:

1. அரச பயங்கரவாதம்
2. அரசுசாரா பயங்கரவாதம்

அரச பயங்கரவாதமானது இரு பொருள்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று பலமான தேசிய அரசுகள் அவற்றின் பலவீனமான அயல் அரசுகளில் தொல்லையினை ஏற்படுத்துதல் அல்லது குறிப்பிட்ட தலையீடுகளை அல்லது கொரில்லா யுத்த முறைகளின் மூலம் மற்றைய அரசுகளின் மீது தொல்லையினை ஏற்படுத்துதல் எனப் பொருள்படுகின்றது. மற்றைய பொருள் அரசுகளின் கடுமையான செயற்பாடுகள் அல்லது பொலிஸாரின் செயற்பாடுகள் அல்லது இராணுவத்தின் துன்புறுத்தல்கள் நாட்டிற்குள்ளான கடும்போக்குவாதம் அல்லது சமூக எதிர் அடிப்படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுதல் எனப்படும். ஏதாவது ஒரு பகுதியில் உள்ள சட்டத்திற்குப் புறம்பான பயங்கரவாதிகளை எதிர்கொள்வதற்கான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்படையாக இவ் வகைப் பயங்கரவாதம் கருதப்படுகின்றது. இதனாலேயே மார்க்சீசவாதிகளின் பார்வையில் அரசானது ஒரு சுரண்டல் கருவியாக, ஆட்சி யாளர் வகுப்பின் அடக்கு முறைக் கருவியாக பார்க்கப்படுகின்றது. எனினும் அரசானது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கான அதனது சொந்தக் கடமையினைக் கொண்டுள்ளதுடன் அவற்றினை நிறைவேற்றவும் முனைகின்றது. இங்கு ஆட்சியாளர்கள் சட்டத்தினைக் கையில் எடுக்கும் போது அவை பயங்கரவாதத் தன்மையினைப் பெறுகின்றது. இந்தவகையில் இச்செயற்பாடு அரச பயங்கரவாதம் என அழைக்கப்பட்டால் சமூகத்தில் அரசின் பணி யாது என்ற கேள்வி எழுகின்றது. எனவே தான் சட்ட ரீதியாக சட்ட வரம்புக்குட்பட்டு அமைக்கப்பட்ட அதிகார பூர்வ அரச நிறுவனங்களானது அரசாட்சி செய்வதுடன் சட்ட மற்றும் ஒழுங்குக்கு மதிப்பளித்துச் செயற்படுவதே அவற்றின் பணியாகக் கொள்ளப்படுகின்றது. உண்மையில் அரச பயங்கரவாதம் குறித்த இப்பார்வையானது ஏதாவது தேசிய அரசுக்குள் பொது நடை முறையில் உள்ளது மட்டுமல்லாது நியாயப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

இன்றைய உலகின் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் மிகவும் சிக்கலான பிரச்சினையாக அரசுசாரா பயங்கரவாதம் உள்ளது. இத்தகைய அரசுசாரா பயங்கரவாதத்தின் காரணமாக சமாதானம் அழிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் வாழ்க்கையும் சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளது. அரசின் பரந்த செயற்பாடு, பொருளாதாரம், சமயம் மற்றும் இதர நிறுவனங்கள் மீதும் இவ்வகைப் பயங்கரவாதம் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இப்பயங்கரவாத நிகழ்ச்சி நிரலில் அரசியல் படுகொலை பிரதான இடத்தினைப் பெறுகின்றது.

முரண்பாடு தொடர்பான சமூகவியல் கோட்பாட்டு அடிப்படையில் பயங்கரவாதத்தினை நோக்குகின்ற போது, பயங்கரவாதம் என்பது சமூக ரீதியாக உருவாக்கப்பட்ட ஒரு யதார்த்தமாகும். ஏனெனில் இது ஒரு சில தனிப்பட்ட நபர்களின் நடவடிக்கையாக அன்றி குறிப்பிட்ட சமூகப் படைகளின் விளைவாக நோக்கப்படுகின்றது. இது கலாசார மற்றும் உறவுத் தோற்றப்பாடுகளுடன் இணைந்த தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் பயங்கரவாதம் குறித்து சரிநுட்பமான பொதுவான கோட்பாடு எதுவும் காணப்படுவதில்லை. இதனால் பயங்கரவாதம் என்பது மிகச் சிறந்த கோட்பாடுகள் அற்ற ஒன்றாகவே உள்ளது. எனினும் அரசியல் வன்முறை அல்லது கடும்போக்குவாத கூட்டு வன்முறைகள் போன்றவற்றினை கோட்பாட்டு அடிப்படையில் விளக்குவதன் மூலம் பயங்கரவாதம் குறித்த தோற்றப்பாட்டினை விளக்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

அரசியல் வன்முறைகள் குறித்த கோட்பாட்டு விளக்கங்கள் கார்ல் மார்க்ஸ், மா ஓ சேதுங், லெனின், ரொஸ்கி போன்றோரின் எழுத்துக்கள் அல்லது போதனைகளிலிருந்தே தோற்றம் பெறுகின்றது. இவர்களது போதனைகள் எல்லாம் அரசியல் வன்முறையை, விசேடமாக புரட்சித் தன்மையை விளக்குவதாக உள்ளது. அவர் களுடைய எழுத்துக்களில் புரட்சிகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களைக் கண்டு கொள்ள முடிவதுடன் வன்முறை என்பது 'சுத்திகரிப்பு படையாக' விளக்கப்படுகின்றது. மேலும் புரட்சி, வன்முறையானது கொடுங்கோலாட்சி, துன்புறுத்தல் மற்றும் சுரண்டல் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கான ஒரு கருவியாகவும் விளக்கப் படுகின்றது. இவர்களது எழுத்துக்களுக்கு எதிரான பதிலீட்டு வன் முறைகள் என்ற ரீதியில் சில எதிர் விமர்சனங்களும் எழுகின்றது. இவ்விதமான பதிலீட்டு வன்முறைகள் கருத்தியல் ரீதியான உள்ளடக் கத்தை பெருமளவிற்குக் கொண்டிருப்பதில்லை.

விரக்தி வன்முறைக் கோட்பாடு, கட்டமைப்புக் கோட்பாடு, சமூகக் கற்கைக் கோட்பாடு, பரிமாற்றக் கோட்பாடு என பல கோட் பாடுகள் வன்முறைகள் பற்றி விளக்கியுள்ள போதிலும் அவைகள் பயங்கரவாத வன்முறை குறித்து பெரியளவில் விளக்குவதாக இல்லை. மேற்கூறிய கோட்பாடுகளுள் ரொபர்ட் ரெட் கர்ரின் ஒப்பீட்டு இழப்புக் கோட்பாடு குறிப்பிடத்தக்கதாகும். இக்கோட்பாட்டின்படி வன்முறை சார்ந்த சிவில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு முக்கிய அடிப்படையாக இருப்பது ஒப்பீட்டு இழப்பு என்பதாகும். அதாவது ஒருவரது எதிர்பார்க்கைக்கும், அவருக்குக் கிடைத்தவைகளுக்கும் இடையிலான இடைவெளியின் அதிகரிப்பே விரக்தி அதன் மூலம் வன்முறை அதிகரிப்புக்கு காரணமாகும் என்பதாகும். அந்த வகையில் பயங்கர வாதம் தொடர்பிலான கோட்பாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பாட்டிற்குரியதாக கர்ரின் வாதம் உள்ளது. இதன்மூலம் அவர் ஒரு பயங்கரவாதச் செயலானது எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஒரு நிறை வேற்றுகையாக பயன்படுத்தப்பட முடியும் என கருது கின்றார்.

புரட்சிகர வன்முறை தொடர்பிலான மற்றுமொரு முக்கிய கோட் பாட்டு விளக்கமானது பயங்கரவாதிகளை உருவாக்கும் அரசியல் காரணிகள் மீது கூடிய கவனத்தைச் செலுத்துகின்றது. இதற்கமைய பெலிக்ஸ் குரோஸ் (Feliks Cross) என்பவர் இரண்டு மாதிரிகளை பிரேரித்துள்ளார். அவற்றுள், ஒன்று உள்நாட்டு எதேச்சதிகாரத்திற்கு அல்லது வெளிநாட்டு ஆட்சிக்கு எதிராக தந்திரோபாய பயங்கரவாதச் செயல்கள் உருவாகுவதனை விளக்கும் மாதிரி, மற்றொன்று ஜன நாயக நிறுவனத்திற்கு எதிரான ஒரு தந்திரோபாயமாக தனிப்பட்ட வன்முறை உருவாகுவதனை விளக்கும் மாதிரியாகும்.

பயங்கரத்தன்மையின் உருவாக்கம் மீது கவனத்தைச் செலுத்தி பயங்கரவாதம் குறித்த மற்றுமொரு சிறப்பான அரசியல் அனுமானத்தை ஹன்னாஹ் அரன்ட் (Hannah Arendt) என்பவர் முன்வைக்கிறார். இவரது விளக்கத்தில் நவீன அரசுகளில் கடும்போக்குவாத புரட்சிகர வன்முறைச் செயல்களானது, ஆபத்தை உணராத கிளர்ச்சி வடிவத்தில் நிகழலாம் என்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவர்கள் தவிர யொஹான் கல்தூங் என்ற பிரபல்யமான முரண் பாட்டு ஆய்வாளரும் முரண்பாட்டு அடிப்படைகளினூடாக பயங்கர வாதம் பற்றிய கோட்பாட்டு விளக்கத்தில் கவனம் செலுத்தியுள்ளனர். கல்தூங்கைப் பொறுத்தவரையில், பயங்கரவாதம் என்பது நேரடியான வன்முறையாகும். பிற வழிமுறைகளைக் கொண்ட வன்முறையின் தொடர்ச்சியாகவே அது உள்ளதுடன் அது மிகவும் பிரத்தியேகமான ஒரு போராட்ட வடிவமாகும். இதில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பயங்கரவாதமானது கொரில்லா போர் முறை பற்றிய மேலதிக விபரணத்தை வழங்குகின்ற அதேவேளை அரச பயங்கரவாதமானது அரச அடக்குமுறை பற்றிய மேலதிக விபரணத்தையும் வழங்கு கின்றது. தொடர்ச்சியான யுத்தத்தைப் போன்று பயங்கரவாதமும் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதுடன் அது காயப் படுத்துதல், கொலை மற்றும் அழித்தல் போன்ற செயல்களைக் கொண்டுள்ளது மாகும். பயங்கரவாதம் பற்றி மேலும் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட கல்தூங், பலமான அரசுக்கு எதிராக பலவீனமானவர்கள் வழமையாகப் பயன்படுத்துகின்ற ஆயுதமாகப் பயங்கரவாதத்தைச் சுட்டிக்காட்டு வதுடன் அது அசமத்துவ அதிகாரத்துடன் தொடர்பு பட்டது எனவும் சுட்டிக்காட்டுகின்றார். ஆனாலும் அது பலவீன மானவர்களின் ஆயுதம் மட்டுமல்ல பலமானவர்களின் ஆயுதமும்தான் என்பதை அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

மேற்கூறியவாறு பயங்கரவாதம் குறித்து மாறுபட்ட கோட்பாட்டு விளக்கங்கள் அடிப்படையில் பயங்கரவாதத்தை நோக்குவோ மானால், பயங்கரவாதம் என்பது மனித சமூகத்தில் உள்ள முரண் பாட்டுத் தோற்றப்பாட்டின் ஒரு விளைவே என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனினும் எல்லா முரண்பாடுகளும் பயங்கரவாதம் அல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக முரண்பாட்டு அடிப்படைகளைக் கொண்டதே பயங்கரவாதம் என்பதே அதன் பொருளாகும். அந்த வகையில் முரண்பாட்டு அடிப்படைகளைக் கொண்ட நிறுவன மயப்படுத்தப்பட்ட, அதிக இழப்பீடுகளை ஏற் படுத்துகின்ற, அரசியல் இலக்குகளுடன் தொடர்புபட்டதான வன் முறைப் பிரயோகத்தை அல்லது வன்முறை அச்சுறுத்தலை உள்ளடக் கியதாகவே பயங்கரவாதம் இருக்கும்.

பயங்கரவாதத்தின் தூண்டுதல்களையும் அதற்கான காரணங் களையும் புரிந்துகொள்வதானது ஒரு கருத்துள்ள வெற்றிகரமான எதிர்பயங்கரவாத தந்திரோபாயத்தினை விருத்திசெய்து கொள்வதற்கு உதவக்கூடியதாக இருக்கும். பயங்கரவாதிகள் என்பவர்கள் எல்லா விடயங்களிலும் ஒரு ஐக்கியப்பட்ட குழுவாக இருப்பதில்லை. அவர்களது காரணங்கள் பல்வகைத்தன்மையிலானது. சில அவர்களை சட்ட ரீதியான புவிசார் அரசியல் நடிகர்களாகப் பார்க்கின்றனர். இன்னும் சிலர் தமது இலக்கினை அடைந்துகொள்வதற்கு எதிர் பார்க்கும் அரசியல் நடிகர்களாகப் பார்க்கின்றார். இவ்விதம் மாறுபட்ட பார்வைகள் பயங்கரவாதிகள் தொடர்பில் காணப்படுவதானது அது பற்றிய பல்விதமான கோட்பாட்டு உருவாக்கத்திற்கு வழி விட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதம் பற்றிய கோட்பாடுகள்

பயங்கரவாதத்தினைப் புரிந்துகொள்வதற்கான கோட்பாட்டு ரீதியான முயற்சியின் வரலாறு என்பது அரசியல் விஞ்ஞானத்தில் உள்ள கூட்டு வன்முறை பற்றிய அத்தியாயத்தின் ஒரு உப பகுதி என்ற வகையிலே ஆரம்பிக்கின்றது. எனினும் 1970களில் குற்றவியல் நீதியானது ஒரு தனித்துறையாக தோற்றம் பெறுவதற்கு முன்னரே பயங்கரவாதக் கோட்பாடுகள் பற்றிய தனியுடைமையை அரசியல் விஞ்ஞானம் கொண்டிருந்ததாகக் கொள்ளப்பட்டது. இது சமயம் மற்றும் பொருளியல் போன்ற துறைகளினாலும் பின்தொடரப்பட்டது எனக் கூறப்படுகின்றது. அவ்வாறே சமூகவியல், உளவியல் மற்றும் குற்றவியல் கொள்கைகளும் பயங்கரவாதம் குறித்த சில பொருத்தப் பாடுகளை விளக்குவதற்கான பங்கினை கொண்டுள்ளதாகக் கூறப் படுகின்றது. இதிலிருந்து கொண்டே பயங்கரவாதத்துடன் தொடர் புடைய கோட்பாடுகள் பற்றிப் பரிசீலிக்க முடியும். பொதுவாக பயங்கரவாதம் தொடர்பான கோட்பாட்டு விளக்கங்களை அறிவதற்கு பின்வரும் இரு வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டியது அவசிய மாகும்.

1. ஏன் பயங்கரவாதம் தோன்றுகின்றது? (Why does Terrorism Occur?)
2. அதற்கான காரணங்கள் யாவை? (What Causes it?)

இவ்விரு வினாக்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது, அரசியல் கோட்பாடுகளானது அரசாட்சியே (Governance) பயங்கரவாதத்திற்கான காரணம் எனக்குறிப்பிடுகின்றது. சமூகவியல் கோட்பாடுகள் போன்ற மற்றைய கோட்பாடுகள் சமூக ரீதியான பல காரணிகளே பயங்கர வாதம் ஏற்படக் காரணம் எனக் கூறுகின்றது. இந்தவகையில் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டுள்ள பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார, உளவியல் கோட்பாடுகள் சிலவற்றினைப் பின்வருமாறு நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதக் கோட்பாடாக அராஜகம் பற்றிய அரசியல் கோட்பாடு

நிச்சயமாக பயங்கரவாதம் என்பது ஒரு அரசாட்சி வடிவமல்ல. அது ஒரு அராஜரீக வடிவமாகும். பெரும்பாலான அராஜகவாதிகள் தேசியவாத மற்றும் சமயவாத நோக்கங்களைக் கொண்ட பயங்கர வாதத்தின் பலவிதமான முன்னணி வகைப்பாடுகளை நிராகரிக்கின்றனர். ஆனால் ஒரு கோட்பாட்டு ரீதியான பார்வையில் அராஜக வாதமானது ஒழுங்குபடுத்தப்பட்ட சுயதேவைப் பூர்த்தியுடைய சமூகத்தின் பெறுமானங்களினை தாக்குகின்ற ஒரு குற்றவியல் செயற் பாட்டுவடிமாக பயங்கரவாதத்தினை நோக்குகின்றது. பொதுவாக அராஜகவாதமானது மத்திய அல்லது வெளிவாரியான அதிகாரத்துவ மாதிரியிலான எந்தவொரு வடிவத்தினையும் நிராகரிக்கின்ற அரசாட்சி பற்றிய கோட்பாடாகும். பயங்கரவாதத்திற்கான 19ம் நூற்றாண்டைய அடிப்படையாக அராஜகம் குறிப்பிடப்படுகின்றது. அராஜகம் என்ற பதமானது 1840இல் ஜோசப் புரூடன் என்பவரினாலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வராஜகமானது அரசு, எவ்வடிவிலானதுமான அரசாங்கம், ஆதிக்கம் மற்றும் சுரண்டலை நிராகரிக்கின்ற ஒன்றாக வரையறுக்கப்படுகின்றது. நேர்மறைச் சுதந்திரத்திற்குப் பதிலாக எதிர்மறைச் சுதந்திரத்தினை இயலச் செய்யக் கூடிய வகையில் உலகின் சகல வளங்களும் சுதந்திரமாகவும் சமத்துவ மாகவும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய சிந் தனையையே அராஜகம் முன்வைக்கின்றது.

ஒரு கோட்பாடு என்றவகையில் அராஜகம் வரலாற்றில் ஒரு தனித்துவமான இடத்தினைப் பெற்றுள்ளது. ஏனெனில் இதுவே புரட்சி நோக்கங்கள் பற்றிய முறைமைப்படுத்தப்பட்ட சிந்தனையைக் கொண்டுவந்த முதலாவது புரட்சிகர இயக்கமாகும். இவர்களது சிந்தனைகளில் சில பயங்கரவாதிகளின் தந்திரோபாயங்களாக உள்ள தனை அறியலாம். எனினும் அவற்றினை அராஜரீகச் சூழ் நிலையில் இருந்து அவற்றினைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். புரூடன் என்ற அறிஞர் கனிந்த காலப்பகுதியே புரட்சிச் செயல்களுக்கு உசிதமானது என்றவகையில் அவ்வகையான காலப்பகுதிகளை கனப் பொழுதினைக் (Moment) கண்டறியும் சிந்தனைக்கு பங்களிப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். மற்றொரு அராஜகவாதியான மிக்கையில் பக்குனின் (Mikhail Bakunin) Propaganda by Deed என்ற சிந்தனையினைப் பிரபல் யப்படுத்தினார். அதாவது செயலினை விடுவித்து அவற்றுக்காகவே பேசு என்ற சிந்தனையாகும். இச்சிந்தனை அடிப்படையில் கார்லோ பிஸாகேன் (Carlo Pisacane) என்பவரால் விருத்தி செய்யப்பட்டதாகும். பல ஆண்டுகளாக இச் சிந்தனையானது தாக்குதல் பற்றிய ஒரு அறிவு பூர்மாவன தத்துவமாக விருத்தி செய்யப்பட்டது. அதாவது விழிப் புணர்வு மற்றும் அனுதாபத்தினை தூண்டுவதற்கான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டது. இவ்விடயத்தில் சுட்டிக் காட்டத்தக்க ஒரு விடயம் பயங்கரவாதத்தின் ஒரு முக்கிய அடிப் படையினை அராஜகம் கொண்டுள்ளது என்பதாகும். பகுமினின் சிந்தனையானது அராஜகத்திலேயே செல்வாக்குச் செலுத்திய போதிலும் அவரது சிந்தனை பரந்தளவிலான குழுக்களின் செயல் களுக்கு எதிரான தடையை உள்ளடக்கியிருந்தது. அதிகமான அராஜக வாதிகள் குறைந்த அறிவுடன் அல்லது அவர்களுக்குச் சொந்தமான குழுக்களின் ஆதரவுடன் தலைவரில்லாத புரட்சி அடிப்படையின் மேல் செயற்பட விரும்புகின்றார்கள். மற்றுமொரு அராஜகவாதியான பகுமினுடன் தொடர்புடைய சேர்ஜீ நாச்சேவ் (Sergei Nachaev) என்பவர் அழிவின் கொடூரத் தன்மையினை புகழ்ந்துரைக்கின்றார். ஆனால் பகுமின் ஒரு சமூகக் கட்டமைப்பினை அழிக்க பின்வரும் ஆறு படிமுறைகளை எடுக்க வேண்டும் எனக் கூறுகின்றார்:

1. நுண்ணறிவுடையோரை கொல்லுதல். அதாவது சமூகத்தில் செயற்றிறன் மிக்க நுண்ணறிவுள்ளவர்களைக் கொல்லுதல். (Kill the intelligentsia)

2. செல்வந்தர்களையும் அதிகார பலமுள்ளவர்களையும் கடத்துதல். அதாவது பெரியளவிலான பணத்தினை வழங்குபவர்களைக் கடத்துதல். (Kidnap the rich and powerful)

3. அரசியல்வாதிகளை ஊடுருவல். அதாவது அவர்களது இரக சியங்களைக் கண்டறிதலும் அவர்களை அவமதித்தலும். Infiltrate the politicians)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொறுப்புள்ள குற்றவாளிகளுக்கு உதவுதல். அதாவது நீதி மற்றும் தண்டனை ஊடாக சமூகத்தினை குழப்பத்தில் ஆக்குதல். (Help the guilty criminal)

5. அதிகமாக சத்தம் உரைப்பவர்களைப் பாதுகாத்தல். அதாவது அபாயகரமான பிரகடணங்களை வெளிப்படுத்துபவர்களை பாது காத்தல். (Defend the loudmouths)

6. ஆதரவாளர்களைக் கவனித்தல். அதாவது சமூகத்தின் அழிவில் நம்பிக்கைகொண்டுள்ளவர்களுக்கு உதவுதல். (Nurture the supporters)

மிகவும் முக்கியமான அராஜகவாதிகளான கார்ல் ஹீன்சன் மற்றும் யொஹான் மோஸ்ட் போன்றோர் படுகொலை (Murder) பற்றிய சிந்தனைக்கு பங்களிப்புச் செய்தனர். விசேடமாக தற்கொலைத் தாக்குதல் படுகொலையானது புரட்சிகரப் போராட்டத்தின் உயர்ந்த பட்ச வடிமாக ஆக்கப்பட்டது. இவர்கள் இருவரும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதப்பாவனை குறித்தும் வாதிடுகின்றனர். பீட்டர் குரோப்ட்கின் போன்ற மற்றைய அராஜகவாதிகள்; Propaganda by word என்ற சிந்தனையை அறிமுகப்படுத்தினர். அதாவது வன்முறை வெளியீடுகளை உபயோகிப்பதன் மூலம் பொதுமக்களை தீவிரப் படுத்துல். பாசிசத்தினைப் போன்று சில செல்வாக்குள்ள பெண் களையும் அராஜரீகம் கொண்டிருந்தது. இந்தவகையில் பேச்சுச் சுதந்திரம் மற்றும் பாலியல் சுதந்திர இயக்கத்தின் ஆரம்பகால ஸ்தாபகராக எம்மா கோல்ட்மேன் (Emma Goldman) விளங்கினார். அராஜகரீக வரலாற்றில் சார்ல்ஸ் கலோ (Charles Gallo), ஒகஸ்ட் வெய்லன்ட் (Auguste Valiant), எமைல் ஹென்றி (Emile Henry) மற்றும் குளோடியஸ் கொனிக்ஸ்டன் (Claudius Konigstein) போன்ற பெண் களும் இவ்வாறான சிந்தனைகளுக்காக வாதிட்டனர். அவ்வாறே குற்றவியல் செயற்பாடுகளை நியாயப்படுத்தத்தக்க வகையிலும் சில அராஜக வாதிகள் செயற்பட்டனர்.

1875 இலிருந்து 1912இற்கு இடைப்பட்ட காலத்தில் அராஜக வாதிகள் தனியாக அல்லது சிறு குழுக்களின் மூலமாக ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி வில்லியம் மெக்கின்லீ (President William

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

McKinley in 1901) உட்பட 09 நாடுகளின் தலைவர்களை படுகொலை செய்வதற்கு அல்லது படுகொலை செய்யும் முயற்சியினை பரி பாலித்தனர். இக்குற்றங்கள் அராஜகத்தின் மிகப்பிரபலமான செயற் பாடுகளாக இருந்தது. இதுபோலவே அராஜகவாதிகள் திருட்டு, வழிப்பறிக்கொள்ளை, படுகொலை, கடத்தல், பௌதீக ரீதியாக தாக்குதல், குண்டுத்தாக்குதல் போன்ற எண்ணற்ற சாதாரண குற்றங் களிலும் ஈடுபட்டனர். இது தொடர்பில் மிகவும் பிரபலமான சம்பவம் 1886 இல் சிக்காகோவில் இடம்பெற்ற ஹேமார்க்கட் கலவரம் (Hay market riot) ஆகும். மரபுரீதியான அராஜகவாதத்தின் இவ்வுச்சக் கட்ட ஆண்டுகளில், மே தினக் கொண்டாட்டங்கள் என்பது சகல குற்றங்களும் சீறியெழுகின்ற நாட்களாகப் பிரபல்யமடைந்திருந்தது. ரஸ்யப் புரட்சி காலத்தில்-அராஜகக் கம்யூனிசம் உதயமானதையடுத்து மரபு ரீதியான அராஜகமானது உடைய ஆரம்பித்தது. அராஜகக் கம் யூனிசமானது (An arc ho-communism) வழக்காறு பற்றிய சிந்தனைக்கு ஆதரவான சொந்தங்கோரும் சிந்தனையினை (the idea of ownership) முற்றாக நிராகரிக்கின்றது.

மேலும் இவர்கள் இயற்கையான உடல் தேவையின் திருப்தியில் நம்பிக்கை கொண்டிருந்தனர். 21 ஆம் நூற்றாண்டைய பயங்கரவாதக் குழுக்கள் பின்னர் அராஜகவாதத்தினைக் கொண்டு தோற்றம் பெற்றதாக வாதிடப்பட்டது. இவ்வாறு வாதிடப்பட்ட குழுக்களுள் ஜப்பானிய செம்படை இராணுவம் (Japanese Red Army), பிரிட்டீஸ் சினப்படை British Angry Brigade, ஜேர்மன் பாதார்-மெய்ன்கோப் குழு (German Baader-Meinhof Gang), ஐக்கிய அமெரிக்காவில் உள்ள வெதர்மேன் (Weatherman) மற்றும் மார்க்சீச செபடிஸ்டா இயக்கம் (Mexican Zapatista movement) போன்றன உள்ளடங்குகின்றன. 1936களில் இடம்பெற்ற ஸ்பானிய புரட்சி காலத்தில் அராஜரீக- சின்டிக்கலிசம் (Anarcho-syndicalism) என அழைக்கப்பட்ட கொள்கை நடைமுறைக்கு வந்தது. இது பலவிதமான புரட்சிக் குழுக்களின் தளர்வான கூட்டமைப்புப் பற்றி விளக்குகின்றது. இன்று சூழல் வாதிகள், மாற்று நாணய வர்த்தகர்கள், எதிர் உலகமயமாக்க இயக் கத்தின் பகுதிகள், அதாவது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு போன்றவற்றினை வெறுக்கின்றவர்களும் தம்மைத்தாமே அராஜகவாதிகளாகவே அடையாளப்படுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி அராஜகவாதிகள் யூதர்களின் எதிரிகளாக இல்லாதிருப்பதுடன் இனக் கலவரத்திலும் நம்பிக்கை கொண்டிருப்பதில்லை.

இந்தவகையில் இன்று அராஜகவாதம் பயங்கரவாதத்திற்கு முழுமையாக ஆதரவளிப்பதில்லை. எனினும் வரலாற்றுரீதியாக அது பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்து வந்திருக்கின்றது. இதன்படி இன்றும் கூட அது பயங்கரவாதத்தின் சில செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதாக உள்ளது. ஆனால் இவை இரண்டுக்கும் இடையில் propaganda by Deed எண்ணக்கருவானது பலமான தொடர்பினை வெளிப்படுத்துகின்ற போதிலும் பலவீனமான தொரு கோட்பாட்டுத் தொடர்பே இவையிரண்டுக்கும் இடையில் காணப்படுகின்றது. அராஜகவாதிகள் ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலேயே செயற் படுகின்றனர். அதாவது அராஜகம் கொடூரம் மற்றும் கட்டாயப் படுத்தும் உறவுகளிலிருந்து வரும் சுயவிடுதலைச் செயல்களினால் உருவாக்கப்படுகின்றது என்பதாகும்.

உண்மையில் அராஜகமானது குண்டுத்தாக்குதலை மேற்கொள் வதனையோ அல்லது ஒழுங்கீனத்தினையோ ஏற்படுத்துவது பற்றியதல்ல. பயங்கரவாதத்தினை பொறுத்தவரையில் அதில் ஈடுபடும் பயங்கரவாதிகளின் இலக்கு மக்களாகும். ஆனால் அராஜகவாதிகளின் இலக்கு நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்ற விடயங் களாகும். பகுமின் மக்களின் இறப்பினை விரும்பவில்லை ஆனால் பொருட்களின் அழிவினையும் அதிகார நிலையின் அழிவினையும் விரும்பினார். ஒரு சிறிய தொகையிலான பயங்கரவாதிகள் மட்டுமே எப்போதும் அராஜகவாதிகளாக இருக்கின்றனர். அவ்வாறே ஒரு சிறிய அளவிலான அராஜகவாதிகள் மட்டுமே எப்போதும் பயங்கர வாதிகளாக உள்ளனர். கிட்டத்தட்ட சகல அராஜகப் பிரிவுகளும் சிறைபிடிப்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதில்லை அல்லது சிறிய அறையில் கைதிகளை அடைத்துவைப்பதனையும் விரும்புவ தில்லை.

இந்தவகையில் அராஜரீகக் கோட்பாடானது பயங்கரவாதிகள் பயன்படுத்தும் சில தந்திரோபாயங்களைக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையாயினும் முழுமையாக அராஜகக் கோட்பாடானது ஒரு அரசியல் கோட்பாடு மட்டுமேயன்றி முழுமையானதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதக் கோட்பாடல்ல. எனினும் பயங்கரவாதத்திற்கான கோட்பாட்டுத்தளத்தில் அரசியல் தன்மை பொருந்திய சில கோட்பாட்டு அடிப்படைகளை அராஜரீகம் வழங்குகின்றது.

### பயங்கரவாதக் கோட்பாடாக பாசிசவாத அரசியல் கோட்பாடு

பாசிசம் என்பது ஒரு வடிவிலான அரசாங்க முறையாகும். அதற்கான வரைவிலக்கணம் குறித்து வேறுபட்ட வாதங்களே உள்ளது. பாஸ்மோர் என்பவர் தீவிர தேசியவாதக் கருத்தியலின் சேர்க்கையாக அதனை வரைவிலக்கணப்படுத்த முயற்சிக்கின்றார். பாசிசம் என்ற சொல் லானது 'பாஸஸ்' (fasces) என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் மக்களை அச்சுறுத்துவதற்கு அல்லது அடக்குவதற்கு அதி காரத்தினைப் பயன்படுத்துதல் என்பதாகும். பொதுவாக சில வடி விலான தூய தேசத்துவப் பற்றுக்குள் சகல வகையான அரசியல் பொருளாதார அதிகாரத்தினை ஒன்றிணைப்பதனைக் குறிக்கின்றது. அதாவது ஒருவருடைய எதிரியுடன் இனப்படுகொலை அல்லது முடிவற்ற யுத்தத்தினை மேற்கொள்வதனைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. நடைமுறையில் 1922 இல் பெனிட்டோ முசோலினி என்பவரே இப்பதத்தினை அறிமுகப்படுத்தினார். இப்பதம் பற்றி அவர் குறிப்பிடும் போது அரசினுடையதும் சமூக அதிகாரத்தினதும் இணைப்பு என்று குறிப்பிட்டார். பாசிசம் பற்றிய முசோலினியின் பார்வையானது பலமான அதிகாரம் மற்றும் ரோம ஏகாதிபத்தியத்தினை மீள நிலைநிறுத்துவதற்கான சிந்தனை என்ப வற்றினை அடிப்படை யாகக் கொண்டிருந்தது.

அடோல்ப் ஹிட்லர் பாசிசம் பற்றிக் குறிப்பிடும் போது, பாசிசம் என்பது திறமையானதும் பலமானதுமான பிரச்சாரத்தின் பிரயோகம் எனக் குறிப்பிட்டார். பாசிசம் குறித்த ஹிட்லரின் பார்வையானது ஹெகல், நீட்சே மற்றும் ஸ்பென்க்லர் ஆகியோரின் தத்துவப் பிரதி பலிப்புக்களால் விளக்கப்படுகின்றது. யப்பானிய பாசிசமானது இன வாதம், வெறியுணர்ச்சி, வரலாற்று விதி மற்றும் புசிடோ (Bus hi do), சென் (Zen) மற்றும் சின்டோ பௌத்தம் (Shinto Buddhism) ஆகியவற்றின் கலவை, சக்கரவர்த்தி வழிபாடு, கடந்கால சமூராய் கதைகள் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. அதேவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய பாசிசவாதம் (So-called Islamo-Fascism) பற்றிய கருத்தினை இஸ்லாமியக் கடும்போக்குவாதத்தில் திருப்திகொள்ளாத பலர் முன் வைக்கின்றனர். அல்-இஹ்வான்களின் தோற்றத்துடன் இத்தகைய தொரு நிலை தோற்றம் பெற்றதாக குறிப்பிடுகின்றனர். ஒரு பார்வையில் பாசிசமானது பாதுகாப்பற்ற தன்மை மற்றும் தோல்வியுணர்வு என்பவற்றினால் பிறக்கின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது பாசிசத் தலைவர்களானவர் கூட்டுச்சதிகளையும் பொய்களையுமே விரும்பு கின்றனர்.

பாசிசமானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கின்றது. வழக்கமாக வசீகரத் தலைவருக்கு கிளர்ச்சியாளர்கள் மற்றும் சமாதானத்தினை ஏற்படுத்துவோர்களை தகர்க்க உயர்ந்தபட்ச அதிகாரம் வழங்கப்படுகின்றது. பாசிசத்தில் தொடர்ச்சியான யுத்தமும் இராணுவத் திட்டங்களும் எதிரிகளை பலவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுபவைகளாகவே இருக்கும். மேலும் பாசிசமானது உலக அட்டவணையில் ஒரு பெரிய இடம் தமக்குக் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்ற இனத்துவ மக்களின் விரக்திக்கான வேண்டுதலாக உள்ளது. அதேவேளை பாசிசம் பயங்கரவாதத்தின் அனுசரணையாளராக இருப்பதோடு சமூக அடையாளத்தினை வெளிப் படுத்தும் (Pan-Africanism, Pan-Arab ism, Islamo-Fascism) ஒரு வழி முறையாகவும் உள்ளது.

வரலாற்று ரீதியாக தமது சொந்த நாட்டில் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதில் தோல்வியடைந்ததனால் விரக்தியுற்ற பாசிசவாதிகள் பயங்கரவாதத்திற்கு திரும்பியிருக்கின்றார்கள். பாசிசவாதிகள் பிரஜைகளுக்குக் கொடுக்கப்படும் உரிமைகளில் நம்பிக்கை இழக்கின்ற போது உள்நாட்டுப் பயங்கரவாதத்திற்குள் (domestic terrorism) திரும்பு கின்றனர். எனினும் பாசிசவாதிகள் எல்லா மனிதர்களும் சம உரிமை யுடையவர்கள் என்ற கருத்தினை ஏற்பதில்லை. பாசிசவாதிகள் வெளி நாட்டுக் குடும்பங்களும் தனியார் தொழில் நிறுவனங்களும் வெளி யேற்றத்திற்கான இலக்குகளாகக் கொள்ளப்படுகின்றனர். இங்கு மிகப்பரவலான அச்சுறுத்தலை விடுப்பவர்கள் எதிரியாகப் பார்க்கப் படுகின்றனர். அவ்வாறே ஊழல்க் குடும்பங்கள் மற்றும் சொத்து உறவுகள் என்பன பாசிசவாதிகளுக்கு எதிரியாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசிசமானது வஞ்சப் புகழ்ச்சி மற்றும் முரண்பாடுகளின் முழுமையாக உள்ளது. ஒரு வகையில் ஆள்புலத்தின் மேன்மை, நாட்டுப்புற வாழ்க்கைக்குத் திரும்புதல் என்பவற்றில் அவர்கள் நவீனத்துவ எதிர் நிலைப்பாட்டினைக் (anti-modern) கொண்டுள்ளனர். மற்றொரு வகையில் அதனது இராணுவத் தொழில்நுட்ப வழிபாடு, பெரிய வியாபாரங்களுக்கு ஆதரவான தன்மை, பரந்தளவில் மக்களை ஒன்று திரட்டல், வர்த்தகமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னேற்றுதல் போன்றவற்றில் நவீனத்துவத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டினைக் (pro-modern) கொண்டுள்ளது.

அராஜகவாதிகள் மே தினக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவது போன்று பாசிசவாதிகள் நூற்றாண்டு விழாக்களில் ஈடுபடுகின்றனர். அவ்வாறே நிச்சயமாக பல பயங்கரவாதிகள் அவர்களது தாக்குதல் தினத்தினை அல்லது அவர்களது முக்கியமான தலைவர்களின் பிறந்த தினத்தினை வரலாற்று நிகழ்ச்சியாகக் கொண்டாடுகின்றனர். உதாரணமாக சூழல்பயங்கரவாதத்தினை (Econterrorism) அடிப்படையாகக் கொண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதியினை ஐக்கிய நாடுகள் சபை உலக உணவு தினமாகப் பிரகடணப்படுத்தியுள்ளது. எனினும் பயங்கரவாதம் பற்றிய கற்கையில் மிகவும் பிரதானமான தினம் ஏப்ரல் 19 ஆகும். இத்தினத்தில் பல முக்கியமான நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. இத்தினத்தினை வலதுசாரி பயங்கரவாதக் குழுக்கள் 'இராணுவத் தினம் (Militia Day) என அழைக்கின்றது. இத்தினத்திலேயே வெக்கோவில் (Waco) இடம்பெற்ற முற்றுகை முடிவிற்கு வந்தது. நவ பாசிசவாதிகள்; (Neo-Nazi) எப்ரல் 19 ஆம் திகதியினை ஐரோப்பா முழுவதும் யூதர்களைத் துடைத்தெறிவதற்காக நடவடிக்கையை ஜேர்மனிய நாசிஸ்ட்கள் ஆரம்பத் தினமாகக் கொண்டாடுகின்றனர். அதற்கு அடுத்த நாள் ஜேர்மனிய நாசிசத்தின் தந்தையான அடோல்ப் ஹிட்லரின் (Adolf Hitler) பிறந்த தினமாகும். இவ்விதமான அடிப்படைகளை பாசிசம், அதன்வழிவந்த நாசிசம் என்பன கொண்டிருக்க, சர்வதேசரீதியாக பயங்கரவாதக் குழுக்கள் அவர்கள் தாமாகவே தம்மை விடுதலைப் போராளிகள் (Freedom Fighters) எனக் கருதுகின்றனர். இவ்விதமான நியாப்படுத்தல் வரலாறு என்பது அமெரிக்கப் புரட்சிக்காலம் (American Revolution) வரை நீண்டு செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புரட்சியானது லெக்சின்ங்டன் போராட்டத்தினால் 1775 ஏப்ரல் 19 இல் ஆரம்பித்திருந்தது. சமகாலத்தில் பயங்கரவாதத்திற்கான மிகவும் பிரபல்யமான தினமாக இருந்த ஏப்ரல் 19 ஆம் திகதியானது செப்டம்பர் 11 ஆம் திகதியாக மாற்றப்பட்டுள்ளது. இவ்விதம் இத் தினங்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கு 2001 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற உலகினை உலுக்கிய ஐக்கிய அமெரிக்க இராணுவ மையம் மற்றும் வர்த்தக மையம் மீதான தாக்குதலே காரணமாகும். எனவேதான் இன்றைய பயங்கரவாதத்தின் போக்கிற்கான சில அடிப் படைகளை பாசிசவாதத்தில் கண்டுகொள்ள முடிகின்றது. இதனா லேயே பாசிசவாத அரசியல் கோட்பாடானது பயங்கரவாதத்திற்கான சில கோட்பாட்டு அடிப்படைகளை வழங்குவதாகக் கணிக்கப் படுகின்றது.

பயங்கராவாதம் தொடர்பான கோட்பாடுகளில் மேற்கூறிய இரண்டு கோட்பாடுகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும். அடிப் படையில் இவையிரண்டும் அரசியல் கோட்பாடுகளேயாயினும் அதில் காணப்படுகின்ற பல தன்மைகள் பயங்கரவாதத்தின் பண்பு களுடன் ஒத்திருப்பதனாலேயே இவ்விரு கோட்பாடுகளும் பயங்கர வாதத்துடன் இணைத்துப் பேசப்படுகின்றது. இவ்விரு கோட்பாடுகள் தவிர சமூக, உளவியல்சார் கோட்பாடுகளும் பயங்கரவாதத்துடன் இணைத்துப் பேசப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# பயங்கரவாதத்தின் வகைகள்
## (Typologies of Terrorism)

பல்வேறு விதமான வழிகளிலும் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத்தை ஒரு தெளிவான பொதுவான வகைப்பாட்டிற்குள் கொண்டுவருவது என்பது மிகவும் சிக்கலான ஒரு விடயமாகும். எனினும் பொதுவாக பயங்கரவாதத்தை பிரதானமாக இரண்டு வகைக்குள் உள்ளடக் கலாம்:

*1. உள்நாட்டுப் பயங்கரவாதம்* (Domestic Terrorism)

ஒரு நாட்டிற்குள் அந்நாட்டுப் பிரஜைகளின் குழுவினால், அந்நாட்டுப் பிரஜைகளுக்கு அல்லது அவ்வரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற முறையான ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைச் செயலையே உள் நாட்டுப் பயங்கரவாதம் என்பது குறித்து நிற்கின்றது. இவ்வகைப் பயங்கரவாதத்தில் பொதுவாக வெளிநாட்டு அடிப்படைகள் இடம் பெறுவதில்லை. இப்பயங்கரவாதம் குறித்த ஆள்புலத்துடன் சுருங்கிய ஒன்றாகும்.

*2. சர்வதேச பயங்கரவாதம்* (International Terrorism)

சர்வதேச பயங்கரவாதம் என்பது ஆள்புலம் வரையறுக்கப்படாத ஒரு பயங்கரவாதமாகும். இங்கு பயங்கரவாதத்தின் செயற்பரப்பு என்பது ஒரு குறித்த புவியியல் பகுதியுடன் வரையறுக்கப்பட்டிருப்பதில்லை. இது ஆள்புலக் கட்டுபாடுகள் அற்ற ஒரு போராக வர்ணிக்கப்படலாம். இவ்விதமான நிகழ்வுகள் சர்வதேச ரீதியாக தாக்கம் செலுத்துவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக அவதானிக்க முடிகின்றது. இவ்வகைப் பயங்கரவாதத்தில் பயங்கரவாதிகள் அவர்களது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வெளிநாடுகளுக்குள் ஊடுருவதுடன் சர்வதேச விமானங்களையும் தாக்குகின்றனர் அல்லது குறித்த விமானத்தை மற்றொரு நாட்டிற்கு செலுத்துமாறு விமானிகளை கட்டாயப்படுத்துகின்றனர். இதன் மூலம் பிறநாடுகளின் இலக்குகளையும் குறிவைக்கின்றனர். இவ் விதமான செயல்களில் ஈடுபடும், வெளிநாடுகளில் செயற்படுகின்ற பல பயங்கரவாதக் குழுக்களுக்கு அவற்றுக்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசுகளால் நிதியுதவிகள், ஆயுதங்கள், பாதுகாப்பு மற்றும் புகலிடமும் வழங்கப்படுகின்றது.

அரசியல் பயங்கரவாதம் குறித்த கற்கை அடிப்படையிலான வகைப்பாடுகளை நோக்குகின்ற போது, பிரித்தானிய அரசியல் விஞ்ஞானியான போல் வில்கின்சன் (Paul Wilkinson) என்பவரின் வகைப்பாட்டினை நோக்குவது சிறப்பானதாக இருக்கும். அவரது கருத்தில் அரசியல் பயங்கரவாதமானது பின்வரும் மூன்று பிரதான வகைகளைக் கொண்டுள்ளது:

1. புரட்சிகரப் பயங்கரவாதம்
2. உப-புரட்சிகரப் பயங்கரவாதம்
3. அடக்குமுறைப் பயங்கரவாதம்

இந்தவகையில் அவர் சிறப்பான ஒரு வகைப்பாட்டினை மேற் கொண்டிப்பதனைக் காணலாம். எனினும் இவ்வகைப்பாடுகள் உள்நாட்டுப் பயங்கரவாதம் என்ற பிரதான வகைப்பாட்டினுள் உள்ளடக்கத்தக்கதாகும். எவ்வாறாயினும் இவ்வகைப்பாட்டினை பின்வருமாறு விரிவாக நோக்கலாம்.

### *I. புரட்சிகரப் பயங்கரவாதம்* (Revolutionary Terrorism)

புரட்சிகரப் பயங்கரவாதம் என்பது அரசியல் புரட்சியினை மேற் கொள்வதை நோக்காகக் கொண்ட முறையான வன்முறை நடவடிக் கையாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் குறித்த அரசியல் நோக்கங்களை தீவிரமாக அடைந்துகொள்வதற்கான பயங்கரவாதத்தின் மிகப் பொதுவான வடிவமே புரட்சிகரப் பயங்கரவாதமாகும். இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப் பயங்கரவாதத்தை முன்னின்று நடத்துபவர்கள் ஒரு அரசியல் முறையை முற்றாக நீக்கி அவ்விடத்திற்கு ஒரு புதிய கட்டமைப்பினை கொண்டுவர ஆவல் கொள்கின்றனர். நவீன காலத்தில் இவ்விதமான புரட்சிகரப் பயங்கரவாதத்திற்கு எடுத்துக்காட்டுகளாக Italian Red Brigades, German Red Faction, Basque பிரிவினைவாதக் Peruvian Shining Path போன்ற குழுக்களின் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும். புரட்சிகரப் பயங்கரவாதத்தின் பின்வரும் அடிப் படை அம்சங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் புரட்சிகரப் பயங் கரவாதத்திற்கும் மற்றைய வகைப்பாடுகளுக்குமிடையேயான வேறு பாட்டினை இனங்கண்டு கொள்ளலாம்:

1. புரட்சிகரப் பயங்கரவாதமானது ஒரு குழுத் தோற்றப்பாடாக இருக்கும்.
2. புரட்சியையும், அவர்களது பயங்கரச் செயல்களையும் நியாயப் படுத்தத்தக்க ஒரு புரட்சிகரக் கருத்தியலையும் நிகழ்ச்சித் திட்டத்தையும் கொண்டிருக்கும்.
3. பயங்கரவாதத்திற்காக மக்களை ஒன்று திரட்டுகின்ற ஆற்ற லுடைய தலைவர்களின் இருப்புக் காணப்படும்.
4. புரட்சிகரப் பயங்கரவாதம் மாற்று நிறுவனக் கட்டமைப் புக்களை உருவாக்குகின்றது.

மேற்கூறிய அடிப்படை அம்சங்களைக் கொண்டிருக்கும் புரட்சிகரப் பயங்கரவாதத்தினுள் தேசவிடுதலைக் குழுக்கள் பயன்படுத்தும் பயங்கரவாதம், கொரில்லாப் பயங்கரவாதம், கலகம் சார்ந்த பயங்கர வாதம், சமய, மத, வர்க்க சிறுபான்மையினருக்கு எதிராகப் பயன் படுத்தப்படும் புரட்சிகரப் பயங்கர ஆட்சிகளும் அடங்குகின்றது.

### *2. உப-புரட்சிகரப் பயங்கரவாதம்* (Sub-Revolutionary Terrorism)

உப-புரட்சிப் பயங்கரவாதம் என்பது மற்றைய புரட்சிகரப் பயங்கர வாதம் போலன்றி அரசியல் உந்துதல்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வகைப் பயங்கரவாதமாகும். இவ்வகைப் பயங்கரவாதம் தாம் விரும்புகின்ற கொள்கை அல்லது நிகழ்ச்சித் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தை கட்டாயப்படுத்துவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்காகக் கொண்டதாகும். இவ்வகைப் பயங்கரவாதச் செயல்கள் அரசின் கட்டுப்பாட்டினை தமது கைக்குள் கொண்டுவருதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருப்பதில்லை. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு அடையாளம், எதிர்ப்பு, பழிவாங்குதல், காயப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளினால் இவ்வகைப் பயங் கரவாதத்திற்கான சாத்தியமான உந்துதல்கள் ஏற்படுத்தப்படலாம். இன்னும் தெளிவாக விளக்குவதாயின் குறித்த அரசியல் நோக்கங் களை தீவிரமாக அடைந்துகொள்வதற்கான பயங்கரவாதத்தின் ஒரு வடிவமாக உப-புரட்சிகரப் பயங்கரவாத்தைக் குறிப்பிடலாம். எனினும் புரட்சிகரப் பயங்கரவாதம் போன்று இதனை ஒரு பொது வடிவமாகக் கொள்ள முடியாதுள்ளது. இவ் உப-புரட்சிகரப் பயங்கர வாதம், புரட்சிகரப் பயங்கரவாதம் போன்று நடைமுறையில் இருக்கும் ஆட்சியை அகற்றுவதை நோக்காகக் கொண்டதல்ல. மாறாக நடை முறையில் இருக்கும் சமூக-அரசியல் கட்டமைப் புக்களை திருத்துவதை நோக்காகக் கொண்டதாகும். இவ்விதமான உபபுரட் சிகரக் குழுக்களை அடையாளம் காண்பது மிகவும் சிரமமாக வுள்ளது. ஆபிரிக்க தேசிய காங்கிரசின் செயற்பாடுகளை இதற்கு உதாரணமாகக் காட்ட முடியும்.

### *3. அடக்குமுறைப் பயங்கரவாதம்* (Non Politcal)

குறித்த குழுக்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மீது அழுத்தத்தைக் கொடுக்கும் நோக்குடன் வன்முறை கலந்த பயங்கரவாதச் செயல் களை மேற்கொள்ளுதல் அடக்குமுறைப் பயங்கரவாதம் எனப்படும். அடக்கு முறையாளர்கள் ஒரு அரசாக, அதன் ஆட்சியாளர்களாக அல்லது அதன் முகவர்களாக இருக்கலாம். இது கலகங்களுக்கு அல்லது கலகம் என சந்தேகிக்கப்படுபவைகளுக்கு எதிராகத் திருப்பப் படலாம். அடக்குமுறைப் பயங்கரவாதத்தின் செயற்பாட்டினை ஒரு அரசாங்கத்தின் விசேட படைகளின் செயற்பாடுகளில் அல்லது ஒரு அரசு சட்ட ஒழுங்கினை மூர்க்கமான முறையில் நிலைநாட்ட முற் படுகின்றபோதும் கண்டு கொள்ளலாம். விசேடமாக அதிருப்தி, இணக்கமின்மை, எதிர்ப்பு போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசுகள் முயற்சிக்கின்ற போது இவ்வகையான அடக்குமுறை நட வடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைப் பயங்கரவாதமானது அரச பயங்கரவாதம் எனவும் அழைக்கப்படுகின்றது. இதன்பொருள் ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களுக்கு, கட்டாயப்படுத்தி இணங்கவைப்பதற்காக தனிப் பட்டவர்கள் அல்லது குழுக்கள் மீது அரசு உத்தியோகபூர்வமாக வன்முறையைப் பயன்படுத்துவதாகும். இச்செயலானது பொதுவாக அரச பயங்கரவாதம் என்றே குறிப்பிடப்படுகின்றது. இந்தவகையில் ஒரு அரசின் பயங்கரவாதத் தந்திரங்களானது சட்டரீதியான அதிகாரத் தாபனங்களுக்கு கீழ்படியாதவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வகைப் பயங்கரவாதமானது சட்டத்திற்கு மேலான அடக்குமுறை அம்சங்களின் பிரயோகத்தையும் உள்ளடக்குகின்றது. இன்னுமொரு வகையில் அரச பயங்கரவாதம் என்பது எதிர்-பயங்கரவாதம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய அமெரிக்க பயங்கரவாதத்திற்கும் ஒழுங்கின்மைக்குமான செயலணிக் குழு பயங்கரவாதத்தினை பின் வருமாறு ஆறு வகைப்படுத்துகின்றது.

*1. சிவில் ஒழுங்கின்மை* (Civil Disorders)

சமாதானம், பாதுகாப்பு மற்றும் சமூகத்தின் இயல்பான தொழில் பாட்டுக்கு தடங்கள் விளைவிக்கும் ஒரு கூட்டு வன்முறை வடிவமே சிவில் ஒழுங்கின்மை எனப்படும்.

*2. அரசியல் பயங்கரவாதம்* (Political Terrorism)

அரசியல் நோக்கங்களுக்காக சமூகத்தில் பயத்தினை உருவாக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட வன்முறையான குற்றவியல் நடத்தைகள் அரசியல் பயங்கரவாதம் எனப்படும்.

*3. அரசியல் சாராப் பயங்கரவாதம்* (Quasi-Terrorism)

அரசியல் நோக்கங்கள் இல்லாத பயங்கரவாதம் அரசியல் சாராப் பயங்கரவாதம் என அழைக்கப்படும். ஆனால் இவ்வகைப் பயங் கரவாதம் வற்புறுத்தும் நோக்கங்களுக்காக உயர்ந்தளவிலான பயத் தினைப் பேணுவதற்கும் உருவாக்குவதற்கும் காட்டப்படுகின்ற உணர்வுரீதியான வடிவமாகும். எனினும் விளைவு என்பது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நோக்கத்தின் அடைவு என்பதிலும் பார்க்க கூட்டு அல்லது தனிப்பட்ட சம்பாத்தியமாக இருக்கும்.

### 4. அரைகுறைப் பயங்கரவாதம் (Quasi-Terrorism)

குற்றங்கள் மற்றும் வன்முறை தொடர்பான ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் குறிக்கின்றது. இப்பயங்கரவாதம் முழுமையான பயங்கரவாத வடிவத்தினை ஒத்திருக்கலாம். எனினும் அதனது அடிப்படையான தன்மை அனைத்தையும் கொண்டிருக்காது. முழுமையான பயங்கரவாதத்தில் உள்ளது போன்று உடனடியான பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு பயங்கரவாதிகளைத் தூண்டும் நோக்கத்தினை அரைகுறைப் பயங்கரவாதம் கொண்டிருப்பதில்லை. ஆனாலும் அரைகுறைப் பயங்கரவாதிகள் முழுமையான பயங்கர வாதிகள் பயன்படுத்தும் நுட்பங்கள் வழிமுறைகளைப் பயன் படுத்துகின்றனர். அவ்வாறே ஒத்த விளைவுகளையும் அதற்கான பதிலீடுகளையும் ஏற்படுத்திவிடுகின்றனர்.

### 5. வரையறுக்கப்பட்ட அரசியல் பயங்கரவாதம் (Limited Political Terrorism)

தூய்மையான அரசியல் பயங்கரவாதம் என்பது புரட்சிகர அணுகு முறையால் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆனால் வரையறுக் கப்பட்ட அரசியல் பயங்கரவாதம் என்பது கருத்தியல் தூண்டுதல்கள் அல்லது அரசியல் தூண்டுதல்களுக்காக மேற்கொள்ளப்படும் பயங்கர வாதச் செயல்களினைக் குறிப்பதாகும். ஆனால் இது அரசின் கட்டுப் பாட்டைக் கைப்பற்றுவதற்கு சிலர் சேர்ந்து திட்டமிட்ட ஒரு விவகாரத்தின் பகுதியல்ல.

### 6. உத்தியோகபூர்வ அல்லது அரச பயங்கரவாதம் (Official / State Terrorism)

பயங்கரவாதத்திற்கு ஒத்தவிதத்தில் பயம், அடக்குமுறை என்ப வற்றின் மீது கட்டமைக்கப்பட்டுள்ள ஆட்சியினைக் கொண்டுள்ள தேசங்களின் பயங்கரவாதத்தினை உத்தியோகபூர்வ அல்லது அரச பயங்கரவாதம் என அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய அமெரிக்க உளவுத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின்படி பின்வரும் நான்கு வகைப்பாடுகளும் பயங்கர வாதத்தின் வகைகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:

1. தேசியவாத-பிரிவினைவாதப் பயங்கரவாதம் (Nationalist – Separatist)

2. மத அடிப்படைவாதப் பயங்கரவாதம் (Religious Fundamentalist)

3. புதிய மதப் பயங்கரவாதம் (New Religious)

4. சமூகப் புரட்சிகரப் பயங்கரவாதம் (Social Revolutionary)

மேலும் Richard Schultz *(1978)* என்பவர் அரசியல் பயங்கரவாதத்தினைப் பின்வருமாறு மூன்று வகைப்படுத்துகின்றார்:

1. புரட்சிகரப் பயங்கரவாதம் (Revolutionary Terrorism): இவரது வகைப்பாட்டினுள் புரட்சிகரப் பயங்கரவாதம் என்பது முழுமையான புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு அரசியல் வன்முறையினை உபயோகித்தல் அல்லது அச்சுறுத்துதலாகும்.

2. உப - புரட்சிகரப் பயங்கரவாதம் Sub-revolutionary Terrorism): ஒரு குறிப்பிட்ட அரசியல் முறைமையில் பலவிதமான மாற்றங்களை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு அரசியல் வன்முறையினை அல்லது அச்சுறுத்தலினை உபயோகித்தல் உப-புரட்சிகரப் பயங்கரவாதமாகும்.

3. அமைக்கப்பட்ட பயங்கரவாதம் (Establishment Terrorism): ஒரு நிறுவப்பட்ட அரசியல் முறைமையினால் உள்வாரியான அல்லது வெளிவாரியான எதிர்ப்புகளுக்கு எதிராக அரசியல் வன்முறையினை அல்லது அச்சுறுத்தலினை உபயோகித்தல் அமைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட பயங்கரவாதம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வகைப்பாட்டினுள் ஏழு விதமான மாறிகள் காணப்படுகின்றன அவை வருமாறு:

1. காரணங்கள் (Causes): இதனுள் வன்முறையினை உபயோகிப்பதற்கு காரணமாக பல நீண்டகால அல்லது குறுங்கால பொருளாதார, அரசியல், சமூக, உளவியல் காரணிகள் உள்ளடக்கப்படுகின்றன.

2. சூழல் (Environment): ஒரு தேசிய அரசுக்குள் உள்வாரியாக உருவாகும் நகர அல்லது கிராம இயக்கங்கள். வெளிவாரியாக உலகளாவிய மற்றும் தேசிய அரசுகள்.

3. இலக்குகள் (Goals): நீண்டகாலத் திட்டங்களுக்கான நோக்கங்கள் அல்லது குறுகிய கால உத்திகளுக்கான நோக்கங்கள்.

4. தந்திரோபாயம் (Strategy): அவசியமான கொள்கைகள், செயற்பாடுகள் மற்றும் கருவிகளைக் கொண்ட ஒட்டுமொத்த திட்டங்கள்.

5. வழிமுறைகள்; (Means): அழிவுகள், இழப்புக்கள், பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கான திறன்களும் நுட்பங்களும்.

6. அமைப்பு (Organization): கட்டமைப்பு, தலைமைத்துவம், அதிகார ஒப்படைப்பு , வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள், பயிற்சி, ஆட்சேர்ப்பு, தளபாட ஆதரவு, உளவுத்துறை, நிதியளித்தல்.

7. பங்கேற்பாளர்கள் (Participant): அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டாளர்கள், முழு நேர மற்றும் பகுதி நேர உறுப்பினர்கள், செயற்பாட்டு அனுதாபிகள்.

Schultz மேற்கூறிய மாறிகளைக் கொண்டு அரசியல் பயங்கரவாதம் தொடர்பான தனது வகைப்பாட்டினை முன்வைத்துள்ளார். அவரது வகைப்பாட்டினை பின்வரும் அட்டவணையின் மூலம் புரிந்து கொள்ளலாம். ( பார்க்க அட்டவணை 1.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தெரிவு செய்யப்பட்ட மாறிகள் | காரணங்கள் | சூழல் | இலக்குகள் | தந்திரோபாயங்கள் | வழிமுறைகள் | அமைப்பு | பங்குபற்றுனர் |
|---|---|---|---|---|---|---|---|
| பொதுவான வகைப்பாடுகள் | | | | | | | |
| புரட்சிகரப் பயங்கரவாதம் | பொருளாதார அரசியல், சமூகஉளவியல் காரணிகள் | உள்வாரியாக: நகர மற்றும் கிராம புரட்சிக் குழந்தைகள்<br><br>வெளிவாரியாக தன்னாட்சியுடைய அரசு சாராச் செயற்பாட்டாளர்கள் | நீண்ட கால மற்றும் கிராம புரட்சிக் குழுக்கள்<br><br>குறுகியகால உத்திகள் சார்ந்த நோக்கங்கள் | ஒட்டுமொத்த தந்திரோ பாயத்திலும் முதற்தர அல்லது இரண்டாம் தர வகிபாகம் | பலவிதமான திறன்கள் மற்றும் யுக்திகள் பயன்படுத்தப்படுதல் | தன்மை - படிநிலையமைப்பா நிறுவனக் கட்டமைப்பு | பங்குபற்றுனர் தோற்றம்<br><br>தலைமைத்துவ வடிவம் அல்லது உளப்பாங்கு |
| உப - புரட்சிகரப் பயங்கரவாதம் | பொருளாதார அரசியல், சமூக உளவியல் காரணிகள் | உள்வாரியாக: நகர மற்றும் கிராம புரட்சிக் குழுக்கள்<br><br>வெளிவாரியாக தன்னாட்சியுடைய அரசுசாராச் செயற்பாட்டாளர்கள் | நீண்டகால தந்திரோபாய நோக்கங்கள்<br><br>குறுகியகால உத்திகள் சார்ந்த நோக்கங்கள் | ஒட்டுமொத்த தந்திரோ பாயத்திலும் முதற்தர அல்லது இரண்டாம் தர வகிபாகம் | பலவிதமான திறன்கள் மற்றும் யுக்திகள் பயன்படுத்தப்படுதல் | பலவிதமான திறன்கள் மற்றும் யுக்திகள் பயன்படுத்தப்படுதல் | பங்குபற்றுனர் தோற்றம்<br><br>தலைமைத்துவ வடிவம் அல்லது உளப்பாங்கு |
| அமைக்கப்பட்ட பயங்கரவாதம் | பொருளாதார, அரசியல், சமூக உளவியல் காரணிகள் | உள்வாரியாக: நகர மற்றும் கிராம புரட்சிக் குழுக்கள்<br><br>வெளிவாரியாக தன்னாட்சியுடைய அரசுசாராச் செயற்பாட்டாளர்கள் | நீண்டகால தந்திரோபாய நோக்கங்கள்<br><br>குறுகியகால உத்திகள் சார்ந்த நோக்கங்கள் | ஒட்டுமொத்தமாக தந்திரோ பாயத்திலும் முதற்தர அல்லது இரண்டாம் தர வகிபாகம் | பலவிதமான திறன்கள் மற்றும் யுக்திகள் பயன்படுத்தப்படுதல் | பலவிதமான திறன்கள் மற்றும் யுக்திகள் பயன்படுத்தப்படுதல் | பங்குபற்றுனர் தோற்றம்<br><br>தலைமைத்துவ வடிவம் அல்லது உளப்பாங்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# சமகால உலகில் பயங்கரவாதத்தின் பரவல்

சமகால உலகில் சுமார் 70 க்கு மேற்பட்ட அரசுகள் பயங்கரவாதிகளின் கொடூரமான செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பாதிப்பினை ஏற்படுத்துவதில் அவற்றின் தன்மை மற்றும் அங்கத்துவம் என்பவற்றில் வேறுபட்டுள்ள சுமார் 100க்கு மேற்பட்ட பயங்கரவாதக் குழுக்கள் தொடர்புபட்டுள்ளன. தந்திரோபாயக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் கூற்றுப்படி, சமகால உலகில் கவனம் கொள்ளத்தக்க வகையில் 20,000 தொடக்கம் 30,000 வரையிலான பயங்கரவாதிகளைக் கொண்டுள்ள அளவுக்கு பயங்கரவாத வலையமைப்புக்கள் உலகில் ஏற்படுத்தப்பட்டுள்ளது அல்லது பரந்துள்ளது.

உலகளவில் பங்கரவாதிகள் அவர்களது பிரச்சினை தனியான தொன்று என வெளிப்படுத்துவதன் மூலம் பரந்தளவில் அரசுகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்களாக உள்ளனர். இத்தகைய அச்சுறுத்தல் களானது ஒரு நிகழ்வு வடிவத்தில் அல்லது தொடர்ந் தேர்ச்சியான தொரு நடவடிக்கை வடிவத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அரசு களுக்கு விடுக்கப்படும் இவ்வச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் விதத் தில் எதிர்பயங்கரவாதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இத்தகைய எதிர்பயங்கரவாதச் செயற்பாடுகள் சமயாசமய அடிப் படையில் அல்லது முறையான திட்டமிடல் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவதனையும் அவதானிக்கலாம். இவ்விதம் பயங்கர வாதத்திலிருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளும் விதத்தில் பயன்படுத்தப்படும் எதிர்பயங்கரவாதச் செயற்பாடுகள்; பயங்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்தின் செயற்பரப்பினை விரிவடையச் செய்துள்ளது. இதன்படி கடந்த சில வருட காலப்பகுதியில் பயங்கரவாதமானது உலகளாவிய அச்சுறுத்தலை விடுத்துள்ள அதேவேளை அதற்கு எதிரான உலக ளாவிய எதிர்பயங்கரவாத அமைப்பினையும் வளரச் செய்துள்ளது.

அடிப்படையில் பயங்கரவாதத்தின் கொடுமையினால் மத்திய கிழக்கு நாடுகள் வேதனையின் ஒரு வலயமாக அடையாளப்படுத்தப் படுகின்றது. பயங்கரவாதத்தினால் ஏற்பட்ட வேதனை என்பது அங்கு பல நூற்றாண்டுகளாக வளர்ந்துவந்த ஒன்றாக உள்ளது. ஆரம்ப காலங்களில் மத்திய கிழக்கின் பெரும்பகுதி நிலங்கள் பிரித்தானிய மற்றும் பிரன்சிய காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்தது. இக் காலனித்துவ ஆட்சியின் போது இப்பிரதேசங்களில் காலனித்துவ வாதிகள் கையாண்ட வழிமுறைகள், வளச் சுரண்டல் மற்றும் சமய ரீதியான செல்வாக்கின் அதிகரிப்பு என்பன பயங்கரவாதம் இப் பிராந்தியத்தில் துரிதமாக ஆட்கொள்வதற்கு வாய்ப்பினை ஏற் படுத்தியது. மேற்குலகின் தாயகத்தினை துண்டாடுவதற்கான முயற்சி மற்றும் மேற்குலகிற்கு எதிரான இஸ்லாமிய கடும் போக்காளர்களின் செயற்பாடு என்பன பயங்கரவாதம் இப்பிராந்தியத்தில் வளர்வதற்கு வழி ஏற்படுத்தியது. இதன்படி ஆரம்பகாலத்தில் இருந்து வளர்ந்து வந்த வன்முறையானது இன்று வரை இப்பிராந்தியத்தில் நிலவி வருவதனை யாவரும் அறிவர். இப்பிராந்தியத்தில் பயங்கரவாதம் பரவியுள்ளமைக்கான பிரதான காரணி இஸ்ரேலிய அரசு உருவாக் கமும் அதற்கு எதிரான அரபுலகத்தின் செயற்பாடுகளுமாகும். குறிப்பாக பலஸ்தீன் மீதான இஸ்ரேலிய யூதர்களின் ஆதிக்க நடவடிக் கைகள் மற்றும் அதற்கு எதிரான இஸ்லாமியவாதிகளின் தாக்குதல்கள் என்பன வன்முறையின் அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

இதற்கப்பால் ஈராக்கின் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பும் இப் பிராந்தியத்தின் அரசியல் வன்முறையில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. அமெரிக்க முற்றுகையுடன் ஆரம்பித்த வன்முறை இன்று ஈராக்கில் மட்டுமன்றி முழுப் பிராந்தியத்திலும் பாதிப்பினை ஏற்படுத்துமளவிற்கு பரவலடைந்துள்ளது. இவ்விதம் குறிப்பிட்ட சில மத்திய கிழக்கு நாடுகளை மையம் கொண்டு உருப்பெற்ற பயங்கர வாதமானது பிராந்தியத்தில் உள்ள ஈரான், சிரியா, லிபியா, லெபனான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுதி அரேபியா போன்ற நாடுகளிலும் பரவலடைந்துள்ளது. இந் நாடுகளில் பயங்கரவாதம் பரவலடைவதற்கு வித்தியாசமான சில காரணங்கள் இருந்தபோதும் அடிப்படையான காரணம் இஸ்ரேலிய அரசு உருவாக்கமும் அது தொடர்பிலான மேற்குல நடவடிக்கையு மாகும்.

சமகாலத்தில் பயங்கரவாதத்தின் பரவலினால் அவதியுறும் ஒரு பிராந்தியம் தென்னாசியப் பிராந்தியமாகும். தென்னாசியப் பிராந்தி யத்தில் உப தேசிய கிளர்ச்சிகளும் அதன் மூலம் ஏற்பட்டுள்ள தாயகக் கோரிக்கைகளும் இப்பிராந்தியத்தில் வன்முறையினை அதிகரிக்கச் செய்துள்ளது. குறிப்பாக இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இத்தகைய சுயாட்சி கிளர்ச்சிகள் இடம்பெறுவதனை அவதானிக் கலாம். இத்தகைய சுயாட்சிப் பேராட்டங்கள் தீவிர ஆயுதப் போராட் டங்களாக முன்னெடுக்கப்படுவதனால் பயங்கரவாதம் இப்பிராந் தியத்தினை சூழ்ந்துகொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதற்கப் பால் பிராந்தியத்தின் முக்கிய அரசுகளான இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான முறுகல்களும் பயங்கர வாதத்தினை பரவலடையச் செய்துள்ளது. இதன் அண்மைய வடிவமாக இந்தியாவின் மும்பாய் நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையையும் அதன் மூலம் ஏற்பட்ட பதட்டத்தினையும் குறிப்பிட முடியும். மேலும் கருத்தியல் ரீதியான உந்துதல்களும் பயங்கரவாதம் இப்பிராந்தியத்தில் வளர்ச்சி பெறுவதற்கு உதவி யுள்ளது. நேபாளத்தில் மாவோயிஸ்ட்கள் மேற்கொண்ட போராட்டம், இலங்கையில் 1970 களில் ஏற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் வன்முறைக் கிளர்ச்சி மற்றும் இந்தியாவில் மாக்சீசக் கெரில்லாக்கள் மேற்கொன்டு வரும் போரட்டங்கள் போன்றன இப்பிராந்தியத்தில் கருத்தியல் ரீதியான வன்முறை போரட்டங்களுக்கு உதாரணமாக எடுத்துக் கூறக்கூடியாதாகும்.

அண்மைக்காலத்தில் தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இடம்பெற்று வரும் வன்முறைகள் முக்கிய இடத் தினைப் பிடித்துள்ளது. குறிப்பாக சர்வதேச பயங்கரவாத வலைய மைப்பினைக் கொண்டுள்ளனர் என மேற்குலகினால் கருதப்படும் அல் - கைடா அமைப்பின் மறைவிடமாக ஆப்கானிஸ்தான் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ் தான் ஆகிய நாடுகள் கருதப்படுவதுடன் செப்டம்பர் தாக்கு தலுக்குப் பின்னர் அல் - கைடா சார்பு ஆப்கானிய அரசாங்கமான தலீபான்களின் ஆட்சியும் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. தலீ பான்களின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து அங்கு நேட்டோப் படைகளின் ஆதரவுடன் தொடர்ந்து படை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது இப்பிராந்தியத்தில் எதிர் - எதிர் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு வழி விட்டுள்ளது. அவ்வாறே பாகிஸ்தானில் இடம்பெற்றுவரும் பயங்கர வாதத்திற்கு எதிரான அரசாங்கத்தின் போராட்டமும் அதற்கு எதிரான பேராளிகளின் எதிர் நடவடிக்கைகளும் அந்நாட்டில் வன்முறையினை துரிதப்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத்தின் பரவல் விடயத்தில் அடுத்து நோக்க வேண்டிய முக்கிய பிராந்தியம் தென்கிழக்கு ஆசியாவாகும். இப்பிராந்தியாமானது முதலாளித்துவ அரசுகளின் பொருளாதாரத் தங்கியிருத்தலில் இருப் பதனை எதிர்க்கின்ற மக்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் ஏற் பட்டுள்ள கோபமும் விரக்தியும் இவர்களை இலகுவாக சச்சரவினை நோக்கி திசை திருப்பியுள்ளது. இதன்படி கடின அதிகாரத்துவ அர சாங்கங்கள் ஆட்சி பீடம் ஏறுகின்ற போது வேறுபட்ட கருத்து வெளிப் பாடுகளின் ஊடாக வன்முறை உருவாக்கப்படுகின்றது. இப் பிராந் தியத்தில் உள்ள சில நாடுகள் இஸ்லாமிய உணர்வுகளைக் கொண்ட மக்களைக் கொண்டு காணப்படுவதனால் மத அடிப்படையிலான எதிர்ப்புக்கள் மேற்குலகுசார் ஆட்சிக்கு எதிரான போக்குகளை வளரச் செய்கின்றது. இப்போக்கின் வளர்ச்சி வன் முறைகள் ஏற்படு வதற்கான வாய்ப்பினை திறந்துவிடுகின்றது. எடுத்துக் காட்டாக இந்தோனேசியா போன்ற நாடுகளில் மேற்குலகிற்கு எதிராக இந் தோனேசியா வாழ் ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களைக் குறிப்பிட முடியும். இத்தகைய சம்பவங்களில் மேற்குலகு நாட்டவர்கள் இலக்குவைக்கப்படுவதனால் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடு களினால் இப்பிராந்திய நாடுகள் குற்றம்சாட்டப்படும் போக்கும் அதிகரித்துள்ளது. குறிப்பாக பாலி மற்றும் ஜகார்த்தா போன்ற நகரங் களில் இடம்பெற்ற சம்பவங்களையும் அதன் மூலம் முன் வைக்கப் பட்ட குற்றச்சாட்டுக்களையும் குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடுகின்ற போது மத்திய மற்றும் தென்னமெரிக்கப் பிராந்தியங்கள் வன்முறைகள் குறைந்தனவையாக உள்ளன. எனினும் பொருளாதார சமத்துவ மின்மை மற்றும் உறுதியற்ற அரசியல் நிலைப்பாடு என்பன இப் பிராந்தியத்தின் ஸ்திரமின்மைக்குக் காரணமாக உள்ளது. அவ்வாறே இப்பிராந்திய நாடுகளான ஹொன்டூராஸ், கௌதமாலா, ஆர்ஜென்ரீனா, பெரு, பொலிவியா மற்றும் சிலி ஆகிய நாடுகளில் பதட்ட நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கொலம்பியாவில் வன் முறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளதுடன் போதைப் பொருள் உற்பத்தி, விநியோகம் என்பவற்றுடன் இணைத்தும் அந்நாடு பேசப் பட்டு வருகின்றது. 1990களின் பிற்பகுதியில் மீள் இணக்கப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்நாட்டுச் சிக்கல்களை முடிவிற்குக் கொண்டு உறுதியளிக்கப்பட்ட போதும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள பயங்கரவாதத்தினை நோக்குகின்ற போது அங்கு பயங்கரவாதம் அழிக்கப்பட்டுள்ளதுடன் இடை நிறுத்தப்பட்ட நிலையிலும் உள்ளது. சமகால ஜேர்மனியிலும் இத்தாலியிலும் பயங்கரவாதத்திற்கான வாய்ப்பு குறைந்தபட்மாக காணப்படுகின்றது. எனினும் ஜேர்மனியின் Baader-Meinhof மற்றும் Red Army Faction, இத்தாலியின் Brigate Rosse என்பன நியாயப்படுத்தத்தக்க வன்முறையினை 1960 மற்றும் 1970களில் மேற் கொண்டது. செயற்பாட்டுப் பயங்கரவாதம் என்பது ஐரோப்பாவின் வட அயர்லாந்து மற்றும் வட ஸ்பெய்னில் உள்ள பாஸ்க் பிராந்தியத்திலும் நிலை கொண்டுள்ளது. இப்பயங்கரவாதங்களானது ஐரோப்பிய பிராந்தியத்தில் தோன்றிய முரண்பாடுகளுடன் நெருக்கமான தொடர் பினைக் கொண்டுள்ளதாகும்.

இவ்வாறாக உலகின் பல பாகங்களிலும் பயங்கரவாதச் செயற் பாடுகள் பரவியிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இப்பரவலில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் நிலவுகின்ற முரண்பாடுகள் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# பயங்கரவாதத்தின் எதிர்கால வடிவங்கள்

'தற்போதய நேரமும் கடந்த நேரமும்' என்பதனைப் பற்றி எழுதிய ரீ.எஸ். எலியட் (T.S.Eliot) என்பவர், கடந்த காலமும் தற்காலமும் அனேகமாக எதிர்காலத்தினைப் பற்றியதாக இருக்கின்றது என்று கூறுவதுடன் எதிர்காலமானது கடந்தகாலத்தில் நிகழ்ந்தவற்றை உட் கொண்டுள்ளது என்கின்றார். இவ்விடயம் பயங்கரவாதத்தைப் பொறுத்தவரையில் முற்றிலும் உண்மையாகும். இதன்படி பயங்கர வாதத்தின் எதிர்கால வடிவம் என்பது பல ஆண்டுகால வன்முறையின் வெளிப்பாடாக இருக்கின்றது. அதாவது குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்கான வழிமுறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதன் விளை வாகவே புதிய வடிவங்கள் எதிர்காலத்தில் தோற்றம் பெறுகின்றன. சமகாலப் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களது எதிர்காலம் என்பது அவர்களது வழிமுறைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் பயங்கரவாதிகள் மரபுசாராத (Non-conventional) அல்லது பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தும் எவ்வகையான ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதனைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகின்றது. பயங்கரவாதிகளானவர்கள் அவர்களது குறியீடுகளை குறைந்த இரு புதிய பரிணாமங்களினூடாக வெளிப்படுத்துகின்றனர். இதற்கமைய அவர்கள் எதிர்காலத்தில் நிலைகொள்வதற்கு அவர்களுக்கு சக்திமிக்க ஆயுதங்கள் தேவைப் படுவதுடன் அதனைச் சாத்தியப்படுத்திக் கொள்வதற்கு பெருந் தொகையான நிதிகளும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தொலைவில் இருந்து தூரக் கட்டுப்பாட்டு பொறி முறைகள் (Remote) மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமையை அவர்கள் கொண்டிருக்கின்றனர். அத்துடன் தொடர் பூடகங்களை தக்க சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்துவதற்கான ஆற்றல்களையும் பயங்கரவாதிகள் கொண்டுள்ளனர்.

இந்த வகையில் இப்பகுதியில் பயங்கரவாதத்தின் எதிர்கால வடிவம் என்ற தலைப்பின் கீழ் உயர் தொழில்நுட்ப மற்றும் விவாதத் திற்குரிய துறைகள் தொடர்பான ஒரு சுருக்கமான விளக்கம் வழங்கப் பட்டுள்ளது. இதன்படி மிகவும் பலமானதும் சாத்தியமானதுமான பாவனையில் உள்ள இரசாயன, உயிரியல், அனுவாயுத, இணைய வலையமைப்பினூடான ஆயுதங்கள் உள்ளன. இவ்வாயுதங்களுடன் இணைத்தே எதிர்காலப் பயங்கரவாத வடிவங்கள் குறித்த கருத்தாடல் முன்வைக்கப்படுகின்றது.

வரலாற்று ரீதியாக எதிரிகளுக்கு கெடுதிகளை விளைவிக்கும் செயல்களில் புதிய விடயங்கள் எதுவும் காணப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக நீர் வழங்கல்கள் மற்றும் உணவு விநியோகம் என்பன நஞ்சாக்கப்பட்டன அல்லது விசமாக்கப்பட்டன. இதன் விளைவாக தொற்றுக்குள்ளான பயிர்களும் விலங்குகளும் பாதையில் இறக்க வேண்டி ஏற்பட்டது. இதிலிருந்து உதயமானதாகவே நவீன கால பயங்கரவாத உத்திகள் அமைந்துள்ளன. இதற்கமைய சமகாலப் பயங்கரவாதிகள் வெற்றிகரமான அழிவுகளை ஏற்படுத்துவதற்கு ஏற்றவகையில் பல வகையான தொழில் நுட்ப உதவிகளைப் பெற் றுள்ளனர். இதற்கு ஏற்றவிதமான களத்தினை நவீன திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் வீடியோக்கள் வழங்குகின்றன. இதற்கு சிறந்த உதாரணம் அந்திரக்ஸ் பற்றி ஏற்பட்ட அச்சமாகும். அதாவது ஐக்கிய அமெரிக்காவில் ஒரு தபால் முத்திரைப் பெறுமதிக்கு 10000 உயிர்களைக் கொல்லக் கூடிய ஒரு அந்திரக்ஸ் துகல்கள் அடங்கிய கடிதத்தினை அனுப்ப முடிந்தது. இது குறித்து ஐக்கிய அமெரிக்காவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இச்செய லானது ஒரு பிராந்தியத்துடன் தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கான தடங்கலை ஏற்படுத்தத் தக்கவகையில் தொழில்நுட்பக் கருவிகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த வழிவிட்டதுடன் போக்குவரத்து முறை களையும் செயலற்றதாக்கியது. அவ்வாறே பயங்கரவாதிகளின் இச்செயல்களால் அச்சுறுத்தப்படும் பெருந்தொகையான அகதிக ளையும் உருவாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பிரயோகம் என்பது ஒரு கட்டுக்கதையல்ல. கெடுபிடி யுத்தகாலத்தில் நிலவிய பதட்டமானது வல்லரசுகள் தங்களுக்கிடையே முட்டிக் கொள்வதற்கும் இவ்வாயுத வல்லமை என்பது வழிவிட்டிருந்தது. தற்காலத்தில் இவ்வாயுதப் பாவனைக்கான பின்புலத்தினை பயங்கர வாதிகள் ஏற்படுத்தியுள்ளனர். தற்காலத்தில் ஒரு பயங்கரவாதி ஒரு செயலில் இறங்குவதற்கு முன்னர் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்காக மிகவும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளை இணையத்தளங்களின் மூலமாகவும் நூலகங்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இதன் மூலம் முன் எப்போதும் இல்லாதவகையில் மிகவும் எளிதாக எதிரிகளைக் காயப்படுத்தக் கூடிய ஆற்றல்களை பயங்கரவாதிகள் இதன் மூலம் பெற்றுள்ளனர்.

மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் பயங்கரவாதிகள் எதிர்காலத்தில் பாரியளவில் பயன்படுத்த இருக்கும் ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாதத்தின் எதிர்கால வடிவங்கள் என்பது வரையறுக்கப்படுகின்றது. இந்தவகையில் எதிர்காலப் பயங் கரவாதச் செயற்பாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்டு அதனை நான்கு வகைப்படுத்தலாம்:

1. இரசாயன ஆயுதப் பயங்கரவாதம்
2. உயிரியல் ஆயுதப் பயங்கரவாதம்
3. அணுவாயுதப் பயங்கரவாதம்
4. இணைய வலையமைப்புப் பயங்கரவாதம்

### *இரசாயன பயங்கரவாதம்* (Chemical Terrorism)

பயங்கரவாதிகள் தமது செயற்பாடுகளின் போது இரசாயன ஆயு தங்களைப் பயன்படுத்துவார்களாயின் அதனை இராசாயன ஆயுதப் பயங்கரவாதம் என அழைக்கப்படும். இவ்வகைப் பயங்கரவாதமானது இரு முக்கிய விடயங்களின் போது உபயோகிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாரிய அழிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்ட தாக்குதல்களில்: 1995 ஆம் ஆண்டைய Am Cult's Tokyo வாயுப் பொருள் விடயத்தில் பயங்கரவாதிகள் ஒரு மூடப்பட்ட பகுதியில் அல்லது ஒரு சனநெரிசல் மிக்க நகர மையத்தில் நச்சுத் திரவத்தினை வெளியிட்டனர். எவ்வளவுக்கு அழிவுகளை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அழிவுகளை ஏற்படுத்தத்தக்க வகையில் இந்நச்சுத் திரவம் வெளியிடப்பட்டது.

2. பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட தாக்குதல்களில்: பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்தும் நோக்கில் அங்குமிங்கும் நிகழ்கின்ற தாக்குதல்களில் இவ்வாயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றது. உணவு உற்பத்திப் பண்ணைகள், இரசாயனக் கூடங்கள், இயற்கை மரங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கும் இவ்வாயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் விலங்குகளின் உரிமைகள் தொடர்பான குழுக்கள் மற்றும் தூர-வலதுசாரிக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் இவ்வாயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

இரசாயன ஆயுதங்கள் பயங்கரவாதிகளுக்கு சில குறிப்பிடத்தக்க நன்மைகளைக் கொடுக்கின்றது. உயிரியல் ஆயுங்களை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவத்தினைக் காட்டிலும் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் என்பன குறைவானதாகும். நன்கு பயிற்றப்பட்ட ஒரு இரசாயனவியல் மாணவனால் அதைச் செய்ய முடியும். இது குறித்து ஆரம்பநிலையில் உள்ளவர்களுக்கான தகவல்களை பொது நூலகங்களிலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாயுதத்தினை உற்பத்தி செய்வதற்கான அதிகமான மூலப்பொருட்களும் சாதனங்களும் எளிதில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. அதாவது பூச்சி கொல்லிகள், களை கொல்லிகள் மற்றும் சுத்தப்படுத்தும் இரசாயனங்கள் என்ற பெயரில் இரசாயனப் பொருட்கள் வர்த்தக சந்தையில் காணப்படுகின்றது. இப்பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதிகளினால் பணத்திற்குக் கொள்வனவு செய்யப்படலாம் அல்லது கடைகளிலிருந்தும் பண்டக சாலைகளிலிருந்தும் திருடப் படலாம் அல்லது இப்பொருட்கள் கொண்டு செல்லப்படும் போது அவ்வாகனங்களை இடைமறித்து இரசாயனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கான இயலுமையினை பயங்கரவாதிகள் பெற்றுள்ளனர். Arsenic, Strychnine, Chloride, Cyanide போன்ற பொருட் களில் இருந்து மிகவும் விலை குறைந்த எளிதில் கையாளக் கூடிய நச்சுத் திரவங்களை தயாரிக்க முடியும். அதேவேளை கறுப்புச் சந்தைகளிலும் அதிகளவான இரசாயனப் பொருட்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதிலிருந்தும் பயங்கரவாதிகள் இரசாயனப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும். அதாவது இரசாயன வளங்களைக் கொண்ட குறைந்தளவான பாதுகாப்புடைய, இன்னும் இராணுவத்தினரின் ஆட்சியினைக் கலையாத நாடுகளின் சேமிப்ப கத்திலிருந்து கறுப்புச் சந்தைகள் மூலம் இவ் வாயுதங்கள் பயங்கர வாதிகளுக்கு கடத்தப்படுகின்றது.

ஒரு சிறிய பிரதேசத்தில் விசிறக் கூடிய ஒரு சிறிய தொகையான குறிப்பிட்ட இரசாயனங்கள் கூட பாரியளவிலான அழிவுகளுக்கு வழிவிடுகின்றது. இவை நுரையீரல் போன்ற ஈரமான பகுதிகளில் தொடர்புபடுவதன் மூலம் செயற்படத்தக்கதான விசத் தூசுகளாகும். அதிலும் குறிப்பாக வாசனையற்ற அல்லது நிறமற்ற இரசாயனங்களை விபத்துக்குள்ளான மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடம் குறிப்பிட்ட அறிகுறிகள் வெளிப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிப்பது சாத்திய மற்றதாக உள்ளது. இதன் தாக்கத்துக்குள்ளாகி உயிர் வாழ்ந்து கொண்டி ருப்போர் அடிக்கடி தம்மை சோதிக்க வேண்டியுள்ளதுடன் தொடர்ச் சியான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் இப்பயங்கரவாத உற்பத்தியானது மிகவும் அச்சத் தினையும் பொது மக்கள் பாதுகாப்பற்ற தன்மையையும் வழங்குகின்றது. இவ்வாறே தங்களைப் பயன்படுத்துவது தமக்குப் பாதுகாப்பானது அல்ல என ஒவ்வொரு பயங்கரவாதியும் எண்ணுகின்ற போதிலும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய இரசாயனங்களைக் கையாளவே செய்கின்றனர். எனினும் இவ்வாயுதப் பாவனையால் காலநிலை, சூடான வெப்பநிலை என்பன பாதிப்பினை ஏற்படுத்துவது என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உயிரியல் பயங்கரவாதம்* (Biological Terrorism)

இவ்வாயுதங்கள் இரசாயன ஆயுதங்களிலிருந்து வேறுபட்டதாகும். அதாவது பாரியளவிலான அழிவுகளை ஏற்படுத்துவதாக உயிரியல் ஆயுங்கள் பயன்படுத்தப்படுவதற்காக வடிவமைக்கப்படும் விதம் இரசாயன ஆயுதங்களிலிருந்தும் வேறுபட்டதாகும். அதேவேளை உயிரியல் ஆயுதங்களின் தாக்கத்தின் அளவு மற்றும் வரையறுக்கப்பட்ட இலக்குகள் என்பது குறுகிய ஒன்றல்ல. உயிரியல் தாக்குதலின் விளைவுகள் தொடர்ச்சியாக தாமதமாக வெளிப்படுவதனால் இதனைக் கையாள்வது என்பது மிகக் கடினமானதாகும். இதன் மூலமான தொற்றுப் பரவும் வரை வரையறுக்கப்பட்ட ஒரு அம்சத்தினை அல்லது பாதிப்பினை கூற முடியாமல் போகலாம். மேலும் உயிரியல் ஆயுதங்களைக் கடத்தும் முகவர்களின் தன்மையை அடையாளப் படுத்துவதும் மிகக் கடினமானதாகும். அவ்வாறே அவசியமான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும் சிகிச்சை வசதிகள் என்பது சிக்கலானது. இலட்சியரீதியாக இங்கு பொது மக்களுக்கு முன் எச்சரிக்கைகளை வெளியிடுவது என்பது ஒரு சூழ் நிலையைப் பற்றிய மிகச் சரியானதும் அவசரமானதுமான மதிப்பீட்டிலேயே தங்கியுள்ளது. சில அறிகுறிகள் குறித்த விளைவு ஏற்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் தெரியவரலாம். இவ்வாறான பொருட்களில் பலவற்றை எளிதில் கொண்டு செல்ல முடிவதுடன் மறைத்து வைக்கவும் முடியும். அவ்வாறே இதனை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த திறமையான அறிவு தேவைப்படுவதுடன் அதன் நிலையினை எவ்வாறு மதிப்பிடுவது மற்றும் விநியோகம் செய்வது என்பதும் கடினமானதாகும். பயங்கரவாதிகள் விஞ்ஞானிகளாக இருந்த போதிலும் அவர்களும் விஞ்ஞானக் கூடங்களுடன் தொடர் புகளை வைத்திருக்க வேண்டியுள்ளது. இருந்த போதிலும் சிக்க லானதும் உயிராபத்தினை விளைவிக்கக் கூடியதுமான உயிரியல் ஆயுதங்களை பயங்கரவாதிகளால் தாமாக தமது இடங்களில் வைத்து உற்பத்தி செய்ய முடியுமா என்பது சந்தேகத்திற்கிடமானதாகவே உள்ளது.

உயிரியல் பயங்கரவாதத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட் களை நோக்குகின்ற போது, மரபுரீதியாக Bubonic Plague, Smallpox,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Botulin us Toxin போன்றன உயிரியல் ஆயுதங்களின் முகவர்களாக உள்ளன. இவற்றின் பாதிப்புக்கள் என்பது Spores of Anthrax, The Bacilli of Smallpox, Legionnaires, Ebola, Tularemia Brucellosis, Cholera நோய்களின் பாதிப்புக்களை ஒத்ததாகும். உயிரியல் ஆயுதப் பொருட் களின் வரிசையில் Ricin 2003 காலப்பகுதியில் பிரபல்யமானது. குறிப்பாக இது லண்டன் மற்றும் மஞ்சஸ்டரில் உள்ள அல்ஜீரிய குடியிருப்பாளர்கள் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து பாதுகாப்புப் படைகள் அல்ஜீரியர்களைக் கைது செய்ததுடன் அதன் பாதிப்புக்கள் குறித்தும் விபரித்தனர். ஆரம்பத்தில் 1994 மற்றும் 1995 காலப்பகுதிகளில் ஐக்கிய அமெரிக்காவில் பாசிச அனுதாபிகள் எனக்கருதப்பட்டவர்கள் மத்தியில் இது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இவ்வுயிரியல்ப் பொருளானது பெரியளவில் இன்றுவரை உபயோகப்படுத்தப்பட வில்லையாயினும் ஒரு கொல்லும் கருவி யாகவே இன்றுவரை நியாயப்படுத்தப்படுகின்றது. Ricin இன் ஒரு கிறாமினை விசுறுவதன் மூலம் 10,000 கணக்கான மக்களைக் கொலை செய்ய முடியும். இது மிகவும் தாழ்த்தப்பட்ட உபகரணங்களைக் கொண்டு அவரை விதை களிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. Ricin கலங்களை அழிக்கும் சக்தி கொண்டது. இதற்கான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பிரிட்டனில் இவ்வாறான உயிரியல் ஆயுதங்களின் பாதிப்பினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை பிரிட்டனில் முன்னெடுக்கின்றனர்.

பொதுவாக உயிரியல் பொருட்களானது சிக்கல் நிறைந்ததாகும். இது பயங்கரவாதிகளுக்குக் கூட விதிவிலக்கல்ல. இப்பொருட்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டுச் சூழ்நிலை அவசியமாகின்றது. இதற்கென பயிற்சி பெற்ற ஆய்வு கூட உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கு ஏற்றவிதத்தில் சில பயங்கரவாதிகள் பயிற்றுவிக்கப்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. ஒரு எதிர்பார்க்கப்பட்ட தாக்குதலை நடத்துவதற்குரிய அளவினை உறுதிப்படுத்தத்தக்க விஞ்ஞான அறிவினை சில பயங்கரவாதிகள் கொண்டிருக்கின்றனர். எனினும் இப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் அதனை இடமாற்றுதல் போன்றன பற்றித் தீர்மானிப்பதில் அவர்கள் பிரச்சினைகளைக் கொண்டிருக்கலாம். அதிலும் குறிப்பாக பயங்கரவாதிகள் தங்கும் இடங்கள் ஆபத்தானதாகவும் அதனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமாக அவதானித்தலுக்கு உட்படுத்தும் அவர்களது செயற்பாடு அவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதுமாகும். அதேவேளை இவ்வாயுதப் பாவனையில் உள்ள மற்றுமொரு விடயம் எவ்வாறு இப்பொருட்களை ரயில் நிலையம், விமானம், சனநெரிசலான இடங்கள், பிரதான உணவுப் பயிர்கள் உள்ள இடங்களில் உபயோகிப்பது என்பது பற்றியதாகும். இது விடயத்தில் காணப்படும் பாதுகாப்பான வழிமுறை என்பது தூர இயக்கும் கருவிகளைக் கொண்டு இலக்குவைக்கப்படும் பிரதேசத்தில் உயிரியல் பொருட்களை வெளியிடுவதாகும். உண்மையில் பயங்கரமான உயிரியல் ஆயுதங்கள் என்பது பலத்த அழிவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றதாகும். Anthrax இனைப் பொறுத்தவரையில் அது பல மாதங்களாக உயிர் வாழும் தன்மையுடையதாகும். அந்திரக்ஸினைப் பொறுத்த வரையில் அது பக்டீரியாக்களைக் கொண்டதாகும். இது விடயத்தில் பயங்கரவாதிகள் தமது உயிரினை மதிப்பதுடன் உயர் விளைவுகளை ஏற்படுத்தவும் விரும்புகின்றனர்.

இதுவரை உயிரியல் பயங்கரவாதத்தில் பெருமளவிலான வெடிப்பு ஏற்படவில்லை. 1968 இலிருந்து இதுவரை இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் 60 இற்குக் குறைவான தாக்குதல்களிலேயே இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் உபயோகிக்கப்பட முயற்சிக்கப்பட்டுள்ளது. எனினும் வதந்தியான அச்சுறுத்தல்கள் அரசாங்கத்தினை வந்தடைகின்ற போக்கு உள்ளதனை அவதானிக்கலாம். இருந்த போதிலும் இது விடயத்தில் அவற்றின் செயற்பாடு குறித்து அல்லது ஆபத்துக் குறித்து அரசாங்கங்கள் எச்சரிக்கையாக இருக்கின்றதனையும் அவதானிக்கலாம். 1950 காலப்பகுதிகளில் பிரிட்டன் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியன உயிராபத்து விளைவிக்காத பொறிமுறைகளைப் பயன்படுத்தி 200 இற்கு மேற்பட்ட இரகசியச் சோதனைகளை மேற்கொண்டது. அந்திரக்சின் பாதிப்பினை அறிந்து கொள்வதற்காக விமானங்களில் இருந்து அவற்றினைப் பிரயோகித்ததன் மூலம் சோதனைகளை மேற்கொண்டது. எனினும் முழு அளவிலான நட வடிக்கைகள் மற்றும் அவதானம் என்பன அதிகமான நாடுகளில் வெற்றிகரமானதாக இல்லை. பிரிட்டன் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியன இது விடயத்தில் கூடிய கரிசனைகளைக் கொண்டிருக்கின்றது. கிழக்கு - மேற்கு முகாம் நிலவிய காலத்தில் ஆபத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற போது இவ்வாறான தந்திரோபாயங்களை உபயோகிப்பது குறித்த விடயம் கருத்தில் எடுக்கப்பட்டது. இருப்பினும் ஒரு நகரத்தின் மீதான பாரிய அழிவுகளை ஏற்படுத்த முனையும் தாக்குதலின் போது சமகாலப் பயங்கரவாதிகள் இதனை உபயோகிக்க முடியும் என்ற விடயம் தற்சயம் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக சில அறிக்கைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி 1998 டிசம்பரில் டைம்ஸ் சஞ்சிகையில் வெளியான ஒரு விசேட அறிக்கையில், 'சிதைவுறக் கூடிய அணுவாயுதப் பொருட்கள் மற்றும் உயிரியல் பொருட்களைப் பார்ப்பதற்காக 1998 இல் ஒஸாமா பின் லேடனின் பிரதிநிதிகள் முன்நாள் சோவியத் குடியரசுகள் மற்றும் யூகோஸ்லாவியக் குடியரசுகளுக்கு சுற்றுப்பிரயாணங்களைச் செய்திருந்தனர்' எனக் கூறுகின்றது. மேலும் உயிரியல் ஆயுதங்களுக்கான மூலப் பொருட்கள் பயங்கரவாதிகள் தமது ஆதிக்கப்பரப்பினை நிலை நாட்டியுள்ள நாடுகளில் வர்த்தக சந்தைகளில் கிடைப்பதாகவும் சில அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. செப்டம்பர் 11 இல் உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டதனையடுத்து இடம்பெற்ற அந்திரக்ஸ் பரவலிலிருந்து பயங்கரவாதிகள் உயிரியல் அல்லது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்பு அமெரிக்கர்களிடத்தில் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்தே ஒவ்வொருவரும் இவ்வாறான தாக்குதல்கள் நிகழும் இடத்து எவ்வாறான சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினைப் பெற்றுக்கொண்டனர். இதன்பிற்பாடு அவ்வாறான தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சாத்தியமான வழிமுறைகள் குறித்து பத்திரிகைகள் விளம்பரப்படங்களைப் (முகமூடி) பிரசுரித்தது. 2001 ஒக்டோபரில் அந்திரக்ஸ் நிகழ்வு இடம்பெற்று 6 மாதங்களுக்குப் பின்னர் அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் அரசாங்கத்தின் தளர்வுத் தன்மை குறித்து விமர்சனங்களை வெளியிட்டது. அதாவது உயிரியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான பயங்கரவாதிகளின் செயற்பாடு தொடர்பில் அரசாங்கம் கவனயீனமாக உள்ளதாக விமர்சிக்கப்பட்டது. மேரிலான்டின் (Maryland) போர்ட் டெரிக்கில் (Fort Derrick) உள்ள ஐக்கிய அமெரிக்க இராணுவத்தின் உயிரியல் ஆயுத ஆய்வு கூடமானது அந்திரக்ஸ் தபால் தொலை தொடர்பில் தளர்வான ஆணைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளையே மேற்கொண்டது. இதனால் பல உயிராபத்தினை ஏற்படுத்தும் பொருட்கள் கருத்தில் எடுக்காது விடப்பட்டன.

ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற அந்திரக்ஸ் நிகழ்வானது உயிரியல் பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான சாத்தியமான வழிமுறைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தினை சுட்டிக்காட்டியது. 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் தம்மை அமெரிக்க தேசப்பற்றாளர்கள் எனக்கருதிய குழுக்களிடமிருந்து ஜனாதிபதி பில் கிளின்டன் இவ்வாறான தாக்குதல்கள் குறித்து அச் சுறுத்தல்களை எதிர்கொண்ட போதிலும் 2001 இல் இடம்பெற்ற அந்திரக்ஸ் மூலமான தாக்குதலே உலகில் இடம்பெற்ற உண்மையான உயிரியல் ஆயுதத் தாக்குதலாகும். எனினும் 1998, 1999 ஆகிய ஆண்டு களில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களில் அந்திரக்ஸ் பாவிக்கப் படவில்லை. 2001 இலேயே அந்திரக்ஸ் பிரச்சினை தொடர்பான விடயம் புளோரிடாவின் ; (Florida) தபால் தொழிலாளிகள் மத்தியில் கண்டறியப்பட்டது. நியூஜேர்சியின் (New Jersey) ரென்டனில் (Trenton) ) தபாலிடப்பட்ட துகல் நிரப்பப்பட்ட தபால் தலைகள் மூலம் 5 பேர் கொல்லப்பட்டனர். மற்றைய 13 பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவ்வாறே அந்திரக்ஸ் கொண்ட கடிதங்கள் செனட் சபைத் தலைவர் உட்பட அதன் மற்றைய உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கெபிட்டல் கில் (Capitol Hill) அலுவலகங்கள் மூடப்பட்டதுடன் வாசிங்டனில் நிலை மையை சமாளிப்பதற்கு செயல் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டது. ஏற்கனவே ஒரு பயங்கரமான பயங்கரவாதத் தாக்குதல் குறித்த அனுபவத்தினை அரசாங்கம் கொண்டிருந்தனால் இது விடயத்தில் அரசாங்கம் விரைந்து செயற்பட முடிந்தது. இதற்கமைய 1000 கணக்கானோர் இதன் பாதிப்புக்கள் குறித்துச் சோதிக்கப்பட்டனர். குறிப்பாக இவ்வுயிரியல் ஸ்துலப் பொருளானது தோலிலா அல்லது சுவாச உறுப்புக்களிலா பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்ற விடயம் சோதனைக்குள்ளாக்கப்பட்டதுடன் அதற்கான எதிர் உயிரியல் பொருட்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கமைய கட்டி டங்கள், வேலைத்தளங்கள், ஓய்விடங்கள், தபால் நிலையங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதற்காக கம்பியூட்டர் விசைப் பலகைகள் (Keybord) கூட பரிசோதிக்கப்பட்டது.

அதே ஆண்டு (2001) ஒக்டோபரில் சந்தேகத்திற்கிடமான துகல்கள் நிரப்பப்பட்ட பல தபால் தலைகள் பல நாடுகளில் கண்டுபிடிக்கப் பட்டது. பிரான்ஸ், மொறோக்கோ, லெபனான், யப்பான், பாகிஸ்தான், லித்துவேனியா, போத்துக்கள், ஹொங்கோங், ஸ்லோவாக்கியா, அவுஸ்திரேலியா, கென்யா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் இதன் வலியால் பாதிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அரசாங்கங்கள் அவசர மாநாடுகளைக் கூட்டியதுடன் பொலிசார் மற்றும் நுண்ணாய் வாளர்களைக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளவும் தீர்மானித்தன. இவ்விதம் உலகளாவிய ரீதியாக பரவிய சந்தேகத்திற்கு இடமான தபால் தலை ஒரு பரீட்சார்த்தமான ஒன்றாக இருந்ததே தவிர எந்த வொரு நன்கு அறியப்பட்ட பயங்கரவாதக் குழுக்களின் செயலாக அது இருக்கவில்லை. எனினும் அதன் மூலம் சில நன்மைகளை இச்செயல்களில் ஈடுபட்ட குழுக்களால் அடையமுடிந்தது. உயிரியல் பயங்கரவாத தபால் மூலம் ஏற்பட்ட அச்சம் தொடர்பான விரிவான விசாரணை என்பது வெள்ளை அல்லது பிரௌன் நிறத்துகள்கள் அதிகளவு ஆபத்தானது என்ற விடயத்தினை வெளிப்படுத்தியது. அதாவது ஐக்கிய அமெரிக்காவுக்கு ஒரு தொகை அந்திரக்ஸ் மாதிரி அனுப்பப்பட்டதனையடுத்தே இது அறியப்பட்டது. இத்தபால் பொதிகளின் அனுப்புனர் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வுகளின் விளைவாக அதனை அனுப்பியவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டது. இதன்படி முதலாவது அந்திரக்ஸ் கடிதமானது ஐக்கிய அமெரிக்க இராணுவ ஆய்வுப் பகுதிகளில் இருந்து வரும் ஆய்வு கூட வேலையாட்களால் அனுப்பபட்டதாக அறியப்பட்டது. இங்கு ஒரு ஆயுதம் என்றவகையில் இத்தாக்குதலை மேற்கொள்வதற்கான ஒரு ஊடகமாகவே தபால் தலை பயன்படுத் தப்பட்டது. இப்பக்டீரியாக்களைப் பெற்றுக்கொள்வது சாத்தியமான தாயினும் ஒரு தரமான ஆயுதமாக உறுதிப்படுத்திக் கொள்வது என்பது சிக்கலானதாகும். இதுவே பயங்கரவாதிகளுக்கான தலையாயப் பிரச்சினையாகவும் உள்ளது. பெரியளவான அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதப் பாவனைகள் மூலமான பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக மிகவும் வெற்றிகரமான பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறந்த புலனாய்வுப் பிரிவுகள் மூலம் பெறப்பட முடியும். நடைமுறையில் பயங்கரவாதத் தாக்குதலையடுத்து தேசங்களின் பதில் நடவடிக்கையை இயலுமை என்பது குறைந்தளவிலேயே உள்ளது. இவ்விதமான ஒரு சம்பவம் 1942 மற்றும் 1943 யுத்தகாலத்தில் Scottish தீவு விடயத்தில் இடம்பெற்றது. சமகாலத்தில் சர்வதேச மட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறும் முக்கிய அரசுகளின் சுகாதார அமைச்சர்கள் உயிரியல் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலைத் தோற் கடிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது பற்றி ஒழுங்கு முறையான சந்திப்புக்களை மேற்கொள்கின்றனர். இதற்காக ஆய்வுகளை மேற்கொள்ளல், தகவல்களை வழங்குதல் மற்றும் அவசரத் திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர். அதேவேளை இணைந்த செயற்பாடுகள் மூலம் அதற்கான மருந்துகள் மற்றும் உயிரியல் எதிர்ப்புப் பொருட் களையும் கண்டறிவதற்கு முயற்சி எடுக்கின்றனர். மேலும் இம் முறைமையினை நிலைபெறச் செய்வதற்காக ஒருங்கிணைந்து செயற்படும் போக்கினையும் கடைப்பிடிக்கின்றனர். அடிப்படையில் இச் சந்திப்புக்களானது உயிரியல் ஆயுதங்களைக் கட்டுப்படுத்து வதற்கான முதல் நடவடிக்கையாகும். இவற்றினைத் தவிர வெற்றி கரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசுகள் உயர்ந்தபட்ச உசார் நிலையினை அவ்வப்போது வெளிக்காட்டுவதுடன் அபிவிருத் தியடைந்து வரும் நாடுகளின் முழுமையான பங்களிப்புடன் பரந் தளவிலான கூட்டுக் களையும் ஏற்படுத்திச் செயற்படுகின்றன. இதன்படி எல்லா அரசுகளும் இவ்வாயுதங்களின் அபாயம் குறித்து தகவல்களை மக்களுக்கு கடத்த வேண்டும். மறுபுறத்தில் அர சாங்கங்களின் எதிர்வாதச் செயற்பாடுகளும் இது விடயத்தில் பயனளிக்கக் கூடும். எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்காவில் சின்னம்மை மருந்துகள் விடயத்தில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினைக் குறிப்பிடலாம். அவ்வாறே பிரிட்டனில் 2002 முடிவின் போது உயிரியல் அல்லது இராசாயன தாக்குதல்களை கையாள்வதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *அணுவாயுதப் பயங்கரவாதம்* (Nuclear Terrorism)

அணுவாயுதப் பயங்கரவாதமானது இரட்டை ஆபத்தினைக் கொடுக்கின்றது. ஒரு அணுவாயுதப் பொருள் பாரியளவிலான படுகொலை மற்றும் அழிவுகளை ஏற்படுத்துவதற்காக வெடிக்கச் செய்யப்படலாம். இத்தாக்குதல்களின் போது அணுவிலிருந்து பெறப்பட்ட அணுக் கதிரியக்க அம்சங்களை உபயோகிப்பதன் மூலம் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படலாம். மரபு ரீதியான உயர்ந்த வெடிப்புடன் அணுவாயுதங்களின் மூலமான தாக்குதல் மேற்கொள்ளப்படலாம். கதிரியிக்க அம்சங்கள் பரந்தளவிலான மக்கள் தொகைக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளிவிடப்படலாம். இவ்விதம் வெளியிடப்படுவதானது பொதுச் சேவைகள், உட்கட்டமைப்பு மற்றும் சூழல் என்பவற்றுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. சமகாலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் நூற்றுக்கணக்கான அணுகுண்டுகளை தம் வசம் வைத்துள்ளது.

கெடுபிடி யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அணுவாயுதப் பயங்கரவாதத்தின் அபாயம் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வு படிப்படியாக வளர்ந்து வருகின்றது. இதன்படி அணுவாயுதத் தொழில் நுட்பங்கள், தொழிற்சாலைகளின் பரவல் தொடர்பான உண்மையான கவனம் குவிக்கப்பட்டுள்ளது. இவ்விதமான கவனம் பரந்தளவிலான அணுவாயுதங்களைக் கட்டுப்படுத்த ஓரளவுக்கு வழிவிட்டுள்ள போதிலும் கிழக்கு ஐரோப்பிய கறுப்புச் சந்தைகளில் அணுக்கதிரியக்க சக்திகள் பயங்கரவாதிகளுக்கு கிடைப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### *இணைய வலையமைப்புப் பயங்கரவாதம்* (Cyber Terrorism)

எதிர்காலப் பயங்கரவாத வடிவங்களுள் ஒன்றாக இணைய வலையமைப்புப் பயங்கரவாதம் கருதப்படுகின்றது. இப்பயங்கரவாத வடிவமானது பாதுகாப்பான வழிமுறைகள் மூலம் எண்ணற்ற அழிவுகளை ஏற்படுத்தத்தக்க வல்லதாக உள்ளது. மிகவும் பாதுகாப்பான குளிர்ந்த அறைகளில் இருந்து கொண்டு உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இத்தகைய தாக்குதல்களை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் தொலைபேசி இணைப்புக்கள், வீதி மற்றும் புகையிரதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, உணவுப் பரிமாற்ற நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும். கணினி வைரசுகளை உருவாக்குவதன் மூலமும் கணினிகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறாக பயங்கரவாதம் இரசாயன ஆயுதப் பயங்கரவாதம், உயிரியல் ஆயுதப் பயங்கரவாதம், அணுவாயுதப் பயங்கரவாதம், இணையவலையமைப்புப் பயங்கரவாதம் என எதிர்கால வடிவங் களைப் பெற முடியும் என பரவலாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# அல்—பயங்கரவாதமும் எதிர் பயங்கரவாதமும் (Anti-Terrorism and Counter Terrorism)

பயங்கரவாதம் பற்றிய விவாதத்தில் இடம்பெறுகின்ற ஒரு முக்கிய விடயம் அல்-பயங்கரவாதம் மற்றும் எதிர்பயங்கரவாதம் குறித்த விடயமாகும். பல ஆண்டுகளாக அல் பயங்கரவாத (Anti-Terrorism) நடவடிக்கைகள் என்பதற்கும் எதிர் பயங்கரவாதம் (Counter Terrorism) என்பதற்கும் தெளிவான எல்லையை வரையறுப்பது வழக்கமாக இருந்தது. கோட்பாட்டு ரீதியில் அல்-பயங்கரவாதம் என்பது பயங்கர வாதத்திற்கு எதிராக பாராளுமன்றத் தனிச் சட்டத்திலிருந்து இராணுவச் சட்டம் வரை ஓர் அரசு எடுக்கக் கூடிய சட்டபூர்வமான நடவடிக்கை எதையும் குறிக்கும். எதிர் பயங்கரவாதம் என்பது ஒரு அரசு தனது சொந்தப் படைகளைக் கொண்டு படுகொலை, தன்னிச்சையான பழி வாங்குதல்கள் போன்ற பயங்கரவாத முறைகளைக் கையாள்வதைக் குறிக்கும். இவ்வேறுபாடு தற்காலத்திலும் கடைப்பிடிக்கப்படுகின்ற போதிலும் அதிகமாக அது சிதைவுக்குள்ளாகி இவையிரண்டும் ஒரே பொருளில் பார்க்கப்படும் நிலை தோன்றியுள்ளது. பயங்கரவாதம் பற்றி எழுதும் சில எழுத்தாளர்கள் இந்த வேறுபாட்டை தமது ஆக்கங்களில் பதிவு செய்தாலும் அவர்கள் இவ்விரு சொற்களும் எவற்றைக் குறிப்பிடுகின்றது என்ற விடயத்தில் ஒத்த கருத்தினைக் கொண்டிருப்பதில்லை. சிலர் எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக, அல்-பயங்கரவாத முறைகள் இயல்பாகவே தற்காப்பு சார்ந்தவையாக உள்ளன என எழுதுகின்றனர். வேறு சிலர் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் என்பது ஒரு செயலூக்கமற்ற எதிர்வினை. ஆனால் அல்-பயங்கரவாதம் என்பது அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு ஆற்றலுடைய வலுவான கருவி என்று கூறுகின்றனர். எனினும் தற்போது பல எழுத் தாளர்களும் இவ்விரு சொற்களையும் வெளிப்படையான அல்லது உள்ளார்ந்த வேறுபாடுகள் எதுவுமின்றி ஒன்றுபோலவே பயன் படுத்துகின்றனர். இந்தவகையில் சமகால அரசுகள் மேற்கொள்ளும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எதிர் பயங்கரவாதம் என்ற வட்டத்திற்குள் நின்று நோக்கலாம்.

### *எதிர் பயங்கரவாதம்*

உலகம் பூராகவும் உள்ள ஜனநாயக நாடுகளுக்கும் மனிதர்களின் பிரிக்க முடியாத மனித உரிமைகளுக்கும் நேரடி அச்சுறுத்தலாக உள்ள ஒரு அம்சமே பயங்கரவாதமாகும். இத்தகைய பயங்கரவாதமானது ஒரு உலகலாவிய யுத்தக் குற்றமாக இருப்பதுடன் புலனாய்வு, இராணுவ மற்றும் பொலிஸ் போன்ற எதிர் பயங்கரவாத அமைப்புக் களினாலும் போசிக்கப்படுகின்ற போக்கைக் காணலாம். இவ்விதம் பயங்கரவாதம் பற்றிய பொதுவானதொரு பின்னணியில் பார்க்கப்பட வேண்டிய ஒரு எண்ணக்கருவே எதிர் பயங்கரவாதம் பற்றிய எண்ணக் கருவாகும்.

ஒரு குறுகிய நோக்கில் எதிர்பயங்கரவாதம் என்பது பயங்கர வாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் குறிப் பதாகும். விரிவான நோக்கில் அரசாங்கம், இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் போன்றோர் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் உத்திகள், தந்திரோபாயங்கள் மற்றும் வழிமுறைகள் அடங்கிய செயற்பாடுகளையே எதிர் பயங்கர வாதம் என்பது குறித்து நிற்கின்றது. இன்னும் தெளிவாகச் சொல் வதாயின் பரந்தளவிலான மோதல்களை கட்டுப்படுத்துவதற்கு வெற்றிகரமான முறையில் பயங்கரவாத உத்திகளைப் பயன்படுத் துகின்ற தந்திரோபாயச் செயற்பாடுகளே எதிர் பயங்கரவாதமாகும்.

ஐக்கிய அமெரிக்க படைத்துறை எதிர் பயங்கரவாதத்தை வரை விலக்கணப்படுத்தும் போது, பயங்கரவாதத்தை தவிர்ப்பதற்காகவும், அதற்குப் பதிலளிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் குற்றம்சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளாகும் எனக் குறிப்பிடுகின்றது. இவ் வரைவிலக் கணமானது நேட்டோ மற்றும் பல இராணுவப் படைகளினாலும் எடுத்தாளப்பட்ட வரைவிலக்கணங்களை ஒத்திருக்கின்றது. மற்று மொரு வரைவிலக்கணத்தில் எதிர் பயங்கரவாதம் என்பது பயங்கர வாதத்தை அடியொற்றிய உத்திகளை பயன்படுத்தும் தந்திரோபாய வழிமுறைகளின் ஒரு தொகுதியினைக் குறித்து நிற்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. எது எவ்வாறாயினும் எதிர் பயங்கரவாதம் என்பது பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கான வழிமுறைகளுள் பயங்கரவாத தந்திரோபாய அடிப்படைகளைக் கொண்ட ஒரு வழி முறை என்று கூறலாம். அதாவது பயங்கரவாதிகளின் செயற்பாடு களை வெற்றி கொள்வதற்கு அல்லது குறைப்பதற்கு மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகளாகும்.

இத்தகைய எதிர் பயங்கரவாதம் குறித்த எண்ணக்கரு முன்னிலும் பார்க்க சமகாலத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற ஒரு எண்ணக் கருவாக மாறியுள்ளது. குறிப்பாக 2001 செப்டம்பர் 11 தாக்குதலை அடுத்து உலகம் பூராகவும் பரவிய பயங்கரவாதம் குறித்த எதிர்ப் பலைகள் எதிர் பயங்கரவாதம் குறித்த செயற்பாடுகள் பரந்தளவில் மேற் கொள்ளப்படுவதற்கான இயலுமையை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய தொரு இயலுமையே எதிர் பயங்கரவாத எண்ணக்கரு குறித்த பரவலுக்கு வழிவிட்டது என்றால் அது மிகையாகாது. அதிலும் குறிப்பாக ஐக்கிய அமெரிக்க ஆரம்பித்து வைத்த பயங்கரவாதத்திற்கு எதிரான போரானது எதிர் பயங்கரவாத மனோநிலையை உலகலாவிய அரசாங்கங்கள் மத்தியில் பரவலடையச் செய்துள்ளது.

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னரான ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் எதிர்பயங்கரவாத செயற்பாடுகளாக சர்வதேச ரீதியில் அந்நாடு பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக மேற்கொண்டு வரும் பயங்கரவாத உத்திகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும். குறிப்பாக அல் - கைடா, தலிபான் தீவிரவாதி களை அடக்குவதற்காக அந்நாடு பயன்படுத்துகின்ற பயங்கரவாத உத்திகள் அடங்கிய இராணுவ நடவடிக்கைகள் எதிர் பயங்கரவாதம் என்ற வட்டத்திற்குள் வைத்துப் பார்க்கப்பட வேண்டியதாகும். இத்தகைய நடவடிக்கைகளில் ஐக்கிய அமெரிக்கா மட்டுமன்றி இதர நாடுகளின் அரசாங்கங்களும் அவற்றின் இராணுவ, பொலிஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாய்வு அமைப் புக்களும் ஈடுபடுவதனை அவதானிக்கலாம். சமகாலத்தில் இது தொடர்பில் அரசுகள் பல சட்டங்களை இயற்றிச் செயற்படுகின்ற போக்கினையும் காணலாம். இதன்படி 2008 இல் ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றம் எதிர்பயங்கரவாதம் குறித்த ஒரு சட்டத்தினை இயற்றி யமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர் பயங்கரவாதம் குறித்த ஆய்வுகளில் ஐக்கிய அமெரிக்கா கூடிய கவனம் செலுத்தியுள்ளதுடன் நடைமுறையில் எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கமைய அமெரிக்காவின் உள்ளக அரசுத்துறை அதன் எதிர் பயங்கரவாதக் கொள்கையின் நான்கு முக்கிய கூறுகளைக் குறிப் பிடுகின்றது:

1. பயங்கரவாதிகளுக்கு எவ்வித சலுகையும் அளிக்க வேண்டாம், பேரத்தில் இறங்க வேண்டாம்.
2. அவர்களது குற்றத்திற்காக பயங்கரவாதிகளை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும்.
3. பயங்கரவாதிகளை ஆதரிக்கும் அரசுகளைத் தனிமைப் படுத்தியோ, பயமுறுத்தியோ தங்கள் நடத்தைகளை மாற்றிக் கொள்ளச் செய்யவேண்டும்.
4. அமெரிக்காவுடன் ஆதரவாகப் பணியாற்றுகின்ற, உதவி தேவைப் படுகின்ற நாடுகளின் எதிர்பயங்கரவாதச் செயல்களுக்கு உதவி புரிந்து தாங்க வேண்டும்.

மேலும் பயங்கரவாத ஆய்வு மையம் (Terrorism Research Centre) மற்றும் ஐக்கிய அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் எதிர் பயங்கரவாதத் தத்து வங்களாகப் பின்வருவன பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. இப் பட்டியல் 1998 இல் ஐக்கிய நாடுகள் சபையிலும் வெளியிடப்பட்டது.

1. பயங்கரவாத அமைப்பினை பலவீனப்படுத்துதல் மற்றும் தாக்கு வதற்கு மிகவும் கடினமாகவுள்ள வாய்ப்பான இலக்குகளில் கவனம் செலுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறுவதற்கும் தமக்கு முன்னால் உள்ள வழிமுறைகள் பற்றிப் பேசுவதற்கும் புலனாய்வு முக வர்கள் மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துதல்.

3. நடுநிலைத்தன்மை என்பது சட்டம் மற்றும் பயங்கரவாதத்தினை மேற்கொள்பவர்கள் அவர்களது அனுதாபிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்குள் நின்று செயற்பட வேண்டும்.

4. விரக்தி மற்றும் வெற்றிகரமற்ற செயற்பாடுகள் இருந்த போதிலும் பொறுமையும் விடாமுயற்சியும் எதிர்பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டத்திற்கு இன்றியமையாததாகும்.

5. கட்டுப்பாடுகள் மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்பட வேண்டும்.

6. பயங்கரவாதிகளினுடைய புலனாய்வானது அவர்களது பலம், தலைமைத்துவம், வளங்கள் தொடர்பான மூலங்கள், பொருட்கள், இலக்குகள் மற்றும் உணர்வுகள் தொடர்பாக வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

எனினும் இத்தத்துவங்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் முக்கிய மானவையாகும். அவ்விடயங்களுள் முதலாவது அம்சம் மிகக் கடினமான முறையில் கையாளப்படும் எதிர் பயங்கரவாதமானது அதிகாரத்தில் உள்ளவர்களால் மீளப்பயங்கரவாதத்தினை செயலுரு வாக்கம் செய்வதற்கு வழிவிடுவதாக அமைகின்றது. இரண்டாவது பிரதான விடயம் பயங்கரவாதிகளாக மக்களை வரையறுப்பது என்பது பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் அதற்கான பதிலீடுகளில் ஒத்துழைப் பினைத் தூண்டுதல் என்ற விடயங்களில் கவனம் செலுத்தப் படுகின்றது. இருந்தபோதிலும் இது உடன்பாடு காண்பதற்கான வாய்ப் புக்கள் மற்றும் பேச்சுவார்த்தைக்கான படிப்பினையினை வழங்கு கின்றது. மூன்றாவது விடயம் மிகவும் பலமான ஒரு எதிர் பயங்கர வாதமானது சட்டத்தன்மை மற்றும் புரிந்துகொள்ளத்தக்க புரட்சி மற்றும் சட்டரீதியற்ற தன்மை, ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை மங்கச் செய்கின்றது. நான்காவது முக்கிய விடயம் கட்டுப்பாடுகளின்மை மற்றும் கட்டாயப் படுத்தும் எதிர்க்கொள்கை என்பன அடக்குமுறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவிடுகின்றது என்பதாகும். தேசங்களின் உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பு என்பன எதிர் நிறுவன வன்முறையினால் அச்சுறுத்தப் படுகின்றபோது அதற்குப் பதிலீடு காட்ட வேண்டிய தேவை அவ் விதம் பாதிக்கப்பட்டுள்ள தேசங்களுக்கு ஏற்படுகின்றது. இதுவே தேசங்களின் எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டத்தினை வடிவமைக் கின்றது.

### எதிர் பயங்கரவாத உத்திகள்

சகல வகையான கிளர்ச்சிக் குழுக்களையும் சமாளிக்கத்தக்க பொதுவான தீர்வு முறையொன்று உலகில் காணப்படுவதில்லை. ஒரு இடத்திற்குப் பொருத்தமானது என வகுக்கப்படும் ஒரு செயற்பாட்டுக் கொள்கை மற்றொரு இடத்தில் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் பயங்கரவாதம் தொடர்பிலும் அதன் சகல வகையான அச்சுறுத்தல்களையும் வெற்றிகரமாகக் கையாள்வது என்பது மிகக் கடினமானதாகவுள்ளதுடன் அதற்கான பொதுவான ஒரு கொள்கைத் தீர்மானமும் காணப்படுவதில்லை. எனினும் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கான மிகவும் சாத்தியமான வழி முறைகளாக, பரந்தளவான பாதுகாப்பு விதிகள், சிறந்த தடுப்பு முறை, அடக்குதல், கிளர்ச்சிக் குழுக்களுக்கு வெளிநாட்டு உதவி வழங்கு வதைத் தண்டித்தல், சர்வதேச ஒத்துழைப்பு போன்றன உள்ளன. இவற்றினைப் பின்வருமாறு விரிவாக நோக்கலாம்.

### அதிகரித்த பாதுகாப்பு (Increased Security)

பயங்கரவாத அச்சுறுத்தலுக்கான ஒரு தீர்வாக அதிகரித்த பாதுகாப்பு உள்ளது. அதாவது குறிப்பிட்ட இலக்குகள் அல்லது நபர்கள் தொடர்பில் பாதுகாப்பினை அதிகரிப்பதானது பயங்கரவாத அச்சுறுத் தலைக் குறைப்பதற்கு வழிவகுக்கின்றது. கிளர்ச்சிக் குழுக்களுக்கு பரந்தளவான பிரபல்யத்துவத்தினைக் கொடுக்கும் இலக்குகளை அகற்றுவது இது விடயத்தில் பயனளிக்கக் கூடியதாகும். அவ்வாறே குறித்த இலக்குகள் அல்லது ஆட்கள் மீதமான பரந்தளவிலான பாதுகாப்பும் பயங்கரவாத அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப் பளிக்கக் கூடியதாகும். இருந்தபோதிலும் பாதுகாப்பு நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மிகவும் வெற்றிகரமாக அமைப்பதற்கு அதிக எண்ணிக் கையான இலக்குகள் அவசியமாகின்றது. இவ்விதமான பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பான இலக்குகளாக அரசாங்கங்கள், அரசாங்கக் காரியாலயங்கள், பாதுகாப்புப் படைகள் என்பன உள்ளன. அதிகரித்த பாதுகாப்பு ஏற் பாடுகள் கூட பாதுகாப்பினை வழங்கக் கூடியதாக இல்லாவிட்டால் அது முழுமையாக வெற்றிகரமானதாக இருக்காது. அதிகரித்த பாதுகாப்பு விடயத்தில் பொதுமக்களையும் வாய்ப்பான இலக்குகளாகக் கொள்ள வேண்டும். அதிகரித்த பாது காப்புக்கள் இன்றி வெற்றிகரமான முறையில் பயங்கரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகளையோ அவர்களது இதர நடவடிக்கை களையோ கட்டுப்படுத்த முடியாது. பலவீனமான பாதுகாப்புக்கள் காணப்படும் இடத்து அங்கு பயங்கரவாதத் தாக்குதல் இடம் பெறுவதற்கான வாய்ப்பு மிக எளிதாகக் காணப்படும். ஏனெனில் பயங்கரவாதிகள் சிக்கலான பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியிலும் வெற்றிகரமான தந்திரோபாயங்களைக் கையாண்டு தாக்குதல் நடத்தும் திறனைக் கொண்டவர்களாக உள்ளனர்.

பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள நாடுகளில் கூட வெற்றிகரமான தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இது விடயத்தில் இஸ்ரேல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இஸ்ரேல் தொடர்பில் பலஸ்தீனக் கிளர்ச்சிக் குழுக்கள் மேற்கொள்கின்ற தாக்கு தல்கள் இவ்வகையினைச் சார்ந்ததாகும். அதாவது இஸ்ரேல் அதிகரித்த பாதுகாப்பின் மீது அதிக கரிசனைகொண்டுள்ளதோடு அதற்குச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இருந்தபோதிலும் இவ்விறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி கார் குண்டுத்தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள், ரொக்கட் தாக்குதல்கள் கூட அங்கு நிகழ்த்தப் படுகின்றன. அவ்வாறே ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட செப்டம்பர் 11 தாக்கு தல்கள் கூட அதிகரித்த பாதுகாப்பு நிலவிய காலத்திலேயே இடம் பெற்றது. இதிலிருந்து அதிகரித்த பாதுகாப்பு பயங்கரவாதத் தாக்கு தலைக் கட்டுப்படுத்த உதவாது என்பது பொருளல்ல. மாறாக அதிகரிக் கப்படும் பாதுகாப்பு என்பது பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்தும் இயலுமையினைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான பாதுகாப்புள்ள இடங்களிலும் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறலாமாயினும் தாக்குதல் மூலம் ஏற்படும் விளைவுகளை, அழிவுகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும். அவ்வாறே சகல விதமான அபாயகரமான தாக்குதல்களுக்குமான ஒரு தற்காலிக தடுப்பு ஏற்பாடாகக் கூட அதிகரித்த பாதுகாப்பு காணப்பட முடியும். இவ் வதிகரித்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனம் செலுத்தத்தக்க பகுதிகளாக பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள், பொருளாதார இலக்குகள், விமான நிலையங்கள், விமானங்கள், பாதுகாப்பு மையங்கள், முக்கியமான நபர்கள் போன்றன காணப்படுகின்றன. பொதுவாக அரசுகள் தமது பாதுகாப்பினை அதிகரிக்கும் முயற்சியில் அதிகரித்த செலவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் மூலம் வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தவிருந்த வளங்கள் பாதுகாப்புக்காக திருப்ப வேண்டியுள்ளது. இதனால் ஏனைய துறைகள் போதுமான வளங்கள் இன்றி வீழ்ச்சியடையக் கூடிய அபாயமும் உள்ளது. சில வேளைகளில் அது கூட பயங்கரவாதிகளின் இலக்கினை நிறைவு செய்வதற்கு உதவுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பொறுத்த வரையில் அந்நாடுகள் பாதுகாப்புக்கான அதிகரித்த வளங்களை ஒதுக்குகின்ற போது மற்றைய துறைகளில் பல பிரச்சினைகளை எதிர் கொள்வதனை அவதானிக்கலாம். எது எவ்வாறாயினும் அதிகரித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பயங்கரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகளினை கட்டுப்படுத்துவதுடன் அவர்களது தாக்குதல்களுக்கான உத்திகளையும் சிதைவுறச் செய்கின்றது. அவ்வாறே பயங்கரவாதிகளுக்கு உளவியல் ரீதியான பின்னடைவு ஏற்படவும் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் வழிவிடுகின்றது.

### *புலனாய்வுகளை ஒன்றுதிரட்டுதல்* (Gethering Intelligence)

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் அடுத்த முக்கிய சாத்தியமான தெரிவு புலனாய்வுகளை ஒன்றுதிரட்டுதல் மற்றும் கிளர்ச்சிக் குழுக்களில் புலனாய்வுகளை ஊடுருவச் செய்வதன் ஊடாக பயங்கரவாதத்தினை தடுத்தலாகும். புலனாய்வுகளை ஒன்று திரட்டுதல் தொடர்பான புதியதொரு விழிப்பு செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் பரவலாக இடம்பெற ஆரம்பித்தது. இத்தாக்குதல் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பின்னர் ஐக்கிய அமெரிக்க உளவுத்துறையான CIA மற்றும் ஐக்கிய அமெரிக்க உளவறியும் முகவர்கள் என்பவற்றின் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இவ்விதம் குற்றம் சுமத்தப்பட்டமையானது, பயங்கர வாதத் தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்குப் புலனாய்வுத்துறையின் பங்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொதுவாக ஏதாவது ஒரு நாட்டில் பல்தன்மையான தாக்குதல் இலக்குகளை பயங்கரவாதிகள் கொண்டிருக்கின்ற போது அவர்களது திட்டங்களைத் தடுப்பதற்கான வெற்றிகரமான நடவடிக்கைகளை எடுப்பது என்பது மிகச் சிக்கலானதாகும். இதன்போது சாத்தியமான எல்லா இலக்குகளையும் பாதுகாக்க முடியாது போகலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உளவுத்துறை முகவர்கள் இவ்வாறான தாக்குதல்கள் வந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்தால் கூட பயங்கரவாதி களால் தாக்குதல்களின் போது எவ்வாறான முறைகள், உத்திகள் பயன்படுத்தப்படப்போகின்றது என்பதை அறியாதபட்சத்தில் தாக்கு தல்களின் பாதிப்புக்களை முழு அளவில் கட்டுப்படுத்துவது என்பது கடினமானதாகும். இதனால் உளவுத்துறை முகவர்களானது இவ் வாறான தாக்குதல்களின் போது தடுப்பு உத்திகள் பற்றிச் சிந்திக்கவே வேண்டப்படுகின்றது. இதற்காக தாக்குதல் முறைகள், உத்திகள், இலக்குகள் குறித்து வெற்றிகரமான முறையில் உளவுத்துறைத் தகவல் களைப் பரிமாறுவதற்கான விடயத்தில் அரசுகள் கவனம் செலுத்து வதனை அவதானிக்கலாம்.

வெற்றிகரமான புலனாய்வுத்துறைக்கு கூட்டிணைந்த முயற்சி இன்றியமையாததாகும். அதாவது புலனாய்வுக்கான அடிப்படையான தகவல்களை பாதுகாப்புப் படைகள், இதர அமைப்புக்களிடமிருந்து பெறக்கூடியவகையில் கூட்டிணைந்த முயற்சிகளை புலனாய்வுத் துறை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்க உளவுத்துறை முகவர்கள் மட்டும் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டால், அவர்கள் பரந்தளவிலான வளங் களைக் கொண்டிருந்த போதிலும் அவர்களது நடவடிக்கை என்பது முழு அளவில் வெற்றிகரமான ஒன்றாக இருக்காது. எனவேதான் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ்வுளவுத்துறை முகவர்கள் தமது செயற்பரப்பினை விஸ்தரிப்பதுடன் பல்வேறு துறைகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை கிடைக்கக் கூடிய விதத்தில் கூட்டிணைந்து செயற் படத்தக்கதாக இருக்க வேண்டும். அவ்வாறே எல்லை கடந்த பயங் கரவாத முயற்சிகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் பயங்கர வாதிகள் தமது தாக்குதல் இலக்குகளை குறித்த நாட்டிற்கு வெளியில் இருந்து மேற்கொள்ள முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு நாட்டின் உளவுத்துறை மற்றைய நாடுகளின் உளத்துறைகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டிருக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தகவல் பரிமாற்றங்கள் உரிய முறையில் கடத்தப்படும் பட்சத்தில் தாக்குதல்களை அதன் ஆரம்பத்தின் போதே தடுக்க முடிவதுடன் தாக்குதல்களின் பாதிப்பு வீச்சினையும் குறைக்க முடியும். சமகாலத்தில் இவ்விடயத்தில் அரசுகள் கூடிய கவனம் செலுத்தி வருவதனை அவதானிக்கலாம். ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடர்களின் போதும் இதற்கான அறைகூவல்கள் நாடுகளால் விடுக்கப்படுவதனை அவதானிக் கலாம்.

### *நிதிகளைக் கட்டுப்படுத்துதல்* (Control Finances)

எதிர்பயங்கரவாத உத்திகளில் கவனம் செலுத்த வேண்டிய மற்று மொரு சாத்தியமான தெரிவு பயங்கரவாதிகளுக்குக் கிடைக்கும் நிதிகளைக் கட்டுப்படுத்துவதாகும். பயங்கரவாத அமைப்புக்களின் பரந்தள விலான தாக்குதல்களை மேற்கொள்வதற்கான ஆயுதங்களின் ஒன்று திரட்டல், ஆளணி ஒன்று திரட்டலுக்கு அடிப்படையாக இருப்பது அவர்களுக்கு கிடைக்கும் நிதியின் அளவினைப் பொறுத்த தாகவே உள்ளது. சம காலத்தில் செயற்படும் பல்வேறு பயங்கரவாத அமைப்புக்கள் தமக்கான பரந்தளவிலான நிதி மூலங்களைப் பெற்றி ருப்பதனைக் காணலாம். பொதுவாக பயங்கரவாத அமைப்புக்களுக்கு நிதியாதரவு என்பது அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்நிதி ஆதரவுகளானது பயங்கரவாதக் குழுக்களைப் பொறுத்த வரையில் நேரடி யாகவும் மறைமுகமாகவும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்து அல்லது தனியார் வளங்களிலிருந்து கூட சில பயங்கரவாத அமைப்புக்கள் தமக்கான நிதியினை அல்லது பணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகார்குவோவில் (Nicaragua) உள்ள கொண்ராசுக்கான (Contrast) உத்தியோகபூர்வமான நிதி வரை யறுக்கப்பட்ட போது ஐக்கிய அமெரிக்க அரசாங்கமானது தனிப்பட்ட வர்களை நிதி வழங்கும் படி தூண்டியது. அவ்வாறே செம்படைக்கான நிதிப்பிரச்சினையை பேர்டிநெல்லி (Fertinelli) என்பவரே குறைத்தார். அல்-கைடா அமைப்பு உலகில் மிகவும் அபாயகரமான அமைப்பாக வளர்வதற்கு அதன் ஸ்தாபகர் ஒஸாமா பின்லேடனின் செல்வம், அவ்வமைப்புக்கு முஸ்லீம் நாடுகளில் இருந்து கிடைக்கும் பங்களிப்புக்களே காரண மாகும். பலஸ்தீன விடுதலை இயக்கமானது தமது வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டதுடன் அரபு நாடுகளிடமிருந்து நிதி ஆதரவினை எதிர்பார்த்தது. பல நாடுகளிலும் உள்ள புலம்பெயர்ந்த மக்கள் தமது நாடுகளில் உள்ள கிளர்ச்சிக் குழுக்களுக்கு நிதி வழங்குகின்றனர். எடுத்துக் காட்டாக பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLOT), ஐரீஸ் குடியரசு இராணுவம் (IRA), தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) போன்றோர் தமது நிதியில் ஒரு பகுதியினை புலம் பெயர்ந்த வர்களிடமிருந்தே பெற்றுவந்தனர். பல கிளர்ச்சிக் குழுக்களுக்கு போதைப் பொருள் கடத்தல் மூலம் கிடைக்கும் இலாபம் அவர்களது நிதி மூலத்தின் பெரும்பகுதியினை நிரப்புகின்றது.

எவ்வகையான நிதி மூலங்களாக இருந்தபோதிலும் கிளர்ச்சிக் குழுக்கள் தமது இருப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளவும் தம்மை அபாயகரமானதாக மாற்றிக் கொள்ளவும் அவற்றுக்கு பரந்தளவிலான நிதி இன்றியமையாததாகும். இக்குழுக்களுக்கான நிதி மூலங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றபோது அவர்க்ளது தாக்குதல் திறனும் குறைக்கப்படுகின்றது. எனவேதான் இது விடயத்தில் அரசாங்கங்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு உதவும் விதத்தில் உளவுத்துறைகளும் பயங்கரவாதக் குழுக்களுக்கு நிதி கடத்தப்படும் வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அண்மையில் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் (TRO) இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கான நிதி திரட்டலில் ஈடுபடுதாகக் குற்றம் சாட்டி உலகின் முன்னணி நாடுகள் பலவற்றால் அக்கழகம் தடைசெய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். சமகாலத்தில் அரசாங்கங்கள் தமது தேசிய சட்டங்களிலும் பயங்கரவாதக் குழுக்களுக்கு நிதிரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினை வழங்குவதனைத் தடைசெய்துள்ளதனைக் காணலாம். துரதிஸ்டவசமாக பயங்கரவாதக் குழுக்களுக்கான நிதி மூலங்களைக் கட்டுப்படுத்துவது என்பது குறைந்தளவிலான வெற்றியினையே பெற்றுக்கொடுத்துள்ளது. பயங்கரவாதிகளின் நிதி வளங்களை, நிதித் தொடர்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான அரசுகளினது ஒட்டுமொத்த முயற்சியும் சவால்களை எதிர்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக அல்-கைடாவின் நிதி மூலங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்கா எடுத்துக்கொண்ட முயற்சிகள் முழுமையான வெற்றியினை பெற்றுக் கொடுக்கவில்லை. இன்றும் கூட அல்-கைடா மிகவும் நெகிழ்வான முறையற்ற பரிமாற்ற முறைகளைக் கொண்ட நிதிப் பரிமாற்ற பொறிமுறைகளையும் நவீன சர்வதேச வங்கி முறைமைகளையும் கொண்டு இயங்குகின்றது. இவ்வாறு பல இயக்கங்களும் வங்கி முறைகள், போதைப் பொருள் கடத்தல் மூலம் தமக்கான நிதி மூலங்களை ஒன்றுதிரட்டிக் கொள்கின்றது. இதற்கு ஏற்றவிதத்தில் செல்வந்தர்களுடனும் பல பயங்கரவாதக் குழுக்கள் நெருக்கமான தொடர்பினைப் பேணுகின்றது. இந்தவகையில் பயங்கரவாதிகளின் நிதி மூலங்களைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் எளிதாக ஒரு காரியமல்ல. இதற்கான முயற்சியில் ஏற்கனவே பல அரசாங்கங்கள் இறங்கியுள்ள போதிலும் அவற்றினால் குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெறமுடியவில்லை. எவ்வாறாயினும் பயங்கரவாதிகளின் இருத்தலுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் பெரிதும் உறுதுணையாக இருக்கும் அவர்களது நிதி மூலங்களைக் கட்டுப்படுத்துவது பயங்கரவாதத்தினைத் தோற்கடிப்பதற்கான செயன்முறையில் மிகவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்.

### தடுத்துநிறுத்துதல் / அடக்குதல் (Repression)

பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்துவதற்குள்ள மற்றுமொரு நுட்பம் தடுத்துநிறுத்துதல் அல்லது அடக்குதல் நுட்பமாகும். இவ்விதமான அடக்குதல் செயற்பாடுகளில் அரசுகள் ஈடுபட முடியும். இவ்வகையான அரசுகள் தமது கட்டுப்பாட்டுச் செயன்முறையின் ஒரு பகுதியாக மிகவும் வெற்றிகரமான உளவுத்துறை முகவர்களைக் கொண்டிருக்கும். வல்லமையுள்ள அரசாங்கங்கள் இவ்வகையான செயற்பாட்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகின்றது. வல்லமையுள்ள அரசாங்கங்கள் கொண்டிருக்கும் இயலுமையினால் அவைகளால் சமூகத்தைக் கட்டுப்படுத்த முடிவதுடன் பலவிதமான பயங்கரவாத அச்சுறுத்தலையும் தவிர்க்க முடியும். இதன்படி இவ்வகையான அரசாங்கங்கள் கிளர்ச்சிக் குழுக்கள் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள முன்னரே அவர்களை அழிக்கக் கூடியதாக இருக்கும். பொதுவாக வல்லாதிக்க அரசாங்கங்களுக்கு இவ்வடக்குதல் முறை பொதுவானதாயினும் தற்காலத்தில் ஜனநாயக அரசுகளுக்கு இது அவசியமாகின்றது.

உண்மையில் ஜனநாய அரசுகள் உட்பட சகலவகையான அரசுகளுக்கும் உள்ள ஒரு தெரிவாக, வன்முறைக் குழுக்களை அடக்குதல் உள்ளது. சில குறிப்பிட்ட வழிமுறைகள் செயலற்றுப் (பேச்சுவார்த்தை) போகும்போது பயங்கரவாதிகளின் வன்முறை அச்சுறுத்தலை எதிர் கொள்ளும் அரசுகள் அடக்குதலை தேர்ந்தெடுக்கின்றது. அதிகளவான கிளர்ச்சிக் குழுக்கள் பாரிய தடங்களை ஏற்படுத்தி அச்சுறுத்தல் விடுப்பதற்கு முன்னர் அவற்றின் திட்டங்கள் பாதுகாப்புப் படைகள் அல்லது பொலிஸாரினால் தோற்கடிக்கப்படும் போது பாதுகாப்புப் படைகள் அல்லது பொலிஸார் பயங்கரவாதத்தினை மீள நிலை நிறுத்துகின்றனர். இவ்வாறான குழுக்களின் வெற்றிகரமான தோல்வி என்பது சிறந்த புலனாய்வினைப் பயன்படுத்துதல், முன்கூட்டிய விசாரணை முறை மற்றும் சாதகமான வாய்ப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது. அடக்குதல் செயன்முறையில் பொதுவாக ஜனநாயக நாடுகள் வன்முறைக் கிளர்ச்சிக் குழுக்களின் அங்கத்தவர்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கைதுசெய்தல் மூலம் இச்செயன்முறையினை மேற்கொள்கின்றது. மிகவும் பலவீனமான மற்றும் பலமான அரசியல் முறைமைகள், வல்லாதிக்க அரசுகள், மாறும் நிலையில் உள்ள அரசியல் முறைமைகளிலும் இது நிகழ்கின்றது. பயங்கரவாதக் குழுக்கள் அரசியல் முறைமைகள் மீது மிகவும் பாதிப்பான தாக்குதல்களை மேற்கொள்ளும் போது கூட இவ்வகையான அரச அடக்கு முறை என்பது பிரயோகிக்கப்படுகின்றது. எனினும் இவ் வடக்குதல் முறையின் போது சிவில் சுதந்திரம் பரவலாகப் பாதிக்கப்படுவதற்கு பெருமளவு வாய்ப்புள்ளது.

இருந்தபோதிலும் அடக்குதல் முறையானது எதிர்பயங்கரவாதச் செயலினை வெற்றிகரமானதாக ஆக்கும் என்பதற்கு எந்த உத்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதமும் இல்லை. கொலம்பியாவில் (Colombia) அந்நாட்டு அரசாங்கமானது கிளர்ச்சிக் குழுக்களிடமிருந்து அதன் ஆள்புலத்தின் ஒரு பகுதியினை மீள தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் தோல்விகண்டது. அவ்வாறே இலங்கையில் அண்மையில் யுத்தம் முடியும் வரை தமிழீழ விடுதலைப புலிகளைக் கட்டுப் படுத்துவது, அவர்களிடமிருந்த இலங்கையின் ஆள்புலத்தினை மீளப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களில் இலங்கையரசின் அடக் குதல் செயன்முறை வெற்றியளிக்கவில்லை. அவ்வாறே பாஸ்க் பிராந்தியம் (Basque Region) மற்றும் பாலஸ்தீனப் பிராந்தியம் மீதான அரசுகளின் அடக்குமுறை நுட்பம் தோல்வியிலேயே முடிவடைந் துள்ளது. இந்தவகையில் அடக்குதல் மட்டும் பயங்கரவாதத்தினை முடிவிற்குக் கொண்டுவரமுடியாது. மாறாக அடக்குதலானது கிளர்ச்சிக் குழுக்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், தமது ஆளணி வளத்தினைப் பெருக்கிக் கொள்வதற்கும் வழிவிடுவதுண்டு. பிரித் தானிய அரசானது ஐரிஸ் குடியரசு இராணுவம் என அழைக்கப்பட்ட கிளர்ச்சிக் குழுவின் மீது அடக்குதலை மேற் கொண்ட சில கால கட்டங்களில் அவ்வமைப்பானது அதனது ஆளணியினை அதிகரித்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியது. அடக்குதல் நுட்பமுறையினைப் பயன்படுத்துதல் தொடர்பில் அடிக்கடி மாற்றம் காணும் அரசாங்கங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. இவ்வாறான நிலையில் உள்ள அரசாங்கங்கள் மீது புதிய கிளர்ச்சிக் குழுக்கள் அச்சுறுத்தலை விடுக்கலாம். இதன்போது அவற்றினை வெற்றிகரமாகக் கையாளத்தக்க இயலுமை மாற்றமுறும் அரசாங்கங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். பல சந்தர்ப்பங்களில் அரசுகளில் அடக்குதல் செயன்முறையானது அதிகளவான உயிரிழப்புகளுக்கும் வழிவிடுகின்றது. செம்படை யுடனான (Red Brigades) இத்தாலிய அரசாங்கத்தின் போராட்டமானது ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பதற்குக் காரணமாக அமைந்தது. அவ்வாறே விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட அடக்குதல் நுட்பமானது பெருந்தொகையான உயிரிழப்புகளுக்கு வழிவிட்டது. அல்ஜீரியாவில் அரசாங்கத்திற்கும் முஸ்லீம் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைக் கிளர்ச்சிக் குழுக்களை கையாளுவதற்கான உச்சக் கட்ட அரசுகளின் அடக்குமுறையே அரச பயங்கரவாதம் (State Terrorism) என அழைக்கப்படுகின்றது. சகல அரசுகளினதும் அரச பயங்கரவாதங்கள் எதிர் பயங்கரவாதத் தந்திரோபாயங்களைக் கடைப் பிடிப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஜோர்ஜியாவில் இருந்து செரோக்கீஸ்கள் (Cherokees) வெளியேற்றப்பட்டமை, பொஸ்னி யாவில் இடம்பெற்ற இனச் சுத்திகரிப்பு (Ethnic Cleansing), சிம்பா வேயில் இடம் பெற்ற வெள்ளையின விவசாயிகளுக்கு (White Farmers) எதிரான தாக்குதல்கள் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான பதிலீடுகள் அல்ல. கிழக்குத் தீமோர் மற்றும் ருவாண்டா விடயத்தில் அவ்வர சுகளின் பயங்கரவாத இராணுவத்தினருக்கான அரச ஆதரவுகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பயங்கரவாதத் தாக்குதல்கள் உள்ளடங் கலான கெரில்லாச் செயற்பாடுகளின் விளைவுகளுக்கு வழிவிட் டுள்ளது. மற்றைய சில சம்பவங்களில் பயங்கரவாதக் குழுக்களைத் தேடுவதற்கும் அழிப்பதற்கும் சட்டத்துக்குப் புறம்பான வன்முறை யினைப் பயன்படுத்துகின்றது. இதன்படி அரசாங்கத்தின் பயங்கரத் தன்மையான செயற்பாடுகள் கிளர்ச்சிக் குழுக்களின் வன்முறை உருவாக்கத்திற்கு வழிவிடும் அதேவேளை கிளர்ச்சியாளர்களின் பயங்கரவாதமானது ஒரு எதிர் பயங்கரவாத ஆயுதமாக அரசுகள் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதற்கு வழிவிடுகின்றது. பல சம்பவங்களில் இவ்வகையான முயற்சியானது குறைந்தளவிலான வெற்றியினைக் கண்டிருக்கின்றது. பிரான்சில் இருந்து விடுதலை பெறுவதற்கான அல்ஜீரியர்களின் எழுச்சியானது உள்ளூர் அதிகார சபைகளும் இராணு வத்தினரும் துன்புறுத்தல்கள், எல்லையற்ற கைதுகள், தகவல்களைப் பெறுவதற்கான மற்றைய நுட்பங்களையும் உபயோகித்தனர். இதன்படி நகர்ப்புறங்களில் காணப்பட்ட தேசிய விடுதலை முன்னணிகளை National Liberation Front) பிரான்சினால் அழிக்க முடிந்ததுடன் கிராமப் புறங்களில் அவற்றினைப் பலவீனப் படுத்த முடிந்தது. உருகுவே (Uruguay) மற்றும் ஆர்ஜன்டீனா (Argentina) ஆகிய நாடுகளில் இருந்த இராணுவ ஆட்சிகள் அரச பயங்கரவாதத்தினைப் பயன்படுத்தியதன் மூலம் உள்ளூர் இடதுசாரிக் குழுக்களைத் தோற்கடித்தது. உலகின் மற்றைய பகுதிகளில் உள்ள பல அரசாங்கங்களும் இந் நுட்பத்தினைக் கையாளுகின்றது. எனினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சிக் குழுக்களை அரசுகள் தமது அரச பயங்கரவாதத்தின் மூலம் முழுமையாக கட்டுப் படுத்த முடிவதில்லை. எல் சல்வடோர் மற்றும் தென் ஆபிரிக்காவில் இன்றும் கிளர்ச்சிக் குழுக்கள் உயிர் வாழ்கின்றன. கிழக்குத் தீமோர் இன்று சுதந்திரம் அடைந்துள்ளது. இந்தியா இன்று வரை காஷ்மீரினை தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாது உள்ளது.

### பழிவாங்குதல் / தண்டித்தல்

எதிர் பயங்கரவாத உத்திகளில் உள்ள மிகவும் பிரபல்யமான ஒரு தெரிவு தண்டனை வழங்குதலாகும். எனினும் இது ஒரு கடினமான வழிமுறையாகும். உள்ளூர் பயங்கரவாதத்திற்கான போதுமான ஆதாரங்கள் இருக்கின்ற போதே அரசுகள் இவ்வாறான பழிவாங்குதல் அல்லது தண்டித்தல் நுட்பங்களைப் பயன்படுத்த முடியும். இது விடயத்தில் விவாதத்திற்கு உட்படுகின்ற விடயம் யாதெனில் தனியே பாதுகாப்பு மட்டும் பயங்கரவாதத் தாக்குதலை தடுக்க முடியாது என்பதாகும். எனினும் ஒரு நாடு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆட்கொள்ளப்படுகின்ற போது இவ்வாறான பாதுகாப்பும் அவசிய மானதும் கூட. கெடுபிடி யுத்தகாலத்தில் இரு வல்லரசுகளும் கிட்டத் தட்ட சமஅளவிலான திறன்களைக் கொண்டிருந்தமையினால் இரு வல்லரசுகளுக்கும் இடையிலான நேரடி இராணுவத் தாக்குதல் என்பது வரையறுக்கப்பட்டதாக இருந்தது. இதன் போது மேற்குக் கூட்டினுள் காணப்பட்ட கிளர்ச்சிக் குழுக்களுக்கு சோவியத் ஆதர வினைத் தெரிவிக்க அதற்கு எதிராக சோவியத் அணியில் இணைந் திருந்த நாடுகளில் உள்ள கிளர்ச்சிக் குழுக்களுக்கு மேற்கு ஆதர வளித்தது. இதன் ஒரு கட்டமாகவே ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவில் உள்ள தேசிய விடுதலைப் போராட்டங்களும் சோவியத் ரஸ்யா ஆதரவளிக்க ஆப்கானிஸ்தானில் சோவியத்தினை எதிர்த்துப் போராடிய முஜாஹிதீன்களுக்கு ஐக்கிய அமெரிக்கா ஆதரவளித்தது. எனினும் இவ் உபாயத்தினால் சோவியத்தின் கிளர்ச்சிக் குழுக்களுக்கான ஆதரவினை முடிவிற்குக் கொண்டு வரமுடிய வில்லை. ஆனால் அது அதனது வாய்ப்புக்களை மேலும் செலவுள்ள தாக மாற்றியதுடன் அது தாக்குதல்களுக்கான உடனடிப் பதிலீடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதிலிருந்து பலராலும் ஆதரவளிக்கப்பட்ட ஒரு பதிலீடாகவும் அது உள்ளது. இதன் மூலமாக பல நாடுகள் கெரில்லாக் குழுக்களினதும் மற்றைய அரசுகளில் உள்ள பயங்கரவாதிகளிடமிருந்தும் வரும் தாக்குதல்கள் மற்றும் குண்டுகளிலிருந்து விடுதலை பெற்றவர்களாக உணர்ந்தனர் எனக் கூறப்படுகின்றது. இச்செயற்பாடுகளில் ஐக்கிய அமெரிக்காவில் கிளின்டன் அதிகாரத்தில் இருந்தபோது ஆப்கானிஸ் தானில் அல்-கைடா முகாம்களுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முன்கூட்டிய செயல்நடவடிக்கை

ஒரு நாடு ஒரு முன்கூட்டிய தாக்குதலுக்கு முயற்சிப்பதன் மூலம் தமது எதிர் பயங்கரவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்பதனையும் அவதானிக்கலாம். பழிவாங்கல் அச்சுறுத்தல்களானது மற்றைய நாடுகளை பயமுறுத்தும் விளைவுகளைக் கொண்டிருக்காத போது இவ்வகையான முன்கூட்டிய தாக்குதல் என்பது அவசியமான ஒரு தந்திரோபாயமாக இருக்கலாம். இத்தாக்குதல்கள் பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம்களுக்கு எதிராக அல்லது அரச ஆதரவாளர்களுக்கு எதிராக இருக்கலாம். இவ்வாறான தாக்குதல்கள் பயங்கரவாதச் செயல்களை தடுப்பதற்காக வடிவமைக்கப்படலாம். ஆப்கானிஸ் தானில் உள்ள தலிபான்கள் மற்றும் அல்-கைடாவுக்கு எதிராக 2002 இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது பழிவாங்குதல் நட வடிக்கையாக இருந்ததுடன் மேலதிக தாக்குதல்களை முன் கூட்டியே தடுப்பதற்கான ஒரு முயற்சியாகவும் அது இருந்தது. இவ்வாறான தாக்குதல்கள் பயனளிப்பதாக இருந்தால் அச்சுறுத்தல்களுக்குள்ளாக் கப்பட்ட அரசுகளுக்கான ஒரு இலட்சிய தந்திரோ பாயமாக முன் கூட்டிய தாக்குதல் (Primitive Strike) இருக்கும். இதன் மூலம் எதிர்ப் பயங்கரவாதச் செயற்பாடுகளின் எண்ணிக்கை அதன் தாக்கும் திறன் என்பன கட்டுப் படுத்தப்படும். குறைந்தபட்சம் அவற்றினை கொண்டு நடாத்துவதனைக் கூட கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். சில நிகழ்வுகளில் முன்கூட்டிய செயற்பாடு வேலை செய்கின்றபோது அது உயர்ந்தளவில் விரும்பத்தகாததாகவும் அமைந்துவிடுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இவ்வாறான தாக்குதல்கள் பயங்கரவாத இயக்கங்களுக்கான அச்சுறுத்தலை அகற்றுவது என்பது போதியளவு வெற்றிகரமானதாக இருக்கும்.

உண்மையில் முன்கூட்டிய செயற்பாடானது வெற்றிகரமாக இருப்பதற்கு சிறந்த உளவுத்துறை அல்லது புலனாய்வு ஒன்று திரட்டல் என்பது இன்றியமையாததாகின்றது. பயங்கரவாதக் குழுக் களின் செயற்பாடுகள் தொடர்பான விரிவான அறிவின் அத்துடன் அவர்களது ஆளணியினரின் இருப்பிடம் தொடர்பான போதிய தெளி வில்லாமல் துல்லியமாக பயங்கரவாத இலக்குகளை அடையாளம் காண்பது என்பது சாத்தியமற்றதாகும். இவ்வாறான குழுக்களை அழிப்பதற்கு அது கூட இன்றியமையாததாகும். அதவாது சிலவேளை எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ள குழுக்களை அழிப்பதற்கு மேற்கூறிய விடயம் மிகவும் இன்றியமையாத முன்நிபந்தனையாக உள்ளது. எனினும் சகல குழுக்களும் தமது செயன்முறையினை உருவாக்கு வதில் சம அளவில் அபாயகரமானதாக இருப்பதில்லை. மிகவும் பலமானதும் தைரிய மானதுமான குழுக்கள் மட்டுமே மிகவும் கடுமையான அச்சுறுத்தலை விடுக்கக் கூடியதாக இருக்கும். அவ்வாறே தமது தாக்குதல் செயற் பாடுகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். மிகவும் பலமான அதிகாரத்துவ அரசுகள் விரிவான பாதுகாப்புக் கருவிகளின் ஊடாக மிகவும் வாய்ப்பான அச்சுறுத்தல்களை அகற்று வதற்கான திறனைக் கொண்டிருக்கின்ற போது அது விரும்பத்தகாத ஒன்றாகப் பார்க்கப்படுவதும் உண்டு. அதாவது ஜனநாயக அரசுகளானது தமது முன்கூட்டிய செயல்களில் வன்முறையினை உபயோகிக் கின்றபோது அது ஜனநாயகப் பெறு மானங்களுக்கு கேடுவிளை விக்கலாம் என்பதாகும். இன்றும் கூட சில ஜனநாயகங்களில் இவ்வாறான நிலை தொடர்ந்து கொண்டி ருப்பதனை அவதானிக்கலாம். தலைமைத்துவமற்ற புரட்சி போன்ற நிறுவனரீதியான உளப்பாங்கின் மீது பயங்கரவாதக் குழுக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றபோது வன்முறையில் ஈடுபடும் கிளர்ச்சி யாளர்களுக்கு எதிரான முன்கூட்டிய செயற்பாடானது மிகவும் சிக்க லானதாக இருக்கும். சில சம்பவங்களில் இலக்குவைக்கக் கூடிய அங்கத்தவர்களைக் கண்டுகொள்வது சிக்கலானதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-கைடா போன்று வலையமைப்புக் களினூடாக இணைக் கப்பட்டுள்ள இயக்கங்களுக்கு எதிராக முன் கூட்டிய செயற்பாட்டுப் பாணியில் அடக்குதல் மேற்கொள்வது கடின மானதாகும். சாதாரண மாக ஒரு தாக்குதல் நிகழ்ந்த உடனே பொலிஸ் மற்றும் புலனாய்வு முறைகள் தாக்குதல்களில் ஈடுபட்ட தனிநபர்கள் மற்றும் அவர் களுடைய ஆதரவு வலையமைப்புக்களைக் கண்டறிவதற்கான இயலுமையுடையதாக இருக்கும். பயங்கரவாதக் குழுக்களின் அரச ஆதரவாளர்களுக்கு எதிரான முன்கூட்டிய தாக்குதல்கள் என்பதும் ஒத்த வரையறைகளைக் கொண்டிருக்கின்றன. உண்மையான அரச ஆதரவுகள் நிரூபிப்பதற்கு மிகச் சிக்கலானதாக இருக்கலாம் என் பதுடன் முன்கூட்டிய செயற்பாடுகளுக்கான ஒன்று திரட்டல்கள் கூட கடினமானதாக இருக்கலாம். ஒரு அரசுக்கு எதிராக வெற்றிகரமான முன்கூட்டிய செயலானது சர்வதேச முறைமையில் எதிர்மறையான இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தலாம். அதாவது முன்கூட்டிய அச்சுறுத்தல் அல்லது தாக்குதல் செயற்பாடுகளை செயலாற்றத் தூண்டலாம் என்பதாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் புறக் கணிப்பதற்கான இராணுவத் தாக்குதல்கள் வடிவமைக்கப்படலாம். உடனடியான எதிர் அரசியல், இராணுவ அல்லது இராஜதந்திர விளைவுகள் ஏற்படாவிட்டாலும் கூட எதிர்காலத்தில் வன்முறை யினை உபயோகிப்பதற்கு விரும்புகின்ற புதிய குழுக்களின் உருவாக் கத்திற்கான விதையினை அது தூவிவிடும் என்பதில் சந்தேகமில்லை. எவ்வாறாயினும் வெற்றிகரமான முன் கூட்டிய செயல் நடவடிக் கையானது எதிர் பயங்கரவாதச் செயற்பாட்டினை தாக்கமானதாகவும் வெற்றிகரமானதாகவும் மேற்கொள்வதற்கு இன்றியமையாத தாகும்.

### விசேட எதிர் பயங்கரவாத படைகள் / அலகுகள் / நிலையங்கள்

எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்ட தந்திரோபாயங்களில் அடுத்து முக்கியமானது விசேட எதிர் பயங்கரவாத நிலையங்களை ஏற்படுத்து வதாகும். பல நாடுகள் பயங்கரவாதச் சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு பயிற்றப்பட்ட விஷேட படைகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான படைகள் பயங்கரவாதச் சூழ்நிலைகளிலிருந்து தமது நாட்டினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும் காப்பாற்றுதலில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அவ்வாறே பழிவாங்குதல் மற்றும் முன்கூட்டிய செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் வெற்றிகரமான தாக்குதல் திறனை வெளிப் படுத்துவதற்கும் இவ்வாறான விஷேட படையணிகள் அல்லது நிலையங்கள் உதவுகின்றன. இவ்விதம் விசேட படைகளின் இருப் பானது ஒரு நாட்டில் நிலைகொள்கின்ற போது அவை சூழ் நிலை களைக் கூட மாற்றக் கூடியதாக இருக்கும். அதாவது வன்முறை மிக்க கிளர்ச்சிக் குழுக்களைக் கையாள்வதற்கான தெரிவுகள் அரசாங் கத்திடம் கிடைக்கக் கூடியதாக இருக்கும் போது பயங்கரவாதம் வித்தியாசமான முறையில் மாற்றப்பட்டு நிகழ்த்தப்படலாம். இவ் வாறான படைகளின் உருவாக்கமானது ஒரு குறிப்பாக அமைந்துள்ள விண்ணப்பமாகவே உள்ளது. அதாவது இவ்வாறான படைகள் இருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயங்கரவாதச் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படும் என்பதல்ல. அதேநேரம் இவ்வாறான படைகள் தேவைப்படும் விசேட சந்தர்ப்பங்களும் இருக்க முடியும். இவ்வாறான தனியான எதிர்பயங்கரவாத அலகுகள் உள்நாட்டுச் சூழ்நிலைகளில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கை முயற்சிகளின் போதும் பயன் படுத்தப்படலாம். இவ்வாறான அலகுகள் பணயக்கைதிகளை காப்பாற்றுவதில் அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட கட்டிடங்களை மீளக் கைப்பற்றுவதில் வெற்றிகரமாகச் செயற்பட்டால் குறைந்தபட்சம் சில சந்தர்ப்பங்களில் கூட அவ்வலகுகள் பயங்கரவாத இயக்கங்கள் மீது நேர்நிலையான பயத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். பயங்கரவாத அமைப்புக்களின் அங்கத்தவர்கள் கொல்லப்படுவதில் அல்லது பிடிபடுவதில் விருப்பம் கொண்டிருப்பார்களானால் திட்ட மிட்ட கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகளானது மிகவும் விலை கொடுக்கக் கூடிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். வெற்றிகரமான விஷேட படைகள் இதுவிடயத்தில் செயற்பட்டால் அவற்றினால் கிளர்ச்சிக் குழுக்களை அழிக்க முடிவதுடன் கிளர்ச்சி யாளர்கள் அவர்களது நோக்கங்களை அடைந்துகொள்வதில் அவர்கள் கொண்டுள்ள இயலுமையினைக் குறைக்கவும் முடியும்.

பொதுவாக உலக அளவில் விஷேட அலகுகளின் பணி தொடர்பான பதிவுகள் என்பது நேர் மற்றும் எதிர்மறையான அடைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கொண்டதாக உள்ளது. விஷேட அலகுகளின் எதிர்மறையான அடை வுகளில் கொலம்பியாவில் இடம்பெற்ற ஒரு சம்பவம் முக்கிய மானதாகும். அதாவது கொலம்பியாவில் ஏப்ரல் 19 இயக்கத்தின் (April 19 Movement) அங்கத்தவர்கள் கொலம்பியத் தலைநகர் போகோட்டாவில் உள்ள நீதியமைச்சினை முற்றுகையிட்ட போது அக்கட்டிடத்தினை மீட்பதற்கான நடவடிக்கையில் பயங்கரவாதிகள், பணயக்கைதிகள், மற்றும் படையினர்கள் அடங்கலாக 100இற்கு மேற்பட்டோர் கொலைசெய்யப்பட்டனர். இவ்வாறான சம்பவம் நிகழ்ந்தமைக்காக அதற்கென பயிற்றுவிக்கப்பட்ட விஷேட படையணி அலகு மீது கொலம்பியா குற்றம் சுமத்தியது. இதற்கு மாற்றமாக விசேட அலகுகளின் நேர்மறையான பணி தொடர்பான பதிவினை நோக்குகின்றபோது லிமாவில் இருந்த யப்பானிய தூதுவர் ஆல யத்தினை இடதுசாரிக் (Tupac Amaru Revolutionary Movement - MARTA) கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீளக் கைப்பற்றிக் கொள் வதில் பெருவியப் படைகள் (Peruvian) மிகவும் வெற்றிகரமாகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சம்பவம் நீண்ட காலத்தினை எடுத்திருந்தது. அதாவது இந்தச் சிக்கலினை முடிவிற்குக் கொண்டு வருதற்கான முயற்சியானது அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு முகவர்களின் பரஸ்பர ஒத்துழைப்புடன் நீண்டகாலத்திற்கு நீடித்தது. தூதுவராலயத்தினை மீளக் கைப்பற்றுவதற்கான ஒத்திகைகள் மற்றும் அவதானங்களும் மேற்கொள்ளப்பட்டது. இவ்விரு சம்பவங்களும் இரு அயல்நாடுகளில் இடம்பெற்றவையாகும். இதிலிருந்து எவ்விதம் இவ்விஷேட படையலகு எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளில் வெற்றிகரமானதாகவும் வெற்றிகரமற்றதாகவும் செயற்பட்டிருக் கின்றது என்பதனைப் புரிந்துகொள்ளலாம்.

1972 மூனிச் ஒலிம்பிக் நிகழ்வானது காப்பாற்றுதல் முயற்சி தோல்வியடைந்ததற்கான மற்றுமொரு உதாரணத்தினைக் கொடுக் கின்றது. இதன்போது மேற்கு ஜேர்மனியில் ; (West German) இஸ் ரேலிய விளையாட்டு வீரர்கள் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட துடன் அவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியும் தோல்வி கண்டிருந்தது. இதன் போது மேற்கு ஜேர்மனி பயிற்றப்பட்ட விஷேட எதிர் பயங்கரவாதப் படையின் மீது குற்றம்சுமத்தியிருந்தமை குறிப் பிடத்தக்க தாகும். இதிலிருந்து ஜேர்மனிய அரசாங்கம் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டதுடன் எதிர்காலத்தில் வெற்றி கரமாக உபயோகிக் கத்தக்க ஒரு விஷேட அலகுக்கும் பயிற்சியளித்தது. கடத்தப்பட்ட லுப்தன்சா (Lufthansa) விமானம் சோமாலியாவின் (Somalia) மொகாதிஸ்சுப் (Mogadishu) பகுதிக்குக் கொண்டு செல்லப் பட்டிருந்த போது மேற்கு ஜேர்மனிய அரசாங்கம் அதனைக் கைப் பற்றுவதற்கான அனுமதியினை சோமாலிய அரசாங்கத்திடம் கோரி யிருந்தது. இதன்படி விசேட அலகானது விமானத்தின் மீது திடீர் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டது. ஒரு கடத்தப்பட்ட விமானத்தின் மீதான இவ் வெற்றிகரமான தாக்குதலினை முன்மாதிரி யாகக் கொண்டு மோல் டாவில் (Malta) எகிப்திய கொமோண் டோக்களால் (Commondos) மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. இம்முயற்சியின் விளைவாக விமானிகள் குழுவினர் கொல்லப்பட்ட அதேநேரம் 98 பயணிகளில் 60 பேர் கொல்லப்பட்டனர். 2002 இல் செச்னிய கிளர்ச்சியாளர்களால் திரை யறங்குக்குச் சென்றவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட போது அவர்களைப் காப்பாற்றுவதற்கான ரஷ்யப் படைகள் மேற் கொண்ட முயற்சியும் இழப்புக்களுடன் தோல்வி கண்டது. 1975 இல் டச்சுக் கடற்படை வீரர்கள் தெற்கு மொலோக்கன்ஸ் (South Moluc-cans) கிளர்ச்சிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தடுத்து வைப் பிலிருந்து பணயக் கைதிகளை வெற்றிகரமாகக் காப்பற்றினர். இக் கிளர்ச்சிக் குழு இந்தோனேசியாவில் தமது சொந்த சுதந்திர அரசினை உருவாக்குவதற்கு விரும்புகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் காப்பாற்றுதல் முயற்சியில் உயிரிழப்புக்கள் என்பது சற்றுக் குறைவாகவே உள்ளது. ஐக்கிய அமெரிக்கா அதனது இராணுவப் படைகளின் வேறுபட்ட கிளைகளின் மத்தியில் பலவிதமான விசேட செயற்பாட்டு அலகுகளைக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது. 1980இல் தெஹ்ரானில் உள்ள அமெரிக்க தூதுவர் ஆலயத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டவர்களை விடுவிக்க மேற்கூறிய விசேட அலகுகள் முயற்சியில் ஈடுபட்டது. ஆனாலும் எதிர்பாராததொரு நிகழ்வுகாரணமாக இம் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

பிரிட்டீஸ் எஸ்.ஏ.எஸ். (British SAS) ஆனாது எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு என பரந்தளவிலான பயிற்சியினைப் பெற்றதும் அனுபவத்தினைக் கொண்டதுமான விஷேட இராணுவ அலகாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இவ்வலகு வட அயர்லாந்தின் ஐரிஸ் குடியரசு இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கையில் நீண்டகாலமாக ஈடுபட்டிருந்தது. எனினும் அது எப்போதும் வெற்றிகரமானதொன்றாக இருக்கவில்லை. அதேவேளை கிளர்ச்சியாளர்கள் லண்டனில் உள்ள ஈரானிய தூதுவராலயத்தினை முற்றுகையிட்ட சம்பவம் போன்ற விஷேட சூழ்நிலைகளைக் கையாள்வதற்குக் கூட இவ்வலகு பொறுப்பாக்கப்பட்டிருந்தது. இவ்வலகு சிறந்த பயிற்சி மற்றும் செயற்பாட்டு அனுபவத்தினைக் கொண்டிருந்த போதிலும் அதனது பயணத்தில் அது எப்போதும் வெற்றிகரமானதாக இருக்கவில்லை. இஸ்ரேலிய விஷேட படையலகுகளும் பணயக்கைதிகள் விடயம் மற்றும் அதையொத்த சம்பவங்களில் சிறந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளது.

இந்தவகையில் விஷேட அலகுகளானது அரசாங்கங்களினதும் மக்களினதும் பார்வையில் விரும்பத்தக்க ஒன்றாக உள்ளது. எனினும் சகல சந்தர்ப்பங்களிலும் அவை வெற்றிகரமாக இருக்கும் எனக் கூறமுடியாது. இருந்தபோதிலும் அவர்களினுடைய இருப்பானது பணயக்கைதிகளாகப் பிடிபட்டுள்ளவர்களினைக் காப்பாற்றுதல், வாய்ப்புக்களை மீளக் கைப்பற்றுதல், கிளர்ச்சியாளர்களை பிடித்தல் அல்லது கொல்லுதல் போன்றவற்றுக்கான வாய்ப்பினை அதிகரிக்கச் செய்கின்றது. இதன்படி இவ்வாறான விஷேட அலகுகளின் இருப்பு குறைந்த பட்சம் பயங்கரவாதிகளின் சில தாக்குதல்களைக் கூட அழிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறான விஷேட அலகுகள் இல்லாமலிருப்பது பயங்கரவாதிகளின் அதிகரித்த செயற்பாடுகளுக்கும் பயங்கரவாதிகள் தமது நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்வதற்கும் உதவக் கூடியதாக இருக்கும். எனவேதான் பயங்கரவாதப் பிரச்சினையினை கையாள்வதற்கான ஒரு பொறி முறையாகச் செயற்பட்டு விஷேட எதிர் பயங்கரவாதக் குழுக்கள் பயங்கரத்தின் பரவலினை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

### சர்வதேச ஒத்துழைப்பு

பயங்கரவாதத்தினை தோற்கடிப்பதற்கான சாத்தியமான முயற்சிகளுள் சர்வதேச ஒத்துழைப்பு பிரதானமானதாகும். பயங்கரவாதிகளின் இருத்தல், அவர்களது செயற்பாடுகளுக்கு நேரடியாகவோ அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாகவோ அரசுகள், இனக்குழுக்கள், சமயக் குழுக்கள், சமூகக் குழுக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவுகளே காரணமாக உள்ளன. இவ்விதமான ஆதரவு நிலையினை இல்லாமல் செய்து பயங்கரவாதிகளின் இருப்பினையும் செயலாற்றலினையும் கட்டுப் படுத்துவதற்கான ஒரு ஏற்றவழியாக சர்வதேச ஒத்துழைப்பு உள்ளது. இதற்காக அண்மைக்காலமாக நாடுகள் குரல்கொடுப்பதனை அவ தானிக்கலாம். இதுதொடர்பில் 1986 இல் ஐக்கிய அமெரிக்க அரசுச் செயலாளர் ஜோர்ஜ் ஷூலட்ஸ் தெரிவித்த கருத்து முக்கியமானதாகும். 'எல்லாச் சுதந்திர நாடுகளினதும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படும் ஒரு சர்வதேசப் பிரச்சினை பயங்கரவாதம் என்பதை நாம் அறிவோம். பயங்கரவாதத்தில் ஈடுபடுவோர்களுக்கு இடையே ஒத்துழைப்பு இருப்பதுபோலவே, அதன் நிஜமான அல்லது சாத்தியமான தாக்கிலக் குகளாக இருப்பவர்களுக்கு மத்தியிலும் ஒத்துழைப்பு வேண்டும். ஆகவே மேலும் அதிகமான ஜனநாயக நாடுகளின் மற்றும் எதிர் காலத்திற்கான நமது நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளும் அனைவரின் ஒத்துழைப்பு என்பதே நமது செயல்தந்திரத்தின் முக்கிய கூறு. சில வெற்றிகளை அடைந்திருக்கின்றோம். ஆனால் பல சமயங்களில் வர்த்தக வாய்ப்புக்களை இழத்தல், கொடுமைக்காரர்களுக்கு பயப் படுதல் என்ற பயத்திற்கு நாடுகள் ஆட்படுகின்றன. உண்மையாகவே பயங்கரவாதத்திற்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்ற அவாவுடைய தேசங்கள் எவ்வித மன்றங்களிலேனும் ஒருங்கிணைந்து, தேவையான முயற்சிகளை மேற்கொள்வதற்கான நேரம் வந்துவிட்டது.' என்று கூறினார்.

எனினும் எது பயங்கரவாதம் என தெளிவாக வரையறுக்காத இச்சூழலில் எவ்விதம் அது தொடர்பில் பரந்தளவிலான ஒத் துழைப்பினை ஏற்படுத்துவது என்பது சிரமமாகவே உள்ளது. சில நாடுகளின் பார்வையில் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்படு பவர்கள் சில நாடுகளால் அவ்விதம் அழைக்கப்படுவதில்லை. இந் நிலையில் குறித்த இயக்கத்தினை பயங்கரவாதம் எனப் பிரகடனப் படுத்திய அரசு எவ்விதம் அவ்வியக்கத்தினை விடுதலைப் போராட்ட அமைப்பு எனக்கருதும் அரசிடமிருந்து தமது எதிர் பயங்கரவாத நடவடிக்கைக்கான ஆதரவினைப் பெற்றுக்கொள்வது என்பது கேள்விக்குறியானதாகவே உள்ளது. இருந்தபோதிலும் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதச் செயன்முறையில் சர்வதேச ஒத்துழைப்பு என்பது பயனளிக்கக் கூடிய ஒரு வழிமுறையேயாகும்.

மேலும் சமகால உலகில் பயங்கரவாதம் பாரியதொரு பிரச்சினையாக இருப்பதனால் அதனை வெற்றிகொள்வதற்கு அரசுகளும், அரசுசார்ந்த சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களும், அரசுசாராத பல நிறுவனங்களும் வித்தியாசமான நிகழ்ச்சித் திட்டங்களையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடித்துவருவதனை அவதானிக்கலாம். அந்தவகையில் உலகில் மிக முக்கியமான சர்வதேச எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அமைப்புக்களாக ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய யூனியனும் விளங்குகின்றது. அரசுகள் என்ற ரீதியில் சர்வதேச எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் பிரதான இடத்தினைப் பெறுகின்றது. இவை ஒவ்வொன்றும் எதிர்பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டங்களையும் அணுகுமுறைகளையும் பின்பற்றி வருவதனை அவதானிக்கலாம்.

இவைகள் தவிர விட்டுக்கொடுப்பு, சீர்திருத்தம், இராஜதந்திர அணுகுமுறைகள், பாரியளவிலான அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தடைசெய்தல் என்பவற்றின் மூலமும் பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# பயங்கரவாதத்திற்கு எதிரான பல்தரப்பு பதிலீடுகள்

சமகாலப் பயங்கரவாதத்தின் உலகலாவிய அச்சுறுத்தலைச் சமாளிப் பதற்கு இரு முக்கிய உலகலாவிய சர்வதேச நிறுவனங்கள் காணப் படுகின்றன. அவற்றுள் ஒன்று ஐக்கிய நாடுகள் சபை மற்றையது ஐரோப்பிய யூனியனாகும். இவற்றுள் ஐ.நாவின் எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளை இவ்வத்தியாயத்தில் கண்டுகொள்ளலாம்.

## *ஐக்கிய நாடுகள் சபை*

உலகலாவிய ரீதியான அங்கத்துவத்தினைக் கொண்டதும் உலகலாவிய பாதுகாப்பிற்கு தம்மை அர்ப்பணிப்பதுமான ஐக்கிய நாடுகள் சபை பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச போராட்டத்தில் தனித்துவமான பங்கினைப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது அதனது அங்கத்துவ தேசங்கள் கொண்டிருப்பது போன்ற உள்ளக அரசியல், பொருளாதார மற்றும் பணியகக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றுள்ள சுதந்திர அமைப்பாக உள்ள போதிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான அதனது நிகழ்ச்சித்திட்டத்தில் பல சவால்களை எதிர் கொள்கின்றது. வேறுவகையில் கூறுவதனால் ஐ.நாவின் பயங்கர வாதத்திற்கு எதிரான செயற்பாடுகள் என்பது கடும்போக்கான உள்ளக அரசியல் மயப்படுத்தல், குழப்பகர நிலை என்பவற்றினால் பாதிக்கப் பட்டுள்ளது. இதன்படி ஐ.நா பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்றிறன் வாய்ந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்சித்து வருகின்றது. எனினும் பயங்கரவாதத்தினை எதிர்கொள்வதற்கு அது மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரும் வழிகளில் பல தடைகள் எதிர்கொள்ளப்படுகின்றது. இருந்தபோதிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஐ.நாவின் பங்கினை பலப்படுத்துவதற்கான பல கொள்கைச் சிபார்சு களையும் கொண்டு அது செயற்பட்டுக் கொண்டுவருகின்றது.

### *பயங்கரவாதத்திற்கு எதிரான ஐ. நாவின் பதிலீடுகள்*

### *ஐ.நா பாதுகாப்புச் சபை*

சர்வதேச சமாதானத்தினையும் பாதுகாப்பினையும் கையாளும் அடிப்படையான சர்வதேச தாபனம் என்றவகையில் ஐ.நா பாதுகாப்புச் சபையானது பயங்கரவாதத்திற்கு எதிரான பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றது. மிகவும் பிந்திய தீர்மானம் என்றவகையில் தலிபான் மற்றும் அல்-கைடாவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறிப்பிட முடியும். இத்தீர்மானத்தில் சுயபாது காப்பிற்கான உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளதுடன் பயங்கர வாதம் சர்வதேச பாதுகாப்பிற்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்ற விடயமும் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறே பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதன் ஆதர வாளர்களின் பொறுப்புடைமை பற்றியும் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. மேலும் பயங்கரவாதிகளின் திறன்களைக் கட்டுப்படுத்துவதற்கும், பயங்கரவாதிகளுக்கு உணர்வூட்டும் நபர்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பயங்கரவாத அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக செயற்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்கும், அவர்களுக்கு பாதுகாப்பான இடம் வழங்கப் படுவதை தவிர்ப்பதற்கும் உறுப்பு நாடுகளை வேண்டுகின்றது.

பாதுகாப்புச் சபையின் 1999 ஆம் ஆண்டைய 1267 ஆம் இலக்கத் தீர்மானமானது தலிபான், அல்-கைடா மற்றும் ஒஸாமா பின்லாடன் ஆகியோருக்குச் சொந்தமான அல்லது தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் பிரிவுகளின் பட்டியலைக் கண்காணிக்கும் தடுப்பு நடவடிக் கைகள் குழுவினை அமைத்துள்ளது. இத்தீர்மானமானது பயங்கர வாதிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு சகல அரசுகளும் கடமைப் பட்டுள்ளது எனக் குறிப்பிடுவதுடன் அரசுகளின் ஆள்புலத்திற்குள் நுழைவதனை அல்லது அவற்றின் ஆள்புலத்தின் ஊடாக இடமாறு வதனை தடுக்கின்றது. மேலும் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவுகளையும் தடுக்கின்றது. அவ்வாறே பட்டியலில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர்கள் அல்லது பிரிவுகளுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை இடமாற்றுவதனை மற்றும் விற்பனை செய்வதனையும் தடுக்கின்றது. இதன்படி 2004 ஆம் ஆண்டின் ஜூலை மாத தீர்மான பட்டியலானது தலிபான்களுடன் தொடர்புடைய 144 தனிநபர் களையும் பிரிவுகளையும் உள்ளடக்குவதுடன் அல்-கைடாவுடன் தொடர்புடைய 285அமைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

2001 ஆம் செப்டம்பர் தாக்குதலுக்குப் பின்னர் பாதுகாப்புச் சபையின் 1368 வது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் இத் தீர்மானமானது தனிநபர்களின் இயற்கை உரிமை அல்லது ஐ.நா சா சனத்துடன் தொடர்புபட்டுள்ள கூட்டுச் சுயபாதுகாப்பு என்பவற்றினை அங்கீகரிக்கின்றது. மேலும் 2001 செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்கு தலுக்கு பதிலளிப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான விருப்பத்தினையும் வெளிப்படுத்துகின்றது. மேலும் ஐ.நா சாசனத்திற்குக் கீழான அதன் பொறுப்புடமைக்கு அமைவாக சகல வகையான பயங்கரவாதத்தினையும் தோற்கடிப்பதற்கான அவசி யத்தினையும் வெளிப்படுத்துகின்றது.

2001 ஆம் ஆண்டைய செப்டம்பர் 1373 தீர்மானமானது, பயங் கரவாத நடைமுறைகள், வழி முறைகள், செயற்பாடுகள் ஐ.நாவின் நோக்கங்களுக்கும் மூலக் கொள்கைகளுக்கும் மாறானது எனப் பிரகடனப்படுத்துவதுடன் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், திட்டமிடல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தூண்டுதலும் ஐ.நாவின் நோக்கங்கள் மற்றும் மூலக் கொள்கைக்கு எதிரானது எனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தீர்மானமானது உறுப் பரசுகளை பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளித்தலை கட்டுப்படுத் துவதற்கும் தவிர்ப்பதற்கும் வேண்டுகின்றது. மேலும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் தனிநபர்கள் அல்லது பிரிவுகளுக்கு எவ் வடிவிலான ஆதரவினை வழங்குதலையும் தடுக்கின்றது. ஐ.நாவின் உறுப்பரசுகளானது பயங்கரவாதச் செயல்கள் நிதியளித்தல் மற்றும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய நிதிகள் மற்றும் சொத்துக்களை குற்றவியல்படுத்துவதற்கும் கடமைப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதனையும் தவிர்க்கின்றது. அதாவது பயங்கர வாதிகளுக்கு நிதியளித்தல், திட்டமிடல், ஆதரவளித்தல் அல்லது பயங்கரவாதச் செயல்களுக்கு அர்ப்பணித்தல் அல்லது பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதல் என்பவற்றைத் தவிர்க்க வேண்டுகின்றது. பயங்கரவாத எதிர் அணியில் உள்ள சர்வதேச சமூகம் மற்றும் மற்றைய அர சாங்கங்களின் ஒத்துழைப்புடன் பயங்கரவாதக் குழுக்கள் அல்லது இயக்கங்கள் இருப்பினையும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய மாநாடுகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றையும் இத்தீர்மானம் தடுக்கின்றது.

ஐ.நாவின் பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தலை தடுக்கும் தீர்மான மானது தலிபான், ஒஸாமா பின் லேடன், 1267 தீர்மானத்திற்கு இணங்க வடிவமைக்கப்பட்ட அல்-கைடா ஆதரவு பெற்ற அமைப்புக்களை மட்டும் உள்ளடக்கியதாகும். எனினும் ஐ.நா ஒரு பொதுவான பயங்கர வாதப் பட்டியலைப் பேணவில்லை. இதனாலேயேதான் ஹமாஸ் போன்ற அமைப்புக்களுக்கு நிதி மற்றும் பாதுகாப்பு வழங்குதல் என்பது ஐ.நாவினைப் பொறுத்தவரையில் சட்ட ரீதியாக நோக்கப் படுகின்றது.

### *எதிர் பயங்கரவாதக் குழு* (Counter Terrorism Committee – CTC)

ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1373 தீர்மானத்திற்கு இணங்க இக்குழு ஏற்படுத்தப்பட்டது. இது பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பரசுகளையும் கொண்டுள்ள ஒரு குழுவாகும். அத்துடன் 1373 தீர்மானத்தினை அரசுகள் அமுல்படுத்தும் ஆற்றினைக் கண்காணிப்பதற்குப் பொறுப் பாக்கப்பட்டுள்ளதுடன் பயங்கரவாதத்துடன் தொடர்பான மாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்து உறுப்பரசுகளை ஒரு ஏற்றுக் கொள்ளத்தக்க நிலைக்குக் கொண்டுவருவதற்கும் பொறுப்பாக்கப் பட்டுள்ளது. இதன்படி ஏதாவது பிரச்சினைகளைப் போக்குவதற்கான அரசுகளின் நடவடிக்கை தொடர்பில் சட்ட, நிதி அல்லது ஆளணி உதவிகளை வழங்க இக்குழு வேண்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராக அரசுகள் எடுத்து வரும் குறித்த நடவடிக்கைகள் குறித்து பயங்கரவாத எதிர்க் குழுவிற்கு அரசுகள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். பின்வரும் ஏழு பகுதிகளின் முன்னேற்றங்களை உள்ளடக்கியதாகவே இவ்வறிக்கை சமர்ப்பிக் கப்பட வேண்டும். அவ்வேழு பகுதிகளும் பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சட்டவாக்கம்
2. நிதிக் கட்டுப்பாடு
3. சொத்துக் கட்டுப்பாடு
4. தீர்வை
5. குடியேறல்
6. சட்ட அமுலாக்கம்
7. ஆயுதப்பாவனை

அவ்வாறே வரையறுக்கப்பட்ட பின்வரும் வினாக்களையும் உள்ளடக்குகின்றது.

- பயங்கரவாதச் செயற்பாடுகளின் கடினத் தன்மையினை பிரதிபலிக்கத்தக்க தண்டனைகளை உறுதிப்படுத்துவதற்கு எவ்வாறான படிமுறைகள் எடுக்கப்படுகின்றது?
- எவ்வாறான சட்டங்கள் பயங்கரவாதக் குழுக்களின் ஆட் சேர்ப்பு மற்றும் பயங்கரவாதிகளின் ஆயுத வழங்கலை நாடுகள் தடுக்கின்றது?
- பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பான இடங்களை வழங்குவதை தவிர்ப்பதற்கு எவ்வாறான சட்டங்கள் நடைமுறையில் உள்ளது?
- பயங்கரவாதிகளின் சொத்துக்களை முடக்குவதற்கான எவ் வாறான சட்டங்கள் காணப்படுகின்றன?

2004 ஜூன் 30 ஆம் திகதியளவில் ஐ.நாவின் 71 உறுப்பரசுகள் எதிர் பயங்கரவாதக் குழுவிற்கான தமது அறிக்கையினைச் சமர்ப்பிக்க வில்லை. இனால் 2004 ஜூலையில் பாதுகாப்புச் சபையானது உறுப் பரசுகளின் தேவை உதவிகளை மதிப்பிடுவதற்கான அதனது வேலையினை துரிதப்படுத்துமாறு எதிர் பயங்கரவாதக் குழுவினை ஒரு தலைவர் அறிக்கையினை வெளியிட்டதன் மூலம் வேண்டிக் கொண்டது. மேலும் 1373 தீர்மானத்தினை அமுல்படுத்துவதில் உள்ள அரசுகளின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கும் அடையாளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கும் குழுவினை வேண்டிக்கொண்டது. சிரமங்களைக் கொண்டுள்ள அரசுகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கான விதிகளுக்கு அனுசரணை வழங்குவதற்கும் வேண்டிக் கொண்டது.

இந்தவகையில் எதிர் பயங்கரவாதக் குழுவானது உறுப்பரசுகளுக்கு உதவிகளை வழங்குகின்றது. எனினும் இது ஐ.நாவின் ஒரு கொள்கை அமுலாக்கல் அல்ல என்பதுடன் எதிர் பயங்கரவாத நெறிமுறைகளை மீறும் அரசுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும் நிறுவனமும் அல்ல. இருந்தபோதிலும் எதிர் பயங்கரவாதக் குழுவானது அப்பணியினை மேற்கொள்வது குறித்த கலந்துரையாடல்கள் தற்போது ஐ.நாவில் இடம்பெற்ற வண்ணம் உள்ளது.

### *பயங்கரவாதம் தொடர்பான சர்வதேச உடன்பாடுகள்*

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கு சர்வதேச சட்டத் தன்மையினை வழங்குவதற்கான முயற்சியில் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி தற்சமயம் சுமார் 12 சர்வதேச உடன்படிக்கைகள் பயங்கரவாதம் தொடர்பிலான செயற்பாடுகளை குற்றவியல்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. இவ்வுடன்படிக்கைகள் விமானங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு எதிரான குற்றங்கள், சர்வதேச ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கு எதிரான தாக்குதல்கள், தடுப்புக்காவலில் வைத்தல், அணுவாயுதப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துதல், கப்பல்கள் மற்றும் கடற்கரைக் களியாட்ட இடங்கள் மீதான தாக்குதல்கள், இறப்பர் வெடிபொருட்களை தவறாக உபயோகித்தல், குண்டுத்தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்காக நிதி திரட்டுதல் போன்ற முக்கிய செயல்களை குற்றவியல் செயல்களாக அடையாளப்படுத்துகின்றன. 1963 தொடக்கம் 1999 வரை இடம்பெற்ற பேச்சுக்களின் விளைவாக உருவான உடன்படிக்கையானது ஒரு குறிப்பிட்ட வகையான பயங்கரவாதிகளின் வன்முறையை உடன் படிக்கைக்குக் கீழான ஒரு குற்றமாக வரையறுக்கின்றது. அத்துடன் அரசுகளின் உள்நாட்டுச் சட்டங்களில் உள்ள செயற்பாடுகளை தண்டனைக்குரிய தாக்குவதற்கான கையொப்பப் பட்டியலையும் உடன்படிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கின்றது. மேலும் உடன்படிக்கையை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒரு கடமைப் பாட்டையும் உருவாக்கின்றது. எதிர் பயங்கரவாதக் குழுவானது உடன்படிக்கையின் தரப்புகளாவதற்கு அரசுகளைத் தூண்டுவதற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளதுடன் தேசிய சட்ட வாக்கங்களில் அவற்றை அமுல்படுத்துவதற்கும் அரசுகளைத் தூண்டுகின்றது.

இந்தவகையில் மிகவும் அண்மித்த உடன்படிக்கையாக 1999 ஆம் ஆண்டின் பயங்கரவாதிகளின் நிதிகளை முடக்குவதற்கான சர்வதேச உடன்படிக்கை காணப்படுகின்றது. இவ்வுடன்படிக்கை யானது அதில் கையொப்பமிட்டுள்ள அரசுகள் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியுதவியளித்தலானது ஒரு குற்றவியல் தவறாகக் கொள்ளப்படுகின்றது. இதில் கையொப்பமிட்ட ஒவ்வொரு அரசும் பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்படும் நிதிகளை அடையாளப் படுத்தல், துப்பறிதல், நிதிப் பரிமாற்றத்தை உறைய வைத்தல், பயங்கரவாத நோக்கங்களுக்காக நிதி ஒதுக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலில் சம்பந்தப்படு பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், அது தொடர்பான பரிசோதனைகளில் மற்றைய அரசு களுடன் சேர்ந்து ஈடுபடல், உள் நாட்டளவில் பயங்கரவாதிகளின் நிதி மூலங்களைத் தடை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என வேண்டப்படுகின்றது.

இவ்வுடன்படிக்கையின் மூலம் முதன் முறையாக பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியுதவியளித்தல் சர்வதேச சட்டத்தினால் ஒரு குற்றமாகக் கருதப்படும் போக்கு ஏற்பட்டது. 2004 மார்ச்சில் 132 நாடுகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் அவற்றுள் 112 நாடுகள் அதனது செயல்நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது.

### *போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐ.நா அலுவலகம்/ பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு*

வியன்னாவினைத் தளமாகக் கொண்ட போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐ. நா அலுவலகத்தின் ஒரு பகுதியே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவாகும் (Terrorism Prevention Branch). இது பயங்கரவாத எதிர் நடவடிக்கை அரங்கில் உள்ள ஐ. நாவின் உறுப்பரசுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட, தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதுடன் எதிர் பயங்கர வாதக் குழுவுடன் (Counter-Terrorism Committed) இணைந்து செயற் படுகின்றது. இது 1999 இல் உருவாக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவானது போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐ. நா அலுவலகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான வரைச் சட்டகம் என்ற ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகலாவிய நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சித் திட்ட மானது,

- உள்நாட்டுச் சட்டங்களை மீள்வரைவு செய்வதுடன் இயலுமான உத்தேச சட்டங்களை இயற்றுவதற்கான ஆலோசனைகளையும் வழங்குகின்றது.
- புதிய சட்டம் தொடர்பான தேசிய நிர்வாகங்களுக்கான பயிற் சியினை வழங்குவதுடன் அனுசரணையும் வழங்குகின்றது.
- பயங்கரவாதத்திற்கு எதிரான புதிய சட்டங்களின் அமுலாக்கம் தொடர்பான ஆழமான உதவிகளை வழங்குகின்றது.
- தேவைப்படுகின்ற போது வழங்கத்தக்க முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட நிபுணர்கள் தொகுதியினைப் பேணுகின்றது.
- பயங்கரவாதம் தொடர்பான சர்வதேச விதிகளை அமுல்படுத்து வதற்கும் சட்டங்களின் உருவாக்கத்திற்கும் வழிவகுக் கின்றது.

## ஐ.நாவின் எதிர் பயங்கரவாத முயற்சிகளுக்குள்ள தடைகள்

பயங்கரவாதம் தொடர்பிலான ஐ.நாவின் தீர்மானங்கள், மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்றிறன் வாய்ந்ததாக மாற்றும் செயன்முறையின் போது ஐ.நா பல சவால்களை எதிர்கொள்கின்றது. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

### தெளிவானதொரு பார்வையின்மை

ஐ.நாவிற்குள்ளும் சர்வதேச சமூகத்திற்குள்ளும் உள்ள விவாதமானது பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச யுத்தத்தில் ஐக்கிய நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை எவ்வாறான பங்கினை வகிக்க வேண்டும் என்பது தொடர்பாக முரண்பட்ட நிலையினைத் தோற்றுவித்துள்ளது. ஐ.நாவின் அரசியல் ஆய்வாளர் எட்வேர்ட் லக் (Edward Luck) இனைப் பொறுத்தவரையில் ஐக்கிய நாடுகள் சபை பயங்கரவாதத் தடுப்பு முறைமையானது பரந்தளவிலான மூன்று தந்திரோபாயத் தெரிவுகளைக் கொண்டிருக்கின்றது என விபரிக்கின்றார் அவை:

- பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நிபந்தனையற்ற விதத்தில் இணைத்துக் கொள்ளல் மற்றும் நிர்வாகத்தில் ஒரு பிரதான முன்னுரிமையாக அதைக் கொண்டுவரல்.
- ஒரு பக்கவிலக்காக குழப்பம் தொடர்கின்றது. ஆனால் உலக ளாவிய எதிர் பயங்கரவாத முயற்சியில் உள்ள பயனுள்ள செயற்பாட்டாளர்கள் வெளியில் இருக்க விரும்புகின்றமை.
- பயங்கரவாத்திற்கு எதிரான யுத்தம், நிறுவனத்தினது மரபு ரீதியான முன்னுரிமைகள் மற்றும் போட்டிகளிலிருந்து நிறுவனம் தூரத்தில் உள்ளது.

எனினும் செப்டம்பர் 11 இற்குப் பின்னரான சூழலில் பயங்கர வாதத்திற்கு எதிரான பல போர்களில் ஐ.நா தனது பங்கினை அதி கரிப்பதற்கு விரும்பியது என லக் வாதிடுகின்றார். 2003 ஆகஸ்டில் பக்தாத்தில் உள்ள ஐ.நா தலைமைக் காரியாலயத்திற்கு எதிராக இடம்பெற்ற கார்க் குண்டுத்தாக்குதல் எதிர் பயங்கரவாத முன்னணி தொடர்பாக ஐ.நா கொண்டிருந்த தீர்மானத்தினை பலவீனப்படுத்தியது. இத்தாக்குதலில் ஈராக்குக்கான செயலாளர் நாயகத்தின் விஷேட பிரதிநிதி சேர்ஜியோ வீரா டீ மெலோ (Sergio Vieira de Mello) உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் பயங்கரவாதம் தொடர்பான கொள்கைச் செயற்பாட்டுக் குழுவானது, பயங்கரவாதம் அதற்கான காரணம் எதுவாயினும், அது யாருடைய பெயரினை எடுத்துக் கொண்டாலும் ஒரு தெளிவான அடிப்படையைக் கொண்ட செயல்கள் அடங்கிய செயற்றிட்டம் ஒன்றினை வகுக்க வேண்டும் என வாதிட் டதுடன் இது தொடர்பில் உலகளாவிய கண்டத்தினை இயலுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல எனவும் வாதிட்டது. இதன்படி இக்குழுவானது ஐ.நா குறிப்பாகப் பங்களிப்புச் செய்யக் கூடிய மூன்று பகுதிகளை அடையாளப்படுத்தியது அவை:

- செய்ய வேண்டாமென புத்தி கூறுதல்: பயங்கரவாதிகளுக்கு உதவியளிக்க வேண்டாமென அரசுகள், குழுக்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு அறிவுறுத்துதல்.
- நிராகரித்தல்: பயங்கரவாதிகளுக்கு பணம், இடம் மற்றும் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வழிமுறைகளை நிராகரித்தல் தொடர்பான உறுப்பரசுகளின் முயற்சிகளுக்கு உதவியளித்தல்.
- ஒத்துழைப்பு: உலகலாவிய மற்றும் பிராந்திய மட்டங்களில் எதிர் பயங்கரவாத ஒத்துழைப்புகளுக்கு அனுசரணை வழங்கு வதற்காக ஐ.நாவின் அதிகாரத்தைப் பாவித்தல்.

இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயம் ஐ.நா தொடர்பில் ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ள தெரிவு பற்றியதாகும். அதாவது எதிர் பயங்கரவாதப் போராட்டத்தில் ஐ.நாவின் பங்கு பற்றிய ஐக்கிய அமெரிக்காவின் பிரதான ஒதுக்கீடுகளில் ஒன்று பயங்கரவாதத்தை அழிப்பதற்கு, அதில் ஈடுபடுபவர்களைத் தண்டிப் பதற்கு, அதனைத் தவிர்ப்பதற்கான இராணுவப் பலத்தினை உபயோகிப் பதற்கான சர்வதேச உறுப்பு நாடுகளின் விருப்பமின்மையைப் பற்றிய தாக இருந்தது. பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச சட்ட மற்றும் சட்டத் துறை நெறிமுறைகளை அமைப்பதன் அநுகூலத்தினை ஐக்கிய அமெரிக்கா அங்கீகரித்த அதேவேளை எதிர்பயங்கரவாத முன்னணி தொடர்பான மற்றைய முக்கிய கருவியாக இராணுவச் செயற்பாட்டின் பெறுமானத்தை அது ஏற்றுக்கொள்கின்றது.

### *பயங்கரவாதம் தொடர்பிலான தெளிவான வரைவிலக்கணம் இன்மை*

பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு ஐக்கிய முன்னணியினை ஏற் படுத்துவதற்கு தடையாகவுள்ள மற்றுமொரு காரணி பயங்கரவாதம் தொடர்பாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணங்கள் காணப்படாமையாகும். பயங்கரவாதிகளைப் பற்றிய பார்வையில் காணப்படும் ஒரு பிரச்சினை யாதெனில், ஒருவரின் பார்வையில் பயங்கரவாதியாகத் தெரிபவன் மற்றொருவரின் பார்வையில் விடுதலைப் போராளியாகக் காட்சியளிப்பதாகும். இதன் காரணமாக ஒரு அரசு பயங்கரவாதி என அடையாளப்படுத்தும் ஒரு அமைப்பு மற்றுமொரு அரசின் பார்வையில் சுதந்திரப் போராளி இயக்கமாக பார்க்கப்படும் போக்கு சமகாலத்தில் நிலவுகின்றது. இவ்வாறான நிலை ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் பயங்கரவாதம் தொடர்பில் திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு பொதுவான வரைவிலக்கணம் காணப்படாமையாகும். இதன் விளைவாக பயங்கரவாதக் குழுக்களை அடையாளம் காணத்தக்க சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கத்தக்க பொறிமுறை ஒன்று இல்லாமல் செய்வதற்கு வழிவிட்டுள்ளது.

பொதுவாக பயங்கரவாதம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் இரு விதமான கருத்து நிலைகளைக் கொண்டவர்கள் உள்ளனர். அவர்களுள் ஒரு குழுவினர் பயங்கரவாதத்திற்கான காரணங்களைக் கண்டறிவதுடன் ஐ.நா செயற்படுதல் வேண்டும் எனச் சிந்திப்பவர்களாவர். மற்றைய பகுதியினர் பயங்கரவாதத்தின் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளின் சட்டத்தன்மையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கருதுபவர்கள்.

1994 ஒக்டோபரில் ஐ.நா பாதுகாப்புச் சபை 1269 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இத்தீர்மானம் எங்கேயேனும், எவராலும் பயங்கரவாத நடைமுறைகள், முறைமைகள் மற்றும் சகல வடிவங்களையும் நியாயப்படுத்த முடியாத குற்றச் செயல்களைக் கண்டிக்கின்றது. அவ்வாறே பயங்கரவாதிகளின் உந்துதல்கள், பிரச்சார வடிவங்கள் சகலதையும் இத்தீர்மானம் கண்டிக்கின்றது.

### *அரசியல் பிரிவுகள்*

ஐ.நாவானது அரசியல் பிரிவுகள் மற்றும் பகுதிகளினால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலை ஒரு வெற்றிகரமான எதிர் பயங்கரவாத தலைமைத்து வத்தினை அடைவதற்கான அதன் முயற்சியினை மோசமாக்கியுள்ளது. குறிப்பாக முஸ்லிம் உலகு நோக்கிய மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமின் பயங்கரவாதம் தொடர்பான நிலைப்பாடு மற்றும் ஐ.நாவில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நோக்கியதாக உள்ள அரபு அல்லது முஸ்லிம் முகாமின் இருப்பானது பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு வெற்றிகரமான உலகளாவிய தந்திரோபாயத்தின் தோல்வியின் தொடர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

பல தசாப்தங்களாக ஐ.நாவின் பல்வேறு உறுப்புக்களும் முகவர்களும் பயங்கரவாதத்தினை தூண்டும் இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீன வன்முறையை அங்கீகரிப்பதை மறுத்துவந்திருக்கின்றது என்று இஸ்ரேலிய சார்ப்பு எழுத்தாளர்கள் வாதிக்கின்றனர். எனினும் கள நிலை அதற்கு மாற்றமாகவே அமைந்துள்ளது. அதாவது அண்மைக் காலமாக இஸ்ரேலிய அரசு மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து ஐ.நா வெற்றிகரமான எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தவறியுள்ளது. இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு விடயம் சிவிலியன்களுக்கு எதிரான சகல வன்முறைகளையும் உள்ளடக்குவதே பயங்கரவாதம் என்ற வரைவிலக்கணத்திற்கு ஆதரவாக ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியன கருதுவதன் மூலம் பலஸ்தீன எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அவை பயங்கரவாத முத்திரை குத்த விளைகின்றன. எனினும் இஸ்ரேலிய பயங்கரவாத நடவடிக்கைகளை அந்நாடுகள் மேற்கூறிய தமது வரைவிலக்கணத்திற்கு அப்பால் நின்று நோக்குவதுடன் அதன் நடவடிக்கைகளை தற்காப்பு அல்லது பலஸ்தீன நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் என வாதிக்கின்றது. இந்நிலையில் 56 உறுப்பரசுகளைக் கொண்ட இஸ்லாமிய மாநாட்டு அமைப்பானது (Islamic Conference Organization) ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பவற்றின் வரைவிலக்கணங்களுக்குட்பட்ட பயங்கரவாத குழுக்களிலிருந்து தேசிய விடுதலை இயக்கங்களும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான புரட்சி அமைப்புக்களும் இப்பட்டியல்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என வாதிக்கின்றது.

பொதுவாக பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய எதிர் - எதிர் தாக்குதல் நடவடிக்கைகளானது பயங்கரவாதம் தொடர்பிலான எதிர் நடவடிக்கைகளை எடுப்பதை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது. அதாவது உலகலாவிய அரசியல் சூழ்நிலைகளானது எதிர் பயங்கரவாத நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளது. இது ஐ.நாவின் எதிர் பயங்கரவாத நடவடிக்கை தொடர்பில் ஏற்படும் பிரதான தடையாக உள்ளது.

இந்தவகையில் அரசியல் பிரிவுகள் மற்றும் கருத்தியல் வேறு பாடுகள் என்பன ஐ.நாவின் இரட்டைவேடப் பிரயோகத்திற்கு வழி விட்டுள்ளது. ரஷ்ய விஞ்ஞான அகடமியின் சேர்ஜீ ரோக்கொவ்; (Segey Rogov) என்பவர் கொலம்பியப் பல்கலைக் கழகப் பேரவையில், ஐ.நாவின் பயங்கரவாதத்திற்கான பதிலீடுகள் தொடர்பாகக் குறிப்பிடும் போது, '........சுயநிர்ணய உரிமைகளுக்கு வழிவகுக்கும் விடுதலைப் போராளிகள் தொடர்பில் இத்தகைய இரட்டைவேடம் காணப் படுகின்றது. பொஸ்னியர்கள் மற்றும் பலஸ்தீனியர்கள் தொடர்பில் இது அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அதேவேளை கொசோவோக்கள், செச்னியர்கள், தமிழர்கள் மற்றும் குர்தீஷ்க்கள் தொடர்பில் இது அங்கீகரிக்கப்படவில்லை.' என்கிறார்.

## *வள ஒதுக்கீடு*

பயங்கரவாதம் தொடர்பான விடயமானது ஐ.நாவின் பல்வேறு உறுப்புக்கள், முகவர்கள் மற்றும் அலுவலகங்களால் கையாளப் படுகின்றது. இதன்படி ஐ.நா பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, போதைப்பொருள் கட்டுப்பாட்டு மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகம், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பு, சர்வதேச கடற்போக்குவரத்து அமைப்பு, ஆயுதக்களைவு விவகாரத்திற்கான ஐ.நா திணைக்களம், சர்வதேச அணுச்சக்தி முகவர் நிலையம், இர சாயன ஆயுதங்களைத் தடுப்பதற்கான அமைப்பு மற்றும் உலகலாவிய தபால் சங்கம் போன்றனவற்றால் பயங்கரவாதம் தொடர்பான விடயங்கள் எடுத்தாளப்படுகின்றது.

ஒரு வகையில் இவை பயங்கரவாத அச்சுறுத்தல் பற்றிப் பேசு வதற்கான ஐ.நாவின் விசேட முகவர்களாக அமைக்கப்பட்டுள்ளது. மற்றொருவகையில் கூறுவதாயின் பயங்கரவாத எதிர்ச் செயற்பாடு களுக்கான தனியான கவனஈர்ப்பு ஐ.நா முறைமையினுள் இல் லாமைக்கும் வழிவிட்டுள்ளது. இதன்படி ஐ.நாவினுள் ஒரு தனியான எதிர் பயங்கரவாத முகவரையோ, ஐ.நா தலைமையகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் தொடர்பாக முழு நேரச் செயற்பாட்டினை மேற் கொள்வதற்கெனப் பொறுப்பாக்கப்பட்டுள்ள பணியாள் உறுப்பி னர்களோ காணப்படுவதில்லை.

அண்மைய ஆண்டுகளில் ஐ.நா அதனது அல்பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டத்தினை பலப்படுத்தியிருக்கின்றது. பயங்கரவாதத் திற்கு எதிரான ஐ.நாவின் அண்மைய மிகவும் முக்கிய முயற்சிகளாக, பயங்கரவாதிகளின் நிதி திரட்டலை குற்றமாக்கல், உறுப்பரசுகள் அல் பயங்கரவாதச் சட்டங்களை இயற்றுவதற்கும் அவற்றை அமுல் படுத்துவதற்கும் தேவையான வளங்களை வழங்குதல் என்பன காணப்படுகின்றது. அல் கைதாவுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய அமைப்புக்கள் குறித்த உலக அமைப்பின் பட்டியலானது உறுப்பர சுகளுக்கான ஒரு நேர்நிலை மாதிரியாக சொத்துக்களை முடக்குவதை வேண்டுகின்றது.

எனினும் எதிர் பயங்கரவாத அணி தொடர்பில் ஐ.நா கொண்டி ருக்கும் பல பலவீனங்கள் சர்வதேச சமூகத்தில், அதாவது அல் பயங்கரவாதப் படையின் மிகவும் வெற்றிகரமான ஆற்றலைப் பலவீனப்படுத்தியுள்ளது. பொதுவாக உலக அமைப்பானது அமெரிக்க எதிர், இஸ்ரேலிய எதிர் கருத்துக்களை வெற்றிகொள்வதில் தோல் வியினைக் கண்டிருப்பதுடன் பலஸ்தீன சிவிலியன்கள், காஸ்மீர் சிவிலியன்கள், பொஸ்னியர்கள், செச்னியர்கள் போன்றோருக்கு எதிரான அரச பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்துவதிலும் தோல் வியினைத் தழுவியிருக்கின்றது. பலஸ்தீன் - இஸ்ரேல் தொடர்பில் ஐ.நா இஸ்ரேலினை அங்கீகரித்ததன் மூலம் அவர்களது அரசாட்சிக் கான சட்டத்தன்மையினை உறுதிப்படுத்தியது. இதன் மூலம் இஸ்ரேல் அரச அனுசரனை பெற்ற பயங்கரவாதத்தினை நடைமுறைப்படுத்தும் வலிமையினைப் பெற்றுக்கொண்டது. இது பலஸ்தீன சிவிலியன்கள் தொடர்பில் எதிர்மறையான பல விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் ஐ.நா இஸ்ரேலின் அரச பயங்கரவாதம் தொடர்பில் எந்த தாக்கமான நடவடிக்கையினையும் எடுக்கவில்லை.

பொதுவாக பயங்கரவாதம் தொடர்பில் உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான வரைவிலக்கணம் காணப்படா துள்ள போதிலும் அல் கைதாசார்பின் பயங்கரவாத அமைப்புக்கள் தொடர்பில் ஐ.நா விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் பயங்கரவாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்களின் செயற்பாடுகளைப் புறக்கணிப்பதற்கும் கண்டிப் பதற்கும் பணியாற்றுதல் போன்றவற்றின் மூலம் பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு ஐ.நா தன்னால் ஆன முயற்சியினை மேற் கொண்டுவருகின்றது.

சில அவதானிகளின் கருத்துப்படி ஐ.நா அதனது அரசியல் பிரிவுகளை ஒரு போதும் வெற்றிகொள்ள இயலாத அளவுக்கு நெருக் கடிகளை எதிர்நோக்கியுள்ளது. எனவேதான் அதனது பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் அரசியலுக்கு அப்பால் சென்று அதனது கவனம் குவிக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றனர்.

பயங்கரவாதத்துடன் சண்டையிடுவது தொடர்பில் ஐ.நாவின் பங்கு தொடர்பாக, தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச கற்கைகள் நிலையத்தினைச் சேர்ந்த அந்தோனி கோர்ட்ஸ்மேன் ஆலோசனை கூறும்போது, ஆகாய, வீதி, புகையிரத, துறைமுகப் பாதுகாப்பு, கொள்கலக் கப்பல் மற்றும் மாலுமிகளின் பாதுகாப்பு போன்றன தொடர்பில் பொதுவான பாதுகாப்புத் தராதரங்களின் உருவாக்கத்தின் மீது ஐ.நா கவனம் செலுத்த வேண்டும் என்கிறார். ஐ.நாவின் பங்கு தொடர்பில் அவரது பரிந்துரைகளினூடாக அவர் அவதானிக்க வருவது பிரதான கணினி வாய்ப்புக்களின் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு விதிகள், பொது வசதிகள், மற்றும் அரசாங்கக் கட்டிடங்கள் தொடர் பான உலகலாவிய தராதரங்களாகும். எவ்வாறாயினும் ஐ.நா தனது எதிர் பயங்கரவாத நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மேலதிக வளங்களை ஒதுக்குவதன் மூலம் தனது நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# பயங்கரவாதத்திற்கான இன மற்றும் தேசிய அடிப்படைகள்

சமகாலத்தில் பயங்கரவாதத்தின் பிரபல்யமான தோற்றமாக விளங்குவது சமயரீதியாகத் தூண்டப்பட்ட தற்கொலைத் தாக்குதல் களாகும். சமகால உலகில் இன மற்றும் தேசிய சமூகங்களில் உடன்பாடின்மை மற்றும் கிளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அதிகமான வன்முறைகள் எழுச்சியடைகின்றன. அண்மைய ஆண்டு களில் உலகில் பயங்கரவாதத்தின் மட்டத்தினை அதிகரிப்பதற்கான அடிப்படைக் காரணமாக இன மற்றும் தேசியவாத வன்முறைகள் காணப்பட்டன. இனக்குழுக்கள் சுயாட்சி அல்லது சுதந்திர அல்லது உரிமைகளைப் பெறவிரும்பும் போது இன ரீதியான முரண்பாடுகள் என்பது அதிகரிக்கின்றது. பொதுவாக பன்மைத்துவ சமூகங்களில் இன முரண்பாடுகள் என்பது பொதுவானதொரு அம்சமாக வளர்ந் துள்ளது. இவ்வாறான நிலைகளில் இனக்குழுக்கள் தம்மை இன அல்லது மரபுரீதியாக வரையறுப்பதைக் காணலாம். சமகாலத்தில் இன முரண்பாடுகள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படுவது மட்டுமன்றி அதனது நீடிப்புக் காலமும் அதிகமாகவுள்ளது. இதனால் இனக்கிளர்ச்சியாளர்கள் மற்றும் அதனோடு தொடர்பான வன்முறைகள் என்பது உறுதியானதாகவுள்ளது.

மரபுரீதியாக வன்முறைக்கான உணர்வினை ஏற்படுத்தும் இனத் தேசிய வாதம் என்பது முதலாம் நூற்றாண்டு காலத்திற்கு பழமையான ஒன்றல்ல. எனினும் அது முழுமையாக புதுமையான ஒன்றுமல்ல. இங்கிலாந்து முடிக்கு எதிரான வேல்ஸ், அயர்லாந்து, ஸ்கொட்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றின் போராட்டங்களில் தேசிய உணர்வின் வெளிப்பாடு காணப்பட்டது. பாரசீகர்கள், துருக்கியர்கள் மற்றும் அராபியர்கள் எப்பொழுதும் பல்வேறு அரசுகளுடன் சமாதான சகவாழ்வுடன் இருக்கவில்லை. முதல் ஆயிரம் ஆண்டுகளில் காணப்பட்ட அதிகமான முரண்பாடுகள் தேசியத் தன்மையிலும் பார்க்க சமயத் தளத்தினையே கொண்டிருந்தது. அல்லது பல அரசர்கள், இளவரசர்கள், சுல்தான்கள் மற்றும் இதர முக்கிய நபர்களுக்கிடையிலான போராட்டங்களாகவே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தது. 18ம் நூற்றாண்டு காலத்தில் தேசியவாதம் என்பது ஒரு முக்கிய சக்தியாக வளர்ந்திருந்தது. தேசியம் பற்றிய எண்ணக்கருவானது தேசியவாதத்தினூடாக எழுச்சியடைந்தது. அமெரிக்கப் புரட்சியும் பிரான்சியப் புரட்சியும் இத்தேசியவாத உணர்வின் வளர்ச்சிக்கும் பிரபல்யமான மக்கள் ஆட்சேர்ப்புக்கும் வழிவிட்டது. இதனால் மக்கள் தம்மை ஒரு தேசமாக அடையாளப் படுத்தும் நிலை உருவானது. இதன் விளைவாக அரசியல் வன்முறை தேசியவாத உணர்வுகளில் வேர் கொண்டது. அவ்வாறே சில அரசியல் சுயாட்சி அல்லது சுதந்திரத்தினை அடைவதற்கான தேசியவாதக் குழுக்களுக்கான ஒரு சாத்தியமான கருவியாக பயங்கரவாதத்தின் நடைமுறை என்பது மாறவந்தது. ஆனால் உள்நாட்டு சுயாட்சி என்பது ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. இவ்வாறான புதிய தேசியவாத உணர்வு என்பது தனித்துவமான ஒரு மொழியினை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. எனினும் தேசிய உணர்வானது கலாசார அல்லது அரசியல் வரலாறு, இன வேறுபாடு குறித்த பார்வைகளையும் உள்ளடக்கியதாகும். உதாரணமாக டென்மார்க், நோர்வே, சுவீடன் என்பன அவர்களது வரலாற்றினை அடிப்படையாகக் கொண்ட தனித்துவ அடையாளங்களைக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. அவர்களது மொழியானது ஒத்ததன்மையுடையதாக உள்ளதுடன் அவர்களுடைய இனத்துவப் பின்னணிகளும் பெரியளவிலான வேறு பாட்டினைக் கொண்டிருப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீனத்துவமும் இன முரண்பாடும்

நவீனத்துவத்துவத்தினைக் கொண்டே தேசியவாதமானது மிகக் கடுமையாகத் தோற்றம் பெற்றிருக்கின்றது. நடைமுறையில் ஒரு இனத்துவக் குழுவினை அல்லது தேசியவாதக் குழுவினை எது அமைக்கின்றது என்பது பற்றிய தெளிவானதும் துல்லியமானதுமான வரைவிலக்கணத்தினைப் பெறுவதற்கு இது பயனுடையதாகவுள்ளது. எனினும் இது தொடர்பில் துல்லியமான வரையறை என்பது சாத்திய மானதல்ல. உண்மையில் இனத்துவம் அல்லது தேசிய அடை யாளத்துவம் என்பது பிரச்சினையில் உள்ள குழுக்களால் சுயமாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. ஒரு குழு தன்னை ஒரு தனித்து வமானதாக அடையாளப்படுத்துவதற்கு இவையனைத்தும் அவசிய மாகின்றது. ஒரு குழுவானது அது இன அல்லது தேசிய வேறுபாடுகள் காரணமாக இயலாமைகளை எதிர்கொள்வதாகக் கருதினால் பயங்கரவாதத்திற்கும் வன்முறைக்குமான சாத்தியங்கள் காணப்படும். நவீன காலத்தில் தேசியவாதிகளினால் பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாதமானது காலனித்துவ அதிகாரத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டங்களுடன் இணைக்கப்பட்டதாகவே இருந்தது. காலனித்துவவாதிகள் ஆக்கிரமித்துள்ள ஆள்புலத்தின் கட்டுப்பாடு களைத் தாம் பெறுவதற்கு அவற்றினைப் பலப்படுத்தும் அவசியம் ஏற்படுகின்றபோது தேசிய உணர்வினை ஏற்படுத்துகின்ற முயற்சியின் முதலாவது படிமுறையாக பயங்கரவாதம் உள்ளது. காலனித்துவ அரசுகளில் அந்நாட்டின் சுதேசிகள் காலணித்துவ அதிகாரத்தினைக் காட்டிலும் மிகப் பலவீனமானவர்களாகவே உள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் காலனித்துவ அதிகாரம் காலனித்துவக் கொள்கை களில் மாற்றங்களைச் செய்வதற்கான சமாதான வழிமுறைகளை புறக்கணித்தால் அவற்றுக்கு எதிராக கிடைக்கத்தக்க சில வன்முறை நுட்பங்களுள் ஒன்றே பயங்கரவாதத்தினை உருவாக்குவதாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஐரோப்பிய காலனித்துவ சாம்ராஜியங்கள் சவால்களுக்குட்பட்டபோது, தேசியவாத இயக் கங்கள் ஐரோப்பிய இராணுவ மற்றும் பாதுகாப்புப் படைகளுடன் நேரடியாக மோதுவதற்கான இராணுவ வல்லமையினைப் பெற்றிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இதனால் அவர்கள் கெரில்லா போர் முறைகளையும் பயங்கரவாதத்தினையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

காலனித்துவ சாம்ராஜ்சியங்கள் முடிவடைந்து கொண்டிருந்த போது சில முக்கியமான முரண்பாடுகள் காணப்பட்டன. அக்காலத்தில் தாக்குதல்கள் என்பது பயங்கரவாதிகளின் பிரச்சாரங்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. 1954 இன் ஆரம்பத்தில் அல்ஜீரியாவில் பிரான்ஸ் இவ்வாறான முரண்பாட்டினை எதிர்நோக்கியது. பல ஆண்டுகளாக பிரான்சியக் குடியிருப்பாளர்கள் அதிக எண்ணிக்கையில் இடம்பெயர்ந்திருந்ததன் காரணமாக பிரான்ஸ், அல்ஜீரியாவில் பகுதி யளவில் தங்கியிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறான பகுதியளவிலான போராட்டம், உள்நாட்டு பிரான்சிய குடியிருப்பாளர் களுக்கிடையே இடம்பெற்றது. சுதந்திரத்திற்கு வழிவிடும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பிரான்சினைப் பலப்படுத்துவதற்கு அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி ஒரு கெரில்லாக் கிளர்ச்சியினை மேற்கொண்ட போது பிரான்சுக்கு எதிரான ஆரம்பப் புரட்சியின் ஒரு முக்கியமான பகுதியாக நகர்ப்புர பயங்கரவாத விவகாரம் விளங்கியது. கத்திகள், துப்பாக்கிகள் மற்றும் குண்டுகளைக் கொண்டு தாக்கு தல்கள் பொலிஸார், உள்ளூர் அரசாங்க அலுவலகங்கள், அல்ஜீரிய உழைப் பாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஐரோப்பிய காலனித்துவப் பொதுமக்களுக்கு எதிராகவும் திருப்பப்பட்டது. சிவிலியன் அலு வலகங்கள் அல்ஜீரியர்களை கட்டுப்படுத்த முடியாமல் போனபோது பிரான்ஸ் இராணுவப் பலத்தினை வலுப்படுத்தியதுடன் இறுதியில் அல்ஜீரிய யுத்தத்தினை வெற்றிகொள்ளத்தக்க வகையில் அதனை பரிபாலித்தது. இச்செயன்முறையில் அதிக எண்ணிக்கையான முஸ்லிம் மக்கள் பிரான்ஸ் மற்றும் காலனித்துவ நிர்வாகத்தில் இருந்து உடமை மறுக் கப்பட்டனர். சுழற்சியான குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள் உடன்பாட்டிற்கு வருவதற்கான சாத் தியப்பாடுகளை இல்லாமலாக்கியதுடன் பெரும்பான்மையான அல்ஜீரிய முஸ்லிம்கள் பிரான்சில் இருந்து உரிமை மறுக்கப்படு வதற்கும் வழி ஏற்படுத்தப்பட்டது. சுதந்திரத்திற்கான போராட்டமானது முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆதரவினை அதிகரிக்கச் செய்திருந்தது. அல்ஜீரியர்களுக்கு எதிரான தாக்குதலின் பிறகு நாட்டுப்புறத்தில் கெரில்லாத் தாக்குதல்கள், பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றன. பிரான்சினை குறைந்தளவிலேனும் வெளியேற்றுவதில் நகர்ப்புற பயங்கரவாதம் தோல்வி கண்டிருந்த போதிலும் நகரங்களுக்கான தாக்குதல்கள் இறுதியில் சுதந்திரப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தது. எனினும் அல்ஜீரிய கிளர்ச்சியினை பிரான்ஸ் இராணுவ ரீதியாகத் தோற்கடித்தது. ஆனால் தொடர்ந்து கொண்டிருந்த நகர்ப்புற பயங்கரவாதமானது காலனித்துவ மக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை யினை ஏற்படுத்தியதுடன் பிரான்சியத் தலைவர்கள் தொடர்ந்து கொண்டிருந்த அல்ஜீரியாவின் கட்டுப்பாட்டினை ஓரளவுக்கேனும் முடிவிற்குக் கொண்டுவரவும் வழி ஏற்படுத்தப்பட்டது.

பிரித்தானியா கூட அதனது காலனித்துவகால ஆட்சியின் போது பயங்கரவாதத்தினை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பல நாடுகளில் சுதந்திரத்திற்கு வழிவிடும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கான சமாதான வழிமுறைகள் போதுமானதாக இருந்தது. எனினும் சில சம்பவங்களில் தேசியவாதிகள் பிரித்தானியர்களை வெளியேற்றுவதற்கு வன்முறையினைக் கையாண்டிருந்தனர். பிரித்தானிய ஆணையுரிமை பெற்ற பலஸ்தீன விவகாரத்தில் காலனித்துவ நிர்வாகமானது ஒரு குறிப்பிட்ட சிக்கல் நிலையினை எதிர்நோக்கியது. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரான ஆணையுரிமையில் அரபுக்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருந்ததுடன் ஒரு தேசிய அரசினை நிறுவுவதற்கு எதிர்பார்த்த யூதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயல்களுக்கான இலக்காகவும் காலனித்துவ நிர்வாகம் மாறிவந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் இம்மூன்று தரப்புக்களுக்கும் இடையேயான போராட்டம் என்பது தொடர்ந்தது. இவ்வாறான தாக்குதல்களின் காரணமாக ஏற்பட்ட பேரிடரில் சிவிலியன்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். இதன் பின்னர் சுவீடனைச் சேர்ந்த ஐ.நாவின் சமாதான மத்தியஸ்தர் கௌன்ட் போல்க் பேர்னார்டொட்டே (Count Folk Bernadotte), ஸ்டேர்ன் கேங் (Stern Gang) என அழைக்கப்படும் யூதப் பயங்கரவாதக் குழுவினால் படுகொலை செய்யப்பட்டார். அதாவது சமாதானக் குடியேற்றத்தின் ஒரு பகுதி என்றவகையில் பலஸ்தீன அரபு அகதிகள் அவர்களது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்ததற்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டார். பல யூதக் குழுக்கள் அரபுக்களின் நலன்களுக்கு ஏற்ப தீர்வு வழங்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ விருப்பம் கொண்டுள்ளதாக கருதினர். மேலும் தொடரும் பிரிட்டிஷ் ஆட்சியானது தமக்கு ஆபத்தாக அமையும் எனவும் அவர்கள் எதிர்பார்த்தனர். இதனால் பலஸ்தீன நிலப்பரப்பில் இருந்து பிரிட்டிஷ் காரர்களை வெளியேற்றுவதற்காக தாக்குதல்கள் நடாத் தப்பட்டன. இதில் இழப்புக்கள் அதிகமாக இருந்தாலும் காலனித்துவ நிலை யிலிருந்து எந்த நன்மையும் ஏற்படவில்லை. இறுதியில் அரபுக் களுக்கும் யூதர்களுக்குமிடையிலான யுத்தமே பிரித் தானியர்கள் பின்வாங்குவதற்கு வழிவிட்டதுடன் இஸ்ரேலிய அரசு உருவாக் கத்திற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தது. யூதர்களது இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதில் பிரித்தானியரை வெளி யேற்றுவதற்கான தாக்குதல்கள் வெற்றிகரமாக அமைந்திருந்ததுடன் பிரித்தானியரின் வெளியேற்றமானது யூத சமூகத்திற்கு சாதகமாகவும் அமைந்திருந்தது. இதனையடுத்து 1950 களின் நடுப் பகுதியில் கிரேக்க குடியிருப்பாளர்கள் கிரேக்கத்துடன் ஐக்கியப்பட விரும்பிய போது சைப்ரசில் பிரித்தானிய வன்முறைத் தேசிய வாதத்தினை எதிர் கொண்டது. இதன்போது தேசியவாதிகள் இயக்கம் பகுதியளவில் கிராமப்புற கெரில்லாத் தாக்குதல்களிலும் பார்க்க நகர்ப்புற பயங்கர வாதத்தின் மீதே கூடிய கவனம் செலுத்தியது. இவ்விதம் நகர்ப்புற பயங்கரவாதத்தில் கவனத்தினைச் செலுத்தியமைக்கான காரணம் நகர்ப்புற பயங்கரவாதமானது ஊடகங்களின் பயன்பாட்டிற்கான வாய்ப்பினை வழங்கியதுடன் கிரேக்க சைப்பிரசர்களின் பாதிப்பினை பிரபல்யப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்திருந்தமையாகும். இத்தாக்குதல்களானது போதியளவான இழப்புக்களையும் பிரச் சினைகளையும் பிரித்தானியருக்கு ஏற்படுத்தியது. இதனால் சுதந்திரத்திற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற ஆரம்பித்தன. எனினும் கிரேக்கத்துடன் இணைய விரும்பாது இருந்த சைப்ரஸ் துருக்கிய சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பிரிட்டன் மிகக் கவனமாக இருந்தது. இதனால் கிரேக்கத்துடன் ஐக்கியப்படுவதற்கான விருப்பம் இறுதியில் அடையப்படவில்லை. பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட இழப்புக்கள் என்பன பிரிட்டன் காலனித்துவத்தினைப் பேணுவதில் பிரச்சினையை ஏற்படுத்தியது. இது இறுதியில் பிரிட்டன் இப்பகுதியில் இருந்து பின்வாங்கும் தீர்மானத்தினை எடுப்பதற்கு வழிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைப்பிரசினை விட்டு வெளியேறுவதற்கான தீர்மானம் சட்ட விதிகளினால் பலப்படுத்தப்பட்டது. இவ்வாறான விதிகளின் மூலமே எகிப்து அதனது சுதந்திரத்தினை ஆரம்பத்தில் பெற்றுக்கொண்டதுடன் சுயேஸ் கால்வாயினது கட்டுப்பாட்டினையும் பெற்றுக் கொண்டது. இதன் பிற்பாடு ஒரு இராணுவத் தளம் என்றவகையில் சைப்பிரஸ் மிகக் குறைவான பலனுள்ளதாகக் காணப்பட்டது.

காலனித்துவ தேசிய விடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாதம், இன அல்லது தேசிய வன்முறைகளின் இருப்பின் தொடர்ச்சிக்கு வழிவிட்டது. மற்றைய பல சந்தர்ப்பங்களில் பிரிவினைவாத இயக்கங்கள் பல தோற்றம் பெற்றது. இவ்வாறான குழுக்கள் பெரிய அரசிலிருந்து பிரிந்து செல்வதற்கான தனித்துவமான அபிலாசைகளைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றனர். கீயுபெக்கில் (Quebec) உள்ள பிரான்சு மொழி பேசும் குடியிருப்பு வாசிகள் கியூபெக் ஆங்கிலம் பேசப்படும் கனடாவின் ஒரு பகுதியல்ல எனக்கருதுவதுடன் அவர்களுள் சிலர் அரிதாக பயங்கரவாத வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர். நைஜீரியாவின் வட பிராந்தியத்தில் வாழ்ந்த இபோஸ் (Ibo) இனத்தவருக்கு எதிராக சமூக வன்முறை மேற்கொள்ளப்பட்டதனால் அவர்கள் பிரிவினையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். எனினும் பையப்ரா (Biafra) என்ற புதிய அரசினை நிறுவுவதற்கான அவர்களது முயற்சி சிவில் யுத்தத்திற்கு வழிவிட்டதுடன் அதில் அவர்கள் தோல்வியும் கண்டனர். பொதுவாக சகல வகையான பிரிவினைவாத இயக்கங்களும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு அல்லது வேறுவகையான அரசியல் வன்முறைக்கு வழிவிடலாம். துருக்கி மற்றும் ஈராக்கில் உள்ள குர்தீஸ்க்கள், ரஸ்யாவில் உள்ள செச்சன்யர்கள், இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு முன்னர் யூகோஸ்லாவியில் வாழ்ந்த குரோட்ஸ்கள் (Croats), மியன்மாரில் உள்ள பர்மியர்களைச் சாராத பல்வேறு குழுக்கள் மற்றும் பல குழுக்களும் சுதந்திரத்தினைப் பெறுவதற்கு எதிர்பார்த்ததுடன் தமது இலக்குகளை அடை வதற்கான வழியாக பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இச்சூழ்நிலைகளில் உள்ள கிளர்ச்சிக் குழுக்கள் ஒரு சமூகத்திற்கு எதிராக அரசாங்கத்தின் கடுமையான பதிலீடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அவ்வரசாங்கங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பயங்கரவாதத்தில் தூண்டப்படலாம். அவ்வாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூழ்நிலைகள் சமூகத்தினை மேலதிகமாகப் பிரிக்கவும் கிளர்ச்சி யாளர்களுக்கு மேலதிக ஆதரவினைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வழிவகுக்கின்றது. இவ்வாறான சகல தேசியவாதக் குழுக்களும் பரந்தளவிலான சுயாட்சியினை விரும்புவதுடன் ஒரு சுதந்திர அரசாக மாறுவதற்கும் விரும்புகின்றனர். இவ்வாறான போராட்டங்களில் ஈடுபடும் போராட்டக் குழுக்களின் செயற்பாட்டு அங்கத்தவர்கள் தம்மைத் தாமே விடுதலைப் போராளிகளாகக் கருதுகின்றனர். சமகால உலகில் காணப்படுகின்ற பல தேசியவாதப் போராட்டங்கள் பலமான சமய அடிப்படையினைக் கொண்டிருக்கின்றது. இங்கு சமயமானது தேசியவாத உணர்வினை மேலும் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆனால் குழுக்களின் செல்வாக்குமிக்க அரசியல் இலக்குகள் என்பது பிரிவினைவாதமாக அல்லது சக தேசியவாதிகளுடன் இணைவதற் கான முயற்சியினை உள்ளடக்கியதாக இருக்கின்றது. சமய ரீதியாக யூதர்கள் அரபுக்கள் மற்றும் பிரித்தானியர்களிலிருந்து வேறுபட்ட வர்களாயினும் பலஸ்தீனத்தில் யூதர்களின் போராட்டம் என்பது ஒரு தேசியவாதப் போராட்டமாகவே அடையாளப்படுத்தப்பட்டது. இதை யொத்ததாகவே அல்ஜீரிய முஸ்லிம்கள் மற்றும் கிரேக்க வைதீக சைப்பீரியர்கள் ஆகியோரும் அரசியல் இலக்குகளையே கொண் டிருந்தனர். மாறாக அவர்களது போராட்டம் என்பது சமயரீதியான ஒன்றாகவே பார்க்கப் பட்டது.

இனரீதியான இயக்கங்கள் அவர்களாகவே சில அயல்நாடுகளுடன் இணைந்து செயற்பட விரும்பலாம். அதாவது ஒரேவகையான இனக் குழுவின் உறுப்பினர்களால் உந்தப்படும் நாடுகளுடன் இவ்வாறான இனரீதியான இயக்கங்கள் இணைந்து செயற்படலாம். இதுவே கிரேக்க சைபீரியர்களுக்கான அடிப்படை இலக்காகவும் இருந்தது. இவ்வாறான இயக்கங்கள் தமது அயல்நாட்டு அரசாங்கங்கள் அல்லது குழுக்களிடமிருந்து ஆதரவினை வரவழைக்கலாம். இவ்வாதரவு இயக்கங்கள் அதனாகவே சுயாட்சியினையோ அல்லது சுதந்திரத் தினையோ எதிர்பார்ப்பதில்லை. மாறாக சில மற்றைய நாடுகளில் முழு ஈடுபாடு காட்டவே விரும்புகின்றது. செக்கோஸ்லாவாக்கி யாவில் இருந்த ஜேர்மனிய சிறுபான்மையினர் ஜேர்மனுடன் இணை வதற்கான அவர்களது முயற்சியில் எரிச்சலூட்டும் செயற்பாட்டினை மேற்கொண்டனர். ஒஸ்ட்ரிய நாசிக் கட்சி மற்றும் மற்றைய குழுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது அரசான ஹிட்லரின் ஜேர்மனியுடன் இணைப்பதற்கு பயங்கரவாதத்தினைப் பயன்படுத்தினர். 1970 மற்றும் 1980 களில் எதியோப்பிய மற்றும் கென்யாவில் உள்ள சோமாலியர்கள், அசர்பை ஜானில் உள்ள ஆர்மேனியர்கள், பொஸ்னியா மற்றும் குரோசியாவில் உள்ள சேர்பியர்கள் போன்றோர் சில அயல் அரசுகளுடன் ஐக்கியப் பட்டு இருக்கவே விரும்பினர். இக்குழுக்கள் வன்முறையைப் பயன் படுத்த விரும்பியதுடன் அந்நேரத்தில் அவர்களுடைய நட்புத் தேசியங் களுடன் இணைவதற்கான அவர்களது இலக்கினை அடைவதற்கான முயற்சியில் பயங்கரவாதத்தினைப் பயன்படுத்துவதற்கும் எதிர் பார்த்தனர்.

வன்முறையானது ஒரு அரசினுள் வாழும் வேறுபட்ட சமூகங்களுக் கிடையில் இடம்பெறலாம். அதாவது வெவ்வேறு குழுக்கள் ஒன்றாகக் கலந்து வாழ்கின்ற இடங்களில் ஒவ்வொரு குழுவும் குறித்த பிராந் தியத்தினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் போராடுகின்ற போது அங்கு சமூக வன்முறைகள் ஏற்படும். இவ்வாறான சந்தர்ப் பங்களில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்க முற்படலாம். அவ்வாறே சிறுபான்மையினரின் மொழியினைப் பயன்படுத்துவதை தடை செய்யலாம், பலப்பிரயோகத்தினூடாக சிறுபான்மையினரை தன்வயப்படுத்தலாம். மேலும் சிறுபான்மைக் குழுக்கள் நம்பிக்கையற்ற அடிப்படைகளைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பதாகப் பார்க்கப்படலாம். வஞ்சகமான முறையில் தன்வயப்படுத்துவதற்கான அல்லது அடக்குவதற்கான பெரும்பான்மையினரின் தொடர்ச்சியான முயற்சியானது நம்பிக் கையற்ற தன்மையின் திடீர் வெடிப்புக்குத் தூண்டுகின்றது. அதாவது பெரும்பான்மையினரின் செயல்களினைப் புறக்கணிப்பதற்கு வடி வமைக்கப்பட்ட செயற்பாடுகளுக்குத் தூண்டுகின்றது. அச்சுறுத் தல்களின் கீழிருக்கும் சிறுபான்மைச் சமூகமானது அதனது நிலை யினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வன்முறையினைப் பிர யோகிக்கலாம். இதன் பின்னர் பெரும்பான்மையினரும் வன்முறையில் ஈடுபட முற்படலாம். இப்போக்கு வேறுப்பட்ட மொழி, தேசிய, இனக் குழுக்களுக்கிடையிலான வன்முறைகளின் வெடிப்புக்கு வழி விடுகின்றது. இவ்வாறான சூழ்நிலைகளில் ஒட்டுமொத்த சிறுபான்மைச் சமூகமும் தமது பயங்கரவாதச் செயல்களுக்கான ஒரு சட்ட இலக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையினரைக் காணவரலாம். நிச்சயமாக இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுபான்மை சமூகமானது பெரும்பான்மை சமூகத்தினை ஒரு சட்டரீதியான இலக்காகவே கருதுகின்றது. இவ்வாறாக ஒன்றாகக் கூடிவாழும் சமூகங்களுக்கு மத்தியில் வன்முறை வெடிக்கின்றது. ரூவாண்டா மற்றும் புரூன்டியில் உள்ள ஹூட்டு (Hutu) மற்றும் டுட்சி (Tutsi) ஆகிய குழுக்கள் நீண்டகால வரலாற்றினூடாக ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளனர். இவ்விதமாக மக்கள் பிணைக்கப்பட்டிருந்தமையானது இரு இனக் குழுக்களுக்கிடையிலும் ஒரு குறிப்பிட்டகால சமூக வன்முறை ஏற்பட வழிவகுத்தது. இதையொத்ததொரு நிலையே வெள்ளை- கறுப்பு இனத்தவர்களைக் கொண்ட தென்னாபிரிக்காவிலும் காணப்பட்டது. இங்கு வெள்ளையின பெரும்பான்மை ஆட்சியாளர்களால் இன ஒதுக்கல் முறையினைக் கொண்ட ஆட்சி சமூகப் பிரிவினையை ஏற்படுத்தக் கூடியவகையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியில் வேறுபட்ட குழுக்களின் புவியியல் ரீதியான பிரிவினை என்பது அங்கு சாத்தியமற்றதாகவே இருந்தது. அதன் விளைவாக அங்கு நிகழ்ந்த வன்முறை என்பது சமூகம் சார்ந்த தன்மையுடையதாகவே இருந்தது. இந்தோனேசியாவினை எடுத்து நோக்கும் போது அங்கு பல்வேறு பகுதிகளில் சமயக் குழுக்களுக்கிடையிலான மற்றும் பிரிவினைவாத இயக்கங்களுக்கிடையிலான சமூக வன்முறைகள் மட்டுமன்றி வேறுப்பட்ட இனக் குழுக்களுக்கிடையிலான சமூக வன்முறையும் காணப்பட்டது. இன ரீதியாகப் பன்மைத்துவத்தினைக் கொண்டுள்ள நாடுகளில் வன்முறையின் வெடிப்பு என்பது எதிர்காலத்திலும் தொடர்வதற்கான வாய்ப்புள்ளது. அவ்வாறே பயங்கரவாத விடயங்கள் இடம் பெறுவதற்கான சாத்தியங்களும் காணப்படும்.

கெடுபிடி யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கருத்தியல் ரீதியான முரண்பாடுகள் வீழ்ச்சியடைந்ததுடன் அவை இன முரண்பாடுகளுக்கும் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தின் வெடிப்புக்கும் வழிவிட்டது. அதாவது ஐக்கிய அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் இருந்த முரண்பாடு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து உலகின் பல்வேறு அரசுகளில் இன முரண்பாடு, அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாதம் என்பவற்றின் தோற்றம் பொதுவான ஒன்றாக மாறிவந்தது. இம்முரண்பாடுகளின் போது இனக்குழுக்கள் சுயாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சுதந்திரத்திற்கான கோரிக்கையினை வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தனர். இதற்கு முன்னரும், அதாவது முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மன், ரஷ்யா, ஒஸ்ட்ரிய-ஹங்கேரியன் மற்றும் உஸ்மானிய சாம்ராச்சியங்கள் ஆட்டங்கண்டதுடன் அது குறிப்பிட்டுக் கூறக்கூடிய பல இன முரண்பாடுகளுக்கும் வழி விட்டதுடன் வன்முறையின் வெடிப்புக்கும் காரணமாக இருந்தது. பொதுவாக இன அடையாளங்களைக் கொண்டு பன்மைத்துவமாக வாழ்கின்ற சமூகங்களில் இவ்வாறான வன்முறைகள் தவிர்க்க முடியாதது என்பது ஏற்கனவே அறிந்த விடயமே. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் உடைவும் இவ்வாறான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்தியிருந்தது. இலத்தீன் அமெரிக்காவில் ஸ்பானிய சாம்ராச்சியத்தின் உடைவு என்பது ஆள் புலப் பிரச்சினைகளுக்கு வழிவிட்டிருந்தது. இவ்விதம் உருவான சில பிரச்சினைகள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படாது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆபிரிக்காவில் உள்ள அதிகமான எல்லைகள் விதிகளுக்குக் கட்டுப்படாததாக இருப்பதுடன் முன்னாள் ஐரோப்பிய காலனித்துவவாதிகளின் வசதியான எல்லைகளையும் பிரதிநிதித்துவம் செய்வதாக உள்ளது. இதன் விளைவாக பல நாடுகள் வேறுபட்ட மொழிக் குழுக்கள், இனத்துவ இணைப்புக்கள், அல்லது முந்திய காலனித்துவ அரசுகள் என்றவகையில் ஒரு திரட்சியாக உருவாகி வந்தது. பல சம்பவங்களில் இவ்வாறான குழுக்கள் இங்கு கூறப்பட்ட எல்லைகளால் தம்மைப் பிரித்துக்கொண்டது. இதிலிருந்து வெளி யேறிய குழுக்கள் சில ஐக்கிய அரசுகளில் உள்ள அவர்களது நட்பு தேசங்களுடன் மீள இணைந்துகொள்ள விரும்பலாம். முன்நாள் பெல்ஜிய கொங்கோவானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறாக உடைக்கப்பட அச்சுறுத்தப்பட்டதுடன் தற்சமயம் பல பகுதிகளில் பிரிவினைவாத முயற்சிகளின் கட்சிக் கூடமாகவும் அயல்நாட்டவர் களின் தலையீடு இடம்பெறும் இடமாகவும் உள்ளது. வேறுபட்ட இனக் குழுக்களாகப் பிரிக்கப்பட்ட எல்லைகளின் இருப்பினைக் கொண்டிருந்ததனால் மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபேரியா (Liberia), சிசராலியோன்; (Sierra Leone) மற்றும் கினி (Guinea) ஆகிய வற்றில் உள்ள பிரச்சினைகள் முன்னர் இருந்ததிலும் பார்க்க அதி கரிக்கச் செய்யப்பட்டது. கிழக்கிந்தியாவில் இருந்த டச்சு சாம்ராச்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அடிப்படையில் காலனித்துவ நிர்வாகத்தினால் ஒன்றாக நடாத்தப்பட்ட வேறுபட்ட அரசுகள் மற்றும் கலாசாரத்தினது இணைப்பாக இருந்தது. இன்றும் கூட இந்தோனேசிய அரசாங்க மானது முழுப்பகுதிகளில் இருந்தும் டச்சுக் கட்டுப்பாட்டினை அகற்று வதற்காக மேற்கொண்ட முயற்சியின் விளைவுகளில் இருந்து உருவான பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் போராடிக் கொண்டிருக்கின்றது என்றே கூற வேண்டியுள்ளது.

இந்தவகையில் அதிகரித்த இன அல்லது தேசிய முரண்பாடு களுக்கான சாத்தியப்பாடு என்பது முந்தய சாம்ராச்சியங்களின் உடைவின் விளைவாக ஏற்பட்டது என்று கூடக் கூற முடியும். இதற்கு சோவியத் யூனியன் கூட விதிவிலக்கல்ல. அதாவது கிழக்கு ஐரோப் பாவில் கம்யூனிசத்தின் உடைவு மற்றும் வீழ்ச்சி ஆகிய இரண்டும் இன முரண்பாடுகளுக்கு வழிவிட்டிருந்தது. கிழக்கு ஐரோப்பிய விடயத்தில் கம்யூனிசத்தின் வீழ்ச்சியானது பலமான அரசாங்கங்களை அகற்றுவதற்கு வழிவிட்டது. அதாவது கம்யூனிசத்தின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்பட்ட இன முரண்பாடுகள் அரசாங்கத்தின் உறுதிப்பாடு மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. உதாரணமாக செக் கோஸ்லாவாக்கியாவில் இருந்த செக்ஸ் (Czechs) மற்றும் ஸ்லோவக்ஸ் (Slovaks) இடையிலான பகைமை இரண்டு குழுக்களினதும் சமா தானமான பிரிவினைக்கு வழிவகுத்தது. எனினும் ஸ்லோவாக்கியா ஹங்கேரிய சிறுபான்மையினர் தொடர்பில் சில பிரச்சினைகளை இன்னும் கொண்டுள்ளது. யூகோஸ்லாவியா விடயத்தில் சோவியத் மாதிரியிலான கொம்யூனிசத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட வெளிவாரியான அச்சுறுத்தல்களின் முடிவானது அங்கு இன வன் முறையின் வெடிப்புக்கு வழிவிட்டதுடன் இன அடிப்படையில் அரசு முறிவுறுவதற்கும் வழிவகுத்தது. சில வேளைகளில் முன்நாள் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளுக்கிடையிலான சட்டத் தினால் கட்டுப்படுத்தப்படாத எல்லைகள் சிறுபான்மையினர் தொடர்பில் உருவான ஒவ்வொரு அரசும் பல பிரச்சினைகளை முகம் கொடுப்பதற்கு வழிவிட்டது. செச்னியர்களின் கிளர்ச்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும். அவ்வாறே ஜோர்ஜியா, அஸர்பைஜான், சோவியத் மத்திய ஆசியாவில் உள்ள மோதல்களும் வன்முறைகளும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. முந்தய சோவியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலும் பார்க்க அதிலிருந்து உதயமான புதிய அரசுகள் இத்தகைய பதட்டங்களை கையாள்வதற்கு குறைந்தளவிலான இயலுமை யினையே கொண்டிருந்தது. கம்யூனிசத்தின் வீழ்ச்சி இடம் பெறு வதற்கு முன்னர் இன வெடிப்புக்கள் என்பது விரைவாகவும் கடுமை யாகவும் கையாளப்பட்டது. கிழக்கு ஐரோப்பாவிலோ முந்தைய சோவியத் ஆள்புலத்திலோ 1990 களுக்கு முன்னர் அவை கொண்டிருந்த திறனைக் கொண்ட எந்தவொரு அரசும் இன்னும் உருவாக வில்லை.

இந்தவகையில் முழுமையாக நோக்கும் போது பயங்கரவாதத் திற்கான தேசிய மற்றும் இனத்துவத் தளங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு கால கட்டங்களில் உருவாக்கப்பட்டிருப் பதனை அவதானிக்கலாம். அதிலும் குறிப்பாக அவ்வாறான அடிப் படைகளின் அதிகரித்த வளர்ச்சியே காலனித்துவ ஆதிக்கத்தின் வீழ்ச்சி, கெடுபிடி யுத்தத்தின் முடிவு மற்றும் பன்மைத்துவத்தினைக் கொண்ட புதிய அரசுகளின் தோற்றம் ஆகியவற்றுடனேயே ஏற்பட் டுள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

# பயங்கரவாதத்திற்கான சமயரீதியான நியாயப்படுத்தல்கள்

மத்திய கிழக்கில் தளம்கொண்டுள்ள முரண்பாடுகள் மற்றும் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்கள் என்பனவற்றில் சமயத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள் பயங்கரவாதத்தினை பயன்படுத்துவதிலிருந்து பயங்கர வாதத்திற்கான சமயரீதியான நியாயப்படுத்தல் வெளிப்படுத்தப் படுகின்ற போதிலும் வன்முறைக்கான சமயரீதியான நியாயப்படுத்தல் என்பது மிகவும் பழமையான ஒன்றாகும். சமயமானது குழு அடை யாளத்திற்கு அவசியமான ஒரு மூலமாக உள்ளதுடன் ஒரு சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒன்றாகவும் உள்ளது. 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வன்முறைக்கான, பயங்கரவாதத்திற்கான சமயரீதியான நியாயப்படுத்தல் என்பது மிகவும் தொடராக இருந்தது. உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான சமயரீதியான நியாயப்படுத்தல் என்பது பழமையானது மட்டுமன்றி சமகாலத்திற் குரியதுமாகும். சமய நியாயப் படுத்தல் மிக்க வன்முறையினை உபயோகிப்பதற்கான வரலாறு என்பது மனித வரலாற்றில் நீண்டகால வரலாற்றினைக் கொண்டுள்ளது. வரலாற்றில் சமயங்களுக்கிடையிலான யுத்தங்கள், சிலுவை யுத்தங்கள் என்பன மிகவும் அழிவுமிக்க சமய அடிப் படைகளைக் கொண்ட யுத்தங்களாக இருந்தன. அவ்வாறே இவ்யுத்தங்கள் செலவுமிக்க யுத்தங்களாகவும் காணப்பட்டன. இவ்வகையான முரண்பாடுகளில் உயிரிழப்புக்கள் என்பது மிகவும் உயர்வாகவும் இருந்தது. ஏனெனில் வேறுபட்ட சமயங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட சமயப்பிரிவினர்களால் கொல்லப்பட்டனர். இதற்கு மாற்றமாக ஒரே சமயத்திற்குள்ளான அங்கத்தவர்களிடையே ஒரு யுத்த சூழ்நிலையைப் பேணும் நிலையும் காணப்பட்டிருக்கின்றது. சில சமய யுத்தங்களில் தெளிவாக உத்தேசிக்கத்தக்க ஒரு விடயம் யாதெனில் ஒரு சமயக் குழுவினர் மற்றைய சமயக் குழுக்களை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்டிருப்பதாகும்.

உண்மையில் உலக வரலாற்றில் சமய யுத்தங்கள் பட்டியல் என்பது மிகவும் நீளமானதாகும். அவ்வாறே சமய வேறுபாடுகளின் விளைவாக உருவாகும் உள்நாட்டு அரசியல் வன்முறைகளின் பட்டியலும் நீண்டதாகும். ஒரு சிறுபான்மைக் குழுவானது அரசின் மத்தியமயமாக்கம் என்பது தமது நம்பிக்கைகளையும் சமூகத்தின் இணக்கத்தினையும் பாதிக்கும் என அவர்கள் அச்சப்படலாம். அவ்வாறே பெரும்பான்மையினரால் மேற்கொள்ளப்படும் மத ரீதியான அநீதி என்பது சிறுபான்மையினரின் நம்பிக்கையின் மீது வன்முறைப் பிரயோகம் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும். சில சம்பவங்களில் அரசாங்கமானது சமயச் சிறுபான்மைக் குழுக்களை அடக்குவதற்கு வன்முறையை உபயோகிப்பதைக் காணலாம். இவ்வாறான சந்தர்ப் பங்களில் வெளிநாட்டு எதிரிகளுடன் சேர்ந்து சிறுபான்மைச் சமூகமானது தம் சொந்த நாட்டுக்கு எதிராக வன் முறைகளில் ஈடு படலாம். மற்றைய சில சூழ்நிலைகளில் சிறு பான்மையினர் அவர்களது அந்தஸ்திற்கு அல்லது அவர்களது நம்பிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெறுவதற்காக ஒரு அரசில் உள்ள பெரும்பான்மை மதத்திற்கு எதிராக தாக்குதல்களை ஆரம்பிக்கலாம். இவ்வகையான வன்முறைகள் சிறுபான்மையினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வடிவமைக் கப்படலாம். அல்லது தாய் அரசிலிருந்து ஒரு பகுதி பிரிந்து செல்வதற்கு ஏற்றவகையிலான ஒரு போராட்டமாக அமைக்கப்படலாம். சில அரிதான சம்பவங்களில் ஒரு சமூகத்தில் சிறுபான்மைச் சமூகத்தினை செல்வாக்குள்ளதாக ஆக்குவதற்காக இவ்வகையான வன்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்து தேவாலயம் (The Church of England) அமைக்கப்பட்டதன் பிற்பாடு கத்தோலிக்கர்கள் வெளிநாட்ட வர்களுக்கு பணிபுரிவது போன்ற ஒரு நம்பிக்கையாளர் குழுவாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்பட்டதுடன் முந்தைய ஆதிக்க மதத்தினை நிலைநாட்டுவதற்கும் முயற்சிப்பவர்களாகவும் நோக்கப் பட்டனர்.

பயங்கரவாதமானது ஒரு நாட்டில் உள்ள பெரும்பான்மை இனக் குழுக்களை அல்லது ஆதிக்கப் பகுதியினரைக் கூட உள்வாங்கலாம். இவ்வாறான குழுக்கள் சமயத்தின் புனிதத்துவத்தினை மீள நடை முறைப்படுத்துவதற்கான முயற்சியில் வன்முறையைப் பிரயோ கிக்கலாம். அல்லது சட்டங்களும் செயற்பாடுகளும் சமய அடிப் படைகளைக் கொண்டதாக ஆக்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை திணிக்கலாம். பொதுவாக எல்லா நாடுகளிலுமுள்ள சட்ட முறைமை யானது அந்நாடுகளில் உள்ள மக்களின் அல்லது உயர் குழாமினரின் ஆதிக்கமிக்க மத உணர்வுகளின் செல்வாக்குக்குட்பட்ட கலாசாரச் செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றது. ஆனாலும் சமூகத்தில் தாம் விரும்புகின்ற மதப் பெறுமானங்கள் ஆழமாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என விரும்புகின்ற அங்கத்தவர்களும் ஆதிக்க மிக்க சமயக் குழுக்களில் காணப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ் வகையான குழுக்கள் அவர்களுடைய அரசியல் தலைவர்களின் கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு விரும்புகின்றனர். சில வேளைகளில் அவர்கள் தலைமைத்துவத்தினை மாற்றுவதற்கான ஆவலைக் கொண்டிருக்கலாம். சமயத்தராதரங்களுக்குப் பொறுப் பளிக்கக் கூடிய விதத்தில் அரசாங்கத்தின் வடிவத்தில் பிரதான மாற்றத்தினை கொண்டுவருவதே குழுக்களின் பிரதான நோக்கமாகக் கூட இருக்கலாம். உதாரணமாக ஒரு வைதீக அரசு உருவாக்கத்தினை வேண்டுவதைக் குறிப்பிடலாம். இவ்வகையான அரசுகளில் எது நாட்டிற்குள் அனுமதிக்கத்தக்கது, சாத்தியமானது என்ற வார்த்தை களைக் கொண்டவராக சமயத் தலைவர் காணப்படுவார்.

### பயங்கரவாதமும் உலக மதங்களும்

மிகவும் கடும்போக்குவாத சமய ரீதியான உளப்பாங்கு வடிவங்கள் பல சமயங்களில் தோன்றியிருக்கின்றது. மேலும் தொடர்ச்சியாக மத அடிப்படைவாதம் பயங்கரவாதிகளை அடையாளப்படுத்த உபயோகிக்கப்படுகின்றது. உலகில் உள்ள பல மக்கள் மத அடிப் படைவாதிகளாக அடையாளப்படுத்தத்தக்க தகைமையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளனர். அவர்கள் தமது சமய நெறிமுறைகளை பற்றுறுதியுடன் பின்பற்றுவதுடன் பாவம் செய்வதையும் தவிர்க்கின்றனர். மேலும் அவர்கள் தமது சமயப் பெறுமானங்களுக்கு ஏற்ப செயற்படுகின்றனர். அவ்வாறே அவர்களது குறிப்பிட்ட புனிதச் செயல்களுக்கான ஒரு சரியான விளக்கத்தினைக் கூட அவர்கள் எடுக்கலாம். மேலும் சமயநெறி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தாம் ஒரு உதாரண புருஷராக இருக்க வேண்டும் என விரும்புகின்றனர் அல்லது தமது நம்பிக்கையினைப் பாதுகாப்பதற்கான தமது முயற்சி மிகவும் செயற் றிறன் வாய்ந்தாக இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான நிலையில் அவர்கள் அரசாங்கத்தில் உள்ள அல்லது அரசியல் வகுப்பில் உள்ள ஆத்மீக நபர்களுக்கு தமது ஆதரவினை அல்லது வாக்கினை வழங்கலாம். இவ்வாறான சமய அடிப்படைகளைப் பின்பற்றும் தனிப்பட்டவர்கள் மத அடிப்படைவாதிகளாக அடை யாளப்படுத்தத்தக்க தகைமை உடையவர்களாவர். அவ்வாறான லேபல்களைக் கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் சமூகத்தில் தமது சமயப் பெறுமானங்களைக் கொண்டுவருவதற்காக வன்முறையைப் பிரயோகிக்கமாட்டார்கள். உண்மையில் சமயக் குழுக்களுக்கு மத்தியிலான நிறுவனங்கள், தலைவர்கள் அவர்களது சீடர்கள் மத்தியில் செயற்பாட்டுவாதத்திலும் பார்க்க செயற்பாடற்ற தன்மையையே அதிகரிக்கச் செய்கின்றனர். பொதுவாகப் பார்க்கும் போது சகல அடிப்படைவாதிகளும் பயங்கரவாதிகள் அல்ல அல்லது பயங்கரவாதத்திற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பதில்லை. இதையொத்ததாகவே அடிப்படைவாதிகளாக இருப்பதற்கான தேவையினைக் கொண்டு ஒரு சமய லேபலின் கீழ் எல்லாப் பயங்கர வாதிகளும் போரிடுவதில்லை. கருத்து வேறுபாட்டுக் குழுக்கள் அரச அடக்குமுறையிலிருந்து தமது சமயத்தினைப் பாதுகாப்பதற்காக வன்முறையை உபயோகப்படுத்தலாம். 1943 இல் ஜேர்மனியர்களுக்கு எதிரான வார்சோ கெட்டோ (Warsaw Ghetto) கிளர்ச்சியில் ஈடுபட்ட நபர்கள் அனைவரும் அடிப்படைவாதிகளல்ல. இதற்கு மேலதிகமாக அவர்களுடைய புரட்சியை நியாயப்படுத்தல்களை விட வேறு ஏதா வதாகக் கருதுவது கடினமாகவுகள்ளது.

கடும்போக்குவாதம் (Extremism) என்ற வார்த்தையானது எதிர் மறையான ஒன்றாக இருந்தபோதிலும் தமது நம்பிக்கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்போக்குத் தனத்திற்குத் திரும்பும் தனிப்பட்டவர்களின் விருப்பத்தில் இருந்து தோன்றும் அடிப்படைவாதிகளுக்குப் பதிலாக சமயப்பயங்கரவாதிகளைக் குறிப்பிடுவதற்கு இப்பதத்தினைப் பயன் படுத்துவது மிகச் சரியானதாகும். இருப்பினும் சுயபாதுகாப்பிற்காக வன்முறையைப் பயன்படுத்துவதை உண்மையான கடும்போக்கு வாதமாகக் கொள்ளமுடியாது.

அடிப்படைவாதக் குழுக்கள் கிறிஸ்தவ சமூகத்தில் தோன்றியுள்ள பல விதமான நடைமுறைகள் மற்றும் நவீன உளப்பாங்குகளை எதிர்க்கின்றது. இவற்றுள் சில குழுக்கள் அவர்களது நோக்கங்களை அடைவதற்காக வன்முறையை உபயோகிக்கின்றது. பல கிறிஸ்தவக் குழுக்கள் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள எதிர்க்கலைப்புப் புரட்சி களுக்கு ஆதரவளிக்கின்றது. மேலும் கருக்கலைப்பு இடம்பெறும் மருத்துவ நிலையங்களுக்கு முன்னால் சத்தியாக்கிரகம் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்து கின்றது. இக்கிளர்ச்சிகளில் பங்குபற்றும் பெரும்பான்மையினர் வன்முறையை எதிர்க்கின்றனர். ஆனால் ஒரு சிலர் கருக்கலைப்பிற்கான கிடைப்பனவை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியினை மிகவும் செயற்றிறன்வாய்ந்ததாக மாற்ற விரும்புகின்றனர். இதன் விளைவாக உருவாகும் செயற்பாட்டுவாதம் ஒருவித பகையுணர்ச்சி மற்றும் சொத்துக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவிடுவதாக உள்ளது. உதாரணமாக கிளினிக் நிலைய ஜன்னல்களை உடைத்தல், நடமாடும் கிளினிக் தொழிலாளர்களை பகையாளிகளாக்குதல். இவ் வகையான பகையுணர்ச்சி மற்றும் தொந்தரவானது கிளினிக் செயற் பாடுகளை மிகவும் சிக்கலுக்குள்ளாக்குவதற்கு வடிவமைக்கப்படு கின்றது. சில எதிர்ப்பாளர்கள் சொத்துக்களுக்கு மட்டும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியவகையில் குண்டுகளை உபயோகிப்பதற்கு திறன் பெற்றவர்களாக உள்ளனர். மேலும் இச்சந்தர்ப்பங்களில் விபத்துக் களால் தனிப்பட்டவர்கள் கடுமையான காயங்களுக்குள்ளாகும் நிலை மையும் ஏற்படுகின்றது. இச்செயல்கள் அனைத்தும் வெற்றிகரமாக அமைவதால் அவை விரிவடையவும் வழி ஏற்படுகின்றது. இதன் விளைவாக கிளினிக்குகள் மூடப்பட்டிருப்பதுடன் செயற்பாட்டு மணித்தியாலயங்களும் வரையறுக்கப்பட்டுள்ளது. சில சம்பவங் களில் கருக்கலைப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமான வகையில் வெற்றிகண்டு இருக்கின்றது. கருக் கலைப்புக்கு வழங்கப்படும் கிளினிக் காப்புறுதிச் செலவுகள் உயர்ந் துள்ளதுடன் சில வைத்தியர்கள் இந்நடைமுறைகளை மேற்கொள் வதை நிறுத்தியிருக்கின்றனர். மற்றைய சில சம்பவங்களில் நிலப்பிரபுக்கள் கிளினிக் களுக்கான காப்புறுதிகளை மீளப் புதுப்பிப் பதனை நிராகரிக்கின்றனர். அவ்வாறே கருக்கலைப்பு இடம்பெறும் அலுவலகங்களைப் புதுப் பிப்பதையும் நிராகரித்துள்ளனர். இதற்கான காரணம் யாதெனில் அவர்களது சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதனாலாகும். இது விடயத்தில் மிகவும் முக்கியமான ஒன்றாக குண்டுத்தாக்குதல்கள் உள்ளது. இவ்வாறான தாக்குதல்கள் மிகப் பரந்தளவில் அழிவுகளின் அதிகரிப்புக்கு வழிவிடுவதுடன் பொருத்தமான சொத்துக்களின் சொந்தக்காரர்கள் மத்தியில் அச்சத் தினை உருவாக்கின்றது. ஒரு சில சம்பவங்களில் தனிப்பட்டவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தத்தக்க வன்முறைகள் அதிகரிக்கப்பட்டிருக் கின்றன. இதன்படி பல வைத்தியர்கள் மற்றும் இதர சிகிச்சை ஊழியர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர் அல்லது படுகொலை செய்யப் பட்டிருக்கின்றனர். 1991 இற்கும் 1995 இற்கும் இடையில் 5 படு கொலைகள் இடம் பெற்றதுடன் 11 படுகொலை முயற்சிகளும் இதுவிடயத்தில் இடம் பெற்றன. இவ்வகையான வன்முறை இது விடயத்தில் மிகவும் அரிதாகும். எனினும் அவை நிகழ்கின்ற போது, அவை பெரிய அமைப்புக்களை விடவும் சிறிய குழுக்கள் அல்லது தனிப்பட்டவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இத்தாக்கு தல்கள் கூட பரந்தளவிலான பார்வையாளர்களிடத்தில் பயத்தினை ஏற்படுத்தத் தக்கவகையில் வடிவமைக்கப்படுகின்றது. சில வேளைகளில் கருக்கலைப்பினை வழங்குகின்ற சகல நபர்களுக்கும் நீங்கள் அடுத்ததாக இருக்கலாம் (You could be next!) என்பதன் மூலம் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான தாக்குதல்கள் அல்லது படுகொலைகளில் ஈடுபடுபவர்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் அவர்களைப் பிடிப்பது என்பது கடினமாகவுள்ளது. இதனை ஐக்கிய அமெரிக்காவில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு எதிர்ச் செயற்பாட்டாளர்கள் தமது குற்றச் செயல்களுக்கான தண்டனைகளைப் பெறுவதிலிருந்து தப்பிப்பதற் கான உதவியினை இவ்வாறான குழுக்கள் எதிர்பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்போக்குவாத வன்முறை யூதயிசத்திற்குள்ளும் விருத்தியடைந்துள்ளது. பிரித்தானிய ஆணையுரிமையைப் பெற்ற பலஸ்தீன நிலப்பரப்பில் குடிகொண்டிருந்த யூதக் குழுக்கள் அவர்களது சுதந்திரப் போராட்டத்தில் பயங்கரவாதத்தினை உபயோகித்தன. ஆனாலும் இந்தப் போராட்டம் என்பது சமயப் பயங்கரவாதம் என்பதிலும் பார்க்க பலஸ்தீன மண்ணில் ஒரு அரசினை உருவாக்குவதற்கான முயற்சியாகவே இருந்தது. இன்று இஸ்ரேலில் அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினுள்ளும் சட்டமுறைமையினுள்ளும் சமயக் கருத்துக்களை உள்வாங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இன்னும் கூறுவதாயின் தெய்வீக அடிப்படையைக் கொண்ட யூத மத நடைமுறைகளை உருவாக்குவதற்குக் கூட அவர்கள் முழுமையான ஆர்வம் காட்டுவதாக இல்லை. எனினும் இஸ்ரேலில் பல கடும்போக்குவாதக் குழுக்கள் தோன்றியுள்ளன. இவ்வாறான குழுக்களின் அங்கத்தவர்கள் கடவுளின் சட்டத்தினை அமுல்படுத்துவதற்கான கடமையினை ஆற்றுவதற்கு கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவே (Gode's chosen people) தங்களைக் கருகின்றனர். (குறைந்தபட்சம் அவர்களது விளக்கமேனும் அவ்வாறு அமையப்பெற்றுள்ளது.) இவ்வுலகளவிலான அனுமதிகள் என்பது அவர்கள் ஒரு தெய்வீகத் திட்டம் கொண்ட தமது இலக்குகள் பேணப்படுவதற்காக பரந்தளவிலான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வழிவிட்டுள்ளது. பிராந்தியத்தில் நிலத்தினைக் கட்டுப்படுத்துவது என்பது இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நோக்கப்படுகின்றது. அதாவது விபிலிய இஸ்ரேலிய இராச்சியத்துடன் (Biblical Kingdom of Is real) தொடர்புபட்டதாகப் பார்க்கப்படுகின்றது. இதிலிருந்து யூதர்கள் கொண்டுள்ள நிலைப்பாடாவது மேற்குக் கரை மற்றும் காசாப் பள்ளத்தாக்கு உள்ளடங்கலான சகல பகுதிகளையும் கடவுள் யூத மக்களுக்குக் கொடுத்தார் என்பது பற்றியதாகும். இதன் விளைவாக இஸ்ரேலால் கட்டுப்படுத்தப்படும் ஆள்புலத்தில் ஒரு பலஸ்தீன அரசு உருவாக்கப்படுவதற்கான எந்த ஏற்பாடுகளையும் அவர்கள் எதிர்க்கின்றனர். இதன் மூலம் குடியிருப்பாளர் அமைப்புக்களில் கடும்போக்காளர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புக்களில் அரபுக்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தாக்குதலை ஆரம்பித்தனர். மேலும் எகிப்துடன் சமாதானத்திற்குத் திரும்புவதற்கான ஒரு முயற்சியாக இருந்த சினாய் குடாவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் வெளியேறும் முயற்சியினைத் தடுப்பதற்கு அல்லது அம் முயற்சியினை நிறுத்துவதற்குக் கூட சிலர் எதிர்பார்த்தனர். குஸ் எமுனிம் (Gush Emunim) என்ற ஒரு குடியிருப்பாளர் குழு பலஸ் தீனியர்களுக்கு எதிராக நீண்டகாலமாக வன்முறையைக் கொண்டு நடாத்துகின்றது. இவர்கள் தமது செயற்பாடுகளில் கனான் (Canaan) நிலப்பரப்பினை புதிய ஆக்கிரமிப்பின் ஒரு பகுதியாக நியாயப்படுத்து கின்றனர். மற்றைய சில குழுக்கள் மேற்குக் கரை மற்றும் காசாவில் இருந்து பலஸ்தீனியர்களை பலவந்தமாக வெளியேற்றும் வகையில் பலஸ்தீனியர்களுக்கு எதிராக திட்டமிட்ட தாக்குதல்களை ஆரம் பித்துள்ளனர்.

இத்தாக்குதல்களின் வரிசையில் 1994 இல் யூத கடும் போக்கு வாதியான பரூச் கோல்ஸ்டீன் (Baruch Goldstein) என்பவரால் ஹெப் ரோனில் உள்ள பள்ளிவாசலில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தவர்கள் மீது ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கோல்ஸ்டீன் சமயரீதியாக உணர்வூட்டப்பட்டவராக, அதாவது அவரது ஆர்வம் என்பது இஸ்ரேல் மேற்குக் கரையையும் உள்ளடக் கியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. இத்தாக்குதல்களில் அவர் கொல்லப்படுவதற்கு முன்னர் 29 முஸ்லீம்கள் கொல்லப்பட்டதுடன் மற்றும் பலர் காயங்களுக்குள்ளானர். இப் பள்ளிவாசலானது சொலமன் (Solomon) கால யூத தேவாலயத்தின் நிலத்தினை ஆக்கிரமித்திருப் பதாகக் குற்றம் சாட்டப்பட்டதுடன் பல தசாப்தங்களாக முரண்பாட்டின் கவனம் குவிக்கப்பட்ட ஒரு இடமாகவும் கருதப்பட்டது. புரூக் லைனைச் (Brooklyn) சேர்ந்த அமெரிக்க வைதீகரான ரப்பி மைர் கஹென் (Rabbi Meir Kahane) என்பவரே இஸ்ரேலில் கடும் போக்காளர்களின் பார்வைக்கான அரசியல் ஆதரவினைத் தாபித்தார். அரபுக்கள் இஸ்ரேலிய யூதப் பிரஜைகள் மீது தாக்குதல் நடத்திய திலிருந்து அரபுக்கள் மீதும் பலஸ்தீனியர்கள் மீதும் இஸ்ரேல் மேற்கொண்ட வன்முறையை அவர் நியாயப் படுத்தினார். அரபுக்களை இஸ்ரேலுக்கு வெளியே மற்றும் ஆக்கிர மிக்கப்பட்ட ஆள்புலத்திற்கு அப்பால் விரட்ட வேண்டும் எனவும் வாதிட்டார். இவர் ஒரு பிரதே சத்திற்காக வாதிட்டதிலிருந்து அவரது பார்வையானது தெளிவாக இனவாத அடிப்படை கொண்டதாக அமைந்திருப்பதனை அவ தானிக்கலாம். இவர் ஒரு அரசியல் கட்சியினைத் தாபித்ததுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் அக்கட்சி இரு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. கோல்ஸ்டீன் அக்கட்சியின் ஒரு அங்கத்தவ ராகவும் கஹெனினுடைய ஒரு மாணவராகவும் இருந்ததுடன் 1983 இல் கட்சியின் பட்டியலில் ஒரு வேட்பாளராகவும் பெயர் குறிக்கப் பட்டிருந்தார். கஹெனின் பார்வைகள் என்பது கோல்ஸ்டீன் இஸ் ரேலியப் பாராளுமன்றத்தில் தனது ஆசனத்தை ஏற்றுக்கொள்ளு மளவிற்கு மிகவும் கடும்போக்கானதாக இருந்தது. இவர் ஐக்கிய அமெரிக்காவுக்கு நாடு திரும்பியதும் அவரது நாட்டில் பலஸ்தீனிய எதிர்ப்பாளர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது கருத்துக்களை ஆதரிக்கும் கட்சிகள் இஸ்ரேலியப் பாராளு மன்றத்தில் தொடர்ந்தும் பிரதிநிதித்துவம் பெறக்கூடியதாக உள்ளது. மற்றைய குழுக்கள் இஸ்ரேலிய அரசினைப் பாதுகாப்பதற்கான அவர்களது முயற்சியில் அல்லது எந்தவொரு சாத்தியமான அச்சுறுத்தல்களி லிருந்தும் பாதுகாப்பதற்காக வன்முறை மற்றும் பயங்கரவாதத்தினை மேற்கொண்டுள்ளனர். லெபனானின் இஸ்ரேலிய உள்வாங்கலுக்கு எதிரான இஸ்ரேலிய எதிர்ப்பாளர்கள் ஆக்கிரமிப்பு ஆதரவாளர்களால் வன்முறைத் தாக்குதல்களுக்கு இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றனர். 1995 இல் இட்சாக் ரெபீன்; (Yitzak Rabin) பலஸ்தீனத்துடன் இணக்கப் பாட்டை ஏற்படுத்த முயற்சித்தமைக்காக படுகொலை செய்யப்பட்டமை சமய அடிப்படையைக் கொண்ட பயங்கரவாதத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். அவரது கொலையினை நியாயப்படுத்துவதற்காக சமயப் பிரச்சாரங்களே பயன்படுத்தப்பட்டன. இக்கொலைக்கு ஆக்கிர மிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தீவிர குடியிருப்பாளர்கள் ஆதரவ ளித்தனர். இதன் மூலமாக பலஸ்தீனியர்களின் உரிமைகள் தொடர்பான இஸ்ரேலிய ஆதரவாளர்களுக்கு ஒரு அச்சுறுத்தலை விடுத்தனர். அல்லது சமாதான முயற்சிகளுக்கு ஒரு சவாலினை ஏற்படுத்த விளைந்தனர்.

இவ்வாறே முஸ்லிம் சமூகத்தினுள்ளும் சமய ரீதியான வன் முறைகள் இடம்பெறுகின்றன. இஸ்லாத்தில் உள்ள சீயா மற்றும் சுன்னிப் பிரிவுகள் சில வன்முறைக்கு வழிவிட்டுள்ளது. அண்மைக் காலமாக மேற்குக்கு எதிரான இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து அதிக கவனம் குவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே முஸ்லிம் தலை வர்களால் பயன்படுத்தப்படும் ஜிஹாத் அல்லது புனித யுத்தம் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருவில் அதிக கவனம் குவிக்கப்பட்டுள்ளது. ஒரு விஷேட யுத்த வடிவம் என்றவகையில் ஜிஹாத் மீது குவிக்கப்பட்டுள்ள கவன மானது அது குறித்த உண்மையான பொருளினை மறைக்கச் செய்துள்ளது. ஜிஹாதுக்கான மிகவும் சரியான பொருள் முயற்சி அல்லது உழைப்பு அல்லது சண்டையிடுதல் என்பதாக உள்ளது. ஜிஹாத் அர்த்தப்படுத்தும் முதலாவதும் முதன்மையானதுமான விடயம், ஒரு வாழ்க்கை முறையாக இஸ்லாமிய கருத்தியல்களை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியினை அல்லது உழைப் பினைக் குறிக்கின்றது. இரண்டாவது சமூகத்தின் நம்பிக்கையாளர்கள் மத்தியில் நம்பிக்கையை உயர்த்துவதற்காக உழைத்தலைக் குறிக் கின்றது. இறுதியாக முஸ்லிம் அல்லாதவர்களை இஸ்லாத்தினுள் ஈர்ப்பதற்கான அல்லது கடவுளின் வார்த்தைகளை நிராகரிப்பாளர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான முயற்சியாகக் கருதப்படுகின்றது. இவ்விடயத்திலேயே ஜிஹாத் தவறாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. அதாவது ஜிஹாதின் மூலம் பலவந்தமாக மதமாற்றம் இடம் பெறு வதாக ஒரு கருத்துநிலை நிராகரிப்பாளர்கள் மத்தியில் உள்ளது. இதற்கு அப்பால் இஸ்லாமிய அரசுகளுக்கு அல்லது சமூகத்திற்கு எதிரான அத்துமீறல்களின் போதும் யுத்தத்தினை மேற்கொள்வ தனையும் ஜிஹாத் பொருள்படுத்தி நிற்கின்றது. எனினும் அது கோட்பாட்டளவில் வரையறைகளைக் கொண்டதாகும். (அதனை நியாயப்படுத்தத்தக்க) ஜிஹாத் மதமாற்றத்திற்காகப் பயன்படுத்தப் படுகின்றது என விவா திப்பவர்கள் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற வாதத்தினையும் முன்வைக்கின்றனர். எனினும் இதற்கான நியாயபூர்வமான ஆதாரங்கள் எதுவும் காணப்படுவதில்லை. பொதுவாக ஜிஹாத் என்ற பெயரில் அமைப்புக்களை ஒழுங்குபடுத் தியுள்ள இயக்கங்களின் தொடர்ச்சியான தோற்றப்பாடு என்பது அவர்களது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான அவர்களது வன்முறைக்கு ஆதரவினைப் பெறுவதை இலக்காகக் கொண்டதாக உள்ளது. மாறாக அது தனிப்பட்ட பிரதிபலிப்புக்கான ஆதரவினை கொண்டதாகக் காணப்படுவதில்லை. இவ்வாறாக ஜிஹாத் பல்வேறு பொருள்களைக் கொண்டு வரையறுக்கப்படுவதனைக் காணலாம். இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்களானது புனித யுத்தம் என்ற பொரு ளிலேயே அதனைப் பயன்படுத்துகின்றது. அவ்வாறே முஸ்லீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாதவர்களுக்கு எதிரான புனித யுத்தமானது அவர்கள் மத்தியில் இஸ்லாமியக் கொள்கைத் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற் கான ஒரு அடிப்படையான அம்சமாக இருக்கின்றது என முஸ்லீம் மதகுருக்கள் மத்தியில் உள்ள சில போராளிகள் வாதிக்கின்றனர். எவ்வாறாயினும் இஸ்லாத்தின் இரு பிரதான கிளைகளிலுமுள்ள வைதீகச் சிந்தனையுள்ளவர்கள் வன் முறையானது நியாயப்படுத் தத்தக்கது என்பதை ஏற்றுக் கொள்வதில்லை (கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள்). ஆனால் வன் முறையில் பங்குபற்றாத பல முஸ்லீம் குழுக்களும் அடிப்படைவாதிகளாகக் கருதப்படுகின்றனர். உண் மையில் முஸ்லீம்களில் பெரும்பான்மையோர் கடவுளின் பெயரிலான வன்முறையினையோ அல்லது பயங்கரவாதத்தின் உபயோகத் தினையோ அங்கீகரிப்பதில்லை. வன்முறைச் சிந்தனையினைக் கொண்டுள்ள பெரும்பான்மை முஸ்லீம்கள் வன்முறை என்பது அடிப்படையான நியாயப்படுத்தத்தக்க அம்சம் எனக் கருதுகின்றனர். எனினும் இஸ்லாமிய நம்பிக்கையாளர்களுள் ஒரு சிறுபகுதியினரே வன்முறைக் குழுக்கள் பயங்கரவாதத்தினை நடைமுறைபடுத்து வதற்கான ஆட்சேர்ப்புக்கு ஆதரவு வழங்குவது அவசியமானது எனக் கருதுகின்றனர். இவ்விரு காரணிகளுமே வன்முறைக்கும் இஸ்லாத் திற்கும் இடையிலான தொடர்பு குறித்த கவனம் பரவலாக மேற் கொள்ளப்படுவதற்கு வழிவிட்டுள்ளது. அவ்வாறே மூன்றாம் உலக நாடுகளில் உள்ள முஸ்லீம் சமூகங்களானது தேசிய விடுதலைப் போராட்டங்களைக் கொண்டு நடத்துகின்ற போது அது குறித்த பார்வை பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்படுவதற்கு மேற்கூறிய காரணிகளே பங்களிப்புச் செய்துள்ளன. முஸ்லீம் சமூகத்தின் இவ் வாறான தேசிய விடுதலைப் போராட்டங்கள் அல்லது காலனித்துவ அதிகாரத்திற்கு அல்லது அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்த வன்முறைக்கு வழிவிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் சோவியத் காலனித்துவ அதிகாரத்தை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் உலகினைச் சுற்றி முஸ்லீம்கள் ஒன்று திரட்டப் பட்டதானது இஸ்லாமிய கடும்போக்குவாதத்தின் ஒரு முக்கிய அம்சமாகப் பார்க்கப்பட்டதுடன் வன்முறையின் பரவலுக்கும் வழி விட்டது. இவ்வன்முறையின் மூலம் சோவியத்தின் பின்வாங்கலும் ஏற்படுத்தப்பட்டது. இவ்யுத்தத்திற்கு உதவியாளர்கள் ஒன்று திரட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட விதம் கருத்தியல் அடிப்படைகளைக் கொண்டது என்பதிலும் பார்க்க சமய அடிப்படைகளைக் கொண்டதாகும்.

முஸ்லீம் குழுக்கள் நாட்டின் சட்ட முறைமையின் அடிப்படையாக ஷரீஅத் சட்ட முறைகளை (இஸ்லாமிய மதச் சட்டங்கள்) நிறுவ முற்படுகின்றபோது முஸ்லீம் சமூகத்தில் பிரச்சினைகள் எழுச்சியடைகின்றன. காரணம் ஷரீஅத் சட்ட முறையானது மேற்குசார் மதச்சார்பற்ற தன்மையிலிருந்து முரண்பட்டுச் செல்கின்றது. ஷரீஅத் என்பது அல் குர்ஆன் மற்றும் முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகளைக் கொண்டதாகும். அவ்வாறே இஸ்லாத்தின் ஆரம்ப கால கலீபாக்களின் வாழ்க்கை மாதிரிகள் மற்றும் உதாரணங்களும் ஷரீஅத்தில் உள்வாங்கப்படுகின்றது. நாட்டின் அடிப்படைச் சட்டமாக ஷரீஅத்தினை அமுல்படுத்துவதற்கான ஆவலினை இஸ்லாமிய அடிப்படைவாதத் தன்மையினை அதிகம் பெற்றுள்ள அரசியல் குழுக்கள் கொண்டுள்ளன. இச்சந்தர்ப்பங்களில் மற்றைய சகல சட்டங்களும் புனிதச் சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கு முரணாக இருக்கக் கூடாது எனவும் வலியுறுத்தப்படுகின்றது. ஈரான் இஸ்லாமியக் குடியரசு, சூடான் மற்றும் தலிபான்களின் ஆட்சியின் கீழிருந்து ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சட்டத்திற்கான அடிப்படையாக ஷரீஅத் அமைக் கப்பட்டது. அவ்வாறே ஷரீஅத்தின் பரந்தளவான அடிப்படைகள் பாகிஸ்தானின் சட்ட முறைகளிலும் நேரடியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. மற்றைய பல நாடுகளின் சட்டத்தின் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாக ஷரீஅத் உள்ள போதிலும் தொடர்ந்தும் மதச்சார்பற்ற அல்லது மேற்குசார் அடிப்படைகளை பகுதியளவில் தமது சட்ட முறைமையின் அடிப்படையாகக் கொள்வதில் நம்பிக்கை கொண்டுள்ளனர். மத்திய கிழக்கில் அதிகாரத்தில் பல அரசாங்கங்கள் இவ்வாறான தன்மையினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான சூழ்நிலைகளில் இஸ்லாமிய மத அடிப்படைகளுக்கு இறுக்கமான விளக்கத்தினை வழங்குபவர்களுக்கும் சமூகத்தில் மிகவும் நவீனத்துவத் தன்மையினைக் கொண்டிருப்பவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறான முரண்பாடுகளானது அதிகாரத்திலுள்ளவர்களை அகற்றுவதற்கான அழுத்தத்தினையும் விடுக்கின்றது. அதாவது அதிகாரத்தில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்கு எதிராக வன்முறை மற்றும் பயங்கரவாதம் திசை திருப்பப் பட்டு அவர்களது அதிகாரத்தின் ஸ்திரப்பாட்டினை சவால்களுக் குள்ளாக்குகின்றது.

அண்மைய ஆண்டுகளில் இஸ்லாத்தில் உள்ள சில சமய ஆதர வாளர்கள் தற்கொலைத் குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்பினைக் கொண்டுள்ளனர். விஷேடமாக பலஸ்தீனத்தில் இவ்வாறானதொரு நிலை காணப்படுகின்றது. இஸ்லாம் நேரடியாக தற்கொலையை அங்கீகரிக்கவில்லையாயினும் நியாயமான காரணத்திற்காக அதை அங்கீகரித்திருப்பதாக சிலர் வாதிடுகின்றனர். தென்கிழக்காசிய முஸ்லீம் சமூகத்தினை நோக்கினால் அங்கு தற்கொலைத் தாக்குதல் மரபு ஒன்று காணப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. முஸ்லீம் ஆள்புலங்கள் முஸ்லிம் அல்லாத காலனித்துவங்களால் இணைத்துக் கொள்ளப்படுகின்ற போது இவ்வாறான தனிமனித தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. அதாவது வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் கையில் இருந்து தமது நிலத்தினைப் பெறுவதற்கான முயற்சியின் போது இவ்வாறான தனிப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் நிகழ்த்தப் படுவதனை அவதானிக்கலாம். சில தாக்குதல்கள் காலனித்துவ அதிகாரத்தினை வெளியேற்றுவதில் மிகவும் வெற்றிகரமானதாக அமைந்திருந்திருக்கின்றது. இதற்கு ஏற்றவிதத்தில் செல்வாக்குள்ள முஸ்லிம் தனிநபர்கள் உள்ளூர் முஸ்லீம்களின் ஆதரவினையும் பெற்றுக்கொள்கின்றனர். பலஸ்தீனத்தில் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் ஹமாஸ் தற்கொலைத் தாக்குதலினை மிகவும் வெற்றிகரமான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. இதற்கான வளத் தினையும் அவ்வியக்கம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம் மதக்குருக்களுள் சிலர் (யூசுப் கர்ளாவி போன்றோர்) இவ் வாறான தாக்குதல்கள் நியாயப்படுத்தத்தக்கது என வாதிக்கின்றனர். அதற்கான அவர்களது நியாயப்பாடு என்பது தாக்குதல்களின் இலக்கு சாதாரண மக்களையன்றி வெளிநாட்டு ஆக்கிரப்பாளர்களைக் கொண்டுள்ளது என்பதாகும். இன்று முஸ்லீம் அல்லாதவர்களுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதலும் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. இது சமூகங்களுக்கு மத்தியில் எதிரிடையான தன்மை யினை அதிகரிக்கச் செய்துள்ளது. அவ்வாறே முஸ்லிம்களுக்கு மத்தியிலான தாக்குதல்களும் சமகாலத்தில் இடம்பெற்ற வண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளன. இதன்படி முஸ்லிம்கள் மற்றைய முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொண்ட முதலாவது தற்கொலைக் கார் குண்டுத்தாக்குதல் லெபனானில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றைய கலாச்சாரங்கள் கூட கிளர்ச்சிக் குழுக்கள் மத்தியில் தற்கொலைத் தாக்குதலைத் தூண்டியுள்ளது. பரூச் கோல்ஸ்டீன் பள்ளிவாசலில் மேற்கொண்ட தாக்குதல் மூலம் தாம் உயிர்வாழ்வோம் என எதிர்பார்க்கவில்லை. இதற்கு மேலதிகமாக அவர் தாக்குதலுக்குச் செல்லும் போது பிரியாவிடைக் குறிப்பினையும் விட்டுச் சென்றார். இஸ்ரேலில் யூத இராணுவக் குழுக்களால் தாம் ஒரு மாவீரராகப் பார்க்கப்பட வேண்டும் என்பதையே அவர் எதிர்பார்த்திருந்தார். ஆரம்பகால ரஷ்யா அராஜகவாதிகளும் அவர்களது டைனமைற் குண்டுகள் மூலம் கொல்லப்படுவோம் என்றே எதிர்பார்த்தனர். இதன்படி அவர்களது இறப்பானது குற்றவியல் தன்மையுடையதன்றி அரசியல் தன்மையுடையது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தியது. 1930 களில் றொமேனியாவில் பாசிச இரும்புத் திரை (Fascist Iron Guard) அமைப்பின் தெரிவு செய்யப்பட்ட சில உறுப்பினர்கள் அவர்கள் எதிரிகள் எனக்கருதியவர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலை வர்கள் மீது தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அதிகமான சமூகங்கள் சிறிய குழுக்களின் துணிகரச் செயல்களை பாராட்டுகின்றன. சில படப்பிரிவுகளில் தனிப்பட்டவர்களின் தியாக மானது மிகுந்த கௌரவத்திற்குரியதாகப் பார்க்கப்படுகின்றது. தற் கொலைத் தாக்குதலைப் பொறுத்தவரையில் அது முஸ்லிம் சமூகத்தில் மட்டும் காணப்படுவதல்ல. வெவ்வேறு மத, சமூகப் பிரிவுகளும் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. 1980-2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை நோக்குகின்ற போது இலங்கையில் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளே உலகில் அதிகமான தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். (பார்க்க: அட்டவணை - 01) எனினும் இவர்கள் சமயரீதியாக இஸ்லாத்தினை தமது கொள்கையாகக் கொண்ட வர்களல்ல. எனவேதான் தற்கொலைத் தாக்குதல்கள் முஸ்லிம் சமூகத் துடனும் இஸ்லாத்துடனும் இணைத்துப் பேசப்படுவது தவறானதாகும். இதன்படி நவீன காலத்தில் தற்கொலைத் தாக்குதல்கள் சமயக் குழுக் களுடன் மட்டும் வரையறுக்கப்படவில்லை. சமயரீதியான குழுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலைத் தாக்குதலை பயன்படுத்துகின்ற போது மற்றைய குழுக்களும் அதன் உத்திகளை கடைப்பிடிக்க முனைகின்றன. இந்த வகையில் உலகில் அதிகம் பேசப்படும் இஸ்லாமியக் குழுக்களைக் காட்டிலும் மார்க்சீச குர்தீஸ் தொழிலாளர் கட்சி அதிகளவான தற்கொலைத் தாக்குதலை நடாத்தியிருக்கின்றன. மிக அண்மைய காலத்தில் மதசார்பற்ற பலஸ்தீனிய தேசியவாதக் குழுக்களும் தற்கொலைத் தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றன. இஸ்லாமிய அமைப்புக்கள் பெண்களை தமது தற்கொலை தாக்குதல்களுக்கு பயன்படுத்தாதிருக்க மதசார்பற்ற குழுக்கள் பெண் குண்டுதாரிகளை பயன்படுத்துவதற்கும் விரும்புகின்றது. இந்தவகையில் ஏனைய செயற்பாடுகளைப் போன்று தற்கொலைத் தாக்குதல்களும் பல் வேறுபட்ட பயங்கரவாதக் குழுக்களினதும் உத்தியாகவுள்ளது.

**அட்டவணை - 01**

**1980 - 2000 இற்கு இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களின் எண்ணிக்கை**

| குழு (வகை) | இடம் | தாக்குதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தமிழீழ விடுதலைப் புலிகள் (இனரீதியானது) | இலங்கை, இந்தியா | 168 |
| ஹிஸ்புல்லா மற்றும் சிரிய லெபனானிய ஆதரவு அமைப்பு (மதரீதியானது) | லெபனான், குவைத், ஆர்ஜன்டீனா | 52 |
| ஹமாஸ் (மதரீதியானது) | இஸ்ரேல் | 22 |
| குரிதீஸ் தொழிலாளர் கட்சி (கருத்தியல் மற்றும் இனரீதியானது) | துருக்கி | 15 |
| பலஸ்தீன் இஸ்லாமிக் ஜிஹாத் (சமயரீதியான குழு) | இஸ்ரேல் | 08 |
| அல் - கைடா (சமயரீதியானது) | கிழக்கு ஆபிரிக்கா | 02 |
| எகிப்திய இஸ்லாமிய ஜிஹாத் (சமயரீதியானது) | குரோசியா | 01 |
| இஸ்லாமியக் குழு (சமயரீதியானது) | பாகிஸ்தான் | 01 |
| பார்பர் ஹல்சா சர்வதேசம் (சமயரீதியானது) | இந்தியா | 01 |
| இஸ்லாமிய இராணுவக் குழு (சமயரீதியானது) | அல்ஜீரியா | 01 |

மூலம்: Luts, J. M. Lutz, B. J., 2004: 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்போக்குவாதப் பார்வையானது ஹிந்து மதத்தினுள்ளும் காணப் படுகின்றது. இதன்விளைவாக சமயரீதியாக உணர்வூட்டப்பட்ட வன்முறைகள் இங்கும் நிகழ்கின்றன. ஹிந்துக் கலாசாரத்தின் வன்முறை ஆதரவாளர்கள் இந்தியாவில் 1920களில் வெளிப்படையாகத் தோற்றம் பெற்றனர். அதாவது தேசப்பற்று அமைப்பு (RSS – National Patriotism Organization) துணைப்படைகளுக்கு பயிற்சியளிக்க ஆரம் பித்ததிலிருந்து இது ஏற்பட்டது. இவர்களது வன்முறை எழுச்சியின் விளைவாகவே இந்தியாவின் புகழ்பூத்த தலைவரான மோகனதாஸ் காந்தி கொல்லப்பட்டார். காரணம் காந்தி, இந்திய அரசு உருவாக்கத்தின் போது ஹிந்துசார்பற்ற அரசு என்ற விடயத்தில் இணக்கம் கண்டதனாலே யாகும். ஹிந்துக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் இந்திய தேசிய சட்டத்தின் நடைமுறையில் ஹிந்து அடிப்படைகள் பின்பற்றப்பட வேண்டும் என விரும்புகின்றனர். இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் ஹிந்துக்களாக இருப்பதிலிருந்து இந்நிலை ஏற்படுகின்றது. பாரதிய ஜனதாக் கட்சி ஹிந்து நடைமுறைகளை முன்னேற்ற நடிவடிக்கை எடுக்கின்றது. இதனால் உலகில் மிகப் பெரிய சமய மற்றும் தேசியவாத இயக்கமாக இது உள்ளது. 1998 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது இக்கட்சி ஹிந்து அடிப்படைகளின் உபயோகத்தினை நவீனமயப்படுத்தியிருந்தது. எனினும் இதனால் சிறுபான்மைக் குழுக்கள் எதிர்நோக்கும் துன்பங்களுக்கு ஏதேனும் பாதுகாப்பினை வழங்குவதில்லை. தேசிய சட்டத்தின் அடிப்படை யாக ஷரீஅத் சட்டம் இருக்க வேண்டும் என்ற முஸ்லீம் குழுக்களின் முயற்சியுடன் அல்லது ஐக்கிய அமெரிக்காவில் தேசிய மற்றும் மாநிலச் சட்டங்களில் கிறிஸ்தவ அடிப்படைகள் பின்பற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் குழுக்களின் முயற்சியுடன் தொடர்பு பட்டதாக ஹிந்துக்களின் ஹிந்துச் சட்டம் பற்றிய சிந்தனை உள்ளது. மதச்சார்பின்மை மற்றும் சகல மதங்களுக்குமான சமமான போசிப்பு என்பன இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள ஹிந்துக்களுக்கான சமமான போசிப்பினைத் தடுக்கின்றது என இவர்கள் கருதுகின்றனர். ஹிந்துக்களைப் பொறுத்தவரையில் பசு என்பது புனிதமான ஒரு பிராணியாகக் கருதப்படுகின்றது. இதனால் பசுக்களை அறுப்பது அல்லது இறைச்சிகளைச் சாப்பிடுவதை தேசிய சட்டத்தில் தடுக்க வேண்டும் என்ற கொள்கையினையும் இவ்விந்துக் குழுக்கள் கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கின்றன. எனினும் இந்நம்பிக்கைகள், நடைமுறைகளை தேசிய சட்டத்துடன் இணைத்தலானது இந்தியாவில் மற்றைய சமயக் குழுக் களை தெளிவாகப் பாதிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தியாவில் ஹிந்து மதத்தினை முன்னேற்றுவதற்கான முயற்சி என்பது சமய நடைமுறைகளை தேசிய சட்டத்தினுள் புகுத்துவது என்பதிலும் பார்க்க அப்பால் சென்றுள்ளது. இது முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான முயற்சிகள் மற்றைய சமூகக் குழுக்கள் தாம் அமைத்துள்ள பள்ளி வாசல்கள் அல்லது வழிபாட்டு நிலையங்களைக் கொண்ட புனிதத் துவப் பகுதிகள் தொடர்பாக வேறுபட்ட பல உரிமைகோரல் இடம் பெறுவதற்கு வழிவிட்டுள்ளது. RSS போன்ற மிகவும் கடும் போக்குத் தனமான ஹிந்து இயக்கங்கள் தமது முயற்சிகளை ஒழுங்கு படுத்தியுள்ளதுடன் மற்றைய சமயக் குழுக்களின் புனிதக் கட்டிடங் களையும் அழித்துள்ளனர். தாம் அழித்த இடங்களில் ஹிந்துக் கோவில்கள் கட்டியெழுப்புவதற்கும் துணைபோயுள்ளனர். இம்முயற்சி ஹிந்துக்களின் இந்தியாவில் முஸ்லீம்களின் இருப்புக்கான, ஆட்சி செய்தமைக்கான ஆதாரங்களை அகற்றுவதாக உள்ளது. நடைமுறையில் இருக்கும் கட்டடங்களை அகற்றுவதற்கான முயற்சிகள் ஹிந்துக் களுக்கும் மற்றைய சமய ரீதியான சமூக வகுப்பினருக்கும் இடையில் வன்முறையை உருவாக்கியுள்ளது. மானிலங்களில் பல ஹிந்துக்கள் ஹிந்துப் பெரும்பான்மையுடன் தனது அடையாளத்தினை வெளிப் படுத்துவதற்கு வழிவிட்டுள்ளதுடன் அரசியல் தலைவர்களின் சமய அந்தஸ்திற்கும் ஆதரவு தெரிவிப்பதிலிருந்தும் ஹிந்து கடும் போக்கு வாதிகள் பார்வையானது சிறுபான்மை மதக்குழுக்களின் அங்கத் தவர்களை ஹிந்து சமூகத்திற்குள் ஈர்த்துக்கொள்வதாக உள்ளது. இதற்காக சிலர் தமது செயற்பாடுகளையும் ஆரம்பித்திருக்கின்றனர். இது சிறுபான்மை மதக் குழுக்களை நோக்கி சமூக வன்முறை திருப்பப்படுவதற்கு வழிவிட்டுள்ளது. சில வேளைகளில் உள்ளூர் அதிகார சபைகளின் ஆதரவுடன் இது மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்பாடுகளால் முஸ்லீம்கள் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி கிறிஸ்தவ மிஷனரிகளும் பாதிக்கப்பட்டன. இதன்படி கிறிஸ்தவ மிஷனரிகள் ஹிந்துக்களை மதமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றது எனக் கூறி அவர்களில் பலர் படுகொலையும் செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கப்பால் சிறுபான்மை மதக் குழுக்கள் தமது மதப்பாரம் பரியங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஹிந்துக் கடும்போக்கு வாதம் தடைகளை ஏற்படுத்துகின்றது. அதேநேரம் அக்குழுக்களின் மத நடைமுறைகள் என்பதும் அனுமதிக்கப்படாத ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது.

மற்றைய சூழ்நிலைகளிலும் மதக் கடும்போக்குவாதிகளிடமிருந்து வருகின்ற அழுத்தங்கள் சமூக வன்முறைகளை உருவாக்கின்றது. இதற்கு உதாரணமாக இந்தோனேசியா சூடான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் வெடித்துள்ள மோதல்களைக் குறிப்பிடலாம். இதனால் இங்கு உள்நாட்டு இடப்பெயர்வுகளும் அதிகரித்துள்ளது. தமது சமயக் குழுக்களின் ஆதிக்கத்தின் மூலம் சம்பாதிக்க எதிர்பார்க்கும் உள்ளூர் கடும்போக்குவாதிகள் மதக் குழுக்களுக்கிடையில் போட்டியை ஏற் படுத்துகின்றது. முஸ்லீம்கள் எங்கு தேசியப் பெரும்பான்மையினராக உள்ளார்களோ அங்கு இவ்வாறான உள்ளூர் கடும்போக்குவாதிகளின் தோற்றம் இடம்பெறுகின்றது. முஸ்லீம் தேசியப் பெரும்பான்மை உள்ள இந்நாடுகளில் கிறிஸ்தவர்கள் உள்ளூரில் சில இடங்களில் பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்களுக்கு மத்தியிலான போட்டியின் இறுதி விளைவு என்பது இரு குழுக்களுக்கிடையில் தற்கொலைத் தாக்குதல்கள், படுகொலைகளுக்கும் சண்டைகளுக்கும் வழிவிட்டுள்ளது. இவ்வன்முறைகளானது இந்தோனேஷியாவில் ஜனநாயகச் செயன்முறைகளை மேலும் மோசமாக்கியுள்ளது. இங்கு ஒவ்வொரு தரப்பிலும் உள்ள தனிப்பட்டவர்களும் மற்றைய மதச் சமூக வகுப்பினரின் அங்கத்தவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள விரும்புகின்ற அதேவேளை தமது நோக்கினை அடைவதற்காக பல்வேறு வழிகளையும் கைக்கொள்கின்றனர். அவ்வாறே மொலுக்கஸ் (Moluccas) மாகாணத்திலும் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் வன்முறைகள் காணப்படுகின்றன. இந்தோனேஷியாவில் பல்வேறு இடங்களிலும் உள்ள சில முஸ்லீம் அமைப்புக்கள் உள்ளூர் முஸ்லீம்களுக்கு ஆயுத ரீதியான ஆதரவினையும் உதவிகளையும் வழங்குகின்றது. முஸ்லீம் பெரும்பான்மையினைக் கொண்ட இவ் வாறான நாடுகளில் ஆயுதப் படைகளின் அங்கத்தவர்களும் பணிய கத்தினரும் உள்ளூர் கிளர்ச்சிக் குழுக்கள் அல்லது இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்கள் போராடுவதற்கான உதவிகளையும் வழங்குகின்றனர். காரணம் சமய ரீதியான நியாயப்படுத்தல்கள் காணப்படுவதனாலாகும். சில சம்பவங்களில் இவ்வாறானவர்களின் ஆதரவு உள்ளூர் கிளர்ச்சி இயக்கங்களைப் பலப்படுத்துகின்றது. நைஜீரியா கூட அது சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சமூக வன்முறையினை எதிர் கொண்டு வருகின்றது. 1966 இல் இடம்பெற்ற இராணுவச் சதிப்புரட்சி மற்றும் பியாப்ரன் சிவில் யுத்தம் (Biafran Civil War) மூலம் ஏற்பட்ட சமூக வன்முறையானது நாட்டின் வட பகுதியில் பல அழிவுகளை ஏற் படுத்தியது. அதாவது இவ்விடங்களின் முஸ்லீம்கள் கிறிஸ்தவ இபோ (Ibo) சமூகத்தினர் மீது தாக்குதல்களை தொடுத்தனர். மிக அண்மைக் காலமாக மத்திய நைஜீரியாவில் வன்முறைகள் காணப்பட்டது. இப் பகுதியின் வடபுலத்தில் முஸ்லீம்கள் பரந்துவாழும் அதேவேளை தென்பகுதியில் பரந்தளவிலான கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர். இவ்விதம் கலப்புச் சனத்தொகையினைக் கொண்ட பகுதிகளிலேயே இந்தோனேசியாவில் இடம்பெற்றது போன்று அதிகமாக வன்முறைகள் நிகழ்கின்றன.

மேற்கூறியவாறு பல்வேறு சமயங்களுக்குள்ளும் செயற்படும் குழுக்கள் வன்முறையினை உபயோகிப்பதனை அவதானிக்கலாம். இவ்வாறான சமயக் கடும்போக்குவாதக் குழுக்கள் தாம் மேற்கொள்ளும் வன்முறையினை நியாயப்படுத்தத்தக்க சில பொது உளப்பாங் கினையும் கொண்டிருக்கின்றனர். மிகவும் கடும்போக்குத்தனமான பல இயக்கங்கள் மற்றும் குழுக்கள் என்பது அவர்களது சமூகங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக ஏற்பட்டுள்ளது. உலகமயமாக்கம் மற்றும் மாறிக் கொண்டுவரும் உலகச் சூழ்நிலைகள் என்பன சமூ கங்களுக்குள் அழுத்தங்களை ஏற்படுத்திவிடுவதுடன் மாறிக் கொண்டு வரும் உலகில் ஆத்மீக மற்றும் உளவியல் ஆதரவினை வழங்கும் சமயத்தின் மீது பரந்தளவிலான நம்பிக்கையினை வைப்பதற்கும் வழிவிட்டுள்ளது. இந்தவகையில் சமயக் கடும் போக்குவாதம் என்பது நவீனத்துவம் மற்றும் உலகமயமாக்கம் காரணமாக ஏற்படும் மாற்றம் மற்றும் அழுத்தத்திற்கு பதிலளிக்கும் ஒன்றாக இருக்க முடியும். சன்டலர் (Sandler) என்பவரின் கருத்துப்படி அரசியல் மயப்படுத்தப் பட்ட சமயமானது நவீனத்துவத்திற்கான ஒரு பதிலீடாகப் பார்க்கப்பட முடியும் எனக் கூறுகின்றார். சமயப் பெறுமானங்களுக்கான பலமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பு என்பது அது மாற்றங்களுடன் கொண்டு வருகின்ற வன்முறையின் மூலம் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயத் தினைக் கையாள்வதிலேயே தங்கியுள்ளது.

மாற்றங்கள் அச்சுறுத்தல்களைக் கொண்டுவருகின்றது என்ற கருத்துநிலையினை கிட்டத்தட்ட சமகால மதங்களினதும் போதனைகளில் பார்க்க முடியும். இவ்வாறான சமய ஆதிக்கத்தின் கீழ் செயற்படும் வன்முறை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளின் போது பயங்கரவாதிகள் தம்மைத் தாமே ஆத்மீக இராணுவத்தில் உள்ள படைவீரர்களாக தம்மைக் கருதுகின்றனர். கடந்தகாலத்தில் மாற்றங்களானது சமூகத்திற்கு நன்மையளிப்பதில்லை என்ற எதிர் பார்ப்பே நிலவியது. ஆனால் இன்று அதிகமான சமயக் கடும் போக்கு வாதக் குழுக்கள் மாற்றங்களின் விளைவாக தம்மை மதச்சார் பின்மைக்கு எதிரான இயக்கம் என்றவகையிலேயே நோக்குகின்றனர். மேற்குலகின் மதசார்பற்ற மனிதத்தன்மைக்கு (Secular Humanism) எதிரான போராட்டங்கள் மற்றும் இஸ்லாமிய நாடுகளில் ஷரீஅத்தினை சட்டத்தின் அடிப்படையாக மாற்றுவதற்கான முயற்சிகள் என்பன மதச்சார்பற்ற மனிதத்துவம் இஸ்லாமிய சமூகத்தின் சமய, ஒழுக்கப் பெறுமானங்களை (Religious and Moral Values) பாதிக்கத்தக்கவகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதனாலேயே ஏற்படுகின்றது. பெரும்பான்மை முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் மார்க்சீசம் உட்பட மேற்கின் சிந்தனைகளானது பல வகையான மதசார்பற்ற மனிதத்தன்மையின் பிரதிபலிப்பாகவே பார்க்கப்படுகின்றது. யூத கடும் போக்குவாதிகளைப் பொறுத்தவரையில் அவர்களது முக்கிய தெரிவாக இருப்பது பலஸ்தீன இராச்சியத்தில் ஒரு யூத அரசினது மீள் உருவாக்கம் பற்றியதாகும். இதற்கான முயற்சிகளின் போது இஸ்ரேலிய அரசு இயற்றிய சட்டங்களில் வைதீக யூதத்துவத்தின் சமய அடிப்படைகள் காணக் கிடப்பதனை அவதானிக்கலாம். ஹிந்துக்கள் விடயத்தில் அவர்கள் சார்ந்த குழுக்களின் முக்கிய அக்கறை என்பது வெளிச் செல்வாக்கினை தடுப்பது என்பதாக உள்ளது. அதாவது இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத் தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வெளிச் செல்வாக்குக் குறித்து அக்கறையுடன் செயற்படுகின்றது. அவ்வாறே அரச மதமாக ஹிந்து மதத்தினை மாற்றுவதற்கும் நாட்டின் சட்ட ஏற்பாடுகள் ஹிந்து நடை முறையினைக் கொண்டு அமைவதற்கும் குரல் கொடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிலிருந்து வரும் மாற்றங்களின் மூலமான அச்சுறுத்தல்கள்களுக்கான ஒரு பதில் செயற்பாடாகவே வன்முறையை மேற்கொள்வதற்கான குழுக்கள் ஒன்றுதிரட்டப்படுகின்றனர். இவ்வெளிதான ஒன்று திரட்டலே அதிகமாக மூன்றாம் உலக நாடுகளில் பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவிட்டுள்ளது. அல்லது குறிப்பிட்ட குழுக்கள் உள்ள நாடுகளில் தமது வெளிநாட்டு இலக்குகள் மீது எளிதாக தாக்குதல்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வெளிவாரியான களங்கத்தினை ஏற்படுத்தும் வெளிநாட்டுக் காரணிகளானது உள்ளூர் சமயப் பெறுமானங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மாற்றங்களுடன் அதிகம் தொடர்புபடுத்தப்படுகின்றது. வெளிநாட்டு ஆதரவு அகற்றப்பட்டால் அதற்காகச் செயற்படும் உள்ளூர் குழுக்களை பலத்தின் மூலம் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் எளிதானதாகும். இதன்படி வெளிநாட்டு அடிப்படைகள் என்பது உள்ளூரைச் சேர்ந்தவர்களை ஒரு வெளிநாட்டு மதத்திற்கு மாற்றும் அல்லது மதமாற்ற முயற்சியில் ஈடுபடும் குழுக்களாகப் பார்க்கப்பட முடியும். இவ்வாறாக வெளிநாட்டு அடிப்படைகளானது உள்நாட்டு சமயத்தின் நிலையினை அழிக்கின்றது. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் இந்தியாவுடன் மேற்கு நாடுகள் கொண்டுள்ள ஊடாட்டமானது மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளது. இம்மாற்றங்களுள் சில உள்ளூர் மத நடைமுறைகள் மற்றும் மரபுகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக மேற்கு நாடுகள் மதச்சார்பின்மை என்ற வேலைத்திட்டத்தில் இயங்குவதனால் அவற்றின் ஊடாட்டம் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக மேற்கு நாடுகள் மிஷனறி நடவடிக்கைகள் மூலம் உள்ளூர் மக்களை கிறிஸ்தவத்திற்கு மத மாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இதன்விளைவாக சமய ரீதியாக உந்தப்பட்ட மதப் பயங்கரவாதக் குழுக்களின் முக்கிய இலக்குகளாக வெளிநாட்டு இலக்குகள் மாறிவருவதுடன் அரசியல் வன்முறைகள் அதிகரிப்பதற்கும் வழியேற்பட்டுள்ளது.

இவ்வாறாக சமய ரீதியான குழுக்கள் தமது தாக்குதல்கள் அதிகமான இழப்பீடுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பயங்கரவாதத்தினை கையிலெடுக்கின்றனர். விஷேடமாக மக்கள் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது நம்பிக்கையற்றவர்களைக் கொண்டிருக்கின்றபோது இவ்வாறான தாக்குதல்களின் வீச்சு அதிகரிக்கின்றது. பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்த ஒரு ஆய்வில் 1980 மற்றும் 1990களில் இடம்பெற்ற பல சம்பவங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட தாக்குதல்கள் சமய ரீதியாக தூண்டப்பட்ட சமயக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டவை என அறியப்பட்டுள்ளது. சமயப்பயங்கரவாதிகள் தம்மை ஒரு உயர் சட்டத்தினைப் பின்பற்றுவதாகக் கருதலாம். இவ்வாறான சமயப் பயங்கரவாதக் குழுக்களில் உள்ள பல அங்கத்தவர்கள் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் போராட்டத்தினை தூண்டிவிடுபவர்களாக உள்ளனர். இவர்கள் தமது சமயத்திற்கு வெளியில் உள்ளவர்களை தீமையில் உள்ளவர்களாகப் பார்க்கின்றனர். அவ்வாறே சமயக் கிளர்ச்சிக் குழுக்கள் தமது செயற்பாடுகளின் மூலம் தமது சமூகத்தின் தூய்மையைப் பாதுகாப்பதற்கான அழைப்பினையும் விடுக்கின்றனர். இதன் மூலம் சமய அடிப்படைகளைக் கொண்ட குழுக்கள் பாரியள விலான அழிவுகளை ஏற்படுத்தத்தக்க தாக்குதல்களை வடிவமைத்து அதில் வெற்றியினையும் காண்கின்றனர். எனினும் சமய அடிப் படையிலான பயங்கரவாதக் குழுக்கள் மட்டுமன்றி மற்றைய பயங் கரவாதக் குழுக்களும் பாரியளவான அழிவினை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நவீன அறிஞரான சாமுவேல் பீ. ஹன்டிங்டன் (Samual P. Huntington) உலகம் நாகரீகங்களுக்கிடையிலான மோதலினை (Clash of Civilization) எதிர்கொள்ளும் என எதிர்கூறியிருந்தார். இந்தவகையில் மத அடிப்படைவாத பயங்கரவாதமானது எதிர்காலத்தில் வேறுபட்ட கலாசாரங்களுக்கு இடையில் மற்றும் உலகின் ஆதிக்கமிக்க நாகரீ கங்களை வெளிப்படுத்தும் பிரதான மதங்களுக்கிடையில் பரந் தளவிலான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் எனப்படுகின்றது. ஹன்டிங்டனின் பார்வையில் தற்போதைய நகாரீகமானது மேற்குக் கிறிஸ்தவம் (Western Christianity), இலத்தீன் கிறிஸ்தவம் (Latin Christianity), வைதீக கிறிஸ்தவம்; (Orthodox Christianity), கொன்பியூ சனிசம் (Confucianism) , சிந்தோயிசம் (Shintoism), ஹிந்து (Hindu), இஸ்லாம் (Islam) என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நாகரீகங்களின் எல்லைகளுக்கிடையிலான மோதலானது ஏதேனும் நாகரீகளுக்குள்ளான மோதல்களைக் காட்டிலும் அதிகமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேலதிகமாக நாகரீகங்களுக்கிடையிலான மோதல்களானது மிகவும் நீடிக்கத்தக்கதாகவும் இருப்பதுடன் கொடுக்கப்பட்ட ஒரு நாகரீகத்திற்குள் நிகழும் மோதல்களைக் காட்டிலும் இழப்பீடுகள் அதிகமாகும். கலாசாரப் பகுதிகளுக்கிடையே ஏற்படும் மோதல்கள் கடுமையான விதத்தில் சமயரீதியாக இல்லாதபோதும் வேறுபட்ட சமயப் பெறுமானங்கள் உலகின் கலாசாரத்தினதும் நாகரீகங்களினதும் அடிப்படையாக அமைந்துள்ளது. இஸ்லாமிய இராணுவ இயக்கங்கள் இஸ்லாமியப் பெறுமானங்கள் மேற்குச் சிந்தனைகளைக் காட்டிலும் உயர்வாக இருப்பதாக வாதிடும்போது இவ்வேறுபாடுகளை அழுத்த மாகத் தெரிவிக்கின்றது. சமய அடிப்படைகளைக் கொண்ட பல அண்மைய முரண்பாடுகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாகரீகங்கள் அல்லது கலாசாரப் பகுதிகள் சந்திக்கும் இடங்களில் நிகழ்வதாகப் பார்க்கப்பட முடியும். எடுத்துக்காட்டாக பொஸ்னியாவில் முஸ்லீம் - மேற்கு - வைதீகச் சிந்தனைகளும், இஸ்ரேலில் முஸ்லீம் - மேற்கு, நைஜீரியா மற்றும் சூடானில் முஸ்லீம் - மற்றைய சிந்தனைப் பிரிவுகளும், இந்திய உப கண்டத்தில் ஹிந்து - முஸ்லீம் - மற்றைய சிந்தனைப் பிரிவுகளும் முரண்பாட்டின் அடிப்படையாக இருப்பதனை அவதானிக்கலாம். சமயங்களும் கலாசாரங்களும் சந்திக்கும் பகுதிகளில் மோதல்கள் வெடிக்கின்ற போது உள்நாட்டுத் தலைவர்கள் அவர் களுடைய சமயம் மற்றும் அதனோடு தொடர்புபட்டுள்ள கலாசாரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்களை ஒன்று திரட்டு கின்றனர். இந்த வகையில் பயங்கரவாதமானது ஒரு சமூகத்திற் குள்ளிருந்து மேற்கூறிய கலாசாரப் பகுதிகளுக்கிடையிலும் சிக்கலான எல்லைகளுக்கும் மாற்றப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# தென்னாசியாவில் பயங்கரவாதம்

சமகால சர்வதேச அரசியலில் விவாதத்திற்குரிய ஒரு முக்கிய அம் சமாக பயங்கரவாதம் உள்ளது. நடைமுறையில் இவ்விவாதமானது பயங்கரவாதத்தின் தன்மை, அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பானதாகவே உள்ளது. இதன் காரணமாக இவ்விடயம் தொடர்பில் ஒருமித்த கருத்தினைப் பெறுவதற்கு ஆய்வாளர்கள் முயற்சிக்கவில்லை. எனினும் பயங்கரவாதமானது தற்சமயம் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலான ஒரு விடயமாக உள்ளது. அதிலும் குறிப்பாக 2001 செப்டம்பர் தாக்குலை அடுத்து இந்நிலை அதிகரித்துள்ளது. உண்மையில் பயங்கரவாதத்தை வரை விலக்கணப்படுத்தும் போதுள்ள பிரச்சினையானது அது குறித்த எதிர் நடவடிக்கை எடுப்பதற்கு சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. இருந்த போதிலும் பயங்கரவாதத்தின் சகல வகைப்பாடுகளையும் ஐ.நா நன்கு ஆவணப்படுத்தியுள்ளது.

இதன்படி பயங்கரவாதத்தின் வடிவமும் விளக்கங்களும் ஒரு முறையான பொருத்தமான வகையில் வகைப்படுத்தப்படுவதில்லை என்பதனை முன்னைய அத்தியாயங்களில் கண்டோம். இவ்விடயம் தென்னாசிய சூழலில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். பொதுவாக பயங்கரவாதமானது அதனை உருவாக்கும் காரணிகள், அதன் மூலம் வெளிப்படுத்தப்படும் வன்முறை என்பன இயல்பில் வேறுபடும் தன்மைகளைக் கொண்டதாகும். இதன் விளைவாக ஒவ்வொரு வகையான பயங்கரவாதமும் அதன் தோற்றம், வகைகள் மற்றும் முறைகளிலிருந்து வேறுபட்டுச் செல்கின்றது. இவ்வகையில் நோக்குகின்ற போது தென்னாசியாவில் பயங்கரவாதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை யாது என்ற கேள்வி எழுகின்றது. குறிப்பாக செப்டம்பர் 11 தாக்கு தலையடுத்து இவ்வினா மேலும் எழுச்சியடைந்துள்ளது. 2001 செப்டம்பர் 11 தாக்குதலையடுத்து சர்வதேச சமூகத்தின் கவனயீர்ப்பு என்பது அதிகளவில் இப்பிராந்தியத்தின் மீதே குவிக்கப்பட்டுள்ளது. இவ்விதமான கவனயீர்ப்பிற்கு இப்பிராந்தியத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெறும் சமய மிதவாதிகளின் அதிகரித்த செல்வாக்கு மற்றும் பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் என்பனவே காரணமாகும். வரலாற்று ரீதியாக தென்னாசியாவானது பலவிதமான அரசியல், இன மற்றும் கலாசார, சமய முரண்பாடுகள், எல்லை கடந்த பயங்கர வாதிகளின் செயற்பாடு, சட்ட ரீதியற்ற ஆயுதங்களின் பாவனை என்பன காரணமாக புரையோடிப்போயுள்ள மனக்கசப்பு நிறைந்த பிராந்தியமாக பார்க்கப்பட்டு வருகின்றது.

எனவேதான் இவ்வலயமானது அதற்குள்ளும் வெளியிலும் அச்சுறுத்தலை விடுக்கும் வாய்ப்புக்களை இன்னும் கொண்டுள்ளது. அரசியல் ரீதியாக இதற்குச் சாதகமான சூழ்நிலை இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இந்தவகையில் இந்தியாவில் இன - மத ரீதியான பிரச்சினைகள், குறிப்பாக ஜம்மு - காஷ்மீர் முரண்பாடு, நேபாளத்தில் இடம்பெற்ற மாவோயிஸ்ட் கிளர்ச்சி, இலங்கையில் தமிழர் பிரச்சினை, பங்களாதேசத்தில் தொடர்க் குண்டுத் தாக்குதல், சிட்டஹொங் முரண்பாடு போன்றன இவ்வலயத்தின் பாதுகாப்புக் குறித்த பல்வேறு பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அண்மைக் காலங்களில் இவ்விடயம் குறித்து அதிகமான கவனயீர்ப்பு இடம் பெறுவதனை அவதானிக்கலாம். அவ்வாறே இப்பிராந்தியத்தின் மற்றுமொரு நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் சர்வதேச பயங்கரவாதத்தினைத் தோற்கடிப்பதற்கான கரிசனையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதுடன் சர்வதேச சமூகத்தின் பெருமளவிலான கவனயீர்ப்புக்கு இப்பிராந்தியம் உள்ளாகுவதற்கும் வழிவிட்டுள்ளது.

இப்பிராந்தியத்தினை பீடித்துள்ள பயங்கரவாதம் தொடர்பில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய முக்கிய விடயம் யாதெனில் எல்லை கடந்த பரிணாமத்தினைப் பெற்றிருப்பதாகும். அதாவது இப்பிராந்தியப் பயங்கரவாதத்தின் தோற்றம், அதற்கான காரணங்கள் மற்றும் அதன் மேலாண்மை என்பன அரசியல் எல்லை கடந்த தன்மையினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது என்பதாகும். இவ்விதம் தோற்றம் பெறும் பயங்கர வாதத்தினைத் தோற்கடிப்பதற்கு அந்தந்த நாடுகள் கூட்டாகவும் தனியாகவும் குறைந்தளவிலான முயற்சியினையே மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக இவ்வலய நாடுகளான பாகிஸ்தான், பங்களா தேஷ் மற்றும் இலங்கை ஆகியவற்றில் இன்னும் பயங்கரவாதத்தின் விளைவுகள் அந்நாடுகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தினைப் பொறுத்தவரையில் இப் பிராந்தியம் பொதுவான வரலாறு, கலாசாரம், சமயம் மற்றும் வாழ்க்கை முறைமை என்பவற்றினைக் கொண்டுள்ளதுடன் சார்க் அமைப் பினூடாக தமது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கின்றனர். எனினும் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் நடவடிக்கைகள் இன்னும் இப்பிராந்தியத்தில் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பகுதியளவில் அரசாங்கம், சிவில் சமூகம், ஊடகம் என்பவற்றினால் சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் அவை வெற்றி யளிப்பதாக இல்லை. எடுத்துக்காட்டாக தென்னாசியாவில் ஊடகத் தினை எடுத்து நோக்குகின்ற போது, பல வருடங்களாக பல விதமான அரசியல் வன்முறைகள், வகுப்புவாதம், குறுகிய நாட்டுப்பற்று (Jingoism) மற்றும் பயங்கரவாதம் போன்றன ஏற்படுவதற்கு பயங்கர வாதம் தூபமிட்டிருக்கின்றது. இதன் மூலம் இவ்வலயத்தில் உள்ள ஊடகமானது எதிர்மறையான பங்கினையே வகித்திருக்கின்றது. எனவேதான் பயங்கரவாதம் இப்பிராந்தியத்தில் தோற்றம் பெறு வதற்கான அடிப்படைக் காரணம் குறித்த வேறுபட்ட கருத்துக்களை ஒன்று திரட்டி புதிய சிந்தனைகளையும் பெறுமானங்களையும் உரு வாக்குவதன் மூலம் பயங்கரவாதத்தை வெற்றிகரமாகத் தோல்வி யடையச் செய்வதற்குப் பங்களிக்க முடியும்.

இவ்வலயத்தின் பயங்கரவாதம் குறித்த ஆய்வுகளின்படி இவ் வலயப் பயங்கரவாதமானது கூடியளவுக்கு இன-மத அடிப்படை களைக் கொண்டுள்ளது. அதாவது பல்வேறு தேசியங்கள் மற்றும் சமூகங்களுக்கு மத்தியில் நிலவும் இன-மத சிந்தனைகளினூடாகத் தோன்றும் தவறான பார்வை, அவநம்பிக்கை, பதற்றம் மற்றும் சந்தேகம் காரணமாக இங்கு பயங்கரவாதம் தோற்றம் பெறுகின்றது. இவ்வெதிர்மறையான தோற்றப்பாடானது பிராந்தியத்தின் சிக்கலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு, கலாசாரம், சமயம், மரபுகள், சமூக நெறிமுறைகள் மற்றும் வழக்கங்களில் வேர் கொண்டுள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் இக்காரணிகள் ஐக்கி யத்திற்கு வழிவிட்டுள்ள அதேவேளை சமூகங்கள் இன மற்றும் மத அடிப்படைகளில் பிளவுபடுவதற்கும் காரணமாக அமைகின்றது. துரதிஷ்டவசமாக இப்பிராந்தியத்தில் அரசியல் உயர் குழாமினர் இக்காரணிகளினூடான பிளவுகளை இல்லாமல் செய் வதற்குப் பதிலாக தமது அதிகாரத்தினையும் சட்டத் தன்மையினையும் பாதுகாப்பதற்கான ஒரு வழி என்றவகையில் இக்காரணிகளைக் கொண்டு சமூகத்தினைப் பிளவுபடுத்துவதற்கு விளைந்துள்ளனர். இவ்வலயத்தில் மேற்கொள்ளப்படும் சமமற்ற, அரசியல் வாய்ப்பு மற்றும் வெளியேற்றம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட பல சமூக, பொருளாதார, அபிவிருத்தி செயன்முறைகள் இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக உள்ளன. இவ்விடயங்களே பிராந்தியத்தில் ஸ்திரமற்ற நிலையினையும் ஏற்படுத்திவிடுகின்றது. இந்நிலையே தென்னாசியாவின் பல நாடுகள் தமது தேசத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் குறிப்பிடத்தக்களவான வெற்றியினைப் பெறா மைக்கும் காரணமாகும். அதாவது பிராந்திய நாடுகளின் தேசத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறைகள் என்பது மேற்கூறிய பயங்கர வாதத்திற்கு பங்களிப்புச் செய்யும் விடயங்களினூடாக அது மேலும் கேள்விக்குள்ளாகின்றது என்பதாகும்.

குறிப்பாக தென்னாசியாவின் பெரும்பாலான நாடுகளில் அவற்றின் நாட்டுணர்வுத் தன்மைக்கான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்துவதில் அந்நாடுகள் தோல்வி கண்டிருக்கின்றமை இதனை மேலும் விளக்குகின்றது. இந்நிலையானது நாட்டின சமூகத் திற்கு மத்தியில் திருப்தியற்ற பல குழுக்கள் உருவாக வழிவிட்டுள்ளது. இதன்படி இங்குள்ள வகுப்புவாதம், ஊழல், அரசியல் அநீதி போன்றன சமூகத்தில் பயங்கரவாதமும் வன்முறை வழிகளும் உதயமாக வழி விட்டுள்ளது. பசி, வறுமை, வேலையின்மை, தேகாரோக்கியமற்ற நிலை போன்றனவும் மனிதத்தன்மையற்ற சூழ்நிலைகளை உருவாக்கி விடுகின்றது. இதன் மூலம் மிதவாதிகள் தமது மிதவாதச் செயற் பாடுகளை அதிகரிப்பதற்கும் வழிவிடப்படுகின்றது. சமகாலத்தில் வலயத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் போராட்டம், ஜம்மு - காஷ்மீரில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைவாதப் போராட்டம், இந்தியாவில் அடிக்கடி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமூகக் கிளர்ச்சிகள் போன்ற சில பிணக்குகளை நோக்குகின்ற போது இது நன்கு புலனாகின்றது. இவ்வுதாரணங்களில் காணப்படும் முரண்பாடுகளுக்கு வழிவிட்ட அம்சங்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார இழப்பீடுகளாகும். இதுவே பயங்கரவாதம் உருவாவதற்கான சாத்தியமான வாய்ப்பினையும் ஏற்படுத்தி விடுகின்றது. இவ்விடயங்கள் அனைத்திலும் சுட்டிக் காட்டத்தக்க இரு முக்கிய விடயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று மக்கள் அவர்களது பொது அடையாளம் குறித்து தெளிவுக்குவருவது, மற்றையது வேறு குழுக்களோடு ஒப்பிடும்போது அவர்களது நீதியற்ற தன்மை மற்றும் சமத்துவமற்ற அந்தஸ்து குறித்து அவர்களது வெறுப்பு வெளிப்படல். இத்தகைய வெறுப்புணர்வானது வழக்கமாக சமத் துவமற்ற தன்மைகள் மற்றும் மக்களுடைய உரிமைகள் மற்றும் வாய்ப்புக்களை மறுத்தல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை


Schmid A.P. (1983) *Political Terrorism: A Research Guide to Concepts, Theories, Data Bases and Literature,* Amsterdam, North –Holland.

Andersen, Walter, "Global War on Terrorism: its Impact on South Asia" in *Strategic Asia 2004- 05: Confronting Terrorism in the Pursuit of Power.*

Barber, Benjamin (2003) *Fear's Empire: War, Terrorism, and Democracy* W W Norton.

Barber, Benjamin (1996) *Jihad vs. Mc World,* Ballantine Books.

Benjamin Netanyahu, (1995) *Fighting Terrorism: How Democracies Can Defeat Domestica and International Terrorists,* New York: Farrier Strays Gyros.

Bhatt, Shakti. "State Terrorism vs. Jihad in Kashmir." *Journal of Contemporary Asia,* V. 33, No. 2, 2003.

Brigitte Nacos (1995) T*errorism and the Media: From the Iran Hostages to the World Trade Center Bombing,* New York: Columbia University Press.

Kulwant Kaur (ed) (2005) *Global Terrorism: Issues, Dimensions and Options,* New Delhi: Kanishka Publishers.

Kumar, Manav. "The Hidden Conflict." *Harward International Review,* Winter 2005, V. 26, No. 4.

Lutz, James M. (2004) *Global Terrorism,* New York: Routledge.

Nazrul Islam Dr. Islam, *9/11 and Global Terrorism: A Sstudy of Perceptions and Solutions,* New Delhi: Viva Books Pvt Ltd.

Paul Wilkinson (1983) *The New Fascist,* London: Pan Books.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Paul, Wilkinson (1986) *Terrorism and Liberal State,* London: Macmillan.

Perera A.R. (1997) *International Terrorism,* New Delhi: Vikas Publishing House Pvt Ltd.

Rapoport D.C. (ed) (2006) *Terrorism: Critical Concepts in Political Science,* New York: Routledge.

Rechard Cluterbuck (1975) *Living with Terrorism,* London: Faber.

Reddy L.R. (2002) *The Worst of Global Terrorism,* New Delhi: APH Publishing Corporation.

Rubin Barry (ed) (1989) *The politics of Terrorism: Terror as a State and Revolutionary Strategy,* London: University Press of America.

Sahni, Ajai. "The Realities of Peace," *Outlook,* India, April 18, 2005.

Tuman J.S. (2003) *Communication Terror: The Rhetorical Dimensions of Terrorism,* London: Sage Publication.

Walter Laqueur, (1977) *Terrorism,* London: Weidenfeld and Nicolson.

Whittaker, David J. (2004) *Terrorists and Terrorism in the Contemporary World,* New York: Routledge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம்: ஓர் அறிமுகம்

எஸ்.எம். ஆலிப்

உள்நாட்டு அரசியல் நிலவரமும் சர்வதேச அரசியலின் தாற்பரியமும் மக்களை இன, மத, மொழி மற்றும் பிராந்தியம் என்ற வகையில் பிரித்து வைத்துள்ளன. இதன் விளைவாக மோதல்களும் இன முரண்பாடுகளும் வன்முறைகளும் நாளாந்தம் உலக அளவில் இடம் பெற்று வருகின்றன. பசி, பட்டினி, வறுமை, சமூக அநீதி, இன ரீதியான பாரபட்சம் காட்டப்படல், மேலாதிக்க உணர்வு, அணு ஆயுதங்களின் வளர்ச்சி என்பவை உலக அளவில் பயங்கரவாதம் வளர்வதற்கு வழி கோலியுள்ளன. இதன் விளைவாக சமகால சர்வதேச உறவுகளில் பயங்கரவாதம் முக்கியமானதொரு பிரச்சினையாக உருவெடுத்து வந்துள்ளது.

இந்நூல் பயங்கரவாதத்தினை கோட்பாட்டு ரீதியாக அறிமுகப் படுத்துகின்றது. பயங்கரவாதத்தினை வரைவிலக்கணப்படுத்துவதுடன் அதன் அடிப்படை அம்சங்களையும், அது தூண்டப்படுவதற்கான காரணங்களையும், அதன் வகைகளையும், அதன் பரவலையும், அதன் வடிவங்களையும் விபரிக்கின்றது.



சீனி முஹம்மது ஆலிப் : இவர் தனது ஆரம்பக் கல்வியை தான் வளர்ந்த ஊரான அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் கற்றதுடன் தனது இளமாணிப் பட்டத்தினையும், முதுமாணிப்பட்டத்தினையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவராவார். தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி வரும் இவர் இதற்கு முன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர விரிவுரையாளராகவும் கடமையாற்றியவராவார்.

தென் ஆசிய விவகாரங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள இவர் 'காஷ்மீர்: முடிவற்ற முரண்பாடு' என்ற நூலை வெளியிட்டுள்ளதுடன் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பல்வேறு மட்டங்களிலும் வெளியிட்டு தனது ஆய்வினையும் திறம்பட மேற்கொண்டு வருகின்றார்.

ISBN 978-955-659-299-3
9 789556 592993
விலை ரூபா 400.00
#486

குமரன் புத்தக இல்லம்

விடயம்: அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org